இன்னூலையார்க்கு மிசைந்து.

பீனிசத்திற்குத் தைலம்

இஞ்சியுமஞ்சள்சாறு மித்துடனெச்சிச்சாறு
மிஞ்சியதுளசிச்சாறும் வெற்றிலை கற்பூரவள்ளி
கொஞ்சியமுசுமுசுக்கை குறித்ததோர்கஞ்சாங்கோரை
பஞ்சுநன்மொழிநன்மாதே பயின்றசாறுழக்குக்கூட்டே 1
கூட்டியசாறுதன்னில் குளிர்ந்தநல்லெண்ணெய் நாழி
நாட்டியமேலமிலவங்கம் நவில்கின்றதேவதாரங்
காட்டிய யிலாமிச்சிருவேலி கனிந்திடும்சாதிக்காயும்
பாட்டியரத்தை வாய்விளங்கமல்லி பரிவுடன் கழஞ்சு கூட்டே 2
எண்ணெயுமருந்துதானுமியல்புடன் கலக்கி நன்றாய்
அண்ணலார் பூசைசெய்து அடுப்பின்மேல் வெந்திறக்கிக்
கண்ணனாருளினாலே நன்னாளில் குளிக்கச்செய்வீரால்
கண்ணனார்தம்மினால்கடிய பீனிசங்கள்போமே. 3

கபால சூலைக்குத் தைலம்

அன்றரனருளிச்செய்த அரியநல்லளிசம்பட்டை
குன்றிநற்றுளசி குப்பைகூறிடுந்தின்னப்பாளை

ஒன்றேமிளகு யோர்பலமுமுறுமீருள்ளியோர் பலமும்
நன்றேயெண்ணெய் நாழிதனிநயமாய் வடிக்கில் மாறிடுமே. 1

மாறிடுங்கபாலசூலை மண்டைநோய் தின்றபுண்கள்
சீறிடும்நாசிபீடஞ் செப்பிடுமிரத்த சூலை
பாறிடுந்தலைநோய் குட்டம் பதகடிகரப்பனெல்லாம்
மாறிடுமென்றுசொல்லி அகத்தியனருளிச்செய்தார். 2

மயிர்வளர் தைலம்

மயிரும்வளரும் மிகக்கறுக்கும் மாதேமெத்த வருந்தாதே
எயிலு மெருமைப்பாலிருநாழிதனிலோர் நெல்லிப்பழச்சாறும்
பயிலுமெண்ணெயிருநாழியைய வெந்து பதத்தில் வடித்துத்
தெளியத்தெளியத் தேய்த்திடுமே மயிரும் வளரும் கறுத்திடுமே

நீர்ப்பாய்ச்சலுக்குத் தைலம்

கார்நொச்சி காத்தட்டி கஞ்சாக்குழிமீட்டா
னீர்வகையாழாக்கிதனே ரெண்ணெய்சேர் மிளகோர்
சாறளவுகூட்டி வெந்துதான் தேய்க்கக்கண்ணினில்
நீர்மீறிய நோய்குத்திடிபோமே.

அரக்கெண்ணெய்

உன்னும்வாத சிலேற்பனசுரத்தி
னொழுகுமரக்கெண்ணெய் சொல்வேன்
பன்னும் பசும்பொன் மெழுகுபதின்
பலந்தண்ணீர்குருணி நீரிலிட்டுப்
பங்கெனும்படி காய்ச்சிக்குறுகியானல்
சீலையில் பிழிந்து நண்ணுந்தயிர்த்
தண்ணீர் நாளுழிகலந்துகொள்ளே 1

கலந்தேயரைத்தங்கத்துடனே
கரைக்கும்மருந்து சதகுப்பை
சலந்தானிருக்கு மதிமதுரம்
சந்தனங்குருவேர் முத்தக்
காசுடனே நீர்சேரிருவேலிவேர்
நிகரில்வாழும் பெருங்குரும்பை
கார்சேர் குழலாய் கழஞ்சரையாய்
கடிதாயரைத்துக் கரைத்து வெந்து

சீரார் பதத்தில் வடித்தெடுத்து
சிதறத் தேய்த்துமுழுகிவிட
உரத்த சிலேற்பன சுரத்திஞேடு
பித்த சிலேற்பன சுரமும்
வட்கித்தானும் பழ வெதுப்பும்
வாரஞ்செய்யும் தலைநோயும்
பதறியோடி விடுமென்று
பகர்ந்தார் முனிவர் பாரினிலே.

மோரெண்ணெய்

வட்டமாமுலையாள் மோரெண்ணெய்
மருவுந்தில்லை மெழுகுடனே
கொட்டமேல மிலவங்கம்
குளிருஞ்சந்தனம் நன்ஞரி
தட்டமாஞ்சி தேவதாரம்
தகருமரத்தை சதகுப்பை
கிட்டு மிலாமிச்சிருவேலி
கேட்குஞ் சாத்திரவேதியுடன்
கூட்டும் வேருங்கிழங்குடனே
குலாவு நல்ல மாமஞ்சள்
ஈட்டுஞ்சிவதை செங்கழுநீ
ரிவையும் நல்ல குறுந்தொட்டி
கூட்டோரொன்று நாழிச்சார்
கொண்டகியாழத்தில் வார்க்கு
மெண்ணெயோரிரு நாழி மருவு
மாவின் மோரிரு நாழி
கூட்டியடுவிருநாழியூறிக்
குளிரு மெழுகுபதத்தில் வடித்துத்
தோட்டுஞ் சுரங்களெல்லாந்
தோர்த்துப்போய்விடுங் கண்டீரே.

மோரெண்ணெய்

வேறு

முன்ஞேர் சொன்னதின் வழியே
முழுகுமோரெண்ணெய் செய்வீராகில்

இன்னார் மருந்துவதி மதுரம்
ஏலங்கோட்டமிலவங்கம்
அன்னார் மேதையவாவரிசி
யரத்தைபச்சை கச்சோலம்
பொன்னார் மெழுகு பெருங்குரும்பை
பூசுஞ்சந்தன மிந்துப்புத்
தின்னார் சுக்கு மரமஞ்சள்
தேடு மிலாமிச்சிருவேலி
பின்னரான கடல்நுரையும்
பேதம் பேசும் ரோகணியும்
தென்னாருளப்பல் தேவதாரஞ்
சேரயிருகழுஞ் சோரொன்று
மன்னவரைத்துக் கரைக்குமருந்
துடனவர்க்குமொரு நாழி
நன்ற யெண்ணெய் நாழியுரி
நையவெந்து வடித்திதனை
மின்னார் மெய்யில் பூசவிளியும்
வெதுப்பு மிக்கவுட்சுரமும்
பன்னளிருந்த பதியிதுவென்
றெண்ண தெண்ணிப் போய்விடுமே.

தானுந்திரத் தைலம்

திருகிகரொத்த சேவகன்பூ
டொருபதின்பல முறத்தறித்திடித்து
நீரது குருணி நிறையப்
புகட்டிச் சீரொத்தமல்லி திறல்
மல்லி ரெண்டுடனின்றெழு
சிறிய வழுதலை கண்டங்காரி
காரொடு நெருஞ்சி மண்டிய
புன்னை மருவியபாதிரி
வேர்கோவிலந்தை விரவிய
துவரை நாடியிடை யிடை
நல்லிருபலத்தில் சொல்லியபா
லறுநாழி யெண்ணெயிருநாழி
மேவிய கற்கம் விளம்பிட நீர்கேள்
நற்கார் கோளி சீர்கார்கோளி

மணச்சந்தனம் மருவிய தகரங்
கோது சீவகங்குலவிய
யிடவகங்காதிலு நுதுப்புக்கடி
கமழ் கோட்டமேதை மகாமேதை
விரவினிலாதிரை சாதி
நற்சாளமுந்தன்னுறு பிசினுங்
கேளாச்சாதியுங் கருஞ்சீரகமும்
வாளாவசம்பு வன்னியகிலும்
நாறுகாய மிக்க நறுமஞ்சள்
குப்பையுந் தன்பேராவிடுகொ
ளதன் சிறு வீடு கொள்ளா மண
மிகவுள்ள மருவும் நன்னாரியுங்
குணமிகவுள்ள கோது விலாமிச்சஞ் (?)
சுக்குப்பச்சிலை புழுகு
குங்குமமும் சாலநல்ல
தாவிய மருந்துடன் இன்னிறை
கொண்டு அரைத்துக்கரைத்துச்
சங்கொடு பேரிகை சல்லிகை மத்
தளமண்டல முழங்க வடித்
திட்டி றுக்கிப்பின் முழுகவெல்லா
மிதுக்கு மிளைத்தவார்த்தையும்
நெஞ்சுநோவும் நிகரொத்த
வூணும் வஞ்சியிற் குடைச்சலும்
வருஞ்சன்னி வாதமும் திகழெனவு
மதில் வருபித்தமுமிரு விஷ
ரோகமு மூத்திரக் கிரிச்சனமுஞ்
சாலையந்துலைத்த ஞானத்துக்கெல்லாம்
சாலத்தீருந்தானைந்தீரமே.

அயிலேய தைலம்

சித்திரமாய் முசுமுசுக்கைச் சாறுபடி நாலு
திரள் குமரிச்சாறதுவும் படிதானுலு
சுத்தமாறும் நெல்லிக்காய்ச் சாறுபடி யிரண்டு
குலவு நீர்வாளியதின் சாறுபடி யிரண்டு
பத்தியுடன் ஆவின்பால் குறுணி விட்டுப்
பரிவானதில தைலம் படிதானுலு

இத்துடனே கூட்டுகின்ற கற்கங் கேளாய்
இடவகம் சிவகமேதை மகாமேதை தானே. 1

தானாகுமஞ்சனக்கல் லகிலின்கட்டை
சந்தன நற்கார் கோஷ்டி சீர்கார் கோஷ்டி
மானே கஸ்தூரி கோட்ட மமுக்குறாவேர்
மதுரம் நல்ல சீரகஞ் சண்பகத்தின் மொட்டுத்
தேனே யிம்மருந்து வகைக்கறுகழஞ்சு
திடனாகப் பொடித்திட்டு வடித்து மூழ்க
ஈனமுறப்பிதற்றுகின்ற பித்தரோக
மேகிவிடுமயிலேயத் தயிலந்தானே 2

மகாப்பிறதாரணித் தைலம்

வாதமதனால் வருந்தாமலே மகாப்பிறதாரணித் தைலமதைச் (?)
சாற்றக்கேள் பேருலகில் சிற்றாமல்லி பேராமல்லிச்
சிறுவழுதலை முன்னை கோட்டானத்தி யித்தி
ஆலமுக்குரா நன்னாரிமெத்தம் பெருத்த வழுதலையாம்
பேராமுட்டி சிற்றாமுட்டி மிகுத்தயோரண்டம்
வெட்டிவேர் கொடிவேலி பாதிரி மிதியார் கூந்தல்
வெண்ணொச்சி யாதளைவேர் கறிநெருஞ்சி
வில்வவேர் கஞ்சாவின் பத்திரம் கறிமுருங்கை
கண்டங்கத்திரி நீர்முள்ளி கள்ளி குரொட்டை
பெருங்குமிழ் வண்டு கொல்லி குறிஞ்சிலழிஞ்சில்
வனமுருங்கை கோரை கந்தஞ் செம்மணத்தி சாறணை
செந்தொட்டி கஞ்சா வோமமுஞ் சுவரொட்டி பிறங்கலது
கடம்பாங்காட்டின் மல்லிகை சிற்றாமணக்குக்
கருங்காலி வேங்கை பேயுள்ளி முசுட்டை குருந்துடன்
சத்திச்சாறணை ஆயிலெட்டி வெட்பாலை வேலிப்பருத்தி
ஆதண்டையப்பாசவரிக்கொத்து பிறாமுட்டி
கூட்டியே யித்தனையும் வகைக்கு வகை
நாலுபலம் வாரீரி ருகல நீர்தொகைக்கது
நாலுபடி சுண்டயெரி கடைச்சரக்கு
மஞ்சள் மரமஞ்சள் மாஞ்சி குங்கும மஞ்சனக்கல்
வெண்கடுகு அதிமதுரம் விடையம், கருங்கடுகு
கச்சோல மஞ்சிட்டி காரகில் தேவதாரம் சிற்றரத்தை
பேரேலஞ் செவ்வள்ளித் தக்கோலம் அத்தித்திப்பிலி

பேராத்தை ரோகணி மெத்தயிந்து வெட்பாலை விளாவரிசி
நறும்பிசின் திரிபலை மகிழம்விரை திரிசாதகம் புங்கம்விரை
திரிகடுகளிசம் விரை பச்சைச் சென்னகரைப்பழத்துடனே
இவையெல்லாம் வகைக்கு வகை யிரண்டுபலம் வா
ரீர் கலநீர் தொகைப்படியே குருணியாய்ச் சுண்டஎரி வெள்
[ளாட்டின்
சீர் மதுவிரண்டுபடி சென்மமது யெண்பலத்தில் தண்ணீரது
ஓர்குருணி நிற்க யெரித்தெட்டொன்றாய்ப் பாருடனே
காணமது நாலுபடி தாடியது பன்னிரண்டுபடி
வேணுமது முன்போல வெந்துயிறு இஞ்சியுட
னெலுமிச்சம்பழம் வீழிநீர்நாழி தொடைதழுதாழை
கருநொச்சி சேரவே சாறுபடி மூன்றறையாம்
நிறையவேயெண்ணெயதிரண்டுபடி எல்லாக்
கியாழமிறுத்தொன்றுபட வேதாளிதனிலொக்க விடு
கற்கமட்டவர்க்கங் கற்பூரங்கோரோசனையரேணுகமுங்
கண்டில்வெண்ணெய் சேர்த்தொக்கயெடை நாற்பத்தெண்
கழஞ்சாங்கெட்டியாய்ப் பொடித்ததனைப்போட்டுப்
பொங்காமலேகாய்ச்சி வடித்தவுடனேங்கழஞ்சு
சாந்துமத்தித்துத்திடத்துடனே முக்கழஞ்சுதயில
முழுங்கிவிட மூக்கில்விட சிக்கெனவேயுடம்பெல்லாஞ்
சேர்த்துத்தயிலமிடத்தீருமே திமிர்வாதங்
குடல்வாதஞ்செமியாதெழுதைவாதம் மிக்ககழல்வாத
மண்டவாதஞ்சன்னி வாதமயர்வாதம் வருமுகவாதமாம்
வீச்சிரண்டுவலியிசிப்பு வாதமேகுமாம் நடுக்குவாத
மெரிவாதஞ்சந்துவாத முடனரித்தலைவாத
வெப்புவாதமாம்புவாத மொருத்தலைவாதஞ்
சூரியவாதஞ்சந்திரவாதமுடல் கனப்புவாதம்
பெருத்தமேகமதில்வாத விசையக்கிவாதம்
கிரீச்சனவாதஞ்சோகைவாதம் நெஞ்சடைவாதம்
துடிவாதம் தொண்டையடைவாதம் சிங்குவைவாதம்
சூலைவாதம் தொடைவாதம் தண்டுசோர்வாதம்
கோரைவாதம் போகம்மட்டிருத்துவாதம்
மண்டைவாதம் துண்டவாதம் கெட்டுமிகச்சூலை
கெடிவாதம் தெறிவாத முள்ளடிவாதம் நச்சுவாதம்
பின்மட்டிவாதம் மெள்ளநடுவாதம் விலாவாதம்

வருணவாதம் தாங்கள்ளமாயிரமுட்டிவாதம்
ஏகவாதம் நேத்திரவாதம் சொரைகட்டுவாதம்
தொடுவலிப்புவாதம் சுகவாதம் பக்கவாதத்துடன்
துன்னுவாதம் புயவாதம் துணுக்குவாதம்
முடக்குவாதம் கால்பின்னுவாதம் பிறவாதம்
செகமெல்லாவாதமது வெண்பதினால் வருநோயுந்தீருமே
சூலையது நாற்பதுவுந்தொலையுமே பித்தமதுசிலேற்பனத்தால்
பெருத்துவருவாதமெல்லா மித்தனையுந்தீருமிதற்கு.

சந்தனாதித் தைலம்

மாதரொடு மோகம்வருந்தினால் மானிடரே
தாதுகெடும் நீரழிவுதான்தோன்றும்—போதமவே
காந்தமெலடுத்துக் கனகனத்துக்கஞ்சிதண்ணீர்
வாங்கியுடல் வெளுத்துவற்றுமே—பாங்கியரே
பல்லோர்க்கு நல்லபயன் சந்தனாதிதனை
வல்லோரே வைத்துக்கொள்மானிலத்தில்—ஏற்றார்க்கு
மம்மையுமையாயரன் கயிலைவாழுமப்பா
செம்மையுள்ளவாகடத்தைச் செப்பக்கேள்—நன்மையுறு
சந்தனமொடு கோட்டஞ்சதாவேரி
முந்தியபொன்னாங்காணி முத்தமுட—னந்தமகில்
முட்டியமுக்குறுச்சொல்லி லரவிந்தமுடன்சிறந்த
முட்டிவல்லோரேயொன்று குறையாமல்—(?)
ஓர்பலங்கொண்டேதகர்த்துச் (?)
சென்றிருநாழி செலுத்தியே—ஒன்றாகக்
காய்ந்து இருநாழிகியாழ மறவடித்து
வாய்ந்தஎண்ணெய் பாலிளநீர்வற்றியபின்—போர்ந்தமொரு
சந்தனங்காலல்லாமல் சாதிக்காய்கோட்டமுடன்
வந்தவசுவாசி மகரப்பூப்—(?)
பச்சிலைகச்சோலம் பருஞ்சிட்டிமாஞ்சியுட
நிச்சயமாஞ்செங்கழுநீர் சண்பகப்பூ—மச்சமற
ஏலமிலவங்கமிருவேலி சிற்றரத்தை
வால்தேவதாரஞ்செவ்வள்ளியுடனங்—தாலமுடன்
தக்கோலமுங் கடுகுரோகணியுங் குங்குமப்பூச்
சொற்சாதிபத்திரி மேலபத்திரியு—நற்பான
கிள்ளையுரையுங் குரோசானி—நாகப்பூ

வெள்ளியதிமதுரம் வேதிக்கல்—நல்லவிளா
வெட்பாலையின்தகரம் வேண்டியசெஞ்சந்தனமும்
ஒப்பானகழஞ்சு நிறையொன்றாகத்—தப்பாதே
தாளி கொடுப்பை சதாவேரி
வீழி முருக்கு நொச்சிவேர்க்குமரி—பூழியரே
குன்றுமலச்சாறு குறையாமலீருழக்கு
ஒன்றாகவே கலந்து மருந்—தொன்றாய்க்
கூட்டித் திலதைலங் கூசாமல் வேகவைத்து
வாட்டும் வனசபதம் வந்ததென்றால்—வீட்டிலுள்ள
தட்டமெடுத்துத் தாழப்பூத்தான் பரப்பிக்
கட்டியிறக்கி வடி கஸ்தூரி (?)
குங்குமம் கோரோசனை கூட்டியபின் சட்டமுடன்
பங்கயக்கண் மார்பு பரிவு செய்து—நங்கையரே
வாய்த்த சந்தனாதிதனை வைத்து வெந்நீர் முழுகிவர
ஏற்றரிய பித்த மெய்யுற்ற வாதம்
நீரிழிவு காந்தல் நிணமுருக்கி யுள்ளுருக்கி
பாரவெலும்புருக்கிப்பல் குத்து—மேகத்தில் (?)
தந்தி கண்டிதனிற் சதையடைப்பன்
தந்தரமாங் கல்லடைப்பன் தன்வாய்வு—தந்திரமாய்
மூத்திரநாளகுறி யெரிப்புக்கை யெரிப்பு
வாய்த்த யெரிசூலை வரட்சி வெப்பு நேத்திரத்தில்
காசமுடன் சுக்கிரனுங் கண்ணோ
கடுத்துளை வாய்வலுவில்லாவரு நீருஞ்—சாய வொட்டா
மண்டை யிடியும் வளர்காதில் நின்றகுத்தும்
தொண்டைப்புகைச்சலதைப்புடனே—துண்டத்தில்
பீனிசம் வாய் நாற்றம் மற்ற வழுவழுப்புத்—தேனார்தன் (?)
கர்ப்பமொடு சூலை கிளர்நோய் கடுப்பெரிவு
சற்பப் பெரும்பாடு தணியுமே யிதை—அற்பமென்றே
யெண்ணாதே யினிய சந்தனாதி தன்னைப்
பண்ணாகவைத்துப் பரிவுடனே—பொன்னார்
மேனிதனக்கு மிகுந்த நிறைகாட்டு
மேனியிடும் பொன்மேனியாகுமே—வானவர்க்குச்
சத்தரிஷிமா முனிவன் தானுரைத்த வாகடத்தை
நிச்சயமே செவ்வாய் நினைந்து.

சிரவியாதிக்குத் தைலம்

தோற்றுஞ் சொல்வேன் சிரநோய்க்குத்
துடங்கு மெண்ணெய் வழியிதுகேள்
நூற்றின் பலங்கொள் குறுந்தொட்டி
நுவலுந்தண்ணீர் பலமொருநாழி
ஏற்றிக்காய்ச்சி நாலொன்றானல்
இசைந்திங்கரைக்கும் மருந்தினிகேள்
தோற்றமுப்பலந் தேவதாரம்
செவ்வே யெண்பலங் குறுந்தொட்டி
யுற்றவேரிலப் புறந்தோலு
மென்றும் மோனமுடனரைத்து
வீற்று மெண்ணெயறு நாழி
விட்டுக்கொள்ளும் பாலொருதூணி
பதத்திலே வெந்து பதத்தில்
வடித்து யடுக்குஞ் சிரநோய் தைலம் (?)
மாற்றும் வியாதிதனைக்கேள்
படுவன்திமிரம் மன்னும் பற்ப
ரோகமுடன் வெற்றும் விரண சுக்கிரனு (?)
மேவுங்கபால சூலையுடன்
போற்றிக் கோணு முகவாதம்
பொருந்துங் கனசூலை தனைக்கணப்பு
காற்றுப்போலே போய்விடுமே
கழுத்துக்கு மேலுள்ளதுவே

அசனவில்வாதி யெண்ணெய்

மதப்புலிவயிரங் கூவிளை
வேரும் வடுவொன்றில்லாச்
சிந்தித்தண்டுத் தீருறு
பிணிபலவுந்தீர்க்குஞ் சொல்லுஞ்
சேவகன் பூண்டின் வேரு
மவைதானென்று பலங்கொண்டு
இவைதானெல்லா மிடித்து
நீருக்கிப் பலமொன்றுக்குத்
தண்ணீர் நாழி பரிவுடனே
வார்த்துக்காய்ந் தெட்டொன்றாக்கி

வாரீரிறக்கி வடித்ததிலே
யரைத்துக்கரைக்கும் மருந்தினிக்கேள்
சாதிக்கா யொடுதக்கோலம்
முன்னிதழ்மூடிய சண்பகப்பூ
வாதித்தனருளால் விரசகத்
திருக்குமதிமதுர முடனரத்தை
யேலந் தேவதாரங்கோலஞ்
சிவந்தமாஞ்சி மரமஞ்சள்
மஞ்சளங்காவில் நின்றுருத்தி
யிலங்கு கல்நார்சந்தனஞ் செஞ்
சந்தனஞ்சுக்கு பச்சிலே
புழுகு குங்குமம் சொல்லுமகிலும் (?)
கற்பூரமிக்க யிருவேலி
யிலாமிச்சு மிகவும் (?)
நன்னாரிவேர் முத்தக்
காசு செங்கழுநீர்க்கிழங்கு
அமுக்குரா வேர்கனி நல்லாளே
யிருகழஞ்சு கண்விழிபடாமல்
மிகவும் கரிக்கு மிருதன்னெண்ணெ
யிருநாழிகூட்டி எண்ணெயில்
மருந்தெல்லாமியல்புடன் வடிக்கக்
கண்ணோய் தலை கருதியசெவி
நோய்சுதிவாத முகவாதஞ்
சொல்லுங்கழுத்துமே னொயெல்லா
மதியவனுணையறிந்து தீர்க்கும்
சனவினோதி யறிந்துகொள்ளே.

உளுந்தெண்ணெய்

உற்றநோய் தன்னைத்தீர்க்கு
முளுந்தெண்ணெய் சொல்லக்கேளாய்
மற்றுமோருளுந்து நாழி
வார்க்குநீர் பத்தாறுநாழி
பக்ஷ்ன்ற நீரெட்டொன்றாக்கி
மெத்தவேயதனினூடே
மேவியரைக்குமருந்தினிக்கேள்
மெத்தவென்னு மதிவிடைய

மேவுமிடவகஞ் சதகுப்பை
அத்தப்படியே யிந்துப்பு
அரத்தை தேவதாரமுடன்
குத்தமில்லா நாகப்பூ
கூறும் நெல்லிப்பருப்புடனே
சித்தந்தெளிந்த செஞ்சந்தனம்
சேரும்பூதா விருக்கமுடன்
கத்தவற்கான கருஞ்சீரகம்
சீரகமத்தப்படியே
பால்நாழியடவே நொச்சி
கரத்தொட்டிச்சாறொரு நாழிவிட்டுப்
பத்தாதெரித்துப் பதத்தி
லிறக்கிப்பாகமாய் வடித்து
மேல்பூசவத்திப்
பிடித்து நசியம்பண்ண
வாதமஸ்தி சுரம்சூலை
சன்றாங்கேளா திருந்த செவி
தானேயிரையுங் காதிரைச்ச
லுற்றகாதில் திமிர்நடுக்க
முயர்ந்தவாத மயிர்நடுக்கந்
தத்தாமென்னத்தான் பதறித்
தானேயோடிப் போய்விடுமே.

மகாசந்தனாதித் தைலம்

மானிடற்கு நோய்தீர வாய்த்த சந்தனாதியெண்ணெய்
நீதியுடனுரைப்பேன் நிச்சயமாய்த்—தோள்புனையுஞ்
சுத்தமலாக்கா வேங்கை துய்யயிராமிச்சுவெட்டி
வித்தகஞ்சேர்சீந்தில் வெருகுவில்வ—முத்தநெல்லிக்
காய்மிளகு நன்னாரி கற்பூரவள்ளி முத்தக்
காசுகுறுந்தொட்டி தேவதாரமுடன்—மாதுளையுந்
தாமரையின்தாதமகில் சதகுப்பையினுடனே
ஏதமுறும் நல்லயிருவேலி—சீதரமாந்
தாழைவிழுது சதாவேரியின் கிழங்கோ
டாகவிருபத்தொரு மருந்தும்—நேராக
நாலுபலமோவ்வொன்று நன்றாகவேயிடித்து

சாலமிடாவதனில் தான்போட்டுப்—பாகுபெற
எட்டுமரக்கால் பாணியிட்டெரித்திட்டொன்ருக்கி
கட்டாகுமிந்தக்கியாழத்தோ—டிட்ட முறு
மெள்ளெண்ணெய் நாலுபடியிளநீரோடாவின்பால்
உள்ளபடி குறுணியொக்கவிட்டுக்—கள்ளமில்லாப்
பொன்னுங்காணி கரப்பான் பூரவல்லி காத்தொட்டி
மின்னேசிறுகீரை வெற்றிலையு—முன்னிதமாங்
கஞ்சாமுசுமுசுக்கை களங்கமறவே பிடித்து
மிஞ்சாதொருகுறுணிவிட்டுவிடு—கஞ்சமலர்
மாதே கடைச்சரக்கின் வகையதனைச் சொல்வதுகேள்
ஆன அதிமதுரமம்புயமுந்—தேனே
சிறுதேக்குச் சிற்றரத்தை செங்கழுநீரின்கிழங்கு
மறுவிலாமாஞ்சி மகரப்பூத்—தறுகாத
மஞ்சள் மரமஞ்சள் வால்மிளகு சண்பகப்பூச்
செஞ்சொலியம்புந்திரிபலையு—மஞ்சிட்டி
கொண்டேர்சேனைக்கிழங்கு கொம்பரக்குக்
கண்டில் வெண்ணெய்—(?)
கஞ்சாவிரை கடுகுரோகணியுந்—தஞ்சமெனும்
சட்டம்புழுகுசவாது கோரோசனையுங்
கொட்டமுடன் கஸ்தூரி குங்குமப்பூ—வெட்டிவேர்
வங்காளப்பச்சை யிலவங்கமதின் பத்திரியுந்
தங்காக் கிராம்பேலம் சாதிக்காய்—மங்காத
பச்சைக் கற்பூரம் கருந்திரி கடுகோ
டச்சமில்லா நன்னாரி யழுக்குரு—இச்சைபெறு
தாளிச பத்திரியுஞ் சாதியதன் பத்திரியுங்
கோள்தீர்க்கும் நாகணமுங் கொத்தமல்லி—வாள்நுதலாயகில்
சந்தனமுமிரு சீரகம் பெருங்குரும்பை
மிஞ்சு சதகுப்பை வெள்ளி லோத்திரமும்—அஞ்சாத
செவ்வள்ளியின் கொடியும் சிறுநாகப் பூவுமுவா
கவ்வையிலாதக் கோலங்கார் போகு—செவ்வேதான்
அஞ்சனக்கல் வெட்பா லரிசியுடன் ஒவ்வொன்று
தஞ்சமுற நாற்கழஞ்சு தான்தூக்கி—மிஞ்சா
தரைத்துத் தைலமதனுடனே சேர்த்தெரித்துப்
பதத்தில் வடிக்குமந்தப் பக்குவத்தில்—வசத்துடனே
வாசகமழ் சுகந்த வாசவகை புட்பமெல்லாம்

நேசமுடனே பரப்பி நீ வடித்து—வாசனையாம்
பாணிதனிலடைத்துப் பாங்கு பெறவே தேய்த்து
யிதமாக வெந்நீரிலே முழுகத்—தீரும் நோய் (?)
விக்கல் சத்தி சூலை பிரமேக மிருபதுட
னக்கினியதான அனலெரிவு—தொக்கிலுள்ள
நீரழிவு காந்தல் நிணமுருக்கியுள்ளுருக்கி
பார எலும்புருக்கி பல்லுளைவு—தீராத
காதிலிடி குற்றுக் கபாலவலி யிரைச்சல்
பாதமதில் காந்தல் சயம் பாண்டு நோய்—ஏதமுறுங்
குட்டங்கடி விஷமுங் கொடிய சுழல் பித்தமுடன்
மட்டில்லாமலே வளர்கரப்பன்—விட்டுவிடா
தத்திசுரம் வாயு அருசி பித்த சுரமுடன்
உற்றதொரு பிணிசங்க ளுள்ளதுவும்—நேத்திரத்தில்
தொண்ணூற்றாறு பிணியும் தோன்றாமல் தீருமென
முன்னோர்கள் சொன்னமொழி.

நிற்குண்டி யெண்ணெய்

சேரும் நொச்சிமாவிலிங்குஞ் செய்யமஞ்சணத்தியு
மாரும் வெட்டி வீழிதும்பை யவுரி கொன்றையாதளை
சேரு குப்பைமேனியயம் செம்மணத்தியாயிலும்
பாருமொன்று நீருரிக்கெள்ளெண்ணெய் பாலளாவிடே. 1

வெந்தயத்தோடோமமாஞ்சி மேவு சுக்கரத்தையுஞ்
சந்துகொட்டமேலமோடு சாதிக்காய் கிராம்புடன்
மூந்துசாதிபத்திரி முயங்கவின் விழாலுமே
அந்தமாகவே சமன் கொள்ளாக வெந்துகொள்ளுமே 2

மேவுமெண்ணெய் சென்னிமீதில் விட்டுநீ குளித்திடில்
பாவுமண்டை சூலையோடு வங்கு குட்டமீளையுந்
தாவு சேரப்பித்தமுந் தயங்கு நாசி ரத்தமும்
பாவுசன்னி ரோகமும் பரிந்து தீருமுண்மையே. 3

இருமலுக்குச் சாற்றெண்ணெய்

ஏற்றமென்னும் சாற்றெண்ணெய்க்
கினந்தான் சொல்லும் வகை கேளாய்
தோற்றும் நொச்சி பிறமுட்டி
துலங்குந்திகடை ஆடாதோடை

யாற்றுஞ்சாறடை கையாந்தகரை
அடுக்குந்தூது கீழ்க்காய் நெல்லி
தேற்றுமிசங்கு பிரமிபொடு
தலைசெரியுங் கத்தரிச்சுழ
லாவரை சாற்றும் வகையிவை
யோரொன்று தனிச்சாறுழக்குள்
வேற்று மருந்து திப்பிலி
மிளகு கடுகு பேருற்றுஞ்
சீரகஞ்சாதி குரும்பை
தாற்றும் விழா வெட்பாலை தன்னு
மேலதிவிடையங் கூத்துஞ் சுக்குச்
சண்பகப்பூக் கொடியது
முகங்கோல நாற்றமசமதாக
முத்தக்காசு நடுவேய்த்தவுயும்
கூத்த மென்னும் கொடிவேலி
கொள்ளு மூலமரோசனையு
மேற்றிக்கொள்ளாயோ ரொன்று
கழஞ்சு யெண்ணெய் நாழிகை
பாத்துப்பையவே அரைத்துக்
கரைத்துப் பதத்தில் வடித்திதனை
யாத்திநக்கக்காசங்கற்றை
யடுக்குமிருமலிவையெல்லாந்
தோற்றுப்போமேயாயுறு
வேதத்துள்ள மருந்திதுவே.

மகாசந்தனாதி தைலம்

வீசுபுகழான மிருத்த சந்தனாதிதனை
ஓசைபெறவேதயில முறைப்பதுகேள் — பூசுகின்ற
வாசமலாக்கா வேங்கைவளருங்குறுந்தொட்டி
பாசங்கிளை சுகந்த பாலைவில்லம் — நேசமுள்ள
நீர்வாழிமுள்ளி நெல்லி நிகழ்த்துஞ் சதகுப்பை
கார்பூத்த கொம்பரக்குக் கஞ்சவளை—சீர்பூத்த
தாழைவிழுதுமிச்சு தாரிருவேலி மிளகு
காளமகில் வெட்டி முத்தக்காசுடனே — வாழுகின்ற
தேவதாரமுடனே சீந்தில் வெருகங்கிழங்கு

பாவகமாய் நாலுபலம் வகைக்கு — ஆவலுட
னித்தனையும் நன்றாயிடித்து மிடாவதனில்
பத்திரமாயெண்மரக்கால் பாணிவிடு — சித்திரம்போல்
சூட்டடுப்பிலேற்றிச் சுவறவெறித் தெட்டொன்றாய்க்
கூட்டுங்கியாழத்தில் கூறக்கேள் — வாட்டமுடன்
நல்லெண்ணெய் நாலுபடி நலம்பெறவே தாளிவிட்டுச்
சொல்லக்கேள் சாறுவகை தோகையரே — வல்லோர்முன்
வைக்கமருந்துவகை பொன்னாங்காணியுடன்
தக்கமுசுமுசுக்கை தான்கரிப்பான் — சிக்கெனவே
காத்தொட்டிவெற்றிலை கஞ்சாச்சிறுகீரை
சீற்றமுறுபூரவள்ளி சேரவே — சேர்த்திடித்துச்
சாறுவகைக்குப்படி தாஞலுகூட்டியபின்
கூறுகின்றோம் பின்னிளநீர் — கூறுங்கால்
ஆதலால் நாலுபடிவகைக்கு நன்றாயுடன்கலந்து
சீலமுடன்கற்கவகை செப்பக்கேள் — ஏலமுடன்
கொட்டமதிமதூரம் குங்குமப்பூ கஸ்தூரி
சட்டமுடன் கற்பூரசிலாசத்து — வெட்டுகின்ற
கொட்டிக்கிழங்குடனேயொன்றோ சேனைக்கிழங்கு
திட்டமுடன்நன்னாரி சண்பகப்பூ — இட்டமுடன்
கொம்பரக்கு செங்கழுநீர் கொத்தமல்லி சூடனுந்
தம்புலுவாய் நாகணஞ் சடாமஞ்சி — சிம்புசெறி
வங்காளப்பச்சை மரமஞ்சள் வால்மிளகு
பெருங்குரும்பை தானசுவஞ் — சங்கைபெறு
செஞ்சந்தனந்தகரஞ் சேர்புழுகு சட்டமுடன்
அஞ்சனக்கல் மஞ்சளதுவுடனே — கஞ்சமுறுந்
தாமரையின் வேருடனே தாளீசபத்திரி நல்
லோமங்கொடிவேலி வெள்ளிலோத்திரமும் — நேமமுள்ள
சிற்றரத்தை நாகப்பூ சிவதை கடுகுரோகணியும்
பத்திரிகடுகுபகர்புழுது — சித்தமுறு
சீரகமிருவகையும் சேர்சாதிக்காயுடனே
வீரமுடன் தக்கோலம்வேண்டியே — வாரமுள்ள
யிலவங்கப் பத்திரிநல் லிலவங்கப்பட்டையுடன்
கலகமில்லாமஞ்சிட்டி கார்போகு — தலைமைபெறு
செவ்வள்ளி வாய்விளங்கம் சிற்றரத்தை கண்டில்வெண்ணெய்
கவ்வையில்லாச்சங்கை கருஞ்சூரை — பவ்வுசிறு

தேக்குடனே நல்லதிரிபலை குளமாஞ்சி
மார்க்கம் விளாம்பிசின் மகரப்பூத்—தாக்குடனே
பாக்குமிருவேலி பருவமாய் நீ வகைக்கு
நாற்கழஞ்சு வாங்கி நறுக்கியே—சீக்கிரமாய்
நன்றாயுடனரைத்து நல்லெண்ணெயுடன் கலந்து
துன்றாமல் காய்ச்சிச் சுவறினால்—குன்றாமல்
நல்லபதம்வந்துதென்ற நாளிலேநீவடிக்க
வல்லவரேகேளும் வகைவிவரம்—மெல்லவே
யானைமுகவன்றனக்கு அருள்பூசைசெய்ததற்பின்
மானனையீரென்னை வகைகேளு—கானமுறும்
வாசஞ்சுகந்தவாசவகைபுட்பமெல்லாம்
பாசமுடன் சட்டிதனில்பரப்பியே—கூசாமல்
பார்த்துவடித்திதமாய்ப் பருங்கலசந்தனில் வைத்து
வாய்த்ததொரு நாளறிந்து வாகுபெறத்—தேய்த்துத்தான்
வெந்நீர்முழுகிவா மிருந்தபிணி தீர்வதுகேள்
எண்ணிய மேகமிருபதும்போம்—துண்ணிமையாம்
நீரிழிவுகாந்தல் நிணமுருக்கி யுள்ளுருக்கி
சாருமெலும்புருக்கி தான்சூலை—தீருநோ
யின்னம் வகைகேளு மிளைப்புக் கசரோக
மன்னுசெறி பித்தம் வளர் வேர்வை—நன்னயமாய்
எண்ணமுடன் கண்ணிலெழுந்தநோய் தொண்ணூற்றாறு
திண்ணமுடன் புகைச்சல் சேரப்போம்—வண்ணமுடன்
குட்டங் கடிவிஷங் கொடிய சுரங்கரப்பான்
அட்டணையாம்பாண்டு பின்பு நான்சொலக்கேள்—திட்டமுடன்
காதிலிடியிரைச்சல் காதுவலி குத்துடனே
தாதுபயில் பல்லுளைவு தான்வாழ்வு—மாதவரே
சோகையுடன் கக்கல் சுழல் பித்தம் பீனிசம்போம்
ஆகமுறும் விக்கலரோசகம்போம்—பாகமாய்
வேண்டுமெண்ணெய் பெயர்தான் விளம்பவே நோய்போகும்
பாண்டிதத்தோர் செய்வீர் பகர்ந்து

பலவித நோய்களுக்கு

வில்வப்பழநெய்—வில்வப்பழம் 20, பசுவின்பால் படி 4, செவ்விளநீர்த் தண்ணீர் படி 4, வாழைக்கிழங்குச்சாறு படி 4, நல்லத்திவேர்த்தண்ணீர் படி 1, நீர்வாழிக்கிழங்குச்சாறு படி 1,

இவையெல்லாஞ் சேகரித்து நறுநெய் படி 1, விட்டு இளம்பத மாகிற பருவத்தில், அதிமதுரம், கோட்டம், இலவங்கப்பட்டை, பேரீச்சம்பழம், முந்திரிகைப்பழம், சீரகம், வெந்தயம், கல்நார், கல் மதம், கூகைநீறு, வகைக்குப் பலம் 1, கிராம்பு, சாத்திரவேதி, கொத்தமல்லி, சண்பகப்பூ, சுக்கு, மிளகு, வகைக்குப் பலம் 2, ஆவாரை, அல்லி பலம் 1, இலவங்கொழுந்து பலம் 1, ஆக இவையெல்லாம் வஸ்திரகாயம் செய்து முன் குழம்பில் தூவிக் கிண்டி யிரக்கி வைத்துக்கொண்டு ஒரு கொட்டைப் பாக்களவு கொள்ளவும். உள்ளுருக்கி, எலும்புருக்கி, பெரும்பாடு, அத்தி சுரம், கல்லடைப்பு, துன்மாங்கிச அடைப்பு, கிரீச்சனம், மூத்திரப்பாளம், பிரமேகத்திலெடுத்த வியாதி இவையெல்லாம் தீரும். உப்புக் கூட்டிக் கொள்ளவும்.

பேய்ப்புடல் நெய்

சொல்லும் பேய்ப்புடல் கொடிப்பை தூயவல்லாரை தாழை
நல்ல பூசனிக்காய் மிக்க நறிய வெள்ளரிக்காயோடு
வல்லயத்தின் வேர்த் தண்ணீர் மாதளம் பழம் சம்பீரம்
வெல்லும்நீர் வாழிதாளே வெவ்வேறி து நாழிச்சாறே. 1

குமரிவேர் சிற்றாமுட்டி கோவையின் தண்டோடொக்க
கழுது வேர்வகை முத்தக்காசு சீதேவி வேருந்
தமது செங்கழுநீர்ச் சிந்தில் நன்னாரியமுக்குறுவேர்
தமதிருவேலி வேருந்தனித்தனிப் பலமும்பத்தே. 2

இப்படி நிறுத்து நன்றாயிடித்து நீர்தூணிவிட்டு
அப்படிக்காய்ச்சி யெட்டொன்றாக்கியே சாற்றில்விட்டு
மெய்ப்புறும் நறுநெய்நாழி விளங்கு மாவின்பால் நாழி
செப்பிய மதுரஞ்சந்தஞ் செங்கழுநீரின் மூலம். 3

சாதிபத்திரி கிராம்பு சாதிக்காய் கூகைநீறு
கோதறு தகரமேலங் குங்குமப்பூ நற்கோட்டந்
தீதுறு கடுகுரோகணி சிவதை கற்பூரமென்ன
மூதுள மகரப்பூவு முந்திரி பேரீந்தாமே. 4

பண்ணி லவங்கத்தின் பத்திரி யிவை வகைக்குச்
சொன்னதோர் கழஞ்சரைத்துத் துழாவியே பதமாம்போது
இன்னயச்சீனிதூவி இறக்கியே கடுகிறேடு
நன்னய உதையகாலம் நாற்பது நாள் கொள்வீரே. 5

கொள்ளவே மூலந்தன்னில் கொண்டவுட்டிண முஞ்சூடுந்
தள்ளுமோர் கிறுகிறுப்புத் தங்கு காமாலை பித்தம்
வெள்ளையில் கறுப்பில் வந்த வினைபல கண்ணீர் பாய்ச்சல்
ஒள்ளிய காய மெட்டு மொழிந்திடு மென்ன லாமே. 6

குக்கில் கிருதம்

நொந்தனு தினமுள நோயி னால்மிக
வெந்துள னுருகிடும் வியாதி யாளரே
விந்தைசேர் குக்கில் கிருதம் விரும்பும் படியே
சிந்தனை யின்றியே செய்துகொள் திண்ணமே 1

திண்ணங் கண்டங் கத்தரிவேர்
சீந்தில் தண்டு பேய்ப்புடல்
நண்ணு மாடா தோடையொடு
நல்ல நிம்பம் வேர்ப்பட்டை
எண்ணும் வகைக்குப் பலம் பத்தா
யிடித்துத் தாழி தனில் போட்டு
உண்ணும் உதகம் படிநூறு
முகந்தே விட்டுக் காய்ச்சிடுமே 2

காய்ச்சி நாலு படியானால்
கற்க மதனைப் பிழிந்தெறிந்து
பாய்ச்சும் நறுநெய் யொருபடியில்
பண்பாய் விட்டுக் காயவைத்து
ஆச்சு நீர்க ளற்ற தென்றால்
அரைக்கு மிக்கக் கடைமருந்தை
கூச்ச மறவே நீர் கேளீர்
கோட்டம் மிளகு சுக்குடனே. 3

உடனே கடுகு ரோகணியும்
ஓது மக்கினி வர்க்கமுடன்
மடவீர் நல்ல மரமஞ்சள்
வளரும் வனத்தில் செவ்வியம்
மடவார் நல்ல மஞ்சிட்டி
யான விடங்க மதிவிடையந்
திடமா மெவாட் சாரமுடன்
திப்பிலி மூலம் அதுவாமே. 4

அதுவா மத்தித் திப்பிலியு
மான வெட்பா லரிசியுடன்
விதிசேர் பொன்னின் முசுட்டைவேர்
விளம்பும் சண்பகப் பூவுடனே
மதிபோ லனைய சவுக்காரம்
வருந்துந் தேவ தாரமுடன்
பதிபோல் மிக்க சதகுப்பை
பகரும் வகைக்குக் கழஞ்சொன்றே. 5

ஒன்று யிடித்துத் தெள்ளியதை
ஓதும் நெய்யில் மேல்தூற்றி
நன்றாய்த் தரும்பணம் போல் சுத்தி
நலிந்தே பண்ணுங் குக்கில்பலங்
குன்று தஞ்சும் பொடி பண்ணிக்
கூட நெய்யில் தூற்றியதை
மன்றோர் புகழும் பதமாக
மகிழ்ந்தே கிருதம் பண்ணிடுமே. 6

இடுமே வேழ முகன்பூசை
யியல்பாய்ப் பண்ணி மேல்நாளில்
கடுநோ யகற்றுங் கிருதமதை
கடுகினுடனே வடித்தரிய
வடுவில் லாத கலசமதில்
வைத்துப் பதனம் பண்ணியிதைக்
கொடுமே நல்ல கடுகுடனே
கோதி யிரண்டு கரண்டிநெய்யே. 7

நெய்யே யருந்தத் தீரு நோய்
நீரிற்கடுப்புத் தண்டெரிப்புத்
தொய்யும் வீக்கம் பவுத்திரமும்
சொறியுங் குட்டம் கடிவிஷமும்
நையும் சலமும் வடுவொடுவும்
நடுக்கு மண்டைப் புத்துடனே
வெய்ய கிரந்தி யரைப்புற்று
மாளும் பதகிரி வெள்ளையுமே. 8

வெள்ளை யுடனே கருங்குட்ட
மீளுங் குக்கில் கிருதமதை

உள்ள மகிழ்ந்தே மண்டலந்தான்
 உப்புப் புளிப்புக் கசப்புவிட்டே
கொள்ளே மிருத்த பலபிணியும்
 குறைந்து கடலிற் புகுமெனவே
தெள்ளு தமிழ்தேர் முன்னவர்கள்
 தெரிந்தே யுரைத்த அவுடதமே. 9

பஞ்சதிரவிய நெய்

பஞ்ச திரவிய மஞ்சுதன்னில்
 பரிவுட னெக்கக் கொண்டு
மிஞ்சுங் கள்ளிப் பாலுழக்கு
 வேண்டும் துவட்சிகை யிந்துப்புத்
துஞ்சுஞ் சுக்குக் கோட்டம்
 தோன்று மிளகு சவுக்காரம்
இஞ்சி சீரகங் கரியசீரக
 மதநேர் நெல்லி கடுதான்றி
பஞ்ச தாரை மோதக
 மருவுந் திப்பிலி வழுசிவதை
கொஞ்சுங் கொடிய கொடிவேலி
 கூடக் கூட்டும் நாகந்தி
பைஞ்சொல் மருந்து பதினேழு
 பதரு தோரொன்று ஒரு கழஞ்சு
திருந்த வரைத்துக் கரைத்துப்
 பதத்தில் வடித்து நக்கவல்லீ
ராயபிலீகை மகோதர
 மிளக்குங் கர்ப்பவாயுமே.

அக்கரத்துக்கு நெய்

செல்வஞ் சிறந்த அதிமதுரஞ்
 சீரக மோதகந் திப்பிலியுங்
கல்நார் கல்மதந் தூதளேவேர்
 கருதும் வெள்ளேச் சாறணைவேர்
நல்ல தொருபிடு வெங்காயத்திட
 நறுநெய்யில் வெந்து மெழுகுபதம்
வல்லதொரு கழஞ்சுகாவில்
 வைக்கத்தீரு மக்கரமே.

வலி குன்மத்திற்குத் தகுதி நெய்

வெள்ளுள்ளி யிஞ்சி நெல்லி விரவிய சாத்திர வேதி
தெள்ளிய பாலிளநீர் சேரவே நாழி நாழி
கொள்ளிவை சிதமாய் வெந்து கொதித்திரு நாழி யானால்
மெள்ளவே நறுநெய் நாழி விடுவது மிகவும் நன்றே. 1

நன்றதே கோட்ட மேலம் நலுங்கும்வெண் கார மிந்து
சென்றிடு மரத்தை சீரகந் திப்பிலி கொத்த மல்லி
வென்றிடும் கிராம்பு வசுவாசி மிக்கசேங் கொட்டை கூட்டி
உண்ணவே நெய்தான் வெந்து உண்ணவே குன்மம் போமே. 2

பொய்யாதே வைய மந்தப் பொருமிய பித்த குன்மந்
தாமதாய் வலிக்குங் குன்மந் தடையறுச் சத்தி குன்மம்
வாய்மையாய் மண்ண வாத மறுகி நெஞ் செரிக்குங் குன்மந்
தாமதா யறுத குன்மந் தடையறத் தீருந் தகுதியாம்
[நெய்யதாமே. 3

அயிலேய சதாவேரி கிருதம்

ஆவசியமாக அயிலேய சதாவேரி
யாதி நெய்யைச் சாற்றக்கேள்—மேவு
முசுமுசுக்கை நீர்வாழிலாமிச்ச
நிசநெருஞ்சி வேர்க் கீழ்க்காய்நெல்லி—வசையில்லாச்
சிற்றுமல்லி பேராமல்லி செம்பொனெருஞ்சிவே
ரத்தியதன்பட்டை கற்றாழைவேர்—மொய்த்த குறுந்
தொட்டி குறுவஞ்சிவேர் தாழை விழுதுடன் செந்
தொட்டிவேர் மாவிலிங்குத்தோலுடனே—யிட்டமுடன்
சித்திரமூலம் பிரண்டை சீதேவிவேர் சீந்தில்
புளிநரளைக்கிழங்கு—மொய்த்தமால்
கந்தமுடன். காட்டுக்கரணை பொன்னாங்காணியுட
னந்திசிறுபீளைவேர் நன்னாரிவே—ரிந்தமருந்
தொவ்வொன்றிரண்டு பலமாகத் தரித்திடித்துச்
செவ்வென்ற பானை தனில் சேர்த் ததில் நீர்—நவ்வியே
பாணி பதக்கு விட்டுப் பாங்காயெட் டொன்றானால்
நீணிய நெய் நாழி யிளநீர் நாழிதேனுவின்—பால் நாழி
கற்றாழம் பாலுழக்குப்படி காலோர்படி வந்தால்
ஆங்கற்றாவள்ளிச்சாறது—தானேல
மிலவங்கம் அதிமதுரமாஞசி சதகுப்பை.

யிலவங்கமதின் பத்திரி ஓவ்வாமா—விலிங்கவேர்
சாதிக்காய் பத்திரி பூத்தகக்கோட்ட முந்திரிகை
நாதவின் காட்டாத்திப்பூ நாகப்பூ—வோது கொத்த
மல்லிபங்கம்பாளை மலாக்காச் சந்தனமும்
நெல்லிமுளி நற்கூகை நீறுடனே—நல்லகருஞ்
சீரகம் பேரீச்சமும் நற்சீரகமுமிவ்வகையு
மாரவகைக்கோர் கழஞ்சதாகவே—நேராகப்
பாலிலரைத்திட்டு நெய்யைப் பக்குவமாம் நற்பதத்தில்
சீலைவடிகட்டித் தெளிந்திருக்குஞ்—சாலவே
கரகத்துள்ளாகக் கஸ்தூரி மிக்கவரை
செறியுங்குங்குமப்பூ மேலும்—பரிவுடன்
கோரோசனையுடன் கொண்டசரக்கிம்மூன்று
மாரவகைக்கோர் கழஞ்சதாகவே—நேராக
நன்றாய்ப் பொடித்திருக்கும் நற்கலசந்தன்னிலிட்டு
நன்றாயிருத்த நெய்மாகாணி போல்—ஒன்றாகக்
காலமே கொண்டு புளிகைப்பாவின் பால் மோர் நெய்
யேலவேதாணி தணிறுத்திச்—சாலவே
சற்றுப்புக் கூட்டி வெகுசீர்பெறவே நெய்யருந்தப்
பித்துப் பிதற்றுகின்ற பித்தமறும்—அத்தியிலே
கொண்ட சுரம் நீரிழிவு குன்மங்கை காலெரிவு
மண்டையெரிவு வரட்சியுடன்—பண்டையுள்ள
நீர்ச்செறிப்புக் கல்லடைப்பு நீர்க்கடுப்பு மாங்கிஷத்தி
னல் செறிப்புப்புண்கள் பொடி நாவறட்சி—கால்கடுப்பு
மத்தியிலே நிற்கு மரூச்சுர மெனும்புருக்கி
சத்திவிக்கல் நெஞ்சுவலி சார்கசியங்—குத்திருமல்
வாயாலிரத்தமதாய் வாந்தி செயும் நோய்களுடன்
ஓய்ந்த பித்து வகையுள்ளதுவு—மாய்ந்த
மேகமிருபதுவு மிக்க பவுத்திரமுந்
தாகமில்லா வந்த சயித்தியமும்—யேகமதாய்
தீர்க்குமிந்த நோயதனல் தீபனமு முண்டாக் குங்
காக்குமுயிரை வச்சிரகாயமுமாம்—மேற்கையாய்ச்
சிங்கத்தினிற் பலமுமுஞ்சேறுமுடல் தேறுமுடல்
தங்கத்தினிப் பிறவையுந் தானழ கென்றங்கு—தத்தன்
மந்திரருரைத்த சாத்திரத்தைப் பைந்தமிழால்
நல்லமந்திரி சொல்லிதை நல்கு.

சந்தனாதி கிருதம்

நாடு தமிழ்ச் சந்தனாதி கிருதமதைத்
தேடரிய வாகடமாய்ச் செப்புதல்கேள்—கூடுநறு
நெய்யிலே நாழியதில் நீர்வாழியின் கிழங்கொடு
எய்தியவராகியிதன் கிழங்கு—செய்யயிதன்
நேர்மணலி கீழ்க்காய் நெல்லி சமூல மிவை
ஈருள்ளி தென்னம்பூ யேற்கையாய்—நீர்முள்ளி
தேங்காய்ப் பாலாவின்பால் செய்யயிளநீர்ச்சலமு
மேங்காதுசேட னிலத்தியினீர்ப்—பாங்காய்
வகைக்குழக்குச் சாறுவடிகட்டிக் கூட்டி
மிகுக்குஞ்சிறு கீரை வேருஞ்—சுகக்கொடுப்பை
வேருடனே முக்குறட்டை வேரும் பூனைகமு
மாருமறியாது வகைக்கைங் கழஞ்சு—சீரான
நல்ல சந்தஞ் செஞ்சந்தம் நாகப்பூச் சண்பகப்பூ
மறுவிலாக் கஸ்தூரி மஞ்சள்—நிறையான
கார் போகதி மதுரங் கற்கடகசிங்கி கோட்டம்
பாரிரவின் திப்பிலி மூலஞ்—சீரான
கொத்தமல்லி மிகக் கருடப்பச்சை சதகுப்பை
வைத்த சன்னிநாயன் வகைக்கழஞ்சு—மொய்த்துலவு
சாதிக்காய் பத்திரியுந் தக்க கிராம்பும் மூன்றும்
நீதமொன்றரைக் கழஞ்சும் நேருடனே—ஓதுமவின்
காற்கழஞ்சு யெட்டியதின் காய் வித்து யீரெட்டு
மொத்தத் தண்ணீர்த் தேற்றான்விரை பதின—றுக்கவுடன்
சொன்னபடி கொண்டரைத்துத் தோய்ந்த நீர்விட்ட நெய்யில்
வின்ன மில்லாதே கரைத்து மென்பதத்தில்—மன்னிமையாய்த்
தாணிறுத்த நெய்யதனைத் தக்க துட்டி ரண்டினடைப்
பானமது செய் நறு நெய் பால் துவரை—ஆன
சிறு பயறிளங்கீரை செய் முருங்கைப்பிஞ்சு
குறுமவரைப் பிஞ்சு கறி கூட்டித்—திறமுடனே
உப்புப்புளியொழியயுண்ணு மரைமண்டலம் நெய்
வெப்புதரக்கட்டியுடல் மேல்தினவு—தப்பாத
மேகங்கரப்பன் மிகுந்த கருமஞ்சள் நோய்
வாகுடனே கும்பகாமாலை நோ—யாகமதில்
மஞ்சள் காமாலை யெனவந்த பிணியனைத்தும்
தஞ்ச மறத்தீர்க்கு மிதுதான்.

இருமலுக்குத் தாளக நெய்

மக்கள் மக்கள் தலைமுறையாய்
வார யிருமல் வளிதீர
நிக்க நல்ல நெய் சொன்னோம்
நேர்க மூஞ்ச ரிதார
மொக்க வரைத்து நாழி நெய்யி
லூறிச் காய்ச்சி யுடனிறக்கி
நக்கப் போமே யீளையிருமல்
நாத னறியச் சொன்னேமே.

சசுவாசாதி கிருதம்

சொல்லக் கேளீர் சசுவாசி
துலங்க வரிய கிருதமதை
நல்ல தமிழால் வைத்தியந்தான்
நத்திக் கூட்டும் விதப்பாகம்
புல்லில் மேயு முயலிறைச்சி
பொருந்தும் பலந்தான் பதிறுை
வல்ல பாண்டந் தனிலிட்டு
வாரீ ருதகந் தூணியுமே. 1

தூணிநீர் விட்டு நன்றாய்ச் சுவறவே யெரித்துக் காய்ச்சிப்
பாணிதான் வற்றி ஞலு படியது வான வாறே
சேணிரு நாழி நெய்யில் செலுத்தியே காய வைத்து
வேணுமே மருந்து பின்னும் விரும்பியே புகலக் கேளும். 2

புகலுஞ் சிறிய வழுதலையும்
பொன்னே ராவரை செம்முள்ளி
அகலுங் கண்டங் கத்திரி
யாடா தோடை யின்பூறல்
நகளு மிசங்கி னிவையேழி
னலகுஞ் சேர்வோர்கள் வகைவகையே
பகரும் பலந்தா னெட்டாகப்
பண்பாய்க் கூட்டி யிடித்துமே 3

இடித்த மருந்தைப் பானைதனி
லிட்டுக் கலநீர் விட்டதனில்
விடுத்துக் காய்ச்சி நீர்வற்ற
விரைந்து பண்ணிக் கற்கமதைத்

தடுத்துப் பிசைந்து நாலுபடி
தண்ணீ ராக வற்றியபின்
வடித்துப் பிழிந்து நெய்யில் விட்டு
வற்ற விதனை யெறித்திடுமே. 4

எரித்திடு மிதுத னக்கே யிடுகடை மருந்து தன்னை
உரைத்திடும் வகைநீர் கேளீர் ஓதிய தேவ தாரம்
அரைத்திடு மஞ்சள் சுக்கு அரத்தைநல் மதுர மோடு
கருத்துரு சிங்கி தேக்கு கருதுநற் சீர கந்தானே. 5

சீரிய திப்பிலியுஞ் சிறுவிடு கொள்ளிேனாடு
பார்வளர் முந்திரிகைப் பழமொடு சர்க்கரையுங்
காரில வங்கமொடு கற்கண்டு நற்கார்கோளி
பார்விளா வரிசிமுத்த மமுக்கி ராக் கந்தமாமே. 6

கந்தமாம் பெருவிடு கொள்நார் விளால் மத்தங்காய்ப்புல்
முந்தியரிசி யொடுமுறை வகைபலந்தா னென்றாய்ச்
சரிந்திடா திடித்துத் தெள்ளித் திருந்தவே நெய்யில் தூற்றி
வெந்திடா திதனை நன்றாய் மெழுகது போலத் தானே. 7

மெழுகது போல நல்ல விரும்பிடும் பதம தாகப்
பழுதுறு நாட்கள் தள்ளிப் பரிவுடன் நல்ல நாளில்
தொழுது நற்கண பதியைத் தோத்திரஞ் செய்து மிக்க
வழுவுள கலசந் தன்னில் ஆய்ந்தநெய் கடுக்கும் வாரே. 8

கடுகுடன் கிருதந் தன்னைக் கருதியே வார்த்து வைத்துக்
கொடுநல்ல நேரந் தன்னில் கொள்ளவே கடுகோ டொக்க
வடிவில்லாக் கரண்டி ரண்டு மகிழ்ந்திரு நேரங் கொண்டு
விடுநல்ல புளிக்க சப்பு விட்டிடாய் மண்ட லம்மே. 9

மண்டலந் தப்பா மலிந்த கிருதமே மகிழ்ந்து நித்தங்
கொண்டிடுங் காச ரோகங் குறுகிடு சயமிருமல்
விண்டிடு மருசி வாந்தி மெலிவுறு சுரத்தி னேடு
விண்டிடும் ருட்சை விக்கல் வேதனை மாறுங் காணே. 10

லசுனக் கிருதம்

பார்மீதி லேமகா லசுன கிருதமதைச்
சீர்மேவு பூ வண்ணர் செப்பினர்—காரெருமை
நெய்படியும் வெள்ளாட்டின் நெய்படியும்
சேரவே யிரண்டுபடி சேர்த்து விடு—தாளிதனி

துள்ளி பலம் நாற்பதையு மொக்க விடித்து விடு
வெள்ளக் குமரிச்சாறுன் றெருமை—(?)
நீரிரண்டுபடி வெள்ளாட்டின் கோமயமும்
நாலுபடி கொண்டு நல்ல நாரத்தம்பழச் சாறதுவும்
நாலுபடி தான் கூட்டிக்—கூசாமல் (?)
இஞ்சிரசம் நாலுபடி யிதனுடனே குதிரை நீர்
மிஞ்சாமல் மூன்று படி யிட்டொன்றாய்க்—கொஞ்சமாய்
கொதித்து வரும்போது கூட்டு வீர் (?)
டங்கணமுஞ் சோமனுப்பு திப்பிலியிங்கு
மன்னபேதி சவுக்கார மாங்கிச பேதி
வன்னமாய் நாற்கழஞ்சு வகை சேர்த்து—நன்மையுள்ள
நாளதனில் வாரமதில் நான் முகனைப் போற்றியே
வேளைதனில் நற்பதத்தில் வெந்து வடி—கோளறுக்கும்
நாளதனில் கொள்வீரிருகழஞ்சு வேராறுக்கும்
நோயதனை விளம்பக்கேளாயறிய (?)
யண்டிகையு மண்டிகை மாறாப் பொதுமல
குண்டலமும் மண்டு கிளிசை பழுவரையம்
மொட்டுக் கிளிசை முதல் ஒளிக்கிளிசை யெல்லாந்
திட்டமாய்த் தீருமெனச் செப்பு யித்துடனே யக்காரக்காரம்
வேணுமென்றால் கூட்டிக் கொள்ளவும்.

கதலி கந்தாதி கிருதம்

கேளுங் கதலி கந்தாதி
கிருத மதனைத் துகை வழியே
வாழுங் கதலிக் கிழங்கு தண்டு
வளருங் குருகத்திப் பால் பூவது தான்
கோள்தீ ரிரண்டு படி யுடனே
கூறு மத்திப் பால் தானும்
மீளு மிரண்டு படி நெய்யும்
விரும்பி ரண்டு படி கூட்டே. 1

கூட்டியே மூன்று மொன்றாய்க்
கொள்வாய் பெரிய தாளியிலே
நாட்டில் கியாழ மருந்து தன்னை
நவிலக் கேளும் குமரிவேர்

வாட்ட முற்ற நெருஞ்சி வேர்
வளருந் தாமரை வளையமுடன்
காட்டிச் சீந்தில் நன்னாரி
கம்மூம் முசலம் வேர் மகிழ்ந்தே. 2

மகிழு மாண்டு முட்டியுடன்
மாதே நல்ல யிரு வேலி
பகரும் பத்து வகை மருந்தும்
பதிவாய் நூறு பலங்கொண்டு
நகளும் பழுது தனையாய்ந்து
நன்றாய்த் தறித்து யிடித்ததனை
புகழும் நல்ல பாண்ட மூன்றில்
பொருந்த அதனைச் சொரிந்து கொள்ளே. 3

சொரிந்து கலநீர் விட்டதனில்
துளாவிக் காய்ச்சி யெரியிட்டுப்
பரிந்து நாலு படியாகும்
பருவ மதனில் வடி கொண்டு
விரிந்த நெய்யும் கூடவிட்டு
விரும்பிக் காய்ச்சிச் சுவறிடவே
தெரிந்தே நெல்லிக் காய் குருணி
திடமா யிடித்துப் பாண்டமிடே. 4

பாண்ட மதனில் நீர் குருணி
பண்பாய் விட்டுக் காய வைத்து
மீண்டு மிரண்டு படியாகும்
வேளை யதனில் பிழிந்தெறிந்து
கூண்ட நெய்யில் விட்டிதனைக்
குறுகக் காய்ச்சி வற்றியபின்
வேண்டுங் காந்த மதி மதுரம்
விளங்குந் திப்பிலி யேலமுமே. 5

ஏலமொடதி விடைய
மிணங்கு கோட்டமிரு சீரகமும்
ஞால மதனி லிலவங்கம்
நல்ல சாத்திர வேதியுடன்
கோலத் தாளீச பத்திரியுங்
கூகை நீறுங் கல்மதமுஞ்

சால மாஞ்சி கிராம்பு சிங்கி
சாதிக் காய் நற் பத்திரியே. 6

பத்திரி நெல்லிப் பருப்புடனே
பற்ப டாகம் நன்னாரி
முத்தும் பெரும்பேரீத்த
முதிர்ந்த பழமு முந்திரிகை
நத்தீர மருந்து வகையெல்லாம்
நாலு கழஞ்சு வகை வகையா
யுற்றே யிடித்துத் தூளாக்கி
யுகந்தே நெய்யில் பொடித்தூற்றே. 7

தூற்றி யெரித்து யெதபதமாய்ச்
சுவரக் காய்ச்சி மெழுகுபதம்
பார்த்து நல்ல தினமதிலே
பண்பா யைங்கரன் பூசைபண்ணி
கூர்த்த கிருதந்தனையிறக்கி
கொத்தாய் நெய்யும் கடுகுமொன்றாய்
வார்த்து நல்ல கலசமதில்
வைத்துப் பதனம் பண்ணிவையே. 8

வைய மதனில் நோயாளி
வந்தால் நல்ல நாள்பார்த்து
துய்ய கடுகும் நெய்யுமொன்றாய்
துளாவிக் கரண்டி யிரண்டுகொள்ள
வெய்யுங் கசப்புப் புளிப்பகற்றி
யிரண்டு போதுங் கொண்டுவர
மெய்யே மண்டலந் தப்பாது
மீளுங் காந்த லெரிவுளதே. 9

எரிப்பாய் மிக்க நீர்ச்செறிப்பு
விரத்த மேகம் நீர்க்கடுப்பு
முருக்குஞ் சலத்துப் பிரமியமு
மோதுந் தண்டு வெரிப்புளதும்
விரிக்கு மடைக்குந்துன் மாங்கிஷமு
மீளு மூத்திரக் கிரீச்சனமு
மரிக்குங் கல்லடைப்புளது
மாறுஞ் சதைப்பிர மேகமுமே. 10

மேகந் தீரு முடல் குளிரும்
விரும்புங் கதலி கந்தாதி
ஆகுங் கிருதந் தனைக் கொள்ள
வளரும் நோய்கள் போயகலும்
யோக மிதுதான் வடநூலில்
ஓதும் படியே உரைத்ததனைப்
பாக மாக மிகத்தெரிந்து
பண்ணீர் சாத்திர பண்டிதரே. 11

இருமலுக்குத் தேங்காய் நெய்

நீரணிலுத்துத்துள்ள வேரும் நல்ல விளாமல்லி அரிசியுங்கூட்டி
ஆனைமேல் முசுறுமுட்டை அழகிய தோடைச்சாறு
தேனுமாங் குழலினுளே தேங்காய்நெய் தனில்கொள்ள
ஊனமாஞ் சுவாசகாச முளமார்ந்தை யிருமலொடு
வானமே யேகுமென்று மானிடர்க் கருளினரே.

சயசுவாதி கிருதம்

ஆடாதொடை முசலிறைச்சியு
மாய் நாற்பதுபலங் கூட்டித்
தோடார் சீந்தில் பலமஞ்சு
தசமூலம் பல முப்பது வாஞ்
சூடார முக்குறுப் பத்துச்
சிறுகாஞ் சோரி பலமைந்து
பாடார் பலத்துக் கொருபடிநீர்
பகுந்து காய்ச்சி வடிகொள்ளே. 1

வடிகொண்ட தண்ணீர் தன்னில்
வகைநாலு படிநெய் கூட்டிப்
படிகொண்ட பால்ப தக்குப்
பரிந்துநீ கூட விட்டு
இடிகண்ட மிளகு சுக்கு
வியல்பெறு மதூரங் கோட்டந்
துடிகொண்ட தூத ளேவேர்
துலங்குவாய் விளங்கந் தேக்கு. 2

தேக்கிய சிற்ற ரத்தை தேறுநீர் வள்ளி மூலந்
தூக்கிய முத்தக் காசு துலங்குதிப் பிலியின் மூலம்

நீக்கிய நிலப்பனைசிங்கி சிகரில்முந் திரிகை பேரீச்சு
தாக்கியே கரைத்துக் கொண்டு தழுபத மெழுகாய்க்
[கொள்ளே. 3

கொள்ளும்நீ சீனி பத்துக் கூடவே கலந்து கொண்டு
மெள்ளவே யந்தி சந்தி மென்பட உண்ட போதே
உள்ளதோர் ரத்த பித்த முயர்சய சுவாச காசம்
வள்ளமாங் குன்மம் வாதம் வலிநெரி குராலுந் தீரும். 4

கிராணிக்கு நெய்

நாற்பால் மரத்தின் பட்டைதன்னை
நறுக்கிப் பிழிந்து சாறிரக்கிக்
கொண்டாற் பால்நெய் யுரிவிட்டு
அதில் வெங்காயச் சாறுரியுங்
கூப்பான பருத்திப் பிஞ்சுக்
குலவுஞ் சாறுரி கூடவிட்டு
ஏற்பான வில்லை மாதளம்பிஞ்சு
யிளநீ ரிடித்த சாறுரியே. 1

உரியே கோட்ட மதிமதுர
முத்த யேல மிலவங்கங்
கரியசீரகம் கிராம்பு
சாதிக்காய் பெரிய சாதிபத்திரி
பேணும் விடையம் சண்பகப்பூ (?)
வரிய திரிபலை செஞ்சந்த
மாக நிறையோ ரோர்கழஞ்சே 2

ஒன்று யரைத்துக் கலக்கிவெந்து
உற்றமெழுகு பதம் வடித்து
அன்றுட மோர்நெய் முட்டை
அருந்தில் கடுப்பு மூலரத்தம்
கன்றுனுள் ரோகக் கடுப்பு
மூலக் கிராணி சீய் (?)
நன்றாய்த் தீரு மெனமுன்னோர்
நாடி யுரைத்து நவின்றதுவே. 3

கூஷ்ப்பாண்ட கிருதம்

ஆடா தோடைச் சாறெண்ணாழி
யாவின் பாலெண் ணாழி

பூட்டான பூசணிக்காய்ச் சாறு
பொருந்தக் கேளீடாக ரெண்டு
ரெட்டி கூட்டி யிதற்குமிடு
மருந்து பன்னிரண்டு மெட்டும்
பனை வெல்ல மிந்த வெட்டையிற்
கருப்புக் கட்டி யிதில் சீனி
நாழியுடன் கலந்திட்
டவை காயச்சுக்கு மிள கொடு
திப்பிலி மூன்றுங் கூட்டி
யளவாந் திரிபலை யவ்வளவாங்
குணமாக யட்டி மதுரமேல
மிலவங்கங் கட்டி சாதிக்காய்
கிராம்பு வாங் கோட்டமுடன்
சந்தன முஞ்சிற்றரத்தை தனிலோமம்
வேதியுள்ளி யிந்து கருஞ்
சீரக மிவை யொக்க
நந்தி நறுஞ் சீரோகணியும்
நல்ல திப்பிலி மூலங் கொந்துலவு பாலை
கார் கோலரிசி சிந்திலை
தீர்ந்த வசம்பு விளாவரிசி
நயம் பெறவே தேவதாரம்
கல் நார் சிவதை கசங்குறவே
கண்டவேர்த் தூதுளைவேர்க்
காளி சாறணையின் வேர்
விண்டயோணிப் பச்சிலையின்
வெள்ளை வேர் யுண்டெனவே
சாற்றும் நந்தியா வட்டம் வில்வம்
சாரவு நீர்க்கு மிளவே ரேற்ற
கொம்மட்டி வேரிவையொக்கச்
சேர்த்தயெடை ஒன்று முக்கழஞ்சு
ஒன்றுவின் பாலைத்துப்பா
ரண்ட பாண்டத்தில் பால்விட்டே
பூண்டதொரு பூசனிக்காய்ச்சாறு பொருதிங்யதில்
வேண்டுமாடா தோடைச்சாறு மதில் கலந்து
நீண்டதொரு தாலத்தில் வெள்ளமொடு சர்க்கரை நெய்

யேலத்தில் விட்டுச் சீர்துளாவிக் கோலக் குழம்பாகக் காய்ச்சி (?)
நீள்கம்பி நளன்பாக மாயதை வெந்திறக்கி
நாடோறு முன் பகையாய் வந்த பிணியத்தனைக்கும்
விளாங் கனிபோலே திரட்டி சிந்தையுடனுற்பது நாள்
தின்னவே யந்தமில்லாச் சீறுமுள மாந்தை
சிலேற்பனம் ரூட்சை பலவுமாறுமிருமலுமே
நீறுசுரமாந்தை ரோகந்தொடர் குவளையினை
மாவாகத் தறிகளுக்கு வாயுவுற்றுயிதமாகு
மொஞ்சு மெலும்புருக்கி யுள்ளுருக்கி
யூன்பற்றி நெஞ்சுதனில் நின்ற நடுநோயும்
பாசுபோலோடு மென்னவுயர் பொதிகை
மாமுனிவன் நாடியே சொன்னார் நயந்து.

முயல் நெய்

கான்பெரிய முயல்நெய்யின் வகைகள் தன்னைக்
கருத்துரைக்கில் தூதுளைவேர் அமுக்கி ருவேர்
வீன்பரவு மாடா தோடைவேர் வில்லைவேர்ச்
சாறணைவேர் முருங்கைத் தோலுந்தான்
பெரிய வுப்பிலி கையாந் தகரை
நல்லசிறு கடுகுடன் மிளகுபூண் பாவுங்
கொடிவேலி புறந்தோ லிவையெல்லா
மிடித்து நாற்ப லத்திற்கு மேல் கொண்ட பலத்துக்கு
நாழி நீர் விட்டு நாலொன்றாய்க் காய்ந்தவாறே
கால் கொண்ட முயல் தோல் குடல்கள் போக்கி
கியாழமிடு தண்ணீர்நா லெட்டு நாழி
நூல் கொண்ட பலத்திற்கு நாழி நீராய்
விட்டதிலே யெட்டொன்றாய்க் காய்ந்த வாறே
பால் கொண்ட பசுவின் நெய் முன்னாழி விட்டுப்
பசுந்தேனும் நாழியுரி யளந்து கூட்டே.

கூட்டிய பினரைக்கு மருந்திதனைக் கேளாய்
கோட்டமதி மதுரஞ்சுக்கு
இட்டமுடன் மிளகு கடு நெல்லி தான்றி
யேதுமில்லா வெட்பாலை கச்சோலம்
வாட்டமிகு மத்தித்திப்பிலி செவ்வீய
மாடா தோடை பொன்மெழுகு மஞ்சளெல்லாங்

கூட்டியே முக்கழஞ்சுயிது தூளாக்கிக்
காராவின் பால்வார்த்து வரைத்தவாறே.

அரைத்த மருந்தைக் கரைத்து அடுப்பிலேற்றி
யனலெழும்பியது மறையோர் சபித்தவாறே
நுரை சுவறிப்பதமாக வடித்தவாறே
நுண்ணியதோர் காசினெடை பருகி விட்டால்
அரைத்து வருமிரு மலடர்ந்த வீளை
காசமிளைப்புடனே கண்டங்காரை
யிவையெல்லா முரைத்தபடி யின்னோய் தீர்ந்து
உமைபாக னருளுண்டாம் உண்மை தானே.

குக்கில் கிருதம்

நிம்பந்தோல் சூசிய வழுதலைவேர் சார்ந்த வாடாதோடை
[தானுஞ்
சேர்ந்தவெடை யெட்டுப்பலமோரொன்றா யிரஞ்சாகவிடித்து
ஆறுமரக்கால் நீரிலங்கவித்து யூறுநீரெட்டொன்றாகவிதை
[வடித்து
நாழி நெய்யை விட்டிதனைக் காச்சுகையில் மேல்மருந்து
கோட்டம் விளாவரிசி சிறுமூலஞ் செவ்வியந்தேவதாரமதி
[விடைய
மறு சாதிக்காய் வாலுளுவை மஞ்சிட்டி செறிகல்மதஞ்சீதங்
கடுகுரோகணி செவ்வள்ளியவாட்சாரம் மோதங்கொடிவேலி
மூளைதாங்கி பேதமற்ற வத்தித்திப்பிலி துடையாவரையின்
தோல் வசம்பு யேத்த சதகுப்பை துவட்சி கையுற்ற வகையே
நன்றிருகழஞ்சு ஒக்கவேதானிறுத்துப் பாருமே குக்கில்
பதினைந்து கழஞ்சால் சேரயிவை தட்டியரைத்து நெய்யில்
தான்கலக்கி மூன்று நாள்மட்டு மூறிக்காய்ந்து வடித்து
முன்னே காட்டாகக் குக்கில் பதினைந்து கழஞ்சுங்கோ
நெய்யிதனிலரைத்து மிக்க நெய்யில் விட்டு விரைந்து
கிண்டியிக்கிருதங்கா செடையோர் மண்டலமுங்
காலமே கொண்டுவரில் பேசிய மூவேழு பிரமியமும்
நாசமாங்குட்டம் பதினெட்டுங் குறைய முறிந்த யென்பும்
வட்டமுத்த புண் புரையு மாறுமே கட்டுங்கிரீ சரஞ்சிலந்தி
கிரந்தி பவுத்திரமுஞ் சொறிச்சல் கண்டமாலை மேல்சுவாசம்

ஆருப்புரையொடு மாறும் பிணி யித்தனையு
மாறுமென்றிருஷிக்கு முனி சத்தியமாய்ச் சொன்னார் சமைந்து.

உச்சுவாசாதி கிருதம்

முயல்குடல் கால்தோல் போக்கி
மூவெட்டுப் பலந்தான் கூட்டி
நயப்புட னுடா தோடை
நல்குமவ் வெடையே கூட்டி
வியப்புடன் குருணி நீரை
விட்டுமே எட்டொன் றாக்கி
நயப்புட னிறுத்து ஆவின்
பாலில் அறுநாழிநாழி நெய்யே. 1

நெய்த்த காலிகற் கடகசிங்சி சிறுதேக்கு நிகரில் கோட்ட
முத்தகுந்திருக்கஞ்சிருறு திரிபலைதிரிகடுகில் வங்க
முத்தமுடன் கஸ்தூரி முந்திரிகை (?)
சினக்கற்கண்ட முக்குறுக் கழஞ்சிரண்டே. 2

இரண்டு கழஞ்சு வகைக்குவகை
இடித்து நெய்யில் தான்கலந்து
திரண்ட மெழுகு பதம் வடித்துச்
சிறப்பாய் மூன்று கழஞ்சு நக்க
மருண்ட யீளை யிருமலொடு
மந்தார காச மிரத்தபித்தம்
புரண்ட காச சுவாசமுடன்
புகலு நீர்த்தோ ஷமும்போமே. 3

கலியாண கிருதம்

பேய்த்துமட்டி நன்னாரி பேராமல்லி சிற்றாமல்லி
வாய்த்த கண்டங் கத்தரியின் வேர் வகைக்குச்
சாற்றும் வகைக்கைம்பலமாய் வழங்கு நீர்முக்குருணி
சுத்தமாஞ்சிறு தேக்கு நறத்தகாம வெட்பாலரிசி
விளாவரிசி மஞ்சிட்டி யட்டி மதுர மதிவிடையங்
கோட்டம் யிலவங்கம் நாகப்பூ ஏற்றதேவதாரங்
குலவுந் தாளீசபத்திரி குங்குமப் பூக்குலவுந்
திரிபலை நாகசிந்தில் நீர்வள்ளி மறுவடவிக்

கச்சோலமாதளம்பிஞ்சு பூனைக்காலி விதையுடனே
கஞ்சமொடு செங்கழு நீரால் விழுது நாணல்தாது
சால வகைக்கோர் கழஞ்சு நெய் நாழியுற்ற சந்த
நாற்கழஞ்சு வார்பாலி ரண்டுபடி
வார்த்தரைத்துச் சேர்பதத்திலே நெய்வடித்துப்
பண்பாயருந்த மெத்தமலமுமுன் மத்தபித்தப்
பிரமன் மலடு பெண்கள் மல்டு சுரமோடு
மேகுஞ்சூலை சோபமுர மிகுத்த மலட்டு வலிதாது
நட்டம் வாய் வுத்திரட்சி பலத்த கைகாலெரிவு
பித்தஞ் சொலொத்த யோனியிற் சூலையொடு
சுக்கில மேக மீனமில்லா தேகுமிவை யென்று
நானிலத்தி லக்கலியாண கிருதமதைக் காசினியில்
மாமுனிவர் சொன்னார் மகிழ்ந்திதனைச் சொல்.

கிராணிக்குப் பீமருது நெய்

பேருலகை யார்க்கும் பீமருதுயாவு நெய்யைச்
சீர்பெறவே வையத்தருந்தச் செப்பக்கேள்
பீய் மருதம் பட்டை பெருக்க யீராறு பலமதாக
யிடித்து நீர் பதக்குத் தான் விரவிச் செப்ப முடன்
நாலொன்றாய்க் காய்ச்சி நன்றாய் வடி கொண்ட
சலமு மேல் மருந்து செப்பக் கேள்
கோலத்திரிகடுகு மாஞ்சி செவ்வியஞ் சிறுமூலமுமறு
காசுக்கட்டி ஒண் காந்தங் கிட்டி நற் சாதிக்கா
யத்திப்பூத் தன்னுடனேய தொக்கச் சேர்ந்த
அதிவிடைய மொப்பிடித்து வொன்றாக
ஒன்றிடித்துச் சேர்ப்பித்து வெந்நீர் வார்த்
தரைத்துத் திருந்தவே நெய்யொரு படிதான்
தேன் யெண்ணெய் உழக்காக விட்டுக்கிண்டி
நெல்லி யளவு கொள்ளி லிருகாலங் கொண்டிடுகில்
கேளீரத்தக்க வலமிரைச்சல் சலம் பொருமல்
ஒக்கமுதா முட்டி யூதுதனில் மிகக் கடுப்பு
ரத்த மொத்தபடி செய்யு முறுதி.

புளியாரை நெய்

நறு நெய்படி புளியாரைச் சாற தொருபடி சுக்கு
நாய்கடு கின்வேர் செவ்வியம் நல்ல சதகுப்பை

யிந்துப்பு மாதளந்தோல் நற் பெருங்காய மோமம்
பெருங்கடுக்காய் பொன் முசுட்டை வேர்க் கொத்தமல்லி
பெரியகொடி வேலி வேரும் பேசு திப்பிலி மூல மாலூரம்
நற்பிஞ்சு போரா நெருஞ்சிவேரு முறுகு திப்பிலி யிவை
கழஞ்சு வொரு மூன்றோடு மூண்டரைத்துக் காய்ச்சியே
முறுகாமலே வடித்தி ரண்டுகாசெடை கொள்ள
மூலவிருகிராணி நோயுந் தறுகாமலோடுமே
புளிதவிர்த்தே யுண்ணிற் றூரணியின்
மாந்தர்க் கென்னத்தமிழ் முனிவன் வாகட
சாத்திரந்தன்னிலே சாற்றியிடுவாறே தானே.

இலந்தை நெய்

இலந்தைத் தோல் பதினாறு பல மேற்குந் தண்ணீர் பலமொரு
[நாழி
மலங்கக் காய்ச்சி யெட்டொன்றாக்கி மறுத்திங் கரைத்து
[மருந்தினிக் கேள்
நலந்த யேலங் கொடிவேலி நல்வேர் சொன்ன சாதிகடுகு
துலங்கு திப்பிலி துய்ய யிந்துப்பு முயங்கு மோதக மின்னி
[விதத்துடன்
கலங்கு முதகங்கரிய சீரகங்கடுகு முக்கழஞ் சோரொன்று
வாலம்பாலி லரைத்துக் கரைத்து வாவி நெய் நாழி பால் நாழி
சீலம் புகுந்த தீயிலிட்டுச் சிறக்கக் காய்ச்சிப் பதத்தில் வடித்து
[நக்க
உலந்த காசமும் வாதகுன்மமும் இருமலீளையும் குலைந்து
மிலந்தை நெய்தனைக் கொண்ட பேர்க்கு [போய்விடு
ஈசனுணையிது கைகண்ட தென்றாமே.

சுரோணித வாய்வுக்கு நெய்

தோடகை யமுதவல்லி தூதளை பிரமி வேம்பு
வாடுநற் கழல்குறிஞ்சா வதுகளி னிலையின் சாற்றைக்
கூடவே வெந்த நெய்யைக் குளித்தநாள் முதலாய் நக்கப்
பேடியும் பிள்ளையுண்டாம் பிராயமு மிளமையாமே.

கூழ்ப்பாண்ட கிருதம்

சீராக வாகடநூல் தேர்ந்து சிகிச்சை செய்யும்
பாரிலுள்ளோர் தாமறியப் பகரக்கேள்—ஆராயும்

கிருபையுள்ளோர் கூழ்ப்பாண்ட கிருதமதனையே
உறுதி பெறத் தமிழா லோதவே—திறமுறவே
கேளீர் தடியன் காய் இளறிப் பிசைந்த நீர்
தாழ்வில்லாதே குருணிச் சாறுடனே—மீளுஞ்
சதாவேரிக் கிழங்கினுடசாறு படி யெட்டதுவும்
பதாகமுறு கொன்றையிலை பறித்திடித்தே—இதாவினிக்கேள்
சாறுவிரண்டுபடி யதுவுந் தானளந்துமே மூன்றுங்
கூறுமொரு பானையிலே கூடவிட்டு—வேறினிக்கேள்
நறுநெய் படி மூன்று நன்றாகவே செலுத்தி
யுறு பசுவின் பாலது தானேதக் கேள்—உறுதியா
யளந்து விடுபடி மூன்று மிப்படியெய்யு
மிளநீரு மடுக்கும் பூசனி சதாவேரி—?

(?)

மேவும் வளையம் பாலிக்கு வெவ்வேறென்றிரு நாழி
தாவும் கோட்டமதிய சந்தனம் பச்சிலை கச்சோலம்
பரவுமேல மிலவங்கம் பன்னுங்கழு நீர்தாமரை வளையம்
கனி விளாவரிசிசுக்கு மூனுமிலாமிச்சிருவேலி
சேங்கொட்டை மின்னமாத்திப் பூவுடனே கூவுங்
கூவிளம் பிசினுகுறுவறக்குறுந்தொட்டித்
தேடிக்கொள்ளும் பொன்முசுட்டை சோலைகழுஞ்சரை
ஓரொன்றுமேவியரைத்துக் கரைத்திதனை
வெந்துபதத்தில் வடித்து நக்கத் தாவுசுரமும்
தலைவலியும் தப்பவெதுப்புஞ்சீத முட்சுரமும்
நிச்சயந்தானும் பூசனி நெய்யதிது நிற்குமதே.

சம்பீரக்கனி லேகியம்

ஆதிமுனியென்னு மகத்தியனார் சொல்லி
ஓதுவித்தாரம்புவியிலுள்ளோர்க்குத்
தேசிப்பழ லேகியத்தைச் செய்யிலப்பழம்நூறு
நேசிப்பாய்ப்பாண்டமதில் நீயிட்டுவாசமுட
நெல்லிக்காய் தும்பிக்கை நீள்கற்பூரவள்ளி
நல்லகத்தி கீழ்க்காய் நற்குமரி சொல்லாவின்
பால்வகைக்கு நாழியாம் பாரில் துளசியிஞ்சி
கால் முடக் கொற்றான் கமழ் தாழை மாலாகு
மாதளம்பழம் சீந்தில் வகைக் குரியாம் பேய் முசுட்டை
சீதளமாம் செவ்விள நீர் சேரவே யாதரவா

யிரண்டுபடி யளந்து நன்மேனிச் சாறுமுக்கு
நல்ல தண்ணீராறு படி வண்மையுடன் வன்னியிட்டு
வற்றி வரில் சொன்னபடி யேலமதூர மிரு மிளகு
தூதுவளை காலக் கொடுப்பை கருஞ்சூரை ஞாலமே
தேத்தான் சிறுகீரை வேர் சீரகமு மோர் பலமாங்
கொத்தான கொத்தமல்லி கோட்டமுடன்
வெந்தயமுங் கடுக்காய் மியக்க சாதிக்காய்
ஓமந்தந்தன் வகைக்குத் தான் பலங்கால்
சிந்தையுடன் சீனஞ் சவுக்காரஞ் சிறந்த கிராம்பு
வகைக்கு ஓர் கழஞ்சு சாண் வேம்பு வதினுமக்கு
வஸ்திரகாயம் பண்ணி மறு பொடியு மேல்தூவிப்
பக்குவமாங் குழம்பாம் பருவத்தில் விக்குமது
நாழியுடன் கிருதமிரண்டு படியே ஏரண்டத்
தயிலமது கால்படியுந் தான்கூட்டிப் பேரிய
ஆவாரைபுட தயில மரைப்படியு மானதோர்
சீனியோரிரண்டு பலஞ்சேர் குழம்பில்
தூவியே கனிய கனி வெந்தால் கண்டபோதே
யிறக்கி புனிதமாய் நற்குருவைப் போற்றியே
இனிதாக நித்தமொரு பழமே நீயுண்ண வல்லீரா
ருற்ற சயரோக முடலெரிவு முத்தியதோர்
கசரோக முட்சுரமுங் காசமுள மாந்தை
விஷமாந்த மேல்மூச்சு வேர்வையுடன்
பசபசக்குங் குவளையிருமல் மெய்யில் கொண்ட
சிலேற்பனம் பலவும் நவமாம் வெறிப்பித்தம்
நகைப்பித்த மவமானப்பாண்டு முதல்
சோகை பல பல காமாலைகளு நீண்டதொரு
எய்ப்பிளைப்பு நெஞ்சடைப்புப் பூண்டதொரு தாகம்
வரட்சி வகை தலை சுழற்றல் கண்மயக்கம்
மேகமாய்க் காந்தலிவை யெல்லாம் புண்ணியனூர்
தினகரனைக் கண்டபனி தீர்ந்தாப் போல்
தீருமென யினியுற வேதமுனி யெல்லோற்குங்
கனமாக விண்டு சொன்னூரிப்புவியில் வேண்டியிதைக்
கொள்டவருக்கண்டாது வென்றேபறி.

வில்வாதி லேகியம்

நல்வா கடம்பார்த்து நாட்டிலுள்ள வைத்தியர்செய்
வில்வாதி லேகியத்தை விளம்பக்கேள்—தொல்லுலகில்
முத்தமா வில்லை முதிர்ந்தவேர்ப் பல்மதுதான்
ஒத்த நிறை நாற்பதுடன் கொண்டு—மற்றுமொரு
வெட்டிவே ரைந்துபலம் வேரில்லா மிச்சமொடு
தொட்டு நிறுத் தஞ்சுபலந் தூள்படுத்திக்—கட்டளையாய்
மூன்றுவகை வேருமுறை முறையே தானிடித்துத்
தோன்று மிடாவதனில் சொரிந்துகொண்டு—கான்றநீ
ராறு மரக்காலடவாக விட்டெரித்து
ஊறியது நாலு நாளுறக்காய்ந்தால்—மீருது
கற்கமெலாம் பிழிந்தெறிந்து காய்ச்சியதை மூன்றுபடி
நிற்கவடி கொண்டு நறுநெய் நாழி (?)
ஒக்கவிட்டுக் காய்ந்த தண்ணீர் வற்றியபின் கடைச்சரக்குச்
சுக்குடனே மாஞ்சி மிள கேல மதுரமுடன்—ஆஞ்சதொரு
கச்சோலம் செவ்வியம் கிராம்பு சித்திர மூலமுடன்
நற்சீரகமுடனே நாகப்பூ—இச்சை தரு
தாளீசபத்திரி நற்சாதிக்காய் திப்பிலியுங்
கோள்தீர்க்கும் கொத்தமல்லி கோட்டமுடன்—தாழ்வில்லாக்
கருவேப் பிலையிர்க்குக் கருஞ்சீ ரகமுடனே
பருகு மிலவங்க பத்திரியுந்—திருவேகேள்
கூகைநீ றுடனல்ல கோதில்லாச் சந்தனமும்
பாகமுறு முந்திரிகைப் பழத்துடனே—ஆகவிவை
கூட்டி வகை பலமாய்க் கொண்டிடித்துத் தூள்படுத்தி
வீட்டினுள்ளே தெள்ளியதை வேறு வைத்து—நாட்டமுட
னிசைந்து கனி மாதளையி னிணங்குபழங் கொண்டுவந்து
பிசைந்துரியச் சாறுடனே பேசக்கேள்—விஷந்தீர்க்கு
மிஞ்சிபலம் பத்து யிடித்துரியச் சாறுகொண்டு
வஞ்சமற நெய்யில் விட்டு வற்றியபின் செஞ்சொல் மொழி
மானே பழவெல்ல மகிழ்ந்திருபத் தைந்துபலந்
தானே கரைத்து நெய்யில் தான் விட்டுக்—கானலுற
நீர்வற்ற வேயெரித்து நெய்பருவ மானதின்பின்
சீரொத்த கடைச்சரக்குத் தேன்படியு—மாரவிட்டுக்
கிண்டியதிற் கூட்டுங் கிளர்சுகந்தம் பாலையது
கொண்டு பல மொன்றிடித்துக் கூடவிட்டுப் பண்டுமொரு

சட்டுவத்தால் கிண்டித் தளராது லேகியமாய்த்
தொட்டிறக்கிக் கணபதியைத் தோத்திரமாய்—மட்டுமொரு
புதுக்கலசந் தன்னிலிட்டுப் புதைத்து நவதானியத்து
ளதுக்கி சைந்த நாள்வார மறிந்துணர்ந்து—உதிக்குமுன்னங்
கொட்டைப்பாக் கினளவு கொள்ளிலரை மண்டலந்தான்
மட்டற்ற பித்தமொடு வாந்தி விக்கல்—திட்டெனவே
தீரும்புளித் தேப்பம் செரியாமை நெஞ்செரிப்புச்
சாரும் வயிற்றெரிவு சந்துவலி யூறு
முடலேறவே பரந்து வுளையுங் கடுப்புடனே
திடனுகத் தீருநோய் சிலேற்பனமுங்—குடல்மறிப்பு
வானீர் சுழற்றுதலை வலியுடனே யுட்காய்ச்சல்
ஆன பிரமேக மழற்சி வெப்புத்—தானே
பலபிணியுந் தீருமே பயித்தியமு மீளுமே
யிலகு சுக்கில மேகமுட னேகுமே—உலகிலே
பண்பாக யிம்மருந்தைப் பருகவே முன்னூலால்
நண்பாகச் சொன்னார் நயந்து.

கண்ட காராதி லேகியம்

மானிலத்தோர் நோவால் வருந்தா தருந்தவத்தோர்
தானுரைத்த லேகியத்தைச் சாற்றக் கேள்—கானலுறுங்
கண்டகா ராதிபலங் கருதி யறுபதுதான்
கொண்டு சமூலமுடன் கூட்டியே—துண்டுபண்ணி
நொருங்க விடித்துரலில் நலந்திகழ வேசொரிந்து
பொருந்து மிடாவதனிற் புகட்டியே—திருந்தவே
பத்து மரக்கால் பாணிவிட்டுக் காய்ந்து
வற்றிய நீர் நாலுபடி யானுக்கால்—மற்றினிக்கேள்
அமுர்த மெனுங் கடுக்காய் ஐம்பது தான் விதைபோக்கிச்
சமுர்த முடன் பொட்டணமாய்த் தான் கட்டித்—திமிர்தமுள்ள
வேறுமொரு பானையிலே விட்டுதகம் நான்குபடி
யூறவே பொட்டணத்தை யுடன் போட்டு—வீறுகத்
திருப்பித் திருப்பி நன்றாய்ச் சீராக்க் காய்ந்தவுடன்
அரைத்ததனைச் சாந்துபோ லாக்கியே—கரைத்தந்த
காயுங் கியாழத்தில் கலந்து வற்றத் தானெரித்து
ஆயும் பழவெல்ல மது புகல்வேன்—நேயமாய்
இசையும் பலமதுசா னிருபதுதான் கரைத்து விட்டு

அசவு தண்ணீர் நன்றாக வற்றியபின்—பசையுறவே
கூட்டுங் கடைச் சரக்குக் கூறக்கேள் திரிகடுகு
வேட்ட மிகு மூன்று பலம் விளம்புங்கால்—நாட்டமுறுந்
தாளிச பத்திரி தான் கழஞ்சு மூன்றுடனே
வாழுமில வங்கமுடன் மருந்ததுதான்—நாளுஞ்
சாதிக்காய் முன் மருந்துந் தான் மூன்று கழஞ்சாக
ஓதுகருஞ் சீரகம் ஓமமிவை—மாதே
யிம்மருந்திரண்டு மிசைந்த படி யரைதான்
திப்பிலி மூன்று பலங் கொண்டு செம்மையுறக்
கூட்டியதை யொன்றாய்த் தானிடித்துத் தெள்ளியதைப்
போட்டுக் கியாழ மதிற் பொடி தூவிக்—கோடு முலை
மாதே குழம்பாய் நீர்வற்றவே காய்ந்த தென்றால்
கோது படாதொரு படி தேனெய் கூடவிட்டு—வேதநூல்
சொன்னபடி லேகியமாய்த் தொகுத்து நல்லவார மதில்
நன்மை பெறக் கணபதியை நமஸ்கரித்து முன்னமே
பதபாக மாகயிதைப் பண்ணியே கலசமதில்
இதமாக யிட்டதனை வீட்டுள் வைத்து—இதமாகத்
தீருநாள் பார்த்ததனைத் தின்னவே கழற்சி போலச்
சாருமொரு மண்டலந்தான் தப்பாமல்—ஆரும்
பத்தியங்கேள் பூசணிக்காய் பால்நெய் புளிக்கசப்பு
மற்றுமவ பத்தியமு மாற்றியே—நித்தலுங்
கொண்டாலகலும் நோய் குளிர் காய்ச்சல் உளைமாந்தை
மண்டை நீர்த்தோஷ மிஞ்சிவரு காச—மிண்டி
நெஞ்சாலே சீ விழுதல் நெரிந்து தொண்டை கம்மல் விக்கல்
துஞ்சு சயரோகம் சொல்லிளைப்பு—மிஞ்சு
மந்தார காசம் வருவாத சிலேற் பனமுஞ்
சந்தாப மன்றியிலே தானகலுஞ்—சிந்தையுறக்
கண்டகா ராதி லேகியத்தைக் கருத்தாக
மண்டலத்தில் கொள்ளீர் மகிழ்ந்து.

இஞ்சி லேகியம்

வஞ்சமறும் நோயால் வருந்தா தருந்தமிழால்
இஞ்சிலே கியமதனை யியம்பக்கேள்—செஞ்சொல்மொழி
மானே மலை இஞ்சி மகிழ்ந்து பலம் நூறுகொண்டு
ஆனதோல் அனைத்து மகற்றியே—தானிடித்து
நன்றாக வேபிழிந்து நல்ல வெல்லம் பலமது தான்

குன்றுமல் நாற்பது தான் கொண்டிதனை—ஒன்றாகக்
கூட்டிக் கரைத்ததனைக் குழம்பாக வேகாய்ச்சி
நாட்டுங் கடைச்சரக்கை நவிலக்கேள்—வாட்டமுறுஞ்
சுக்கு மிளகுடனே துய்ய தொரு திப்பிலியு
மிக்க திரிபலை நல் வெள்ளுள்ளி—யொக்கவே
சாதிக்காய் நற்பத்திரி நற்சவுக்கார மிந்துப்புக்
காதொத்த நாகப்பூக் கிராம்பூவுந்—தீதற்ற
சீனக் காரமுடன் சிறந்த நவச் சாரமிவை
தானொத்த சத்திச் சாரமுடன்—கானொத்த
காய்ச்சுப்புக் கல்லுப்புக் கனத்த பொட்டி லுப்புடனே
யொச்ச மிகும் விளையி லுப்பிவை தான்—சூட்சமுறும்
சித்திரமூ லம்சிறந்த வதிவிடையம்
வித்துருவாம் பொன்முசுட்டை வேருடனே—அத்தனையும்
வகைவகையே கால்பலமாய் மகிழ்ந்திடித்துத் தூளாக்கி
மிகவும் வற்றிக்காயக் குழம்பின் மேல்தூவி—யகமகிழ
வொன்று படக்கிண்டிய திலொருபடி நெய் தேன் படிதான்
நன்றி பெற வொருபடியும் நவிந்து விட்டுக்—குன்றாத
நல்ல பதமாக நல்ல நாள் வாரமதில்
சொல்லுங் கணபதியைத் தோத்திரமாய்— வல்லவர்க
ளுள்ள மகிழ்ந்து வோதுகின்ற லேகியத்தைப்
பின்னு பதமாக வெந்திறக்கிக்—கள்ளமில்லா
நல்ல கலசமதில் நன்றாக வைத்திதனைத்
தொல்லுலகில் நற்றினத்தில் துலங்கவே—வல்லதொரு
ஆலங்காய் போலிதனை அருந்திலொரு மண்டலந்தான்
ஞாலமே தீரு நோய் நவிலக்கேள்—சாலமுறுங்
கிராணி யதிசாரங் கிருமி வயிற்றெரிவு
அரும லண்டசோ றகற்றுதலு—மோரமல்
கவிசை பிலிகைநீ ராம்பல் வெப்புப் பாவையுடன்
செவிகோடாம் பாண்டுயிவை தணியுமே—யயில்வாதஞ்
சிலேற்பனமுந் தீருமே சிறந்தபித்த வாதமிவை
யாற்பரியா தோடி யகலுமே—நாற்றிசைமேற்
கைப்புப் புளிப்புக் காத்திதனை நித்தலுமே
தப்பாமல் கொள்ள நோய் தானகலுஞ்—செப்பமுடன்
ஆராய்ந்து லேகியத்தை அருந்தவே தமிழ் முனிவன்
சீராகச் சொன்னார் சிறந்து.

சிந்தாதி லேகியம்

சீர் புளியிலைத் தண்ணீர் பதக்கு
சிறந்த கரிப்பான் சாற் குறுணி
பார்மேல்க் குப்பை மேனியிலை
பகருஞ் சாறி ரண்டுபடி
சாருந் தாழை விழுதினுட
சாறு படிதா னென்றுடனே
வாரு மாதளம் பழச்சாறு
மகிழ்ந்தே கால்படி தான் கூட்டே. 1

கூட்டே தேசிக் காய்ச் சாறு
கொள்ளுங் காற்படி யதனோடு
நாட்டி வீர வெங்காயம்
நறுக்கிச் சாறு மொருபடிதான்
வீட்டிற் பசுப்பா லிரண்டுபடி
விளம்பீ ரிளநீர்த் தண்ணீரே. 2

தண்ணீ ரிரண்டு படியுடனே
சாக மனைத்துங் கூடவிட்டு
நன்னீர் கருப்புக் கட்டியது
நன்றாய் ஐந்து பலங்கரைத்து
உண்ணீர் நெய்யுங் காற்படிதான்
ஒன்றாய் விட்டுத் தாளிதனில்
பண்ணீர் பெரிய விரகிட்டுப்
பாக மாகக் காய்ச்சிடுமே. 3

இடுமே வற்றிக் குழம்பானால்
ஏற்கும் கடைச்சரக் கது கேளீர்
கடுகு ரோகணி பெருங்காயம்
கடுக்காய் தான்றிக் காயோமம்
அடுநேர் கல்மதம் கல் நாரும்
நற்றுங் கடுகு வெள்ளுள்ளி
வடுவில் லாத வதிமதூரம்
வளருங் கிராம்பு திரிகடுகே. 4

கடுகு சீரகம் கருஞ்சீரகம்
கருதுங் காந்தம் வெண்காரம்

முடுகு மேலஞ் சாதிக்காய்
மொழியுஞ் சாதி பத்திரியும்
விடுமே யிந்து வாய்விளங்கம்
விண்ணோர் புகழு மிலவங்கம்
கொடுமே மாதளம் பழத்தோடுங்
கூட்டும் வெள்ளரி விரைதானே. 5

தானே யிலவம் பிசினுடனே
சாற்று மசுவ கந்தமுடன்
மானே மணக்கும் நன்னாரி
வளரும் வேர்க ளுடன் கூட்டித்
தேனே செங்கத்தாரி நல்ல
சிறந்த பட்டை கடை மருந்து
கோனே வகைக்குத் கழஞ்சிரண்டு
கூட்டி யிடித்துத் தூளாக்கே. 6

ஆக்கே யரப்பொடி ஒருபலமும்
ஆகவொன்றாய்ப் பொடிபண்ணித்
தாக்குங் குழம்பிற் றன்றாவி
சமைந்து குழம்பாய் வற்றியபின்
தாக்குந் தேனும் ஒருபடிதான்
கடுக விட்டுக் கிண்டியிதை
போக்கு நோய் நாட் களன்றி
பொருந்து நல்ல தினமாமே. 7

ஆமே கணபதி முன்னிருத்தி
அடைக்காய் வெள்ளிலை தக்ஷணையுந்
தாமே வைத்து லேகியத்தைச்
சாங்கோபாங்க மாயிறக்கி
நாமே புதிய பாத்திரத்தில்
நன்றாய் வழித்து வைத்ததனைத்
தீமை யில்லா நாள் பார்த்துத்
தின்னீர் நெல்லிக் காயளவே. 8

அளவாய் லேகியம் நாற்பது நாள்
அருந்தி புளிப்புக் கசப்பு விட்டுக்
கொளவே தீரு மகோதரமுங்
கொடிய பாண்டு விஷபாகங்

களவாங் கிராணி யதிசாரங்
காச சுவாச மெய்ப்பிளைப்புத்
தளர்வாய் வெளுக்குங் காமாலை
தானே யகலுங் கவிசியுமே. 9

ஆகலும் நல்ல சிந்தாதி
யான லேகிய முட்கொள்ள
புகலும் வேத நூல் பார்த்துப்
பொருந்தும் வாகட பண்டிதர்முன்
சகல ரறியக் கூறியதைத்
தப்பா திந்தப் படி செய்யச்
செகமே லனைத்து முள்ளபிணி
தீருங் காணுந் திண்ணமிதே. 10

திப்பிலி லேகியம்

பகருந் திப்பிலி லேகியத்தைப்
பண்பா யுலகி லுரைக்கக் கேள்
தகருந் திப்பிலி நாஞன்கு
சாரும் பலம் நல் வாய் விளங்கம்
புகலுஞ் சுக்குச் சிறு தேக்குப்
பொருந்து மிளகு மிவை நான்கு
மிகலும் வகைக்குப் பலம் நான்கு
வியல்பாய்க் கொள்ளுங் குறையறவே 1

அறவே சீரகஞ் செவ்விய
மான திப்பிலி மூலமுடன்
உறவே யக்கினி வர்க்கமுட
னேறும் லோக செந்தூரந்
திறவாங் கரிப்பா னிலைப்பொடியுஞ்
சிறந்த வாறு வகைமருந்தும்
பறைவோம் வகைக்கி ரண்டுபலம்
பண்பாய்க் கூட்டு மிம்மருந்தே. 2

மருந்தே யேல மிலவங்க
மறுத்து மதுதன் பத்திரியுந்
திருந்தும் நல்ல தக்கோலஞ்
சிறந்த சாதிக் காயிவைதான்

பொருந்து மைந்து வகை மருந்தும்
　புகலும் வகைக்கு மொருபலமாய்
வருந்தி யிடித்துத் தூள்செய்து
　வருப்பா யொன்றில் வைத்துவையே 3

வையே சர்க்கரை பலமெட்டு
　வருந்திக் கரைத்து குழம்பாகப்
பைய வெரித்துச் சோணைபடு
　பருவ மதனி லரைப்படி நல்
நெய்யை விட்டுச் சர்க்கரையில்
　நின்ற நீர்கள் வற்றியபின்
துய்ய சூரண மதில்தூவி
　துலக்கிக் கிண்டிக் குழம்புபண்ணே 4

பண்ணே தேனு மிரண்டுபடி
　பாய்ச்சி யதனுள் செலுத்தி நன்றாய்
நண்ணும் லேகிய மாகயித்தை
　நல்ல தினத்தி லிறக்கிவைத்து
விண்ணி லசுவ தேவதைக்கும்
　வேழ முகர்க்கும் பூசைபண்ணி
மண்ணோர் புகழ் நற் கலசமதில்
　வழித்துப் பதன மாகவையே. 5

ஆகும் நல்ல நாள்பார்த்து
　அருந்தீர் நெல்லிக் காயளவு
போகுங் காச சுவாசமுடன்
　புகலுஞ் சத்தி க்ஷயமிருமல்
ஏகுஞ் சுரமோ டரோசகமு
　மிளைப்பு வாந்தி சிலேற்பனமுந்
தோகை கண்ட சர்ப்பம் போல்
　தொலையும் பலநோ யுண்மையிதே. 6

வேறு குண்டலாதி லேகியம்

கூறுங் குண்டலி வேரதுதான்
　கொள்ளும் ஐம்பது பலத்துடனே
பாறுங் கண்டங் கத்தரிவேர்
　பண்பா யிருபத் தைந்து பல

மீறுதனையே ஒன்றாக
விரும்பி யிடித்துத் தூள்படுத்தி
யூறும் பத்து மரக்கால் நீ
ருடனே தாழி தனிற்புகட்டே. 1

புகட்டி யிதனை யடுப்பில் வைத்துப்
பொருந்த எரித்து வற்றியபின்
அகட்டும் சிறுதேக் கதுகொள்ளும்
நன்றாய் மூன்று பலத்துடனே
திகட்டுஞ் சித்திர மூலமுடன்
சிறந்த திப்பிலி யதன்மூலம்
வகைக்குப் பலந்தா னரையாக
வருந்திக் கூட்டுந் திறமுறவே. 2

உறவே நல்ல தசமூல
மோது மாறு பலத்துடனே
திறவா மிக்கச் செவ்வியந்
திருந்தும் பன்னி ரண்டுபல
மறைவா யிதனை யொன்றாக
வருந்தி இடித்துத் தூள்பண்ணி
யிறனு மஞ்சு மரக்கால்தா
னடைவாய் விட்டுக் காய்ச்சிடுமே. 3

காய்ச்சி நாலு படியாகக்
கியாழ மதனை வடிகொண்டு
கூச்ச மறவே முன்காயு
குடிநீர் குருணி யானதின்பின்
வாய்ச்ச கற்கம் பிழிந்தெறிந்து
வடிகொண் டதனை யிதனில் விட்டு
யோச்சம் பெரிய பழவெல்ல
முடனே ஐம்பது பலங்கரையே. 4

கரைத்து வதனில் நறுநெய்யுங்
கருதி யொருபடி தான் விட்டுத்
திருத்த மாக நீர்வற்றிச்
செறியக் காய்ந்து குழம்பானால்
வருத்த மறவே கடைமருந்தை
வறுக்கக் கேளுஞ் செவ்வியம்

பருத்த சுக்குச் சிறு தேக்கும்
பகரும் கருஞ்சீரகம் திப்பிலியே. 5

திப்பிலி மூல முடனல்ல
சிறந்த கடுகு ரோகணியு
முற்படு மாறு மருந்து
மூன்று மூன்று பலம்வகைக்கே
பிற்படு கொத்த மல்லியொடு
பெருங்கி ராம்பு சதகுப்பை
நற்படு மாஞ்சி மஞ்சிட்டி
நல்ல சித்திர மூலமே 6

மூல மான மர மஞ்சள்
மொழியுங் கரிய சீரகமுஞ்
சால வகைக்குப் பலமொன்றாய்ச்
சரியாய் நிறுத்துத் தூள்படுத்தி
ஞால முறநாள் 'தெள்ளியிதை
நற்றும் லேகிய மேற்றாற்றிக்
கோலத் தேனு மொருபடிதான்
கூட விட்டுக் கிண்டிடுமே. 7

கிண்டும் நல்ல பதமாகக்
கிலேச மகலும் நற்றினத்தில்
உண்டு பண்ணி யைங்கரற்கு
வோதுந் தீப தூபமிட்டுத்
தொண்டு படுநற் கலசமதில்
துலங்க வழித்து வைத்திதனைப்
பண்டு நல்ல தினம் பார்த்துப்
பருகுங் கொட்டைப் பாக்களவே. 8

பாக்கி னளவு அந்தி சந்தி
பண்பா யிருபது நாட்கொண்டு
போக்கு கசப்புப் புளிப்பதனைப்
பொருந்த விட்டு மருந்தருந்தத்
தாக்குஞ் சோகை காமாலை
தணியும் பாண்டு ஈளையுடன்
தோக்கும் பித்த காசமொடு
தொலையும் வரட்சி குரலரிவே. 9

அரிய சயமோ டுளைமாந்தை
யழுத்தும் நெஞ்சில் நோவுளது
முசிய வாந்தி யருசி விக்கல்
லோடு மிளைப்பும் வாந்தி பித்தங்
கரிய வேர்வை யத்திசுரங்
காயு முள்ளெரி வானதுவுஞ்
சொரியும் நெஞ்சால் விழுஞ்சலமுந்
தொலையு மிரத்த பித்தமுமே. 10

பித்த மொடு ரத்தசயம்
பேசுந் தொண்டைக் கட்டுளதும்
மற்றும் சிலேற்பன ரோகமெலா
மறுங் குண்ட லாதியென்று
மூத்த லேகியந் தனைக்கொள்ள
ஒழியும் மெனவே முன்னவர்கள்
சற்றும் மனதிற் கபட மின்றித்
தமிழா லுரைத்தார் மிகத் தெரிந்தே. 11

கண்டவச்சிரகாய லேகியம்

கண்டங் காம்பு தனைப் போக்கிக்
கண்டங் கத்தரிப் பழமதனை
பண்டே நாலு படியளந்து
பண்பாய்த் தாழி தனிற் போட்டுக்
கொண்டே யுதகங் குருணியது
கூட விட்டுக் காய்ச்சியிதைக்
கண்டு யிரண்டு படியாகக்
கசக்கிப் பிழிந்து வடிகொள்ளே. 1

கொள்ளும் வச்சிரந் தாதுவளை
குலவும் ஆடா தோடையோடு
துள்ள யிடித்து இவை மூன்றுந்
துலங்க வகைக்கு அரைப்படிநீர்க்
கள்ள மறவே பிழிந்துவிட்டுக்
காய்ந்து வற்றிக் குழம்பானால்
விள்ளு மரத்தை திரிகடுகு
விளங்குந் திப்பிலி கந்தமுமே. 2

கந்த மொடு டங்கணமுங்
கழஞ்சு வகைக்கு மூன்றுகொண்டு
பந்த மான வரிதகிதான்
பத்துக் கழஞ்சு விதைபோக்கி
சிந்தா திடித்துத் தூள்பண்ணி
திருந்தும் குழம்பின் மேற்றூவி
யிந்த மருந்தி லரைப்படிதே
னியல்பாய் விட்டுக் கிண்டிடுமே. 3

இயல்பாய் நல்ல தினம் பார்த்து
யிணங்கும் லேகியந் தனையிறக்கி
நயமாயைங்கரன் பூசை பண்ணி
நல்ல கலச மதில் வைத்துத்
தயவாங் கொட்டைப் பாக்களவு
தப்பா திருபோ தருந்திவரில்
சியலாங் காச சிலேற்பனமுந்
தீரும் ஈளை யிருமலுமே. 4

இரும லான சயரோக
மிளைப்பு நெஞ்சில் நோவுமந்தம்
பொருமல் சிலேற்பன ரோகமெல்லாம்
போமே கண்ட வச்சிரமாம்
பெருமை யுடைய லேகியத்தைப்
புளிப்புக் கசப்பு விட்டருந்த
திருவே கபத்தா லெடுக்கும் நோய்
தீருங் காணும் உண்மையிதே. 5

சம்பீர லேகியம்

காந்தங் கழஞ்சு பதின்று
கருது மரப்பொடி யிதனிலி ரட்டி
யாய்ந்த யிந்துப் பைங்கழஞ்சொன்
றுக்கி செறப்படி சங்குகைய்யா
னேய்ந்த கருவேப் யிலைநாரத்
திலையோ டெலுமிச் சிலையுடனே
வேய்ந்த நாறு கரந்தையுடன்
வெற்றிலை தன்னோ டிவை வகைக்கே. 1

வகைக்கோ ருழக்குச் சாறுய்முன் மருந்தை யரைத்துச் சம்பி
[ரங்காய்
தொகைக்குப் பதினு றிதிலடைத்துத் தூய சாறது விட்
[டெரித்துப்
பகற்போ தருந்தாய் மேதியின் மோர் பருகும் பத்திய மிதினுலே
பகைக்கும் காமாலை பாண்டுவிஷ பாக மறுஞ்சம் பீரக்
[குழம்பே. 2

குன்மக் குழம்பு

இஞ்சிவெள் ளாட்டிநீரோ டெலுமிச்சங் கனிநீர்காண
மிஞ்சுகொம் மட்டிக்காய்நொச் சிவெள்ளுள்ளி யிவையின்
[சாறுங்
கொஞ்சமோர் வகைக்கா ழாக்காய்க் கொண்டபின் னிரதமிந்து
மஞ்சள்வெந் தயம்நற்காயம் வளர்கடு குடனேலிங்கம். 1
வாளமா யிவையோரேழும் வகைக்கரைக் கழஞ்சுதானேர்
வாளமுந் தோடுபோயுள் பருப்பிரு பதுதான் கூட்டிக்
காளலே கியமுஞ்சுண்டைக் காயள வருந்தக் குன்மம்
ஈளையுள் வெப்புப்பாவை பிலிகையுள் கவிசைபோமே. 2

இஞ்சி லேகியம்

சீரணியுங் கும்பமுனி செப்பிய நூல் வாகடத்தைத்
தாரணியிலே மானே சாற்றக் கேள்—பேரணியு
மிஞ்சி லேகியமென் றெவ் வெவரும் கொண்டாட
மிஞ்சிய நோய் தீர்க்க விளம்புவாம்—பிஞ்சுலவு
வாகைவே ரோடு சிற்றுமல்லி வேர்வில்லவே
ராகும் பெருங்குமிழ் வேரெற்றரிய—சங்க
வேராகும் நெரிஞ்சிவேர் முன்னைநீள் கண்டங்கத்தரி
வேருஞ்சிறு வழுதலை வேராராய்ந்து—சோருஞசாலப்
பாதிரி வேரொக்கப் பகுந்து பெரும்பானை யிலே
வோதியநீர் விட்டுக் கொண்டு—சேதமில்லா
தெட்டொன்றாய்க் காய்ச்சி யிறக்கியிரு நாழியிஞ்சி
தட்டியதிற் சாறுகொண்டு—மட்ட விழும்
ஏலம் மிளகு சுக்கோடசை திப்பிலி குடசப்
பாலையதின் பட்டையொடு பச்சிலையுஞ்—சாலவே
சர்க்கரையில் மூன்று பலந்தானே கொண்டதி விடய

மிக்கக்கிராம் போம மிலவங்க—மெய்க்க
யிலவம்பிசின் காசுக் கட்டி யொடுய்யுமவினுயிலியங்
கிலவுமதிற் பட்டை யொடு—?
பேசுமருந் தெல்லாமொரு பலத்திற் கொண்டதையு
மொக்கப் பருவி யரைத்துக் கியாழத்—தோடாக்கிக்
கொதிப்பித்த பிறகு யிறக்கிப் பின்னுரைக்குங்
கிராணி நோயெட் டுரைக்கும் பிணிய கலவுள்ளே பெரிய
திருகாசினளவு கொண்ட போதென்னோய் தணியுமினிமானே.

சிங்காதி லேகியம்

கொங்காரு மைங்கரனே கூறுதமிழ்ச்
சிங்காதி லேகியத்தைச் செப்பவே—மங்காமல்
தாரணியில் முத்தமிழைத் தானே யாராய்ந்து
வாரணமே சொல்ல மகிழ்ந்து கேள்—பூரணமாய்
வாக்குதவ வேணும் மதயானைப் பிள்ளையாரே
டா லுனக்கே கடன் காண்—பூக்கவருந்
தூதுளை யிலையுந்துய்ய சங்கமாயிலையுந்
தாகம்விழு முத்தம் தாளியிலை—கோதவருங்
கண்டங் கத்தரியிலையுங் காணிலாடாதோடை
கொண்டந்தப் பேரிலையுங் கூட்டியே—வண்டுகட்டி
வெந்து பிழிய (?) மிளகுஞ்சாறு
சிந்தாமல் கற்கடக சிங்கியுடன்—சுந்தரஞ்சேர்
திப்பிலி மூலஞ்சிறு தேக்குங் கூட்டி
மெய்ப்புறையும் பேரரத்தை மெய்மிளகு—பொய்ப்புலருஞ்
சித்திர மூலமுந்திரி பலாயிந் துப்புக்
கஸ்தூரி மஞ்சள் கிராம்பதுவும்—சிற்றரத்தை
மாயக்காய் சுக்கு மருந்து கொண்டு வமுக்குறுத்தூது
வளையான கண்டங் கத்தரியுங் காணு மாடாதோடை
நண்புசா றதுகலந்து நல்வேருங் கொண்ட நெற்பொரியு
மோரரொக்க நேராங்கியாழத்தி லொக்கயதை யிடித்துப்
போட்டுச் சக்கரையுங் கற்கண்டுந் தேனுங் கலந்துடனே
காய்ச்சி விற்புருக முன் சேர்க்குங் குழம்பை யெடுத்
தருந்திவர உருக்குங் கசரோக முள்ளமெனும்
புருக்கி யீளையிருமல் குவளைவிப்புருதி காசமுடலெரிவு
கண்புகைச்சல் தோதகில மீளுகின்ற யத்திசுரம்பதிகை

சிலேற்பனமும் யெத்திசையுங் கீர்த்திபெற யெண்ணியே
புத்தியுடன் தீரும் சிவனறியச் செப்புவது சத்தியமே (?)
பாருங்குருவே பரம்.

கண்டங்காராதி லேகியம்

கண்டங் கத்தரிவேர்தனைக்
கதிக்க நிறப்பாயறு பதின்பலம்
தொண்டை தெளியுந் தூதுளைவேர்
துடிப்பாய தன்படி தான் தூக்கி
மண்டுங் கடுக்காய் தனைத்தெரிந்து
மதிப்பா யிருபத் தஞ்செடுத்துத்
துண்டப் படுத்தி முக்குருணி
தொகையாய் நாலு படியாக்கே. 1

ஆக்கே கியாழம் படி நாலில்
அடுக்கும் சர்க்கரை பலம் பத்து
பூக்கும் பொடுதலைச் சாறுழக்குப்
போதும் பிரமிச் சாறுழக்கு
நொச்சிச் சாறு வீறுழக்கு

. . . .

வொக்கக் கூட்டித் தீயெரித்து
இசைந்த பதத்தில் வடிப்பீரே. 2

வடிப்பாய் திப்பிலி நாற்கணமும்
வளருந் திப்பிலி மூலமுடன்
தடிப்பாந் தாளீச பத்திரியுங்
கிராம்பும் சாதி பத்திரியும்
வெடிப்பாய்ச் சுக்கு மிளகுடனே
விதமா யோரொன் றரைப் பலமுந்
துடிப்பாய் வறுத்துத் தூளாக்கித்
துவள மருந்தில் தூற்றீரே. 3

தூற்றிய குழம்பு தன்னில் துப்புத் தேனுழக்குக் கிண்டில்
மாற்றரும் வியாதி கேளீர் மாந்தமும் இளைப்பும் சோகை
யாற்றிடச் சுவாச காசம் அரியகா மாலை பாண்டு
தீர்த்திடும் புன்னைக் காயளவு தின்றிடத் தீருங் காணே. 4

கூழ்ப் பாண்ட லேகியம்

ஆடாதொடைச் சாறெண்ணாழி யாவின் பாலெண்ணாழி
பூடான பூசனிக் காய்ச்சாறு பொருந்தக் கேள்
ஈடாக இதற்கிரட்டி கூட்டியிடு மருந்து
பன்னிரெண்டு மெட்டு பனைவெல்ல மிந்தயெடை
கறுப்புக் கட்டியிதற் குச்சீனி நானாழியுடன்
கலந்திட்டது காயத்திரி பலைதிரி கடுகு
சேர்மதூர மேலமிலவங்கங் கெட்டியாய்ச்
சாதிக்காய் பத்திரி பூவராலங் கோட்டமுடன்
சந்தனஞ் சிற்றரத்தை சாத்திர வேதியுள்ளி
யிந்துயிரு சீரகம் நந்திநரும ரோகணியும்
நல்ல திப்பிலி மூலங் கொந்துலவு பாலை
கார் போகரிசி நிந்தை தீர் வசம்பு விளவரிசி
வயங்கு தேவதாரங்கல் நார்சிவதை
கசங்குறவே கண்டங்காரி வேர்த்
தூதுளைவேர் தாளிவேர் வயங்குஞ் சாறணைவேர்
யோனிப் பச்சிலையின்வேர் வெள்ளைவேர் நன்றெனவே நந்தி
யாவட்ட வில்வஞ் சாறவுரி
நீர்க்கு யிழம்வேர் நிலக்கொம்மட்டிவே
ரொக்க யெடை மூக்கழஞ்சு ஒன்றாவின்
பாலிலரைப் பாரப் பாண்டத்திலப் பாலைவிட்டே
பூண்டதொரு பொருந்தியதில் வேண்டு மாடாதோடைச்சாறு
மிகக் கலந்து மீண்டதொரு தாலத்தில்
வெள்ளமொடு சர்க்கரை சீனி நறுநெய் பேலத்தில்
விட்டளாவி யெரியிட்டுக் குழம்பாகக் கம்பி போல்
வெந்திறக்கி நாள் தோறு மூட் பகையாய்
வந்த பிணியத் தனைக்கு விளாங்கனி போல் திரட்டி
சிந்தையுட நாற்பது நாள் தின்னவே (?)
யந்தமில்லாச் சீறுமூள
மாந்தை சிலேற்பனமு மூச்சடைப்பு
மாறுமிருமல் வகைகளெல்லாம்
மீறுசுரங் குவளைமிருமல்
குவளையுடன் விப்புருதியுள
மாந்தை ரத்த சயமோடும்
ஸ்திரிகளுக்குச் சுரோணி தவாய்வு

உள்ளுருக்கி யெலும் புருக்கி
ஊன்வறறுமிய நெஞ்சுதனில்
நின்ற நெடுநோயு மஞ்சாமல்
கொண்டு வரத் தீருமெனக்
கோகமுனி நாடறியச் சொன்னார்.

அயிலேய லேகியம்

ஆவசியமாக அயிலேய லேகியத்தை
மாசறவே வைக்க வகையது கேள்
நேய முசு முசுக்கை நூறுபல மொய்க்க விடித்துப் பிழிந்து
தயவாகவே சாறுதான் குருணி—நயமாகக்
கூவிள வேரை யெட்டுக் கூர்மைபெறவே யிழைத்துத்
தாவு புனலங்குருணி தன்னிலிட்டுச்—சீர்பெறவே
நாலுபடியாக்கியுபின் நற் கரும்பின் சாறுபடி
யீரிரண்டு தண்ணீர் மிட்டான் கிழங்கி—னீரதுதா
னுலுபடி நேரொக்க வாசனை சேர் மாதளங்கனிச்
சாறு மகிழ்ந்தோர்படி பசுநெய்—யோதுகின்ற
சர்க்கரையு மோரிரண்டை—தான்—தாழாததில் கரைத்து
வுற்றவடுப்பேற்றி யுறக்காய்ந்தால்—மிக்கான
முந்திரி பேரீந்து மொழி மதுரந் திப்பிலியும்
சந்தமிரண்டு திரிசாதகமுங்—கந்த முறுங்
கோரைக்கிழங்கு வெட்டி கோட்டமொடு நன்னாரி
தாமரை யினல்லியுடன் தான் வகைக்கு—நீர் பலங்கொள்
கொத்தமல்லி சீரகமுங் கூட்டும் வகைக் கெண்பலந்தான்
சித்தமுறவே யிடித்துத் தெள்ளியபின்—பத்திபெறக்
காய்ந்த குழம்புதனில் கனபொடியை மேல்தூவி
தேன்படி தானொன்று விட்டுச் சேர்த்திறக்கிப்—பாங்குபெற
கொட்டைப் பாக்களவு கொண்டு வரில் மண்டலந்தான்
பித்துப் பிதற்றுகின்ற பித்தமும் போம்—மற்றுமுள்ள
பயித்தியமுந் தீரும் பதினெண்கிரிகையும் போம்
வயித்தியரே செய்வீர் மகிழ்ந்து.

அமுர்த சஞ்சீவி லேகியம்

சாத்தும்தோளி லமுர்த சஞ்சீவி லேகியத்தைத்
தோற்றும்படிக்கு வகை சொல்லக் கேளு—தேத்தரிய

சீந்திலிலா மிச்சுச் சிறு நெருஞ்சிவேர்க் கொடுப்பை
வாய்ந்து வளருங் காட்டு மல்லிகையும்—சூழ்ந்துபடா
மின்னிசமூலம் பருத்த வேப்பந் தோலாவரை வேர்
தன்னுடனே நல்ல சதாவேரி—மின்னுடா
தோடை யிலை பத்து வகை சொன்ன மருந்தொவ்வொன்று
வாடா தீரைந்து பலமெட்டாகக்—கோடா
திடித்துப் புனலு மிருதூணி யுடன்விட்டு
வடித்த நீரெட்டொன்றாய் வாங்கித்—தொடுத்ததிலே
யாடா தோடைச் சாறு வாமலகிக் காய்ச்சாறுந்
தாடாண்மையாங் கொடுப்பைச் சாறுடனே—வாடாநீர்
வாளிக்கிழங்கு வகைக் கிவை சாறோர்படியோர்
தாழிதனில் நெய் நாழி தானிதொன்றாய்—மீளவே
சர்க்கரை நாலெட்டு சரியாய் பலம் நிறுத்தா
லொக்கவேதான் கரைத்திதுவொன்றானால்—சுக்கு மிள
கேலத்தோல் ஏல மிலவங்கப் பத்திரிபே
ரேலூமதி மதுர மிலவங்கஞ்—சீலமிரு
சந்தனம் பூலாங் கிழங்கு தக்க திரிபலை
முந்திரிகை சண்பகத்தின் மொட்டுடனே—வந்த சிறு
நாகப்பூ மிக்க பெருநாகப்பூ கொத்தமல்லி
மாகதமோம மரமஞ்ச—ளாகு மிலா
மிச்ச மசுவகந்திவேர் வெட்டிவேர் பூளையின்வேர்
கச்சிதமாம் நெய்தல் கிழங்குடனே—மெச்சியபே
ரீச்சம்பழங் கோட்டமென்றுங் குரோசானி
வாய்த்த முத்தக்காசு கறி மஞ்சளுடன்—காய்த்த சிறு
மாதளையின் வித்துவா மசை சிலா சத்துடனே
கோதில்லா வெண்காரங் கூகைநீ—றாதரவாய்
ஒத்தவகைக்கு வகை ஒவ்வொன்று முக்கழஞ்சு
பக்கு வமாய்ச் சூரணமும் பண்ணியபின்—அக்கணத்தில்
தானாகு மெய்முது சர்க்கரை யீரைந்து பலந்
தானே கேள் சீனியந்த மாவிடைதான்—ஈனமன்றிச்
சேகரித்து வைத்த நெய்யைத் தீபாக்கினி முகத்தில்
பாகுவரில் தூவிப்பதமான—லேகியத்தைக்
கிண்டிக் கிளறியதில் கீழிறக்கு முன் பதில் தேன்
கொண்ட நிறையோர் படியுங் கூட விட்டுச்—சுண்டிக்
கருகாதிறக்கிக் கணபதி முன்வைத்துப்

பருகு மிருபோதினுக்குப் புண்பாய்த்—திருவுளத்தை
முன்னிட்டோர் போதினுக்கு முக்கழஞ்சு லேகியத்தை
யன்னியமில்லா மலிதை யந்தி சந்தி—தன்னிலரை
மண்டலங் கொள் பால் நெய் வறுத்த வுப்புக் கூட்டி வரத்
தொண்டையெரி குரலுட் சூட்டடைப்பு—மிண்டியபேய்
கொண்டதுவும் பித்தாதி கோபப் பிரகிருதி
கழுத்துந் துண்டந் தலையுமொன்றாச் சுற்றுவதும்—தண்டா
விரத்தம் விழுதலெரிப்புக் கடுப்பு
இரத்த விருமல் சுரஞ்சூடு—ரத்த பித்தம்
வாந்தி திரிதோஷ மண்டைதனில் பீனிசங்
காந்தலெரிவுடன் கை காலெரிவு—சாந்தம் வெகு
மூத்திரப் பிரமேக வகை மூத்திரக் கிரீச்சனமும்
மூத்திரப்பாளை குத்து மூக்கு தலை—மூத்திரச்சூலை
கல்லு துன்மாங்கிஷந் துய்த்தபிணி நீர்க்கடுப்பு
மேல் நீர்த்து விழுகிறது சாலவதிதாக முடநீரழிவு
சாருந்தனுவாத வாகான கைகால் வாதத்தும்
நடுக்கு வாதஞ் சயநோய் நாவரட்சி யடுக்கு மதிசார
மனைத்துந் தொடுத்த லிங்கதோஷமுடன் யோனி தோஷமதில்
சூலபுத்து வீசிவரு மூலவியாதிகளுங் காசவினையஞ்
[சுடனுள்மூல
வகையாறுடன் நீர்த்தோஷம் நாலைந்து மறுந் தாதுவுமுண்டா
[குங்காண் வஞ்சமதால்
பெற்றிறக்கும் பிள்ளையதின் பெயர் சொன்னலச் சாகாது
வுத்த மலடிபிள்ளை யுண்டாம் வாழ்வுற்று
வரும் நோய்பலது மிதில்மாறுமே.யென்னக்
[குருவானவ ருரைத்த கூறு.

பஞ்சபஞதி லேகியம்

பஞ்சபஞதி தான் பலமேய சுவமிரண்டரைக்கு
மிஞ்சுரு சாதிக்காய் கிராம்பு பத்திரி வேண்டும் வகைக்
கொன்றரைக் கழஞ்சு துய்யக் கோரோசனை கழஞ்சு மெய்யாய்
. . . ஞ்சீரக மிளகு கொஞ்ச வகை முக்கழஞ்சு புலாவு
சுக்கு யேலம் மூன்றரை வகைக்கே. 1

வகையாய்ச் சண்பக மொன்றரையும் வறுத்தே பொடித்து
[வடி கொண்டு
நகையாய்க் குமரிநீர் நாலுபடி விலாமிச்சம் வேரரைப் பலம்
[போட்டுத்
தொகையா யுரிய நீர்வடித்துச் சொல்லுஞ் சர்க்கரை பலமுக்கால்
புதையக் கிண்டி உண்பீரால் சோகை காந்தல் பயித்தியமுந்
தாகமுட்சுரம் வரட்சி மேகமிவை தீர்ந்துவிண்டே
தாதுவற்றினையும் வெகுவா யெடுக்குங் கண்டீரே. 2

குண்டலாதி லேகியம்

கண்டங் கத்திரி வேரதனைக் கதிக்க நிறுப்பாய் பதின்பலந்
தேர் தெளியுந் தூதுவளை வேர் துடிப்பாய தன்படி தூக்கி
பண்டே கடுக்கா யதனைத்தெரிந்து மதிப்பா யிருபத்
[தஞ்செடுத்துத்
துண்டப்படுத்தி முக்குறுணி தொகையாய் நான்குபடி ஆக்கே. 1

ஆக்கே கியாழம் படிநாலி லடுக்குஞ் சர்க்கரை பலம்பத்துப்
பூக்கும் பொடுதலைச் சாறுழக்குத்
தூக்க மிலாப்பிர மிச்சாறு துடிக்கு நொச்சிலை சாறுழக்கு
வொக்கத் துடியே தீயெரித்து உகந்தே பதத்தில் வடிப்பீரே. 2

வடிப்பாய் திப்பிலி நாகணமும் வழங்கு திப்பிலி மூலமுடன்
கடிப்பாய் தாளீச பத்திரியும் கிராம்பு சாதி பத்திரியும்
வெடிப்பாய் சுக்கு மிளகுடனே விதமா யொன்றொன் றரைப்
[பலமுந்
துடிப்பாய்வறுத்துத் தூளாக்கித் துவழமருந்தில் தூற்றீரே. 3

தூற்றிய குழம்பு தன்னில் துப்புத்தே னுழக்குள் கிண்டில்
மாற்றமாய் வியாதி கேளீர் மாந்தமு மிளைப்புச் சோகை
யாத்திடச் சுவாத காய மரியகா மாலைப் பாண்டு
தீர்த்திடும் புன்னைக் காயளவு தின்னத் தீருங் கண்டீரே. 4

வில்வாதி லேகியம்

விள்ளாய் வில்வக் குழம்புதனை விளங்கும் பரிசு தனைக்கேளாய்
கொள்வாய் வில்வ வேரதனைக் குறுகத் தறித்து நாலொருபது
[பலமும்
வெள்ள மோர் தூணிவிட்டு விளங்கவே யெட்டொன்றானல்
கள்ளாய்க் கற்கண்டு நாற்பது பலங்கரைத்துக் காய்ச்சி
[வடித்துக் கொள்ளே. 1

சுத்தஞ் சுக்கு நாலரையுந் தொத்து மிளகு ரண்டரையு
மற்றத்திப்பிலி ரண்டரையு மறைசேர் செவ்வியமொன்றரையுஞ்
சீத்தஞ் சீரக மொன்றரையுந் திகழு மோம மாழாக்குஞ்
சித்திர மூல மொன்றரையுஞ் சிறுமூ லமுமே யவ்வளவாம். 2

ஏற்கு மேல மிலவங்க மிகமூம பச்சிலை நாகப்பூ
ஊக்க முடனே ரெண்கழஞ்சு ஒக்கப் பொடித்துக் குழம்பதிலே
தாக்கு மேல்பொடி தன்னைத்தூவித் தானே தேனும் நாழிவிட்டுக்
காக்கும் பதமத னில்கிண்டிக் கனிபோற் றிரட்டிக் கழஞ்சி
[தின்னே. 3

கூத்தாய் வந்த சத்திகளும் குக்கில் நெஞ்சில் நோக்காடுங்
காத்தாய்ப் பெருகுங் குன்மமுடன் கிராணிக் கழிச்சல்
[கிருமிகளும்
நீர்த்தாய் மூக்கில் நீர்த்தோஷம் நிறைந்த விக்கல் இருமலுடன்
மாத்தாய்ப் பாண்டு மகோதரமும் வாத பித்த சிலேற்பனமும்
தோற்றே மென்னப் போகுமெனச் சொன்னார் முனிவர்
[சொன்னாரே. 4

சிந்தாதி லேகியம்

சிந்தாதி லேகியத்தைச் சித்தரெல்லாஞ் சொன்னபடி
யந்தரமாய் வந்தவினை யகலுதற்கே
நந்தாத புளியிலையோர் பதக்குப் புகழுங்கரிச்சான்
நெரியவரிந் தொன்றாக நேர
விரவித்தளிர் போக்கியதழைவேர் நீர்முள்ளி
யமுக்குறாச் சாறணையுஞ்
சேதமில்லாக் கொடிவேலி சிற்றாமணக்கு பேதமிடு
புன்முருங்கை வேர்வகைக்குப்
புளகிதமாய் நாலுபலமதனை நறுக்கியம் மருந்தில்
தான் விரவில் வினையகலும்

கடுக்காய்ப்பொடி கிட்டங்கருதும் நெல்லிக் காய்ப்பொடியும்
அடுக்காய் வகைக்கு மிரண்டு மளந்துகொண்டு தடுக்காதே
பாண்டந்தனில் போட்டு பழைய மருந்துப் பொடியும்
வேண்டும் பழங்காடி விதந்தூணி
நீண்டதொரு தண்ணீரொருதூணி தான் கூட விட்டவித்து
யெண்ணுங்கியாழமது எட்டொன்றாய்
நண்ணியே யிருத்த கியாழத்திடு மருந்துகேண்

மின்னே சிறுத்தொரு மூலஞ் செவ்வியமுறுத்தநல்ல சுக்கு
வசம்பு யிந்துப்புத்தூய மரமஞ்சளுடன் ஓக்கு மிளகேல
[மோமந—தக்கதொரு
திப்பிலி சாதிக்காய் செஞ்சந்தனங் காயம் வெப்புங் கருங்
[காணம் விளாவரிசி—செப்புநல்ல
காணமத்தித் திப்பிலியாங் கருஞ்சீரகங் கோட்டம்
வேணுமே கூவிளவேர் வேண்டில்—பேணியே
சீரகங் கிராம்பு புதுத்தேவ தாரத்துடனே சேரவகைக்
[கோரொன்று செப்பக்கேள்
ஆரவே நாற்கழஞ்சு கொண்டு நவில் வத்திரகாய மேற்கவே
[வைத்த கற்க மிட்டுவைத்துக் கூற்கவே
இண்டி விரவிக் கிளறியரப்பொடியு மண்டியுழக்கு வறுத்தபொடி
[யுண் வொன்றாய்
விரவியதை யூறபடக்கிண்டியது நன்றாய்ப்பருவமது நாடியே—
[யன்றேதாங்
தேன்நாழி நெய்நாழி சிறக்கவே லேகியமாய் மானே யிறக்கியதை
[வண்டுகட்டி
யேவைத்திருந்து நாடோறு மண்டலமே கொண்டு வருத்தவுடற்
[பொருமலுடன்
வெளுப்புச் சித்தமுறுங் காமாலை யிரெட்டுக் கண்வெளுப்பு
[மஞ்சள் நோய்
பொருமலாயமேனி புனிதமுற யேமமனு மென்னத் துலங்கு
[மிது யெய்ப்பிளைப்பெல்லாந்
தீரும்பின்னும் பித்தமெல்லாம் விரைந்துபோ மின்னிலத்தில்
சோகைமுழுதும் தொடராது நீங்குமென அகமுறச்
[சொன்னாரமர்ந்து

சேவகன் லேகியம்

சேவகன் பூடு சிறு நெருஞ்சி சிவந்த சிற்று மணக்கம் வேர்ப்
பாவும் வகைக்கோ ரேழுபலம் பரிவாய்த் தண்ணீர் முக்குறுணி
காயுந் தண்ணீர் மூன்றுபடி கதிக்க யிறுத்த கியாழமதில்
நாவுக் கிசைந்த நல்லவெல்லம் நயந்தே முப்பது பலம் பாகே. 1

பாகா யிஞ்சி பதின் பலமும் பரிவாய் நறுக்கி யதில் போட்டுத்
தாகாய் நோக வெந்து இ தானே மேக சீரகமும்
வாகாய்த் திப்பிலி யதிமதுர மறுத்துந் திப்பிலி மோதகமும்
நாகாய் நெல்லிக் கடுகிந்து நல்ல விழாலொடு சிறுதேக்கே 2

வன்ன மொன்று முக்கழஞ்சாய் மகிழ்ந்தே பொடியதில் தூவி
யெண்ணெய் தேனு மொருபடியா யிதிலே விட்டுப் பிசறிய பின்
தின்னுந் தான்றிக் காயளவு தீருங் கவுசி மகோதரமுங்
குன்ம மிரத்த சயந்தீருங் கொடிய சேவகன் லேகியமே. 3

கண்டங்கத்திரி லேகியம்

எண்ணிரண்டுபல இஞ்சிதொடாறவரிந்து நெய்தனிலிதம் பெற
யெரிவுமெய் யுறவறுக்கும் போதினிலிடும் பொடித்தினி மருந்து [கேள்
நண்ணுதிப்பிலி யெண்கழஞ்சு கொள்நாற்கழஞ் சதின்மூலமும்
நன்றியம்பு விரைசுண்டி யேலமொடு
நல்லசாதி யிவை நாலுந் திண்ணமெண்ணீர்க் கழஞ்சு கொண்டு
கொடிவேலி யிருகழஞ்சு கொள்சிறந்த யிஞ்சிநிறைகண்டு
சர்க்கரை தேனு பாரிருகழஞ்சு கொள்ளவண்ண மற்றபொடியை
யள்ளி யள்ளி யிடு மதுவை விட்டு மறு சட்டியில் வைத்
தருந்தினவர் பித்தமன்றி யெழில்வால சூரியனை யொப்பரே.

சிந்தாதி லேகியம்

சீராய்ந்த பைந்தமிழால் சிந்தாதி லேகியத்தை
யாராய்ந்து சொல்லு மடவுகேள் —பேராம்புளியிலை
பதக்குமிடி பின்பழைய கிட்டநிறை பலமுமீரெட்டு நிறுத்து
வுறுதியா மிரும்புபலம் நாலெட்டி சங்குவில்லை
பாதிரியுந் தயங்கும் நெருஞ்சி முன்னை சாறணைவேர்
தியங்காத சிற்றுமுட்டி பேராமுட்டி சிறுவழுதலைவாகை
யொத்தபெருங் குமிழோடொக்கவே—வத்தனையாய்ச்
செந்தொட்டி செம்முள்ளி சித்திரமூல மளிசில்
கந்துகண்டங்கத்தரி வெண்காக்கணமு—மூந்து தழாத
முக்குருந்தன் னுடனிவ்வேர் வகைக்குப் பலமாறு தானிடித்துப் [பாங்காய்—நலமுடனே
யைங்குருணி காடியனலெரித்து எட்டொன்றுற லிங்கிதமாய்ச்
சீலைவடியிட்டு இறுத்துப் பின்புகேள்
கரிப்பா னிலையுடனே கண்டகா ராதியொடு
விருப்பமுடனி சங்கிலைதை வேளையிலை—பெருக்கமுட
னாடாதோடையிலையு மானதொருதூதுளையும் சேருமுருக்கினிலை
சேரக்கூட்டி யிடித்து வகைக்கு வகையிருழக்குத் தான்
எட்டொன்றாய்க் காய்ந்து வற்றியபின் கூறக்கேள் [சேரவடித்து

காய்ச்சின சாறே கரைக்க வகை தான் கேள்
பாச்சினதோர் சர்க்கரை பலம்பத்து வாச்சதொரு
கட்டாயக்கடை மருந்துகாண் நவிலுகிறேன்—திட்டமுடன்
சுக்கு நல்ல சீரகமும் யிட்டதொரு காய மிளகு கருஞ்சீரக
[முடனே
தாயகமாந் திப்பிலி தான்றிக்காய்
நேயமுட னெல்லிப் பருப்புடனே நேர்திப்பிலிமூலம்
வல்லதொரு யோமமகிழ்கடுக்காய்—நல்லதொரு
யிந்துப்புச் சித்திரமூல மேகவகை மருந்து
முந்துவகை பலந்தா னெவ்வொன்று சிந்தனையாய்க்
காந்தம் பலனுலுகனத்த அரப்பொடியுந்—தீந்த வகை
நாலுபலஞ் சேரவே வாய்ந்ததொரு கறமுளஞ் சாறுவிட்டுக்
காந்த மர பொடியு மற்றாகவே யரைத்து—மாய்ந்த பின்பு
நன்றாகவட்டுப் பிடித்துமலி சட்டியில் போட்டு சட்டமுடன்
சீலை மண்ணும் தான்செய்து கட்டாகத் தீயெரித்து நீராறல்
செப்பாய் முன்சூரணத்தில் நேயமுடனல்ல நறு நெய்படிகால்
வாய்ப்பாக யெள்ளுடன் எண்ணெயுந்தா னேகவகை தேனு
[மொன்றாய்க்
கள்ளமில்லா தேவகைக்குக் கால்படிதான் சங்கைபெற
விட்டுக்கிளறி விரவிய லேகியத்தைத் தொட்டிறக்கிக்
[கணபதியைத் தோத்திரமாய்—நிச்சயமாய்
நெல்லிக்கா யினளவு நேரா யிருபதுநாள் வல்லபடியருந்த
[மாறுநோய்—நல்லதொரு
காமாலை பாண்டுவுக்குக் கைகண்ட வித்தையிது
பூமாதே யின்னம் பொருந்திக்கேள்—சேமமுடன்
குன்மம் விஷபாகம் கொடியநோய் தீருமென
நன்மைபெறச் சொல்லி நாடியே—பின்னுமே
பத்தியத்தைக் கேளு பசும்பால் நெய்கூட்டிவரச் சித்தமுறச்
[சொன்னார் தெளிந்து

மதுசூனுகியாதி ரசாயனம்

பார்மீதிலே சீனப்பா ரசாயனத்தைச்
சீர்மேவு பைந்தமிழால் செப்பக்கேள்—நேரான
சீனப்பா மூன்றுபலம் திப்பிலி சுக்கோம மிளகான குரோசானி
[யதிமதுர—மானனையீர்

சிற்றரத்தை மாஞ்சி திரிசாதத்துடனே
கொத்தமல்லி செவ்வியங் கோட்டமுடன்
மொய்த்த சிறு தேக்குக் கரியதொரு சீரகம் நற்சீரகம்
பார்க்கில் விளங்கந் திப்பிலிமூலம்—வாய்க்கு
மிலா மிச்சுக் கொடிவேலி மிக்கதொரு நன்னாரி
யச்சமிலாதமுக்கூற்று நிச்சயநற்
காட்டு நிலப்பனையின் கந்த மிவைவகைக்கு
வாட்ட மில்லாதோர் கழஞ்சு வாங்கியே
கூட்டி யிடித்தபொடிக்கு யெடைசரியாய்ச் சீனி
மடிவிடாத தென்று நெய்வார்த்துப் பிடித்துத் தீர்ந்த
பக்குவமாய்க்கெந்தி பலமொன்று சுத்தி பண்ணி
யொக்கவிரவிக் கரகத்து ளடைத்து மிக்கெனவே
புன்னைக்காய் போலயிரு போதருந்திவரில்
சன்னி யிருமல் சயரோகம் முன்னிவரும்
விக்கல் சத்திசூலை பிரமேக மழிகரப்பன்
அக்கினியதான வனலெரிவு தொக்கிலுள்ள வத்திசுர
மெய்த்தின வான திமிர் வாதகபம்
பித்த முதரமந்தம் பீடையுடல்—மெத்தெனவே
குத்துக்கடுப்புடனே குட்டங்கிரந்திமுத லித்தனையுந் தீர்க்குமிது.

கந்தக ரசாயனம்

சாற்றரிய கந்தக ரசாயனத்தைக் கண்டு சொல்லத்
தேற்றரிய பைந்தமிழால் செப்பக்கேள்—போற்றிய நற்
கந்தகத்தி லாறுபலங் கெட்டிபெறச் சுத்திபண்ணி
மூந்துதிரி சுகந்த மனல் மூலமுடன்—வந்ததிரி
பலை திரிகடுகு பாங்கான கார்போகு
கோலச்சணல் விதைசேங் கொட்டையிவை—சாலவே
யொவ்வொன் றொருபல மாயெடுக்கப் பொடித்த பொடி
மூவிரலால்த் தேனதனில் மூன்று நாள்—செவ்வையில்லா
வெண்ணைதனி லொன்பது நாள் சீர்கதலிப் பழத்
தண்ணிதனி லொன்பதுநாள் தானருந்தப்
பண்ணமைந்த சீனிதனி லொன்பதுநாள் சேர்நறுநெய்க்
[கொன்பதுநாள்
ஆனதுநாள் நாற்பத்தைந்து கொண்டால்—வானவர்கள்
தேகமெனலா மரணம் செய்யா திருக்குமுடல்

ஆகுமல நீரிலயம் பழுக்குஞ்—சோகைசொறி
குட்டஞ் சிரங்கு குன்மங் கிரந்தியருத்
துட்டக்கிராணி கட்டுச் குலைநோய்—விட்டுவிட்டு
வாரசுரமீளை வாட்சி பிரமேகம் மீறிய பவுத்திர வியாதிவகை
பேறுமுடல் வாதங்கடுப்பு வலிகுத் திடியுளைவு
வோதுந் திமிரெரிவு மூலநோய்—காதுமந்தங்
கண்ணோய் செவிநோய் கறன்கண்ட மாலைகைகால்
புண்ணுயிருந்த வெடிபுற்றும் போம்—பண்ணுனை
மந்தாக்கினியு மலமுமறுந் தாதுமுண்டாஞ்
சந்தோஷ மின்னுர் சதபேரை—பிந்தாது
கூடியனு பவித்துக் கொள்ளலா மோர்பொழுதில்
வாடாது வீரியமும் வர்த்தனையாங்—கோடான
கோடிகோடி வருஷங் கூர்மையுடன் வாழ்வுதரும்
நாடான புளிப்புவகை நல்லெண்ணெய்—தேடுங்
கடுகிவைகள் மூன்று மாகாதெனவே முன்னோர்
திடமுடனே சொன்னுர் தெளிந்து.

திப்பிலி ரசாயனம்

சிங்காரமா யுலகில் திப்பிலி ரசாயனத்தை
இங்காரும் கேட்க வியம்புதல்கேள்—வங்காளத்
திப்பிலியில் மூன்றுபலம் சீரகமிரண் டானைத்
திப்பிலி திப்பிலிமூலஞ் செவ்வீய—மொப்பு
மிலவங்க மிளகு சடாமாஞ்சி தகர
மிலவங்க பத்திரி யேலம் வாய்விளங்க—தங்குவன்னி
தாளீச பத்திரி நற்தான்றி கடுநெல்லி
கேளீர் சுக்கொட சுவகந்தமுடன்—சூமுரத்தை
கையானரப் பொடிநாகப்பூ சிறுதேக்குக் கோட்ட
மொய்யார மாய்வகைக்கு வோர் கழஞ்சு—மெய்யாக
மோதிய பொடிக்கு மெடைமூவுழக்குத் தேனதனில்விட்
டோதிய ரசாயனமா யுண்டாக்கி—நீதியிரு
போதுசிறியதொரு புன்னைக்காய் போலருந்தச்
சூதுசெய்யுங் காச சுவாசமுடன்—சீதசுர
மத்திசுரம் ருட்சை யரோசக மந்தாக்கினிநோய்
பித்தநோய் வாதநோய் பேதிநோய்—சத்திவிக்கல்
காமாலை பாண்டு கசநோய் சயநோவு

போமாம் சூலம்பொருமல் ஓமக்கனல்
போம் பசியெழும்பும் கைகால்மெய் தேகத்தனல்
[போமிதனடைவு.

வேறு

திப்பிலி ரசாயனம்

ஆனநீர் வாளிசாறு மாவின்பால் வகைக்கு நாழி
தானதாய்க் காயிலான திப்பிலிப் பொடியுழக்கு
யீனமாம் சுக்குநெல்லி யிலவங்க முத்தக்காசு
கானில மிளகுபூரம் பச்சிலைசீ ரகமாமே. 1

ஆமே யேலம் வகைகழஞ்சா யடைவாய் நிறுத்துப் பொடியாக்கித்
தானே குழம்பு தனில்தூவி தக்க சீனிபடி பதத்திலிட்டு
வேமே கலசந் தனில்வாங்கி விரவாய்ப் பாக்கி னளவாகப்
போமே பயித்திய வெட்டையெல்லாம் பொசிப்பும் வாங்கும்
[திண்ணமிதே. 2

வேறு

திப்பிலி நாலு பலம் சீனியிரண்டு பல
முற்பாகத் திப்பிலி மூலமோடிரு சீரகஞ்
சொற்குறு செவ்வியஞ் சுக்கொடுசிறு தேக்கு
வெற்பிறு மிளகோடு விளங்கமுங் கரிப்பானே. 1

கரிப்பான் பொடியுடனே கால்பலம் வகைக்குவகை
திரித்தே பொடிசெய்து தேனொடு லேகியமா
யுரித்தாம் பணவிடைதான் லேகமுங் கொள்குன்மஞ்
சுரம்ரத்த சயம்பயித்தியம் காசசுவா சம்போமே. 2

பட்டை ரசாயனம்

சீனப்பா பலம்நாலு திப்பிலி சுக்குக்கோட்ட
மானே யேல மிலவங்கம் மகிழுந் தாளிசை நாகப்பூத் தேனே
கிராம்பு அதிமதுரம் தெளிவாய் வகைக்கு நாற்கழஞ்சுயான
சீரக மிரண்டுபலம் ஒக்க யிடித்துத் தூள்பண்ணே. 1

பண்ணே பசுப்பா லிரண்டுபடி பாலில் சர்க்கரை யஞ்சுபலம்
நண்ணே கரைத்துக் குழம்பாக நன்றாய்க் காய்ச்சிச் சூரணத்தைத்
திண்ண மாக அதில்தூவித் திறமாய்ப் பசுவின் நெய்யுழக்கு
விட்டுக் கிளறி ரசாயனத்தை விடிவே ரந்தி கொள்வீரே. 2

கொள்வீர் புன்னைக் காயளவு கொடிய பெரும்பா டுள்ளுருக்கி
விள்ளீர் சூலை யெலும்புருக்கி யிதமாய் நாலுந் தீருமென
வுள்ள படியே யாராய்ந்து உரைத்தார் வாகட நூலிதனைத்
தெள்ளு தமிழா லகத்தியருந் தெளிந்தே யுரைத்த
[ரசாயனமே. 3

நரசிங்க ரசாயனம்,

நெருஞ்சி சமூல மாலக்கிழங்கு நீர்வா ளிக்கிழங் கெள்ளுடனே
திருந்த வகைக்கிவை யொன்றேகால் சீந்தில் தண்டின்
[மாவுடனே
வருந்தும் நிலப்பனை யின்கிழங்கு வகைக்குப் பலமுமி
[ரண்டரைதான்
பொருந்துந் திரிகடுகு வகைபலந்தான் புகழ்பல் லாதி
[முப்பலமே. 1

பலமே குளமு மொன்பதுதேன் படிகால் நறுநெய் படிகால்பின்
கலவா திடித்து விரவிவெரு கடிகொள் ளுப்புப் புளியொழித்தே
குலவீ ரிதுமண் டலமருந்த குட்டங் கிரந்தி பிரமேகம்
விலகா மூத்திரக் கிரிச்சனமு மிக்க பவுத்திரந் திமிர்வாதம். 2

வாதம் வயிற்றில் பொருமல்க்ஷயம் வாத சூலை கடிவிஷங்க
ளோதும் பித்த சிலேற்பனமு மொழியும் ஒழியுஞ் சன்னிவாத
மறுந்தா துவர்த்தனை யுண்டாகுந் தக்க மலடுந் தான்தீரும்
தீதில் லாது சொன்னரால் சிங்க ரசாயன மாகுமிதே. 3

சன்னிக்குப் பாதிரியார் குழம்பு

காரீய மிரதம் நாவியுஞ் சிலையுங் காரமுஞ்
சீரமதானுங் கந்தன் மேல்மிகுந்த கெந்தியும்
நாறுகாயமும் நிர்விஷ சாதியுஞ் சோமசாதியுந்
தக்கமுஞ் சகற்றிய பாளமுஞ் சரிசமனுய்க் கொண்டு
கற்கந்தன்னில் நாளொரு மூன்று போதொரு மூன்றுவுத்தம
[தாளியின்
சாறுறவு கொண்டரைத்து மத்தினில்கூறிய தென்னங்காய்ச்
சாறு தீரமாய் நடத்தி வாரம் ஏழுநாள்
சிரட்டையுங் கரிபனைங் குழப்புந் தெளித்துவிட்
டரைத்துச் செப்புச் சிமிழினி லடைப்ப துஞ்சியலே
செய்ய மானிடவ ருய்வில்லாச் சன்னி செப்புவதற்கோர் பதி

மூன்றுஞ் சித்திரா ரூடத்தில் பேர்படைத்தை சினமிகும் நாகங் [களைத்தும்
வெய்ய பேய்நரி நாய்ஓநாய் விஷகடி வெகுளி சேர்பதினெட்டும்
வெவ்வடத்திக் கிடந்த செவ்வட்டை விஷங்கள் நெடியிலே தீரும்
நய்யு மோர்குழம்பு சிறுபபறளவு நாவினிற்றடவ உள்குத்து
நாடுமோ சன்னி நடுங்குமே வையகம் வானக மனைத்தையும் [படைத்த
ஐயர்தன் பாதம்தான் தினமது துதித் தேத்துவோர்
அவுஷத நாமமிது கோவழங் குதிரை நோய் கொண்டதோர்
செல்லுமுன் குடோரியாடி விஷந்தலை யெழுப்பி [மண்டையிற்
யெழுந்து முன்னிருந்து விருப்ப முத்திருப்ப துஞ்சியலாமிஞ்சிய
குழம்புகள் நஞ்சுகள் தவிர்ந்திடில் தாமரை வளையங் களைந்த
சென்னீரமுந்திட மீளுமொப்புதலான
வுப்புப் புளியிவை ஒன்று மாகாதெனவே
செப்புகின்றார் முன்னோர் தெளிந்து.

பிரண்டைக் குழம்பு

செப்பும் பிரண்டை பலமதுதான் திருந்த நாற்பது பலங் [கொண்டு
வப்பு மிருபது படிகூட்டி யழகாய்ப் பெரிய பானைதனில்
வெப்ப மான வனலிட்டு விரவிக் காய்ச்சிப் படிநாலாய்த்
தப்பா திறக்கிக் கற்கமதைத் தள்ளி யிதனை வடிகொள்ளே. 1
இதனோ டொக்க முருங்கையிலை யேற்குங் குன்றி யிலையுடனே
விதமாம் நல்ல வேளையிலை விரும்புங் குப்பை மேனியிலை
இதமாய் நாலு வகைமருந்தும் வருந்தி யிடித்து வைத்திதனைத்
திதமாய் வகைக்கு ஒருபடிநற் சிறந்த சாறு பிழிந்து கொள்ளே. 2
பிழிந்து பிரண்டைச் சாறுடனே பெருக்கி யிதனை யொன்றாக
வளர்ந்த பனையின் வெல்லமது மகிழ்ந்து கொள்ளும் பலம்பத்து
யழுந்தக் கரைத்து நீர்வத்தி யாகுங் குழம்பி லிடுமருந்தை
விளம்பக் கேளீர் திரிகடுகு விரையுங் கடுகு கடுக்காயே. 3
காயத் தோடு வெந்தயமுங் கடிய யிந்துப் பொட்டுலுப்பு
வாயு மோமங் கருஞ்சீரக மருந்தும் வெள்ளை யுள்ளியுடன்

பாயு மேவகைக் கிரண்டுபலம் வருந்தி யிடித்துத் துளாக்கித்
தூய குழம்பின் மேல்தூவித் துலங்கக் கிண்டிப் பதத்திறக்கே. 4

இறக்கி மிக்க மேல்நாளி லிணங்குங் கணபதி பூசைபண்ணி
சிறக்கும் புதிய கலசமதில் சிந்தா திதனை வழித்திட்டுப்
பொறுக்கு நோய்க ளெனநினைந்து பொருந்து நல்ல தினமதிலே
யுறக்கொள் கொட்டைப் பாக்களவு உருட்டி யிதனை .
[விழுங்காயே. 5

விழுங்கி யிருபோ தருந்தி நன்றாய் விடுமே கசப்புப்
[புளிப்பிவைதான்
ஒழுங்கா யிருபது நாள் கொள்ள வோடும் வயிற்றில்
[திரகஷிகுன்ம
முழுத்தும் பிலிகை பொருமல்மந்தங் குவையுதா ஞெயனைத்து
விழுந்து கடலிற் புகும் பிரண்டை விளங்குங் குழம்பைத்
[தின்னீரே. 6

கொம்மட்டிக்காய்க் குழம்பு 1

காரமிந்துப் பிவைவகைக்குக் கழஞ்சு கண்டரி-தாரமொன்று
சேரக் காந்த மைங்கழஞ்சு திகழு மரப்பொடி வைங்கழஞ்சு
வார்ப்பு கையுறை யோர் பலமு மரையீர் வெள்ளா டதன்னீரால்
சாப்பெரிய கொம்மட்டிக்காய் தன் னி லடைத்து வேகவையே. 1

வையே கோமய மதில்வே..........மருவுஞ் சுண்டைக் காயளவு
மெய்யே பருக வயிற்றுவலி விஷநீர்க் கட்டுச் சூலைகுன்மம்
பொய்யே பாண்டு காமாலை பொருமலி ரைச்சல ருக்கழிச்சல்
தொய்யே மஞ்சள் காமாலை சுரோணித பந்த மிவையறுமே. 2

ஷ குழம்பு 2

கூறுமலகையதன் கொம்மட்டிக்காய் நாற்பதிலே
தேறியநற் காடியதெழுக்குருணி—மீறுமதிற்
பாதியொக்க விட்டுப் பழம் போலவிந்த தண்ணீர்
கோதுடனே நீக்ககுழம்பானல்—போதவே-
யொட்டறையில் வுழக்கி தொக்கயிந்துப் போர்கழஞ்சு
கட்டா யரிதாரங் கால்கழஞ்சு—தொட்டகருஞ்
சீரக மரைக்கழஞ்சு யாரப்பொரித்திடச் சேரவே நன்றாக
வாரப்பொடித்திட் டளாவியே நீர்சுவறிப்—பார்க்கிலி லேகியப்
[பாகமதிலே மெழுகு

பீர்க்கிலைச் சாறூமாக்குப் பின்புவிட்டுக்—கூறகவே
நற்குழம்பு பக்குவத்தை நன்றாயறிந்திறக்கி
யிக்குழம்பு சுண்டைக்கா யென்பது போல்—தக்க பனை
[வெல்லத்தில்
காலமே மென்றுதின்றால் பேதி செய்யும் வல்லசுரசூலை மகோத
[ரம்போந்
தொல்லைக்கவிசை பிலிசை கவுசிதிரட்சியும் பகை பொருமல்
உதைப்போ டவையான குன்மமொடு சூலை சருப்பக்கொள்ளை
யினிற்கருவும் விம்மியுறுங் கர்ப்பவிப்புறுதி
பம்பிய சுரோணித வாய்வு வயிற்றுந்திப்பூ நீராம்பல்
பரணியில் நீர்க் கோர்வை வெட்புப் பாவையுடன் தோணாயினை
[நீருமே
மாதவிடாய் சிக்கும் பனைப்பறமே பார்பசியாம் பயித்தியம்
[போம்
பாரே அம்மருந்தினி லொருளுந்தினளவு தானருந்த
யிம்மருந்தால் பாம்போடெலி விஷம்போம்—செம்மையுள்ள
கொம்மட்டிக் காய்க்குழம்பைக் கும்பமுனித் தானுரைத்தா
னிம்மட்டிலம்மா விசைந்து.

ஷை குழம்பு 3

நற்பது கடுக்காயை நஞ்சுதள்ளிக் கொண்டதுடன்
சேர்ப்ப தொருகழஞ்சு சீனக்காரமொடு—யேற்பான
காந்தமய் யரைக்கழஞ்சு கட்டாயரப் பொடியுஞ்
சேர்ந்திடுங் காந்தத்தெடையே சேர்க்கையாய்ப் போர்ந்திதனை
நன்றாய்ப் பொடித்து நயந்தகொம் மட்டிக்காய்பத்
தொன்றாயறுத் துட்செலுத்தக் குன்றாக்கரகத்தி
லெருமைக்கட்டுத் துரைக்குள்ளே விரகத்தினால் புதைத்து மீண்டு
மொருபத்து நாள்சென்றால் தானெடுத்து நன்றாக லேகியத்தை
வாய்சென்ற கண்மடவாய் வைத்தருந்த
மேல்சென்று வந்தவினைப் பாண்டு மகோதரங் காமாலை
கெண்டையுந்திவலி நீர்க்கோவை உப்பிசநோயிந்த வெப்புப்
[பாவை
கவுசி விஷபாகம் நீராம்பலறும் பூவையர்க்கு மாதவிடாய்
[போதவுண்டாந் தேவையில்லாக்
கொண்டைக்கு வளிக்குந் கொம்மட்டிக்காய் லேகியத்தைப்
பண்டறியச் சொன்னேம் பரிந்து.

சீயக்காய்க் குழம்பு

முப்பலச் சீயக்காய் வெள்ளாட்டி நீர்முப்படிவற்றி யோர்
[படியாய
யுப்பைந்தும் நாலும் சீனக்காரஞ் சவுக்காரமோ டெவாசார
மப்பியரெண்டோர் காரசாரங்காய்ந்து வரவாளமெண்மூன்றுந்
துப்பற வரைத்துக் கரையடு குழம்பு சூட்டுப்பாக்களவு
[போகுங்குன்மம்.

இஞ்சிக் குழம்பு

இஞ்சியாதிக் குழம்புதன்னை யியம்பக்கேளாய் மட்டாதே
வஞ்சமறவே யிஞ்சிச்சாறு மதிக்கயிடித்து வடித்திறுத்து
மிஞ்சாதே நாழிச்சாறுக்கு விதிநாரத்தம் பழச்சாறுழக்கு
கொஞ்சு மூவாண்டு சாறணிவேர் குறுகநறுக்கிப்
[பதின்பலந்தான் கூட்டே. 1

கூட்டிக் காய்ச்சி மேல்பொடிக்கோர் கொத்த மல்லி யிந்துப்பு
நாட்டி லேல மிலவங்கம் நற்சீ ரகமுங் கற்பூரஞ்
சாட்டிற் சுக்குத் திப்பிலியுஞ் சடையா மிளகு முத்தக்காசு
கோட்டமேலங் கழஞ்சாகக் கொண்டே கையாந்தகரையிலை. 2

இலைச்சாற் றூலையாப் பொடிகழஞ் சிதமாய் வறுத்தெல்லாம்
[பொடித்து
யவைதனை யடவே பொடியைத் தூவிக் கிளறியபின்
மலைமேல் தேனி லுழக்குவிட்டு வறளா தேகிண்டி யுண்பீரால்
தலைக் கிறக்கும் வாந்திகுன்மமந் தமறுகா தேப்பவிடாய்
[போமே. 3

அவத்தைக்குதவும் பெருமாள் குழம்பு

கூனியதின்கொம் மட்டிக் காய்ச்சாறு கோவுடனே கார்மேதி
[வெள்ளாடு
கோமய முஞ்சேரவே முன்னுழி தாய்த்தாழி தனில் விடுநீற்
[குண்டிவேளை
மாவிலிங்கை சாறணை நிலவாகையு வாயிலைமேனிச் சாறதுவு
மேழுபடி யாந்துளிபடவே புனற்றும் வேரைத் தொரு
தேங்காயினளவாய் வெள்ளுள்ளித் திரிகடுகு வரிதகியும்
வகைபல மதாக நாழியதில் பாதியது திருடியதின் சீரமது
நன்றாக வொன்றுப்க் கரைத்தெரித்துப் பதத்தில் வரும்
[போதுதானே. 1

தானேதரிப் புணமரைப் படிதழாத் தூத் திக்கி கிளறியதைப்
பானையதனை வழித்தெடுத்துப் பதனமாகச் செப்பிலிட்டு
மானேயதனைப் பாக்களவு மகிழ்ந்தே காலத் திரளையுடன்
கோணாதிருந்து நல்வாரமுடன் கொள்வீரானாலக்
கானேவாய்வும் மகோதரமுங் கவிகைதிரட்சி கட்டுஞ்சுரோணித
[மட்ட குன்மம்
போனேனென்று போய்விடுங்காண் புகழுமவத்தைக் குருவும்
[பெருமானே. 2

லசுனக் குழம்பு

ஆயும்நல்ல வேதம்பார்த்து அவுஷதம் செய்துமிஞ்சும்
நோயற மருந்துசெய்யும் நூல்வல்லோ ரனைத்துங்கேளீர்
நேயமாம் வெள்ளையுள்ளி நிறைபலம் நூறுகொண்டு
மாயுந்தோல் குறுத்துப்போக்கி மசியவே யிடித்திடாயே. 1

இடித்திடுங் கறுத்தயெள்ளு யிருபடி யளந்துகொண்டு
மடித்திவை வேறிடித்து மாசறப் பொடியதானால்
தொடுத்ததோர் லசுனத்தோடு துலங்கவே கூட்டியொன்றாய்
வடிப்பமா யிடித்துத்தோன்றி மகிழ்ந்திடாய் கலசந்தன்னில். 2

கலசத்தி லிட்டுமிக்க கருதிய எருமைமோரில்
இலகுமோர் படிதான்விட்டு ஏழுநா ளூறவைத்துச்
சலமற வற்றிநீரும் சலியாது வெய்யில் முகத்தில்
பலன்படு புலமதாகப் பண்புடன் வைத்திடாயே. 3

வைத்திடு மேழுநாளும் மகிழ்வற யிதனினோடு
நற்றிடு மருந்துதன்னை நவிலுவேன் முறையதாக
உற்றதோர் கொத்தமல்லி யுடனல்ல சீரமோடு
மற்றுமோர் மிளகுசுக்கு வரும்சித்திர மூலமாமே. 4

ஆமே காணப் பொடியுடனே யருந்துங் திப்பிலி யிவையெல்லாந்
தாமே வகைக்கு யெண்கழஞ்சு சாற்று மருந்து வேறினிகேள்
வேமே நல்ல கருஞ்சீரகம் வெடியுப்புடனே வளையலுப்பு
தீமை யில்லா திந்துப்புத் தின்னுங் கறியுப் பதுவாமே. 5

அதுவாம் நல்ல காச்சுப்பு வாகுமிக்க மருந்தொன்றில்
முதிய விரையு மிதுசேர மூன்று கழஞ்சு வகைவகையாய்
விதியே முன்சொல் மருந்தோடு விரும்பி யிடித்துத் தூள்பண்ணி
மதியாச் சீலை வடிகொண்டு மதிக்கு மருந்தி னுடன்கூட்டே. 6

உடனே இரண்டு வகைமருந்தும் ஒன்று யிடித்துச் சேகரித்துத்
திடமா மாறு மரத்தையினிற் சிறந்த காடி ரண்டரைதா
னடைவாம் படியே நறுநெய்யு மாகும் படிகே ளொன்றாகு
மடவீர் நல்லெண்ணெ யொருபடியு மகிழ்ந்து
[விட்டுப்பிசைந்திடுமே. 7

பிசையும் நல்ல சுனத்தோடு பேசிய மருந்தெல்லாம்
இசையவே யொன்றாய்க்கூட்டி யித்தையோர் பாண்டத் திட்டுத்
தசையுற வோடு கொண்டு தான்மூழச் சீலை மண்தான்
விசைபெறப் பண்ணி யித்தை விரும்பிடுந் தானி யத்தில். 8

தானிய புடம தாகத் தான்பதி னைந்து நாளும்
மானதோர் லேகியத்தை யதின்பின்ன ரெடுத்துக் கொண்டு
கானமாங் குழலாய்க் கேளாய் கழஞ்செடை மருந்து தன்னை
ஞானமை மோரி லாகும் நற்காடி தன்னிலாமே. 9

தன்னிலே மாத மொன்று தான்கொண்டு புளிக்க சப்புப்
பின்னம தாக்கிக் கொள்ளில் பிணியது பலது மோடும்
உன்னிய வாத பித்த சிலேற்பனத் தோடு குட்ட
மன்னிய குன்ம மோடு வளர்பிர மேகம் போமே. 10

மேகமோ டிருமலீளை மிகுத்திடும் பவுத்தி ரங்கள்
ஆகுநீ ராம்பல் சூரை யழுந்திடுங் கர்ப்ப சோரை
யேகுமே யிவைக ளோடு யழுகின்ற சூலை நோயும்
போகுமே யங்கந் தானும் பொற்பிர காச மாமே. 11

காசமே கண்ணி லூறுங் கபையறும் பலமு முண்டாம்
நாசமா முதர நோவு நல்லன்னந் தீப ரிக்கும்
வாசமே சிறக்குந் தாது வர்த்தினை மிகவு முண்டாம்
மீசுர மாகும் நலசுனக் குழம்பினை விரும்புங்காலே. 12

சித்திரமூலக் குழம்பு

சீராம் சித்திர மூலமது சிறந்த மேல்தோல் பலமதுதான்
நேரா யறுபது கொண்டிடித்து நெற்பாய் தாழி தனிற்சொரிந்து
வாரீ ருதக மரைக்கோட்டை வார்த்துக் காய்ந்து வற்றியபின்
கூறீர் கற்கம் பிழிந்தெறிந்து குறுக வற்ற யெரித்திடுமே. 1

இடுமே வேறு மருந்துதன்னை யியம்பக் கேளும் புரசுபுங்கு
கொடுமே யாசினி பெருங்குமிழுங் கூறு மவுரி யிருவகையு
மடுநேர் சாறடை பாதிரியும் நாக ணுத்தி முன்னையுடன்
படுமே நெருஞ்சி கூவிளையும் பகருஞ் சிறிய வழுதலையே. 2

தலையே கண்டங் கத்திரியுஞ் சாற்றுஞ் சிறிய ஆமணக்குக்
குலையாம் நாய்வேளை வேரிவைதான் கூறும் வகைக்குப்
[பன்னிரண்டு
பலமே கொண்டு யிடித்திதனை பகரும் பலத்திற் கொருபடிநீர்
நலமாய் விட்டுக் காய்ச்சியதை நன்றாய்ப் பிசைந்து வடி
[கொள்ளே. 3

வடிவாஞ் சித்திர மூலமது வற்றிக் காய்ந்து தண்ணீருங்
கடிதா யிறுத்துக் கூடவிட்டுக் காய்ந்து மூன்று படியானால்
படிமேல் கருப்புக் கட்டி பலம் பத்து நிறுத்துக் கரைத்ததனில்
துடிபோ லிடையாய் நீர்வற்றச் சுவற வெரித்துக் குழம்பு
[பண்ணே. 4

குழம்பில் தூற்றும் மேல்மருந்தை கூறக்கேளீர் சிவதை சுக்கு
விளம்புந் திப்பிலி யரிதாரம் வெடியுப்புடனே வளையலுப்பு
வளங்கொள் காயம் விளாவரிசி வளரும் வெட்பா லரிசிமிகக்
களங்க மில்லாச் சீரகமுங் கருதும் சீனக் காரமிந்தே. 5

இந்து வுடனே வெண்கார மியல்பா மனோசிலே சவுக்காரம்
முந்துந்தேவ தாரமுடன் மொழியுஞ் சீரகம் சதகுப்பை
சிந்தும் ஓமம் செவ்வியம் திப்பிலி மூல மிவையுடனே
வந்த சிறிய மூலகமும் வகைக்குக் கழஞ்சு நாலு கொள்ளே. 6

கழஞ்சு நாலில் குறைபாது கருதி நிறுத்து வகைவகையே
வளைந்து யிடித்துத் தூள்படுத்தி வகுத்த குழம்பில் பொடி தூவி
விளம்பும் குழம்பு பருவமதாய் விரும்பும் நல்ல தினமதிலே
வுளங்கொள் களிக்க வைங்கரற்கு ஓதுந் தீப தூபமிட்டே. 7

இட்டே மருந்தை யிறக்கிவைத்து யியல்பாய்ப் பறண்டி
[வழித்திதனை
மட்டாம் புதிய கலசமதில் வழித்துப் பதன மாகயித்தைக்
கொட்டைப் பாக்குப் பிரமாணம் குழம்பைத் திரட்டி
[யிருபொழுது
யெட்டோடெட்டு நாள் அருந்தில் இனிய கசப்புப்
[புளிப்புவிடே. 8

புளிப்பு விடவே யகலும்நோய் பேசுங் கர்ப்பவாயுவுடன்
ஒளிக்கும் பக்க சூலையுட னோதும் பிலீகை நீராமை

களிக்கும் வெப்புப் பாவை குட்டங் கவுசியே குத்துக்
[குடற்கரியும்
பனிக்கு முதார நோயனைத்தும் பதறும் சித்திரக் குழம்பு
[கொள்ளே. 9

கொம்மட்டிக்காய்க் குழம்பு 4

அலகையதின் கொம்மட்டிக் காய்ச்சாறு நாழி யதனளவே
[சம்பரத்தின் சாறுநாழி
குலவுசெறி நொச்சியிலைச் சாறுநாழி கொள்ளும் வெள்ளுள்ளி
[யிஞ்சிச் சாறுநாழி
சலமறவே காய்ந்து வற்றி நாழியானல் தன்னுடனே சாதிலிங்கம்
நலமுடைய வெண்காரம் சோமனுப்பு நற்கடுகு யசமதாக
[நயந்து கொள்ளே. 1

கொள்ளுவது வெந்தயமும் மிளகு மஞ்சள்
குலவுசெறிநேர் வாளங் காந்தமோரொன்
றுள்ளபடி நிறைமூன்று கழஞ்சு கொண்டரைத்து
ஒன்றுபடத் துழாவியதில் ஒக்கக் காய்ந்து
மெள்ளவரும் பழம் புளிபோல் பதங்களானல்
மீறுமல் தூதளங்காய் அளவெடுத்து உண்ண
உள்ளபடி குன்மமெட்டு வாய்வு பத்து
முதாரமுள்ள திரட்சி யெல்லாம் விரைவில்போமே. 2

திராவகம்

மூதுணர்ந்த வேதமுனி வோருரைத்து மொழிவர் திரிதோஷ
[முதல்
மாறுதற்குப் பூதலத்தில் சொல்லுதற்கு மிக்கான சூட்சம
[திராவகத்தை
வெல்லும் விழி மாதே விபரங்கேள்—சொல்லரிய
கந்தகங் கழஞ்சு சீனக்காரங் கேடில்லாப் பொட்டிலுப்பு
யிந்தவகை யிரண்டு மிங்கோர் பலமாயுஞ் சவுக்காரமதிற்
[பாதி பெயுமெவட்
சாரந்துத்தமியல் பாஞ்சவுட்டுப் புயவட்சாரமான
யன்ன பேதியுடன் நவமான நாலுவகைக்கு மொன்ருக வோர்
[பலமும்
நுவலும் சிலைதாரம் வெவ்வேறு அஞ்சு கழஞ்சு போலுதவும்
நவசார மஞ்சளைப் பலமும் நன்ருகச் சிப்பிச் சாம்பல்

உபசாரமாக ஒன்றுக்குக் காலதாக யெல்லா மருந்து
[மொன்றாயிளக்
வுவாத் தண்ணீர் விட்டுக்கொள்ளா யிளவறுப்புக் கொண்ட பின்பு
வெல்லரிய காசிக் குப்பிதனிலடைத்துத் திராவகத்தை
[வாசிக்கும் போதிறக்கி வைத்ததிலே—நேசிக்கு
மிரும்புருக லோகமெல்லா மிட்டவுடனே கரைக்கும்
பொரும் புருவமாதே பொரிமாவில்—விரும்பியதில்
எள்ளத்தனை தயிலமெடுத்து அருந்திடுகில் ஓடும் பிணிகள்
[கடுங்குன்மமது
கண்டோடுமென்ன விம்முதா வியாதி யெல்லாமொரு
[தூறுவறுது திராவகத்தின் பேர்சொல்ல வோடும்பிணி.

நாரத்தங்காய்க் குழம்பு

குப்பைமேனி கொழுஞ்சி கருவேம்பு கூறும் நொச்சியுகா
[யிலைதைவேளை
நாற்றமானதோர் நாறுகரந்தையும் நல்ல பச்சை முருக்கிலைச்
[சாறுடன்
வெட்டமாகப் பரித்திவை பச்சிலை மிண்டி யிடித்துப் பிழிந்திவை
[சாறெலா
பாய்ச்சித் தோன்றும் நாழியதாகவே யளந்துவரு அடைவுடன்
[தாழியில். 1

நாட்டமான நாரத்தங்காய் பத்து நன்றாய்க் கீறியிடித்த
[சாற்றினில்
வேட்டமான நற்சீரகமோதக மிளகொடுள்ளி கடுகுடனுரவோர்
தேட்டமாயொன்று உருவுக்காகவே சேர்த்துக்கூட்டி
[மருந்திவையொன்றித்துக்
கூட்டவே யின்னம் சொல்லு மருந்து கேள் கூறுகின்ற
[கழஞ்சிப்படி நிறே. 2

நாறு நல்ல பெருங்காயம் நல்ல சுக்கு மிளகு சவுக்காரமிந்துப்புக்
கூறு நல்ல கொடிவேலி வேருடன் சேரழுஞ்சி வேரின் புறந்
[தோல் வெடியுப்பு
யேறு நல்ல கரந்தையிவை யேற்கவே யோரொன்று நாற்கழஞ்சு
வேறில்லாமல் அரைத்திவை காச்சிவை வெற்றிசேர் களிப்பாகத்
[திறக்கிடே. 3

ஆற்றியே பரணி தனிலடைத்து நெல் கீழேவைத்துச்
சீற்றமான பிணிக்கொரு தாணிக்காயத்தனை தின்னத்
தீரும் பிணிதனைக் கேட்பீரால்—கூத்தமென்றுங் காமாலே
குன்மமுங் கொழு மறுத்தலவன் சோகை வாய்வு மூத்தபித்த
நெஞ்சு கரிப்புடன் முதுகிராணி கழிச்சலுங் தீருமே. 4

கொம்மட்டிக் குழம்பு

போரால் பெரிய கொம்மட்டியைப் பெருகப் பறித்துத்துவைத்துச்
சீராய்ச் சீலேவடிகொண்டு சிந்தாதொன்றே யறுநாழிக்
காரார் மேதி வெள்ளாடு கறுத்த பசுவின் கோமயமு
மாரவோ ரொன்று நாழியதாயடவாய்க் கூடும் பச்சிலேச்
சாறின்னமுங் கேள். 1

கூறும் நொச்சியும் வாயிலே தை வேளை கொடியமேனி
[லிலவாகையோ ரொன்று
வேறில்லா வகை நாழியதாக வேலிரைந்து கூட்டு மருந்தின்னங்
[கேட்பீரால்
மீறு சுக்குக் கடுக்காயு மிந்துப்பு மிளகுங்கூடப்பொடித்தி
[வையாறிக்
குறுக்கியுரித்த . . . ப்பணம் போட்டுயடவே பொடியும்
[போட்டிறக்கே. 2

பருவமா யிறக்கிமாதம் பதனமாவிருக்கில் தின்னே
வுருகிடும் பித்தவாயு வுருண்டதோர் வாய்வுப்பற்றும்
வெருகிடும் குன்மந்தானும் வென்றி சோரி நிதம்பக்குரை
கருதியேதீரும் கருப்புக்கட்டியில் பாகில்கொள்ளே. 3

வச்சிரவல்லிக் குழம்பு

பிரண்டைக்கிழங்கு மார்லக்கிழங்கு பேசும் சித்திரமூல
வேரிரண்டு பலம் நிறுத்து யிடித்து நாலு மரக்கால் நீரிலிட்டுத்
திரண்டேகுறுணி கியாழத்தில் சேரும் மருந்தைக் கேண்மின்னே
உருண்ட ஏல மிலவங்கம் உடனே சதகுப்பை திப்பிலியே. 1

அத்தித் திப்பிலி கிராம்புவாம் அளர்க்கம் சுக்கு விளாவரிசி
உத்த மிளகு கருஞ்சீரகம் உறுசேர் மஞ்சள் கோட்டமுடன்
சித்த முடனே நாகப்பூ சீரகம் வச்சிரக் கிழங்குடனே
பத்துப் பச்சிலே ஓர்வகைக்குப் பலமும் அரையாய்க்
[கொள்வீரே. 2

கொள்ளும் உத்தம வல்லாரை கூட்டுங் கருணை பிரமியுடன்
உள்ள உருக்குப் பற்பவகை உழக்குப் பொடியே தான்கூட்டி
தள்ளா மருந்து தான்கூட்டித் தறுகாய் கியாழத் திடுவீராய்
வள்ளச் சர்க்கரை நாழியுடன் மருந்தைக் கூட்டிக்
[கிண்டிவையே. 3

கிண்டி யிறக்கிக் குழம்பாக்கிக் கிளறும் இரும்புப் பாத்திரத்தில்
வண்டி கட்டி நெல்புதைத்து வளரப் பழகி வெருகடியே
யுண்டா லத்திரி தோஷமூல முடனுற்ற பொருமல் வாய்வுப்
[போம்
வண்டேட பாடுங் குழலாளே வச்சிர வல்லிக் குழம்பாமே. 4

உயிர்மீட்டான் குழம்பு

உற்றதொரு நேர்வாளம் நாற்பதுக்கு உகந்த சிற்றாமணக்க
முத்து நூறுகூட்டி தித்தித்த தேனது வுங்காசெடையே
கூட்டிச் சிறக்கவே யம்மிதனில் வைத்துச் சேர்த்தரைத்
துச்சி மிழில் பற்று குளிர்காச்சலுக்கும் பாம்பு கடித்தாலும்
பகையான பேய்களுக்கும் சன்னிக்குமல்லா வித்தனையோ
நீர்பாடு குடற்படுவன் நீரு மிதுவல்லால்
புறவலியுள்வலிக்கு மாமே. 1

ஆமே கடலில் வினைசாமீ னதுவல் லாமல் கெடுத்தலுக்காம்
காமே கெளிலு முள்பெற்றைத் தனியா தோரா திருக்கைவிஷம்
போமே நாவிற் பணவெடைதான் புகட்டில் நாக்கு வரட்சிவிடும்
பாமே யுயிர்மீட் டான் குழம்பைப் பார்த்துச் செய்ய
[வல்லீரே. 2

லசுனப்பிட்டி

ஆனதசமூல முடனுமணக்கு வேர் முருங்கை மானமுறு
[முக்குரட்டை மாவிலிங்கு
தேனனை யீரொவ்வொன்று மூன்று பலமொக்
கத்தறித்திடித்து வெவ்விய நீர் முக்குருணி விட்டதிலே—செவ்
வையுள்ள பாலுங்குருணி பரிந்துவிட்டு வேடுகட்டிச்சில
முடன் பிறகு செய்வது கேள்—ஞாலமிசை வெள்ளுள்ளி நூறு
பலமிக்க கொத்தமல்லி சுக்குத்
தெள்ளு பெருங்காயம் நல்ல சீரகமுங்—துள்ளுமெ
வட்சார நவச்சாரஞ் சதகுப்பை யக்கினி

வேரார முறமோம முப்பலைவகையும்—நேரான
திப்பிலி மூலங் கடுகு செங்கழுநீர்க் கோட்டமெள்ளு
யிப்படியே யொவ்வொன்றுக் கிருபலமாய்—மெய்பாகத்
தூளாக்கி வெள்ளுள்ளி தோயயிடித் தொன்றுனல்
ஆழாக்கிரட்டிக் கொள்வீர் நறுநெய்—தாழாது
நல்லெண்ணெய் யப்படியே நல்கியொன்றாய்த் தான்விரவி
வல்லதொரு ஓட்டின்மேல் வைத்தெரித்து—மெல்லவே
தானே யெடுத்தரைத்துத் தக்கதொட்டைப் பாக்களவு
தேனே யிருபோது தின்றுவந்தால்—ஊனிலுள்ள
வாதநோ யொன்பதும் வாய்வு வயிற்றுவலி
பேதக்கிராணி பெருவயிறு—சீதமாய்க்
கண்டவுடலக் குளிர்ச்சி கைகால் திமிர்கனப்பு
விண்டவிறுவிறுப்பு மேலிளைப்புத்—தொண்டையினல்
சாருமிருமலழற்சி யருவருப்பு வாடாதசூசிக வாயுவுட—னுடாது
அக்கினி மந்தத்துடனே யானதொரு பேய்ப்பிடியு
மிக்கெனவே யூதுமுடல் மேல்கனப்பு—ஒக்கவிவை
பேணியறவே லசுனப் பிட்டி—யென முன்னோர்கள்
தோணியது சொன்னர் தொகுத்து.

தேங்காய்ப் பற்பம்

கள்ளிப்பால் தேங்காய்க் குள்ளேகடிதிரி பலையுங்கூட்டி
யுள்ளிவெண் காரஞ் சவுக்கார முடனேசிவ காமிந்து
கள்ளமிலாப் பெருங்காயம் கழஞ்செடை சேரக்கூட்டி யிட்டுத்
தெள்ளுகோச் சாணிபூசிச் சேந்தெருவில் சுட்டிடாயே. 1

இட்டதோர் சாணிதீய்த்து யியல்புடம் வாகாகே வெந்தாலம்
மட்டது வாங்கிநீயுமந் தத்தீவிட் டெடுத்து
வெட்டென வரைத்து விங்குமேவியே யிதனில் நீயும்
சிட்டாலங் காயேபோல சேர்த்துப்பின் விழுங்கிடாயே. 2

மருவுநீ நுகர்ந்து விட்டால் மாறுமவ் வியாதி கேளும்
விரகற யெகுத்துக் குன்மம் வியன்வலி சூலை யேகு
கருவுறு கவுசி யேகுங் கனத்துறு சோப மேகும்
பெருகுட கரியு மேகும் பேணிநீ கண்டி டாயே. 3

கள்ளி பற்பம்

கள்ளியின் கட்டைவெட்டி கருதியுட் தோண்டிப்பின்னை
யுள்ளியு மிந்துப்புடன் சினக்கார மிட்டு

வெள்ளிய வெண்காரங் கனலொக்கயிடித் திட்டடைத்துத்
தெள்ளு கோமயமும் பூசிகுவிங் தெருவில் சுட்டிடாயே. 1

இப்படிச் சுட்ட திந்தக் கள்ளிக்கோ மியமுந் தீய்ந்தால்
அப்படி யறிந்து நீயு மருமருந் தெடுத்துப் பின்னை
மெய்ப்பட வரைத்து விந்த வடவதின் காய்போல் நுகரிலென்றே
மெய்ப்படி யெருத்துச் சூலை மிகவிரைந் தேகுங் காணே. 2

சேவல் பற்பம்

ஆவலுடன் சேவ லறுத்துச் சதையெடுத்துப்
பாவகமாய் வைக்குமந்தப் பற்பங் கேள்
தாவமுடன் முற்றின சேவல்முகம் கால்மயிர் போக்கிச்
சற்றுமில்லா மலந்தச் சதையெடுத்துச்—சுத்தியாய்
வெள்ளாட்டின் கோமயத்தில் வேகவைத்துத் தானெடுத்து
தெள்ளுமருந்தாய் அரைத்துக் சேர்ப்பாயே—கிள்ளுமே
கட்டாக நானும் கடைச்சரக்குக் கூறுகிறேன்
மட்டான கடுகோமம் வகைபடிகால்—திட்டமுட
னுகாரந்தா னுலுபல நல்லசுனைமைந்து பலஞ் சேகரமாந் துருசு
திப்பிலியும்—வேகமுட
னிந்துப்பு வெண்கார மேற்றதொரு காந்தங்
கந்துவடி மண்சினக் காரமுடன்—சிந்தனையாய்
சேரக்கழஞ் சிரண்டு சேர்ப்பாய் பின்னும்மருந்து
வாரமுடன் கொடிவேலி வேர்மகிழ்ந்தரைத்து—பாரமுடன்
கூட்டுவா யோர்திரளை கொண்ட உத்தமநாளி காட்டில்
வாழ்சாறணையுங் கால்படிதான்—ஈட்டமுடன்
வெம்பிரண்டைச் சாறுடனே வெள்ளாட்டுப்பால் வகைக்கு
சம்பாம லரைப்படிதான் சாறுடனே—சொம்பு பெற
அரைத்துக் கரைத்து யதிலேடேயொக்க
யுறைக்கிறேன் கருப்புக்கட்டியோர் பலந்தான்—கரைத்துநன்றாய்
தீயெரித்து நீர்தானும் சேரவே வற்றினகால்
ஆயு மருந்தை யிறக்கி யாரவைத்து—உபாயமுடன்
காயவைத்துத் தானிடித்துக் கட்டாக வண்டின்மேல்
தோயமுடனே வடிகொள்பின் சொல்லுகிறேன்—தாயகமாய்
வைத்துத் தானிடித்து கட்டாக வண்டின்மேல்
தோயமுடனே வடிகொள்பின் சொல்லுகிறேன்—தாயகமாய்த்
தின்னவகை திறனுஞ் செப்புகிறேன் கேளுமினி

முன்னமே கருப்புக்கட்டி முற்கொண்டு—நன்னயமாய்
வெருகடிப் பிரமாணம் வெல்லத்தில் கொள்வா
யரைமண் டலந்தான் மார்கமா—யுரிமையுடன்
தீருநோய் கேளுமினி சேர்குவை நீராமை
ஊரும் விஷகரப்பனுள் கவிசி—மேல் கவிசி
கேளாய் மகோதரமுங் கேட்கும் விஷபாகம்
அடவுடனே—நாள்பார்த்து (?)
கொள்ளப் பிலிகையோடு குடிபோகும் பத்தியங்கேள்
வெள்ளரிக்காய் பயத்தங்காய் வேண்டுவாய்—தள்ளாமல்
ஆவின்நெய் முட்டையொ டானபழஞ்சோறு
பாவகமாய் நீயுமிந்தப் படிபருகச்—சேவகனு
மென்றுமுனி சொன்னு ரியல்புடனே கூட்டுவகை
நன்றிபெறச் சொன்னார் நயந்து.

அக்கினி குமாரி பற்பம்

மன்னுதமி ழக்கினி குமாரி பற்பம் செய்தொழிலை
பன்னுதமிழால் பகரக்கேள்—சொன்னதிரி
கடுகோமங் காயம் சிரக மிரண்டு (?)
நிர் விஷம்ரோசணி நேர்வாள—மிறுகிரதந்
தார மிந்துகெந்தி தெய்வ தாரங் கடுதான்றி
காரந்துரிசு கரியகுக்கில்—பாரமடல்
துத்தம் பெரு மரத்தோல் சொல்லிவிருபத்திரண்டாய்
வைத்த மருந்து வகைகழஞ்சு—சித்திர
மூலஞ் சாறடைவே ரமுக்குராக் காக்கணம் வேர்
வஞ்சமுறுந் தூதுளை வளர்பிரண்டை—மிஞ்சாமல்
ஆறுவகை வேர்வகையொன் றுக்கழஞ் சிரண்டி
லேறிவிடாதே யிருபத்தெட்டிதனை—யூறுசெய்ய
பண்பாகவே யெருக்கம் பாலிலரைத்தெரித்துவெந்தால்
வன்பான கோசலமும் வார்த்தரைத்துச்—சொம்புபெற
கோசலத்தி லோர்படியில் கூட்டிக் கரைத்தெரித்த
வாசறவே யுலர்ந்தா லந்த நிறை—பேசு
நிகரில்லாப் பொடியை நிறுத்தொக்கக் கையாந்
தகரையது பிழிந்தசாற்றில்—மிகவரைத்துப் (?)
பின்பு பிரண்டை பிழிந்த சாறோர்படியி
லன்பினுடனே கரைத்தொன்று யெரித்து—கம்பி

பதத்தி லிறுகிய பக்குவத்தில் மெள்ள
விதத்திலிறக்கி வெயிலுலர்த்திப்—பொடித்துப்
பணவெடை தேனிஞ்சி வெல்லந் தன்னில்கொடுக்க
சயரோக முன்னுமிரும லிளைப்பு குத்து
வயிற்றுப் பொருமல் விரைச்சல் புளித்தேப்ப
மருவருப்பு வாய்வு வறுமை யனல் மந்தம்
வயிற்றுவலி மேயவிஷபாண்டு விஷபாகம்
நோய்மலசலக்கட் டுள்ளதெல்லாம் மாற்றமருந்
தாமென்றுலகில் முனிசொன்னு ருகந்து (?)

சூரியகாந்த பற்பம்

கடுபலே வகைக்குமூன்று காந்தமேழ் கெந்திபேழு
வடுவுறு காயங்காரம் வகைக்கு நான்கேழுபாள
மிடற்றப்பொடித்து நெய்தேனிஞ்சி யிலிடநற்பேதி
துடர்வலி விக்கல் குன்மம் சூரியகாந்தந் தீர்க்கும்.

சிந்தாமணி பற்பம்

ஆதியானருளா லவுஷதத்தை நூல்முறையா
யோது சிந்தாமணி பற்பமுரைக்கக்கேள்—நீதியுள்ள
பாளமொடு சூதம்பல கரை வெண்காரந்
தாளக மாங்காந்தம் நல்ல சாதிலிங்கம்—கேளுமடல்
துத்தந் திரிகடுகு தூயவப்பு ரேகமுடன்
தீரமஞ்சேசிலே கிமிளை நாவியுடன்—வித்தார (?)
அஞ்சனக்கல் காஞ்சிரையாக மருந்தனைத்தும்
தஞ்சமறவே நிறுத்துச் சரிகழஞ்சாய்ச்—செஞ்சொல்முறை
தப்பாது குழிக்கல்லில் தானிட்டுப் பொடிசெய்து
ஒப்பாக மருந்தனைத்தும் ஒன்றுபடச்—செப்பமுடன்
கறுக்குமளவும் கைவிடாமலே பொடித்து
மறுத்தஞ்சு வெற்றிலையால் வளர்தொன்னை—சுறுக்காகத்
தைத்ததொன்னை தன்னில் மருந்தனைத்தும்
வைத்து மறுபடிவாய் தைத்து—உற்றதோ
ரடுப்பிலே சட்டி வைத்து அதன் கீழ் விளக்கேற்றி
கடுப்பாக அனல் பிறந்து காய்ந்ததென்றால்—நடுச்சட்டி
தன்னிலே தொன்னைவைத்துத் தான் சிவந்தால் பிரட்டிவைத்து
வன்னயிலே கருக வருத் ததின்பின்—தன்னிலே

இலேக்கரியு மத்துள் இருந்த மருந்து மொன்றாய்
துலக்கமறவே பொடித்துத் தூளாக்கி—பிலத்தமொரு
பாணிதனி லடைத்துப் பகருமிஞ்சிச் சாறுதனில்
கரையுமொரு குன்றியெடை கருத்துடனே—விரைவாகச்
சன்னி பதின்மூன்றும் தாபசுரம் நாள்மாறல்
மன்னும் கிராணி சளிவாத சுரம்—முன்னுள்ள
அத்தியினில் சுரமும் அதிசாரமுந் தாப
முற்றிப் பாதவிப்பு உழலையுடன்—பித்தமிரும
லசதிசுரம் வேர்வை யகலுமே யிம்மருந்தின்
திசைகேட்க நோயனைத்தும் தீருமே—சசிபுனையு
மாதியார் தம்மாணை யவுஷதத்தை யாராய்ந்து
மாசிந்தா மணிபற்பம் செய்வாய் மகிழ்ந்து

மகா கற்பூரம்

தூய்ய யிரதம் பலமொன்று தூரு கனத்த பாண்டமதில்
நீதா னிறைய யுப்பிட்டு நேரே நடுவில் குழியாக்கிச்
செய்யா குகைக்குள் ளிரதமிடுஞ் சிதற விடாமல் சுத்திபண்ணி
மாயன் மருகன்ற னைத்துதித்து வடவாயதிலே குகைபதிசெய். 1

செய்வா யக்கினி மூலம்பலஞ் சேர்த்தே
புண்ணறவச் சாரறை குகையா
மெய்தான் வீரன் சாம்பிராணி விஷமே சூடன
வின் வகைக்கோர் கழஞ்சாய்
மையா யறைத்துக் குகைக்குள் வைத்து
மறுமதில் ரசம்விடுமூடி
தூய சட்டிதன்னில் கரிப்பான் சாறது
வளை யிருபுறம்விடு மூடே. (?) 2

தடவிச் சீலை ஏழுமண்செய் சாம மாறு தழலெறித்து
வடவா யாறவிட் டதனையதுங்கா தெடுத்து வழித்ததனை
யுடனே குன்மம் வயிற்றுவலி யூதுங் கிரந்தி பவுந்திரங்கள்
திடமாய்த் தீரும் பணவெ டைதான் செய்வீர் கதலி
[கிருதமதில். 3

கொள்ளா யுப்புப் புளிதவிர்த்துக் கூட்டு முருங்கை துவரையுமா
முள்ளே தாவி விட்டுதென்று னுறுபால் கஞ்சி யதுகொண்டு
கள்ளங் களா வெந்நீரில் கருதிப் பத்து நாட்குளிப்பீர்
மெள்ளச் சித்தா மணக்கெண்ணெய் மீளுக தீரும் வியாதி
[யெல்லாம். 4

தாம்பிர பற்பம்

சுற்பந் தூளேதுவா நிட்கந்துய்யதிரி புடைரசஞ்சதுகுடுவமுடன்
கற்பஞ் சுவறப் பொடியதனைக் கலந்தே வத்திக் குடுவமதா
யற்பக் கந்தக மெண்கழஞ்சு அடுக்கரி தார மிருமூன்று
சொற்பஞ் சூத மிருகழஞ்சு சொன்னேன் கல்வ மதில்
[சேர்த்தரைத்தே. 1

அரைத்தே பதத்தில் குகைக்குளிட்டு மூடி
யழகாக யேழுமண் செய்தங்
குரைப்பாம் குக்குட புடமதனி லுடனே
யெடுபொடியொரு சாமங்
கரைப்பாம் வாழைப் பழத்தோடொரு மாக்
கலந்தே விழுங்கக் குணமாமே. (?) 2

குணமாம் கவிசை நீராமை
குத்து யெகுத்து அட்டகுன்மஞ்
சணமே வ்லிக்கு மிவைகளெல்லாஞ்
சாந்தத் தாம்பிரக் களங்கமிதை
மணமா யுப்பு மிகக்கூட்டி
மயக்குங் கசப்புப் புளிதவிரக்
குணமே யாகுங் குருவறியக்
கூடிப் பதமாய்க் கொடுப்பீரே. 3

பாம்பகரேச மண்டூரம்

தேகரா சந்தலை பொடுதிறியத் துணுக்கு நிற்குண்டி
காகமாஞ்சி குரூடகமு முடக்க விரமுரி முரிவச் சிரவல்லி
சாகி நீராவு நீரல்ல நீர்சம்பிரநீர் வகைக்குவகை குடுவம்
வெக் குலசுண மண்டூரம் வினவில் நீலநிறங் கந்துவாதேசமே. 1
தேசநிற் கஞ்சுபுகம் லோகஞ் சதுநிற்கந் திரிபலை கடுதூளி
சவித்தியல் பாத்திரத்தி லெரியிட் டுலர்த்தி வெருகடி மதுவினில்
பேசிலெய்ப் பிளைப்புக் காமாலை பொரும விருமல் பாண்டுருவும்
[போம்
பசிமிக் கதுவாம் தாதுவுண்டாம் பாம்பகரேச மண்டூரமிதே. (?) 2

தாம்பிரக் குரு

தாம்பிரத்தைச் சுட்டுத் தவள நிறமாக
வாம்படியே வீரமிட்டு வெள்ளையிட்டு—வேண்டுஞ்

சமன்சூத மிட்டுக் கொள்ளையிட்ட . . . . .
. . . . . பற்பம் குரு.

பூலோக பற்பம்

பூலோகங் காந்தம் பொன்னிமிளை
பொரிகாரஞ் சங்குமுடி தாரந்துத்தம்
வேலோ லவணம் பஞ்சகம் சாதிலிங்கம்
வெள்ளையப் பிரகம் தங்கமுடன்
சாலோரெடை மருதந்தோல்
சாற்றுலரை யொருநாள் முழுங்
காலோரளவு புடம்போடு
கடிதாய்ப் பொடியொரு சாமங்கழியி லடை. 1

அடைத் தேயிச்சங்கந் தேனதனி
லளவேகா செடை கொள்வீரா
லுடைத்தே யெடு நீரடைப்புடனே
சவ்வடை மாங்கிஷமும்
புடைத்த தாரைப் புத்தடைப்பன்
பொருமல் தணியாப் பாளையுடன்
படைத்த மேனிநிறங் கேட்டிரு மேக
பாரவாரம் நீரடைப்புக் கடுப்புடன்
சடைக்க வேண்டாம் இம்மருந்த தனல்
தப்பா தொழியும் சிவன் சொற்படியே. 2

அரிதார பற்பம்

பொன்னரி தாரம்தன்னை பொருந்தவே தகர்த்துக்கட்டி
மின்னிய சுண்ணும்புள்ளே வைத்துநீர் விட்டுவெந்து
இன்னிவை ஈர்வெங்காய மிடித்ததில் காடிவிட்டுச்
சொன்னரி தாரந்தன்னைத் துவப்பறக் காச்சிக்கொள்ளே. 1

கொடிவேலி வேரிற்சுத்தி கோதறு புளியில்சுத்தி
கொள்ளுபூ சனிக்காய்சுத்திக் கொடிதரி தாரந்தன்னைக்
கடுக்காய்கற் றுழைநீரி லடகுவை யம்மிதன்னி
லரைத்தடை பிடித்துலர்த்தே (?). 2

உலர்ந்தபின் புரசாசு உற்றகொடி வேலியெல்லாம்
நலம்பெறச் சுட்டசாம்பல் ஒரொன்று நாழிகூட்டிக்
கலந்தொரு சட்டிதன்னில் கையிணு லமுக்கிச் செம்பி
யலகுமூ மத்திலை கீழ்மேலடையது வைத்துமூட்டே. 3

மூடியபின் சாம்பலெல்லா முதரவே யமுக்கிச் செம்பி
நாடியே யாறுசாமம் நலம்பெற வெந்தபின்பு
ஓடியே விரைந்தெடுத்து வுகந்ததோர் சிமிழிலிட்டுக்
கூடியே பற்பந்தானுங் குலாவியே தேனில்கொள்ளே. 4

கொண்டிடும் பத்துநாளாய் குடித்திடும் பணத்துக்கொப்பாய்
கடுத்தகுத் தெரிப்புச்சூலை கனத்துடல் வாதைவீக்க
மெடுத்திடு மண்டைச்சூலை யெரிப்புடன் பறங்கிப் புண்கள்
தொடுத்திடும் பித்தகாசம் துரத்திய யிருமலீளை. 5

ஈண்டுமந் தாரகாச மிளைப்புடன் வாதகாசம்
பாண்டுரு சோகை வரட்சை பகருள மாந்தையோடு
மாண்டிடும் வியாதியெல்லாம் மருந்துதப் பாமல்கொள்ளில்
வேண்டிடும் பாலும் சோறும் விரைந்திரு பதுநாள்தானே. 6

கிரந்தி சூலைக்கு

உந்துதற் காலமு வந்துநற் சத்தி
வந்தபிரணவம் வன்னிதி யாகரி
கந்தமர் கொட்டம் கனகன மோதகம்
சந்தியில் விந்து தானுமஞ் சாடியே. 1

அரைப்புனல் சாமம் ஆதித் தனிற்புடம்
விரவித் தேனுண்ண கிரந்தியும் வீக்கமும்
புரையுத்த சூலையும் புண்புரை மண்டைநோய்
யெரிவுற்ற சூரையுங் குன்மமு மேகுமே. 2

தேங்காய் நெய்

தேங்காய் திருகி நன்றாகத் திறமா யந்தப் பாலெடுத்துப்
பாங்காய்ப் பிரமி யிலைச்சாறும் பரிவா முள்ளித் தான்கூட்டி
நீங்கா ததனை யடுப்பேற்றி நெய்யே பிறக்கத் தானெடுத்துத்
தாங்கா தளந்துட் கொள்ளில் தரியா தந்தக் குன்மமுமே. 1

பூர்ண சந்திரோதயம்

தங்கமது ரேக்காய்ச் சமைந்தால் பதின்கழஞ்சு
துங்கரச மவ்விடையே சுத்திசெய்தா—லிங்கிதனை
நன்றாகத் தேர்ந்தெடுத்தால் நல்லகெந்தி சுத்திசெய்து
ஒன்றாய்ப் பதின்கழஞ்சு தொக்கவைத்து—குன்றாத
செம்பரத்தம் பூச்சாற்றில் சேரவொரு நாளரைத்தால்

'பண்புபெருங் கற்றுழம்பா லொருநாள்—சொம்புபெறத்
தானரைத்துக் காய்ந்தபொடி தன்னையொரு குப்பியரை
யானதுமட்டாகவு மிட்டானதற்பின்—ஈனமில்லா
மாக்கல்லு நீண்டவடிவா யுரைத்துக் குப்பியின்வாய்த்
தாக்கமுடனே பொருந்தத்தானடைத்தால்—தேக்குபனே
வெல்ல மரீதகியு மிக்க நல்லவெற்றிலைமாக்
கல்லிவை நான்கோரிடையாய்க் கண்டரைத்து—மெல்லியதோர்
சீலைதனிலூட்டி வலுசிக்கான வாய்க்குப்பி
மேலுளது வாய்க்கவிளங்கு மேகைபெறச்—சாலவே
ஏழடுக்குச் சத்துமிடை விடாதே பொருந்தக்
கோழையறச் சுத்தியபின் கூறுதல்கேள்—தாளி
யடிக் கனத்ததாய் யீராபடி கொள்ளும்படிக்
கெடுத்துலங்கதனுளப் பண்பாய்—வடிப்பமுள
நல்லமணல்தன்னை நான்கு விரற்கிடைபோட்
டல்லலறக் குப்பியத னுள்வைத்து—தொல்லையறப்
பானை நிறம்பமணல் பண்பாகவே செலுத்தித்
தானமுறப்பானையின் வாய்சட்டிகொண்டு—யீனமற
மூடியே சீலைமண்ணு மூன்றுசெய்தால் பின்பு செய்யத்
தோடலவுமைங்கரனுக்கேற்கை பெறத்—தேடுமவ
லப்பம் பொரிபயரோடான பழந்தேங்காயுந்
தற்பரர்க்குச் சர்க்கரையும்—மெய்ப்பிலைடைக்
காய் வெள்ளிலையு நற்கரும்புடனே தட்சணையுந்
தோயவெண் கற்பூர தீபதூபமு மன்—பாய் வேழமுன்வைத்து
வேற்றியபின் வாலுதாயெந்திரமென
மேய்த்திடு மடுப்பதனின் மீதுவைத்து—மொய்த்தலவு
தீபாக்கினியாய் சிறந்தகம லாக்கினியாய்
கோபாக்கினியாய் குறையாம—லே பதமாய்
பன்னிரண்டு சாமம் பதருதெரித்தாறில்
முன்னுள்ள விநயகர் முன்பிறக்கி—யன்னவர்க்கு
மின்பமாய் நைவேத்தியமு முன்போலச் செய்தெடுத்தே
யன்புபெறக் குப்பிதகத்த மருந்தில்—சோம்பு பச்சைக்
கற்பூரம் எண்கழஞ்சு கட்டான சாதிக்காய்
நற்பாக நாற்கழஞ்சு நன்மையாயச்—சொற்கேள்
கிராம்பதுவு முக்கழஞ்சு ஒன்றாகப் பொடித்தொக்க
காம்புபெறு மீறல் களிப்பாணிமே.........—அன்பு பெறத்

தானடைந்தே யந்தி சந்தி தக்கவனுபானமதில்
ஆனபணவெடை கொண்டானுடனே—மானனையீர்
கோழை யிருமல் குவளையிளைப்பசதி
யிளைசயரோக மீரலெரிவு தாகமுத—லுழலை சுரஞ்
சன்னி வலியுள்வீச்சு மேகமுடலெரிவுமெய்......
சோகை பலவாத கப பித்த மயக்கம்
தீயபிரமை சீதங்குளிரளைவு சீழுலை (?)
மோது மதிசாரங்களை மாந்தஞ்சத்தி
.........வெகுநீரழிவுளரோகம் நீர்க்கடுப்புப் பார
வயிற்றுக்கடுப்பு மணிவாயினிற் புண்மேனி
யயத்துதலை யின்னேயுமற்று—நயத் துடனே
தேகமது காந்தியாய் தீபனமு முண்டாகும்
ஆகயிசை தாதுவனுவாகியே—நீதிபெறு
கண்ணொளிவும் உண்டாமங்காதியழகு முண்டாகும்
எண்ணதனின் வேவு முதற்போகுமே—யெண்ணரிய
பூரணச்சந்தி ரோதயத்தைப் பூமியில் தெய்வீகமெனக்
காரணவர் சொன்ன கருத்து.

அக்கினிகுமாரன் செந்தூரம்

ஆதிவே லக்கினி குமார செந்தூரமதை
வேழமுகன் தமிழதனால் விளம்பினர்—பாரதனில்
சூதமிவை கந்தகந் தூயசெம்பு லோகமீய
மது வைந்துமெடை கழஞ்சுயன்—பதுவாயாயவே
மிச்சங்கனி குமரிவே லம்பட்டைச் சாறுவின் மோ (?)
ராவ் வொன்று மூன் றுநா ளுள்ளரைத்து—மெள்ளநவ
பாண்டமதிலே வழித் தெருக்கம்பால் கெகிழவே பிசிரி
மீண்டு மதை நான்குநாள் வெயிலுலர்த்தி—வேண்டுமதைக்
கந்தக மரிதாரம் நாபிதுருசுடனே
வந்ததுத்தம் வெண்காரம் வகைக்கு வகை—முக்கழஞ்சா (?)
மந்தமுள்ள வெள்ளை யொருகழஞ்சு வெவ்வேறு
சுத்திசெய்து கல்வமதில் சேர்த்ததனை கரிப்பானதின்—சாற்றால்
நையவேயரைத்து உலர்த்தியே பொடியத்தனையும்
பையவிரவியிட முன்மருந்தில் வேணுமே—செய்யாயச்
சட்டிகொண்டு மூடித்தானதனைச் சீலைமண்செய்
கெட்டிபெற வைங்கரனைக் கிட்டவைத்துத்—திட்டமாய்
முப்பது நாழிகை முழுதுங்களல் போ

டப்போதே செந்தூர மதுதானு—மிப்போதே
தானெடுத்தே யெருக்கம்பாலதனிலரைத்தே நெகிழப்பிசறி முன்
யேனம் போலச் செய்தோன் றரைநா ளெரியிடவே—மானனையீர்
ஆறவிட்டுத் தானெடுக்கி லரைப்பு நிறமாயிருக்கு
மீறிலக்கழிதனிலே யெடுத்தடைத்து—நோயறுநா
ளிஞ்சி தேன் தன்னிலிடு வீரரைப் பணவெடைதான்
வஞ்சமறுமட்ட குன்ம மாறுமே—மிஞ்சுகின்ற
பயித்தியத்தில் நாற்பதுவும் பாரப் பிரமைகளும்
அடுத்துவரும் சன்னி யயர்ச்சிசுரம்—தொடுத்துவரு
மேலேறுவாயுவது மீளுமே மிகுந்தபசி
யெடுக்குநாள் தோறுங் குத்துவலி—நாடாது
கோடானகோடி வியாதியெலாங் குலைகுலைந்துபோ மெனவே
நாடறியச் சொன்னோம் நயந்து.

ரச செந்தூரம்

எண்மூன்று விந்து யிருமூன்று சத்தி
மண்மே லளந்தான் மனைமூன்று பாதங்
கண்ணன பெண்ணேழு கனலாய்க் கலந்துகொள்
முன்னு ளிறத்தா னதனோடுங் கூட்டே. 1

கூட்டியே கங்கைக் குலவிக் குடிபுக
வீட்டைப் பிலப்பித்து யிருத்தி வெண்டானை
பூட்டிய வாலுகா யெந்திரம் பூரித்துக்
காட்டிடுந் தீபங் கனலொரு சாமமே. 2

சாம மிரண்டிலச் சத்தழல் பூவெரி
யாமதன் வாயோட்டைத் தாணியி லிட்டெடு
வேமக் கனல்புகை வெந்து வெளிப்படில்
தூமக் கனலெழும் சோதிசெந் தூரமே. 3

வாதபித்த சிலேற்பன பிரமேக மோக விஷசுரம் வால
சூதவுதர வருத்தம் சீதமக்கினி மாந்தியம்—தாதுவத்தினை
பாண்டு காமாலை குன்ம மூலகுதஞ்சுரஞ் சந்துசூலங்குட்ட
மாம்பதினெட்டுஞ் சன்னி சுவாசமும் பாத—ரோகங்
கிரந்திப்புண் பலதோஷரோக நிவாரணம்பட்டீர்
குங்குமக் கொங்கை மாதர்கள் சங்கமஞ்சுக—யிங்கித

சூத சுத்த செந்தூர முக்கிய குணமதாகில் மருந்திடில்
தங்கவானுதல் திலதமேயிட மங்கை மாதர்கள் வசியமே. (?)

காந்த செந்தூரம்

அரப்பொடி யைங்கழஞ்சு யவ்வெடை யூசிக் காந்தம்
மருவிய கந்தக மைந்து வருஞ்சூத மைந்துங் கூட்டி
மருவுறப் பொடிய தாக்கி நன்றதாய்ச் சட்டி யிட்டு
விரிவிடாச் சட்டிமூடி வெந்திடாய் நாலு சாமம். 1

வெந்தவை மருந்து தானும் வெண்பணத் தெடையே வாங்கி
வந்தவ மிளகிந் துப்பு மருவிய சுக்குவோம
முந்திய நற்சீரக முதுகடு கொக்கக் கொண்டு
வந்தவம் மருந்திேேட யடவுடன் கூட்டிக்கொள்ளே. 2

கொள்ளவே காந்த பற்பம் குலவி வெருகடியத
னுள்ளே மெண் பணவெடையே சேர்த்து கொள்ள
வுள்ளே நின்ற வயிற்றுவலி யுதரத் துறையுமுள் மூலம்
உள்ளே யெரிவு குன்மமுடனே பெரியவத் தருமை பீலிகையும்
கள்ளப் பாண்டு வயிற்றிலுள்ள கிராணி யிரைச்சல் காணுதே. 3

வீக்கம் கழிச்சல் மிகுசலங்கள் மிகுத்த யிளை காமாலை
போக்கும் வாயு வாதத்தைக் (?)
காற்குங் குளுப்பை பெருவயிறு கிராணி மூல மத்தருமை
தாக்கும் காந்த செந்தூரந் தன்று லின்றோய் போய்விடுமே.(?) 4

இரதசெந்தூரம்

முன்னே சொன்றோ மிரதசெந்தூர
மின்னால் விதியேயியம் பக்கேள்—பன்னாலும்
பார்த்து நன்றாய்ச் சுத்தி செய்த பைம்பொன்ரச மூன்றுபல
மாத்தியுடன் சுத்தி செய்த வகை மூன்றுஞ்—சாற்றினைக்கேள்
கற்றாழம்பால் கடுக்காய் ரசம்பட்டை
கூத்தன் குதம்பை செம்முள்ளி—யித்தையெல்லாம்
ஒவ்வொன்றுறை சாறு ஒரு நாளே விட்டரைத்துச்
செவ்வையாகக் குப்பிதனில் செலுத்திக்—கவ்வவெப்பி
மூன்று பாலுஞ் சேரா யரைத்துச் சீலை
மண் செய்தவன்று வீரா (?)
யுலரவைத்துப் பாண்ட மதிலுற்ற மணல் நால் விரற்குத்
தலமாகக் குப்பிதனை வைத்துப்—பிலமாகக்

தழுத்துமட்டு மென்மணலைக் கனக்கக்கு வித்துப் பிறகு
வழுத்துவேன் தீயெரிக்க வன்மையாய்ப்—பழுக்கவே
தீபாக்கினி யுஞ்சிறந்தகம லாக்கினியுஞ்
சாவமாயிரண்டு சாமமெரித்துச்—சோபமா
யிருபத் தொரு சாமமெரிக்குங் காடாக்கினியாம்
பருவத்திலே யெரித்துப் பானையுள்ளே—யுருவக்
கற்றாழஞ்சாறு பொட்டணங் கட்டியே
குப்பிதனி லொத்திலொத்தி யெரிக்கி லுாறு—குப்பிவிட்டு
வெடித்து நாற்ற மெடுத்தால் வேறு குப்பியி
லடைத்தபடி தப்பாமல் பண்டு போல் வைத்துக்—கடுத்தே
யெரித் தசாமம் போக யின்னமுள்ள சாமந் தீ
யெரித்துக் கணபதியை வந்தித்துத்—திருத்தமா
யாறவிட்டுத் தானெடுக்கி லாலம் பழம்போலச்
சில முடனிருக்கில் செப்பிலிட்டு—ஞாலத்தில்
வாத பித்த சிலேற்பனந்தால் வந்தபிணி யத்தனைக்கும்
பேதமுறு மனுபானம் பிறித்தெடுத்துச்—சூதமதை
மஞ்சாடி யீந்தால் வன்பிணி யத்தனையும்
அஞ்சாமல் தீருமதுண்மை.

சலக்கழிச்சலுக்குச் செந்தூரம்

இரதமாஞ் சாதிலிங்க மிதமோடு மனோசிலையு
முரமொடு வகைதனக்கு வொன்றரைக் கழஞ்சு வொன்றித்துத்
தரமொடு வூமத்தஞ் சாறுமே மணத்தக் காளி
சுரசமரைப் பொன்றக்குத் துலங்கு கடிகை பதினஞ்சே. 1

அஞ்சாமல் பிறழாம லழுத்தி மத்தித்து
எஞ்சாமல் சீனக் குப்பியிலொன்றித்து மெழுசீலை செய்து
தொஞ்ச மணலிட்டு வைத்தெரிப்புத் தொண்ணுாறு நாழிகையே
இது சிவந்திருக்குஞ் சர்வசலக் கழிச்சலுக்குமாம். 2

அரிதார செந்தூரம்

முன்னாள் விதியின் முறையே யரிதாரம்
தன்னையே வைத்தெடுக்கும் தன்மைகேள்—வெள்ளமுறுந்
தாபத்தில் வெந்தது தன்மேல் பொருக் கெடுத்துத்
தீபத்தில் சுட்டுத் திருநீறாக்கித்—தாபமாய்த்
தண்ணீரோடே குழைத்துத் தன்னைத் திரட்டித் திரட்டியது
நண்ணில் குளித்து நடுவே தாரங்—கண்ணுதலே

வைத்தழுத்தி மூடி மாங்காய் போலே திரட்டி
யுத்த சட்டி சாம்பல் நடுவுள் ளமைத்து—வைத்தபின்பு
சட்டியின்மேல் சட்டிவைத்து சந்து வாய் மண் செய்து
வெட்டியதோர் அடுப்பின்மேல் வைத்துப்—பார்த்தெடுக்கச்
செந்தூரம் பருமணிபோலே வுருகிக் கூர்த்துச்சி
வந்து கோவைக்கனி போலெடுத்து—நன்றாய்ச்
செப்பிலே வைத்திருந்து செகத்திலுள்ள மானிடர்க்குத்
தப்பாதனு பானந்தான் கண்டே—யற்புதமாய்
செய்யவல் லீராமாகில் தீருங் கைகால் முடக்குப்
பைபவரும் சூலை பலவாதம்—வெய்யசன்னி
சயரோகந் தறுகாதயீளைவலி வன்னியெனத்
துள்ளிவினை வாராதுயின் னிலத்தில்
வேதமுனி நண்பாகச் சொன்னார் நயந்து.

லோக செந்தூரம்

நாறு கரந்தை தனையிடித்து நவில்வெண் சாறு நாழி
சீறு முருக்கி னுளியெடுத்துத் தீப்போல் காய்ச்சி யதில்தோய்த்து
வேறு வேறாய் சிறாய்விழுந்தால் விதமாயப் பங்கம் பானீ
ராறு மிரதஞ் சரிவிட்டு அரைத்தே சில்லுப் பிடித்துலர்த்தே. 1

அரைக்கும் நாளு மூன்றாக வமைந்த சில்லைக் குகையிலிட்டு
பெருக்க வேழு மண்செய்து பெரிய கோழிப் புடமிட்டு
வருத்த மாக எடுத்து நன்றாய் சிமிழில் தானடைத் துத்தேனில்
திருத்த மாகக் கொடுப்பீரால் சலக்க ழிச்சல் தீர்ந்திடுமே. 2

அப்பிரகச் செந்தூரம்

அப்பிரேகச் செந்தூரத் தடவுதன்னைக் கேள்மின்னே செப்பு
மப்பிரேக வெண்ணெய் பலஞ்சேர்ந்த ரசமவ்வளவே
வெப்பியரைக்க யாலம் பால்வேண்டு நாலுசாமந்தான்
தப்பி வழித்துக் குப்பிதனிலே யிட்டு மண்ணெழு
நற்பாம் பானையிரு விரற்கு நாடிக் குப்பிமேல் மண்ணே. 1

மண்மேல் சட்டி தனைக்கவிழ்த்து வகையாய்ச் சீலை மண்செய்து
யெண்ணுஞ் சாம மீராறு யெரித்தே யெடுத்துத் தேனிலிட
வுண்ணலாஞ் சூலை குன்மமோடு கிராணி மகோதரமுந்
தண்ணுவாஞ் சன்னி பித்தந்தறுகாச் சேற்பனந் தீருமிதே. 2

அப்பிரகச் செந்தூரம் வேறு

அப்பிரேகந் தன்னை வெண்ணெயாகவே பண்ணிப் பின்னை
யொப்புடன் பலம் நிறுத்துவுற்ற முள்ளங்கியிஞ்சி
வெப்புறு கொழுஞ்சி யால்விளங்கு தாழைவிழுதுடனே
யொப்பமாகக் கறனை சாரணைகாணி குட்டித் தக்காளிதானே. 1

தானமான பச்சிலையுந் தானுங்கோட்டான் கரந்தையுடன்
வானயுவாப் பட்டை பிரண்டை வாய்த்த பிழிந்த சாற்றில்
யீனவரைக்கும் வகை ஓரோர்நாள் புடம் போட்டெடுக்க
வுள்ளில் வந்த சலக்கழிச்சல் ஒருமாதங் கொள்ளத் தீர்ந்
[திடுமே. 2

காரீய செந்தூரம்

காரீயந் தன்னைச் சட்டி யிலிட்டுக் கனக்கவுருக்கித்
துத்திவேர்த் தோலொரு பிடிபோட்டு வெந்தால்
பாரிலாவாரை சென்னுயுருவி (?)
வாரீ ரிண்டு மொரு பிடியை மறுகயிடித்துக் கொஞ்சமதாய்
வேரிதனைப் போட்டு வேகவேக யிரும்பால் வறுப்பாயே. 1

வறுத்துச் சிவந்தா லதையெடுத்து மருதம் பட்டைச்சாற்றரைத்து
யிறுக்கிச் சாம மீராறுய் யெரித்து வறுத்து எடுத்துவையே
நிறுத்த காந்தம் பலமாகும் நினவா யிரத மரைப்பலமே
யறுக்கு மருதம் பட்டைதனி லந்த விரண்டு மருந்தரையே. 2

அரைத்துச் சாமம் பிறகெடுத்து வான மருதம் பட்டைதனை
யரைக்குஞ் சாரீருறு படிக்கு மருந்திற் றீயெரித்து
வரைக்குஞ் சாறு வற்றினல் வறுக்குஞ் சாமம் பனிரண்டா
முரைக்கு மருந்து வேறுவைத்து வொக்கக் கூட்டும்
[வகைகேளே. 3

ஒக்க முன்வைத்த காரீய மொத்த காந்த செந்தூரம்
வைக்கும் லிங்க மிவைமூன்று மதியே சதியாய் நீர்கூட்டிச்
சிக்க வரைத்துச் சேகரித்துச் சிமிழி லடைத்து ஆவரையில்
மிக்கக் கொடுக்கச் சலக்கழிச்சல் யிருபதும் போய்விடுமே. 4

சண்டமாருத செந்தூரம்

சண்டமா ருதசெந் தூரமதைத் தயவாய்ச் சொல்லு மருந்துகேள்
கொண்ட சூத மூன்று பலங் கொடிய செங்கல் மஞ்சளினு
முண்டப் படிமக் கொடி வேலி முதிய சாறணை வேரிலையுந்
துண்டப் படவே வெவ்வேறு சுத்தி தனியாய்ச் செய்வீரே. 1

செய்வீர் கெந்தக மூன்றுபலம் சேர்ந்த கலச மதுக்குள்ளே
நய்யா யாவின் பாலுடனே நல்ல வாழைத் தண்டதனீர்
மெய்யா விட்டு வதின்மேலே வேடு கட்டுங் கம்பளிமே
லுய்யா மருந்தை யதில்வைத்து வோட்ட மேலிடு கம்பளியே. 2

சட்டியின் மேலே தழலையிட்டு தரையில் புதைத்து யிருக்கயிலே
யிட்ட மருந்து தானுருகி யிருக்கும் கலசப் பாலதனில்
வட்டா யிருந்த மருந்தெடுத்து வளரு மிரதந் தானொக்கக்
கட்டா யக்குழி கல்லில்விட்டுக் காறிக் குமரிச் சாற்றரையே. 3

அரையாய் சாமம் நாலரைத்து வான கூத்தன் சாறதனால்
விரையச் சாமம் நாலரைத்துக் கணக்கின் படிநாள்
மூன்றுமே. (?) 4

ஆமே செம்முள்ளி நாள்மூன்று மரைத்து நிழலி லுலரவைத்துத்
தாமே பொடியாய் வைத்ததன்பின் தனுகாக் குப்பி யிரண்டதிலே
வேமே யுமியுங் கரியும் வெள்ளைக் கல்லும் புத்தோடும் . . . ,
ஓமே கடுக்காய் பச்சைமண்ணு மொக்க வரைப்பீர் சாந்
[தெனவே. 5

சாந்தா யரைத்துச் சீலையிலே தடவி . . . .
. ந்தா யரைத்த மருந்தோர் குப்பி நிறைமூக் காலுள்ளிட்டு
. . . . நீற்றுய்வாயக்கு டடைத்துநீயடைமண்ணி
நீந்தார் கடுக்காய் களிப்பாக்கு இருப்புக் கிட்ட முப்பதுவே. 6

உப்பாய் வெள்ளைக் கல்லுடனே உகந்த குளங்கூடவுஞ்
செப்பாம் பொன்னின் மெழுகுடனே சேர்ந்த கருவேலம்
[பிசினும்
வெப்பாம் வேலஞ் சுண்ணும்பு வேண்டு முட்டைக் கருமஞ்சள்
ஒப்பாந் தேசிக் கனிச்சாற்று லுகந்து வரைத்து வாய்மூடே. 7

மூடக் குப்பி வாயடைத்து முகிந்தால் வியாழக் கிழமையன்று
நாடே பாலில் பொங்கலிட்டு நல்ல யோகி தபசிகளை
தேடே தேடிக் கூட்டிவந்து திகட்ட வமுது தான்கொடுத்து
வீடே புதுக்கித் தரைமெழுகி விநயக பூசை தனைப்பண்ணே. 8

பண்ணு மர்ச்சனை சிவந்தபுஷ்பம் பாங்கா மந்திரம் கிறீயும்
. . . . நாடுகெங் கணபதி நமாவென்று இலீயும்
எண்ணு முருவு மூவெட்டு யேற்றிப் போற்றி யிறைஞ்சியபின்
கண்ணு மனமும் நினைவாகக் கருத்தா யொட்டி யடுப்பிடே. 9

இட்டதன் மேல்தான் வைத்து இதற்கு நாலுவிரல் மணலையிட்டு
வொட்டேயதன் மேற்குப்பிவைத்து உகந்து கழுத்து மட்டள
[வாய்க்
கொட்டோ மணலைக் கொட்டியபின் குருவின் பாதந்தனைப்
[போற்றி
மட்டேதீ பாக்கினியொரு சாமம் வளர்கம லாக்கினி
[ரண்டாமே. 10

ரெண்டீர் பத்தொருச் சாமம் இக்கா மிருபத்தொரு சாமங்
கண்டீர் கடுங்கா டாக்கினியைக் கடுக வெரிக்கும் போததனில்
விண்டீர் குப்பு பொங்கிலோர் விரையக் குமரிச்சாறணை
மண்டீர் சீலைதனில் தோய்த்துப் பிழிய மாறிடுமே. 11

இடுமேகுப்பி சோர்வாகி லெடுத்த மருந்தை முன்சொன்ன
. . . . குணமாய்ச் செய்து கொண்டபின்பு
தொடுமடுப்பின் மேலேற்றி முன்சொன்ன சாமங்குறை யதனை
அடுமே யெரித்துத் தாணிறக்கி யாற விட்டுப் பார்ப்பீரே. 12

பார்க்கி லிதுவாஞ் செந்தூரமாம் பருக முருக்கம் பூநிறமாய்
சேர்க்குஞ் செம்புச் சிமிழ்தனிலே திறமா யடைத்துக் கொண்ட
[தனை
யாற்க வருநோ யாளருக்கு அன்பாய்ப் பணத்தி னிடையெடுத்துத்
தீர்க்க மான திரிகடுகு தேனி லுடனே கொடுப்பீரே. 13

கொடுக்க வாய்வு குன்மங்கள் குலையுஞ் சூலை முகவாதம்
அடுக்கத் திப்பிலி சீனப்பா அதுவுந் தேனில் கொடுத்திடுகில்
கடுப்புத் தீராப் புண்தீரும் கடிய விசங்கஞ் சாற்றிவிட
ஒடுக்குஞ் சுரத்தி னுளமாந்தை உற்ற நோய்க ளுடனி
[ளைப்பே. 14

இளைக்கு மாவோத் தேனிலிட வெலும்பு முறிக லடிபடுதல்
துளைக்குந் தொண்டைப் புத்ததுவுந் தோன்றும புண்ணு
[மரிகுரலும்
புளைக்கும் நாக்குப் புண்தடிப்பு பெருங்கிரந்தி வாய்ப்புண்போ
முளைக்கு முட்டைத் தயிலத்தில் முறையா யிட்டு முகத்தி
[லிடே. 15

இடவே முகத்தில் வாதம்போ மெங்கா யுள்ளித் தயிலத்தி
லடவே கொடுக்கச் சன்னியெல்லா மகலுங் கொம்மட்டித்
[தண்ணீரில்

கெடவே கர்ப்ப விப்புருதி கிளருங் கல்லு விப்புருதி . . .
. . . . கொல்லுங் குடலில் விப்புருதியுமே. 16

புருதிவறள விப்புருதி . . . . றியெட்டதும்
கருதிய ரசம்பட்டைத் தயிலத்தில் கலந்தே
யிருபது நாள் கொடுக்க மிகுதி (?)
வருமே சலக்கழிச்ச லுடனே யிருபத் தொருநோயும்
பருத்திச் சீரகம் சீனிவெண்ணெய் பருக வதினி லருந்திடுமே. 17

அருந்தீர் பயித்திய மெரிவாத மான வாத மெண்பதுவும் போம்
பொருந்தீர் வேளைச் சாறதனில் புகலு மெலும்புருக்கிக்
[கசரோகம்
வருந்திப் புரசிலை வனமரையில் வளருந் திரைகிரு மியும்போம்
மருந்தே கழுதைக் கோமயம்பால் வளர்வெள் ளாட்டின்
[மலநீரே. 18

நீராம் புலா மதிலிடிலே நிற்கும் பித்த பயித்தியமே
வேராங் கோவைக் கிழங்குலத்தி வெருகடி மருந்து
[கொடுத்திடுகில்
போர மழகு பொற் பிரகாசம் பெருகுந் தாது வர்த்தினையுஞ்
சீராஞ் செருப்படிச் சாற்றிலிடத் திடமாங் குட்டங்
[குறைநோவே. 19

நோவே வண்டு கடிதீரும் நொய்ய புளியி னிலைச்சாற்றில்
தாவே யதனில் தானருந்தத் தக்க சோகை காமாலை
நாவே வரட்சி நயனவலி யாப்பு டைப்புச் சொறி சிரங்கு
சாமே வியாதி யேதேதுஞ் சண்டமா ருதசெந் தூரமிதே. 20

நாகநாதசித்தவங்க செந்தூரம்

வங்க செந்தூரம் வைப்புமுறை யேதென்னில் . . . .
. . . . ஈயம் பத்துப் பலமது பொருந்தக் கொண்டு
வுங்கவே யாவிநீரும் யொச்சமு மொருமுப்புந்
தாங்கியே யொன்றாய்க் கூட்டிச் சாயதை யுருக்கித்தானே. 1

உருக்கியே சாய்க்கச் சுத்தி யிருபது தரமே யாகும்
பருகவே சட்டியிட்டு வெடியுப்புப் பருவமாக
வெருக்கொள சற்றுசற்று வெடியுப்பு நீயிட்டுவெந்தால்
நருகனே ஐங்கழஞ்சு அவினது நடுவாய்ப்போடே. 2

நடுவாமம் மான் பச்சரிசி தோணநாள் ரெண்டிட்டு வெந்தால்
தொடுவமாஞ்சி வந்த நாயுருவி தொடுப்பாய் விட்டால்
வடிவமான முருக்கம்பூப் போலே வந்தவம் மருந்து கொண்டு
கொடுவம் மாந்த சீரகங் கூகைநீறு வகைக்கு மொன்றே. 3

வகையது வாகைவித்து வருமுன்ன முருங்கைவித்துத்
தகையில்லாச் சோகிபூமி சர்க்கரை சமுத்திராவும்
பகையில்லா நிலக்கிழங்கு வகைக்கொரு பதினஞ்சாமே. (?) 4

அஞ்சே யவினும் வில்லைவிரை யாமே வகைக்கோ ரைங்கழஞ்சு
பஞ்சே தேங்காய்ப் பாலிட்டுப் பதர வரைத்து உலர்த்தியபின்
துஞ்ச அமுது சர்க்கரையுந் தொகையே பத்துக் கழஞ்சிட்டு
மிஞ்சிச் சொன்ன மருந்துநிறை விரயச் சீனி சரிகூட்டே. 5

கூட்டி யிதுவே வெருகடியுங் குளுந்த வங்கம் பணவெடையு
மூட்டித் தேனில் குளுமைக்கு உகந்த வுட்டிணம் வெண்ணெயில்
காட்டி நாற்பது நாள்கொள்ள கடிய மேகமிருபதுடன்
வாட்ட மிகுந்த சுக்கிலப் பிரமேகம் பதினெட்டு வகைபோமே. 6

போமே மூத்திரக் கிரிச்சனமும் பிரமேகந் தீரக் கண்டியுடன்
. . . . . உள்ளுருக்கி மிகுத்த எலும்பு தானுருக்கி
தாமே யுட்டின ரோகமது தறுக மூத்திரப் பாளையுடன்
எனவே பித்த மறத்தெட்டுந் தீரும் தாது முண்டாமே. (?) 7

இராச பூபதி

ஆதிவிட்டுணு ராசபூபதியை நீதியாய் வகைக்கு மருந்துகேள்
பேதியாகிப வளர்வங்கம் பிரியக் காந்தமது பற்பஞ்
சாதியாகிய சவுக்காரந் தறுகாலிங் கந்திராச் சிலையாம்
மோதி நாவிநீர் விஷந்தாரமு முத்தக்கார மெவச்சாரமாகுமே. 1

ஆமே லோக முருக்குடனே யான பித்தளை செம்புகலம்
வேமே சத்தி யெவட்சாரம் வேண்டி வகைக்கோர் பலமாகிப்
போமே சூத மிரண்டுபலம் பொருந்து கந்தக மாறுபலந்
தாமே குமரிச் சாறதனால் தறுகாதரைப்பீர் நாள் மூன்றே. 2

மூன்றே யரைத்த மருந்திதனை முதிர்ந்த குப்பி தனிலடைத்து
ஊண்டே கல்லுக் கொண்டரைத்து வுற்ற சீலை மண்செய்து
மீண்டே யொட்டி யடுப்பிலிட்டு மீறுந் தாளி தனைவைத்துத்
தூண்டே மண்ணை நாலுவிரற்குச் சொறிந்து குப்பி தனை
[யேற்றே. 3

ஏத்தே குப்பி கழுத்துமட்டு மியல்பாய் மணலைத் தான் சொரிந்து
கோத்தே சட்டி தனைமூடிக் குறுந்தீ பாக்கினி நாள்மூன்று
பாத்தே யெரிநாள் நாலாகப் பண்பா யிறக்கி மருந்துடனே
சேர்த்தே நாவி திப்பிலியுஞ் சிறக்கவம் மூலம் வகையிரண்டே. 4

இரண்டு பலமா மருந்தையெல்லா மிசைந்த பசுவின் கோமயத்தில்
கொண்டே காய்ச்சி யம்மருந்து கொடியசெந் தூர மதுகூட்டி
யொன்றே மருந்தைக் கியாழத்தில் ஒக்க வரைத்து நாற்சாமம்
விண்டே யுளுந்துப் பிரமாண மிடையே பிடித்து உலர்த்தீரே. 5

உலர்ந்த மருந்துள் ளிச்சாற்றி லுற்ற சன்னி பதினெட்டுங்
கலந்தே யிஞ்சிச் சாற்றிலிடக் கடுவாதமெண்பதும்போம்
நிலஞ்சேர் கொன்றைச் சாற்றிலிட நிற்குங் காச மேலிளைப்புத்
துலைஞ்சே யோடும் வியாதிகளும் சொல்லுமிராசபூ பதி
[யென்றே. 6

ஈசுரபூபதிக்குப்பி

ஈசுர பூபதி செந்தூரம் இயல்பாய்க் கொள்ளு மருந்துகேள்
வங்கஞ் சூத மரிதாரம் வளரு முருக்குச் செம்புமுத்து
மீசுர காந்தங் கந்தகமும் விதித்த பித்தளை வெங்கலமும்
காசுர வோமஞ் சேங்கொட்டை கடுக வகைக்குப் பல
[மொன்றே. 1

ஒன்றே குமரிச் சாறதனு லொக்க வரைத்து ஒரு சாமம்
நன்றே யரைக்க யெருக்கம் பால் நாகஞ் சாம மிரண்டரைத்துக்
கன்றே கள்ளிப் பாலிலிட்டுக் கடுக வரைத்து வொரு சாமம்
பொன்றே யுலர்த்தித் தான்தகர்த்துப் போட்டுக் குப்பி
[தனிலடையே. 2

அடையே கல்லுக் கொண்டடைத்து ஆன சீலைமண்ணேழிட்டுக்
குடையே யொட்டி யடுப்பிட்டுக் கொண்டே தாளி யதில்வைத்து
யிடையே மணலை நால்விரற்கு யிட்டே குப்பி தனைவைத்துத்
தடையே கழுத்து மட்டளவுந் தனியே மணலை யிடுவீரே 3

இடுவீர் தீயைத் தான்மூட்டி யெரிப்பீர் மூன்று நாளெரித்துத்
தொடுவீர் மருந்தை யெடுத்துடனே தோன்று நாவி திப்பிலியு
மடுவீர் திப்பிலி மூலமுட னுன மருந்து மூன்று நிறை
கொடுவீர் வகைக்குப் பலமொன்றாய் கோமய மூறப்போடீரே. 4

போடீர் மறுநா ளதையெடுத்துப் பூபதி கூட்டி யரைத்திடவே
நாடீருள்ளித் தயிலத்தில் நாலு சாம மரைத்துண்டை

வாடீர் குன்றிப் பிரமாணம் மகிழ இஞ்சிச் சாற்றிலிடத்
தேடீர் சன்னி பதினெட்டுந் திரும்பும் வாதமென்பதுமே. 5

எண்ணு முலைப்பால் தனிலிடவே யேற்ற பித்தம் பயித்தியம் [போம்
நண்ணு முள்ளித் தேனிலிட நவிலுங் குன்மம் பதினெட்டுப்
புண்ணுங் கிரந்தி பலவாயும் புரையரை யாப்புப் புற்றுடனே
கண்ணால் நோய்கள் பலவும்போங் கடிய நோயுந் தீர்ந்திடுமே. 6

பஞ்சலோக செந்தூரம் 1

பஞ்ச லோக செந்தூரம் பாங்காய்ச் சொல்லு மருந்துகேள்
மிஞ்சாக் காந்த மேழுபலம் விரையக் கார மிரண்டு பலம்
துஞ்சுஞ் சூத மைந்துபலம் சொல்லும் கந்தகம் நவபலமாம்
வஞ்சமில்லா லோகமது வகையீ ரா று பலந்தானே. 1

பலந்தா னுலு யிந்துப்பு பாங்காய்க் குமரிச் சாறதனல்
கலந்தே சாம மெட்டரைத்துக் கையா லடைவாய்ப் பிடித் [ததன்பின்
மலர்ந்த சட்டி தனில் குமரி மணியே யிட்டு வடைவைத்துப்
பிலந்தான் பின்னும் மணியிட்டுப்பேணும் சட்டியிடுமூடே. 2

இட்டே சட்டி சீலை மண்ணு மேழு செய்து அடுப்பில்வைத்து
மூட்டே சாமம் நாலெரித்து முடுகி யெடுத்த செந்தூரந்
தொட்டே பணவெட் டிரிகடுகு தொடர்ந்த திரிபலை தேனுடனே
மட்டே கொடுக்கப் பதினெட்டுக் குன்மம் வாய்வு வாந்தியுமே. 3

வாந்தி பித்தம் நூற்றெட்டு வளருஞ் சிலேற்பனந் தொண் [ணூற்று று
காந்தி யெரிப்புக் கசரோகம் கடுக்கு மீளை யிளைப்பதுவும்
சீந்தி வருமக் காமாலை நிறைந்த பாண்டு விஷபாகம்
பாந்தி வரும்புண் கிரந்திகளும் பகருஞ் சூலை யெல் லாம் [போம். 4

பஞ்சலோக செந்தூரம் 2

நாவி சூத மனோசிலை கந்தகம்
நல்ல லிங்க மரிதாரங் காரமுந்
தேவி வாள மிருவி வெண் காரமுஞ்
செம்பு லோக முருக்குமெல் வங்கமுந்
தாவி யொவ்வொன்றின் சரியதாகவே
தக்க சுத்தி தனித்தனி செய்தபின்

கோப மின்றிக் குமரிப்பால் தன்னிலே
குளிர நாலு சாம மரைத்தபின்
மேவி யேயொரு சட்டியில் வைத்துஅதை
மேலு மூடியுஞ் சீலைமண் ணேழுசெய்
யாவி னின்புகை போகாமல் தானடைத்து
நாலாறு சாமமெரித்திடே. 1

இட்ட சாம மெரியற வெந்தபி னிறக்கி வைத்து
யிறைவனைப் போற்றியே
தொட்டு வாங்கிப் பணவெடை கொள்வீரால் சூழ்ந்த குன்மம்
பதினெட்டுந் தீருமே
மட்ட மூத பிலீகைக் கவுசிவாந்தி சத்தி
வலிகுன்ம வாயுக்கள்
திட்டமாகத் தீரும் பஞ்சலோக
செந்தூர மாமிதே. 2

இரச செந்தூரம்

பாரீர் கந்தக மைங்கழஞ்சு பரிவா யுருகு முகந்தனிலே
வாரீ ரிரதம் பதின்கழஞ்சு மறுத்துந் தாரங் கழஞ்சாறு
சேரீர் பொடித்து அதில்தூவித் திறமாய்க் கிண்டி யாறவிட்டுக்
காரீர் காசிக் குப்பிதனில் கருத்தாய் சீலைமண் ணேழுசெய்யே. 1

செய்யே குப்பி தான்காய்ந்தால் சேர்ந்த மருந்தை யதிலடைத்து
வையே பாதி யாமளவு மிருந்தா லாகா தெனக்கூறு
பையத் திரியா லதையடைத்துப் பரந்த தாளிச் சட்டிதனில்
கையா லிருவிரல் மணலிட்டுக் கருத்தாய்க் குப்பி யதிலிருத்தே. 2

இருத்துங் குப்பி கழுத்தளவி லியல்பாய் மணலைத் தான்
[சொரிந்து
திருத்த மாக வட்டடுப்பில் திறமாய்த் தாழி யதிலிருத்திக்
கருத்தா யக்கினி மூன்றுவிதங் கடிகை முப்பது மெரியிடுகில்
பெருத்தே கட்டும் வாய்தனில் பேணிச் சிலாகை போட்
[டெடுத்தே. 3

எடுத்தே பருவ மானக்கால் இடுவீ ரைங்கரன் பூசைசெய்து
கொடுத்தால் வாத பித்தமய்யுங் குன்ம மேகம் விஷசுரங்கள்
அடுத்த சன்னி கிரந்திகுட்ட மக்கினி மந்தம் விஷசூலை
தடுத்த . . . . . மபு . . . தாது நட்டந் தீருமிதே. 4

வங்கச் செந்தூரம்

வங்கத்தைக் கள்ளிப் பாலில் வரிசையா யுருக்கிச் சாய்த்துப்
பொங்குற்ற புளியம்பட்டைத் தோல்தனைப் பொடிய தாக்கித்
தங்கித்துக் கீழு மேலுஞ் சட்டியில் நாலு சாமம்
செங்கல்போ லெரிக்கச் செந்தூர மாகும் பாரே. 1

வங்கங் கடிது காரீய மதிக்கச் செந்தூ ரப்படுத்தி
யங்குஞ் சலமே கடுத்திரங்கி லதற்குச் சர்க்கரை கற்கண்டு
யங்க வயிற்றுக் கழிச்சலுக்கு வாமணக் கெண்ணெய் நெய்தேனும்
தெங்கிளநீர் தன்னிலிடத் தீருஞ் சலப்பிரமியமே. 2

கண்டூஷங்கள்

அதிமதூரஞ் சீரகம் வெங்காரங் கோட்ட
மரியதேன் சீனியுடன் ஏலம் பிட்சை சரசமா
மிது சமனாய்க் கூட்டியுடன் கண்டூஷஞ்செய்ய வியல்
பில்லாததாக மங்கு மின்னமொரு கிரிகை
யோது மயிரின் சுட்ட கரியதி மதூரஞ்சீனி
பொய்யாத தேனுடனே திப்பிலியுங்கூட்டி
விதம் விதமாய்க் கண்டூஷம் செய்யவே வீக்கம்
விட்டோடு மிக்குணத்தை விரைந்து பாரே. 1

கடுக்காய் சுக்கு வெண்காரங் கடிய சீனக் காரமுட
னடுக்காய்ச் சீனி தேன்கூட்டி யரிதார மெலுமிச்சம் சாற் [றரைத்துத்
துடுக்காம் விந்தி விட்டோடுந் துவளு நாக்கில் தேய்த்து [விட்டால்
சடக்கா யிந்தக் கிரிகைதனைச் சதிராய் செய்து முடிப்பீரே. 2

பெருங்காயந் திரிகடுகு பொரிகார மிந்துப்புப்
பேதியாங் கொம்மட்டி மாதளம் பழத்தின் சாறு
யிருங்காத விஞ்சிரச மியல்பெறவே கூட்டியிது
நாவில் தேய்க்கவே விட்டோடுஞ் சன்னி
பருஞ்சாயல் கழுதைவிட்டை மஞ்சள் வில்லை வேரும்
பதிதாக குஞ்ச சாதேவி சீந்தில் கஞ்சங்குல்லை
கருஞ்சாயல் காகத்தி னிறகுடனே புகைக்கக்
கடுஞ்சீத சுரத்துடனே விஷசுரமுந் தீரும்.

வேறு

நண்டுவேரொடு உள்ளித்தோல் நல்லகஞ்சங் குல்லையுடன்
அண்டங்காக்கை யிறகுடனே யசமதாகம் ஆட்டெருவில்
குண்டுசட்டி தனில்புகைக்கக் குளிருங்காய்ச்சல் விட்டோடுங்
கண்டங்கறுப்பை யுடையவனுங் காதல்முனிக்கு யருள்செய்
[தான்.

வேறு

பாம்புச்சட்டை மயிலிறகு பரியகழுதை விட்டையுடன்
சாம்பல்நெருப்பை வில்லைவேர் கூருமோம முள்ளித்தோல்
தூம்பல்துளசி குந்திருக்கந் துவட்டிப்புகைக்க விட்டோடுஞ்
சாம்பு சன்னி வாதமொடு சகலசுரமுந் தீர்ந்திடுமே.

சுரஞ் சன்னிக்குப் புகை

கலைவிட்டை மயிலிறகு பாம்புச்சட்டை
கருங்குதிரைக் குளம்புடனே காட்டுப்பன்றி
சலம்பட்ட காற்குளம்பு வுள்ளித்தோலுஞ்
சமனாகும் பொன் மெழுகு வோமம்தூபம்
பலன்பட்ட இந்துப்பு காக்கையிறகு
பச்சோந்தி யோணந்தோல் தேனிரைாட்டுத்
திலம்பட்ட நாமந்தான் சேத்திரப்பால்
தூபந்திரளாட்டி னெருவில் புகைசெய்திடாயே

காளி கேதுரம்

பேயன் பீர்க்கு விதைநாலு பெரிய மிளகு பலமிரண்டு
யாய நாவி பலமொன்று யடுக்காய்க் கருக்கிப் பொடிசெய்து
வேயின் குழலில் விட்டடைத்து வெகுண்டே யிடையில்
[விட்டிதச்
சாயுஞ் சன்னி நாமந்தான் சதுராங் காளி கேதுரமே.

அதிகேசுரன்

முட்டைச் சாம்பல் பதினாறு மிளகு மூன்று நாவியொன்று
விட்டாகப் பொடிசெய்து இதுவே எருக்கம் பால்நனைத்து
நட்ட மான தலைவலியும் நடுக்குஞ் சளியும் விட்டோட
வெட்டிலொன்று நாசியிடை யியல வாய்வை லூதிவிடே.

வேறு

காட்டெருச் சுட்டசாம்பல் கதிக்கவோர் பலமெடுத்து
யேட்டித எருக்கம்பாலி லேழுதரம் நனைத்துலர்த்தி
நாட்டினில் கறிமிளகு நாலிலோர் பங்குகூட்டி
யாட்டிய மூக்கிலூத அதிகேசுர நாமமாமே.

நசியம்

ஆமணக்கெண்ணெய் மிளகு யழகுட நசியம் பண்ண
வேமணத் திப்பிலியோடு வேலிப்பருத்திப்பால் நசியம் பண்ணப்
பாமண விந்துப் புள்ளிப் பருங்கறி பாகற் சாறு
யிவ்வணம் நசியம் செய்தா லருந்திடும் தோஷம் காய்ச்சல்.

வேறு

கெருடக் கொடியு மதன்விரையுங் கேளு மிளகு பொடியுடனே
நருடி மூக்கில் விட்டூத நளிருஞ் சன்னி விட்டோடும்
வெருமே வெள்ளைக் காக்கட்டும் வெள்ளை யுள்ளி நசியந்தா
னருடுஞ் சீத சுரத்துடனே யதிக சுரமும் விட்டோடும்.

வேறு

எருக்கம் பாலி லசாமாதக மிந்துப்பு வெள்ளை யுள்ளியுடன்
நருக்கிப் பிசறி நிழலுலர்த்தி நாசிக் கிடையே விடுநசியம்
யெருக்கந் தயிலந் தேய்த்தயெண்ணெய் பிழிந்து திப்பிலி
[கடலிருஞ்சி
செருக்கும் நாசிக் கிடைவிடும்நீ சீத சுரந்தலை வலிபோமே.

வேறு

செவ்விய மிளகு யிந்துப்பு சேர்ந்த சுக்கு வாய்விளங்கம்
கவ்விய ரேணுகங் கரிச்சாவுங் கறந்த பசுவின் நெய்வெந்து
தவ்விய மூக்கி லூற்றிடவே தலையில் நோவு விட்டோடு
மவ்விய மல்ல வறிந்துசெய் வாயால் நசிய மதிமானே.

வாகை வயிரவன் அஞ்சனம்

வாகை விதையுந் திரிகடுகும் வலிய யிந்து சமன்கூட்டி
பாகலெலுமிச்சம் பழச்சாற்றில் பதமா யரைத்துக் குளிகை
[பண்ணி
வேக மான கண்ணில்விட வெகுண்டே சன்னி விட்டோடும்
வாகை வயிரவன் அஞ்சனமாம் வலிய நாம மறிந்துகொள்ளே.

கணபதி யஞ்சனம்

திப்பிலி யிந்து பெருங்காயம்
திவ்விய பசுவின் வெண்ணெய்தனில்
வெற்புடனரைத்திரு கண்ணதனில்
விதையா மணக்கு யிந்துப்புச்
செப்பிய மிளகு கோசலத்தில்
சிக்கன வரைத்துக் கயிறுபண்ணி
யப்பிடு நிம்பம் பழச்சாற்றி
லரைத்துக் கண்ணி லிட்டிடுவாய்
அழகிய கணபதி யஞ்சனமே.

பிரகாச அஞ்சனம்

கடுக்காய் தானி யுளப்பருப்புக் கடிய யிந்துப்பு பெருங்காய
மிடுக்காந் திறிதி கோசலத்தில் மேவி யரைத்துக் கயிறுபண்ணி
யடுக்காம் நிம்பம் பழச்சாற்று லழகா முலையின் பாலதனால்
பிடிப்பாய்க் கண்ணி லுற்படவே பிரகாசஞ் சனத்தின்
[பேரொளியே.

தெவ்வி அஞ்சனம்

பச்சை மஞ்சள் திரிகடுகு பதமாந் திராயுஞ் சமன்கூட்டி
யிச்சை முள்ளிப் பழச்சாற்றி லியலும் நிம்பம் பழச்சாற்றில்
மெச்ச வரைத்துக் கயிறுபண்ணி மெலியுஞ் சன்னி விட்டோடத்
துச்ச நிம்பம் பழச்சாற்றி லிடுவாய் துவளுந் தெவ்வி
[அஞ்சனமே. 1

வேறு

வசம்பு திரிகடுகு பெருங்காயம் வலிய சயிந்தஞ் சமன்கூட்டி
யிசைந்த எலுமிச்சம் பழச்சாற்றி லியல்பா யரைத்துக் கயிறு
[பண்ணி
வசிந்த பூனை வலிப்பிச்சில் வளமாய்ப் பாவனை செய்தபின்பு
வுசந்த நிம்பம் பழச்சாற்றி லுரைத்தே கண்ணி லிடுவாயே. 2

சீராருந் திரிகடுகு வசம்போ டுள்ளி
செய்யதொரு சாறடைவேர் மகிழம்வித்து
வாராயும் பாளமிந்து தலைபுண் ணுக்கோ
டான பத்துவகை மருந்துஞ் சமனாய்க்கூட்டித்
தாராழத் தேசியதின் கனியி னுள்ளே
தாழகத்தின் சிறுமணியை யுள்ளே வைத்துத்

தோராய மதைப்பிழிந்து முன்னே பற்றுய்த்
தொகுத்தமருந் தினையனைத்து மரைத்தி டாயே. 3

அரைத்த மருந்தைக் கயிறுபண்ணிக் கண்ணுக் கஞ்சனமாய்ச்
லொருத் தலைநோ யிடிவலி குத்தகளுஞ் சன்னி [செய்திடுவை
திருக்கிய வுள்வீச்சு வலி பிறவீச்சேகுந் தீராத பேய் பிடிகளை
[யனைத்துந் தீர்க்கு
மருட்டிய பித்தவகை மயக்கந் தீர்க்கும் குத்தான அஞ்சனமாய்
[வகுத்துப் பேசே. 4

சருவவாதாந்தக தைலம்

தக்க புகழ் வாதாந்தக தயிலஞ் செய்யவகை
மிக்க தமிழால் விரித்துக்கேள்—வைக்குமுறை
நல்லெண்ணெய் வேப்பெண்ணெய் நல்குபுங் கொண்ட
[வெண்ணெய்
வல்லயினுப்பை வகைக்குழக்குச் சொல்லெருக்கம்
பாலரை காலந்தப் பழுப்பிலை வேர்ப் பூவுடனின்
றுமொக்கக் கால்படி தைவேளைக் (?)
காந்தை மிதிபாகலூமத்து நீளுமிசங்கு நிலவாகைகே
ளாடாதோடை புன்முருங்கை சுண்டை திருகு கள்ளி
கூடு மரு தோன்றி முடக்கொற்றனுந் தேடுசிறு
சின்னி பொடுதலையுஞ் செய்ய சவரிக்கொற்று
மின்னு குறிஞ்சாவோடு வென்றோன்றி கந்த—மின்னுங்கறி
வேப்பிலை கழற்சியிலை மிக்க சத்திச் சாறணையும்
வாய்ப்புடனே வாதமடக்கி குப்பி—தப்பாகி
யொவ்வொன்றில் சாறரைக் காலுற்ற குமிளவெம்பளிசு
நவ்விய கொளுஞ்சி சிவனர் பிரண்டை—செவ்வியநெய்க்
கொட்டான் திருகுகள்ளி கோதறுக்குஞ் சூரைக்
கட்டுள நீர்ப்பூலா முட்காவேளை வேர்—நெட்டாயில்
பட்டை வகைக்குப் பலமூன்றிடித்து நன்னீர்
விட்டதுவு முக்குருணி விட்டெரித்து—மட்டுள
கியாழ மிரண்டு படிதான் காண வற்றுகின்ற
தோயமுடன் சாறுமுன்னே சொன்ன வெண்ணெய்—நேயமுட
னென்றுகச் சேர்த்தாளுவை வசம்பிங் கிந்து
கன்றாத கல்நாருங் கல்மதமும்—பொன்றுசவுக்
காரமிளகிர தங்கார் போகு நாவியரி

தாரங் குறும்பை தெய்வதாரி நவ—சாரிசிலை
சீரகமிரண்டு சிறுதேக்குத் திட்டிவிரை
நேருள் குக்கில் நிர்விஷமும்—பேரான
திப்பிலி மூலங்கர்கடக சிங்கிபெரு மரத்தோல்
நட்புள கெந்தி சன்னி நாயகனு—மொய்ப்பான்
பூதகரப்ப னோமம் பேர்தவகைக்கு வகை
வீதமொன்றரைக் கழஞ்சு வெள்ளுள்ளி—போதவுரித்
தொன்றரைப் பலஞ் சரியாய் ஒக்கவரைத்
திட்டிறுத்து தென்று லுடலதனி—லிட்டிருந்து
குன்று மலாவி சிலவேது வகையாகிய நீர்
மெய்க்கு விடமேவு முகவாதம்—விறைப்பயதி
தாவுசந்து வாத மிசிவாத மானவா தஞ்சூலை
வாதஞ் சருவாங்க வாதமுடன்—னேதேதும்
பாரீச வாதமுடன் பக்கவாதங் கனப்பு
கோழை நோயாந் தேரில் குற்றுளைவு—தீராத
சுரோணி தவாதஞ் சுகசன்னி வாதங்
குரோதிபுற வீச்சுட னுழக்குற்—றோடாதவலி
காக்கைவலி மெய்க்கு மரகண்டன் குதிரைவலி
தாக்கு முயல்வலியுஞ் சாந்தமாம்—யோக்கியமா
மென்று சொல்லி முன்னோ ரெடுத் துரைத்த யெண்ணியிதை
வென்றி பெறச் செய்வீர் விரைந்து.

உள்குத்துப் புறவீச்சுக்குத் தைலம்

கையாந் தகரை பாகலிலை
 கழுதை லத்தி திராய்ச் சாறு
மெய்யா யிவைகள் வகைக்குழக்கு
 வேம்பின் தயில மரைப்படிதா
னெய்யா மருக்கா ரைம்பழமீ
 ரெட்டுப் பாகல் பருப்புழக்குச்
செய்யா யுள்ளி யுரித்துழக்குச்
 சிறுபீ ளையின்வேர்த் தோலிவசம்பே. 1

வசம்பே கரிய சீரகமும்
 வலம்புரி வெளுத்த பிசின்சுக்கு
நிசங்காண் சன்னி நாயகனும்
 நிலைவேர் வகைக்கு மிருகழஞ்சு

யசங்கா தரைத்திட் டெரித் தருந்த
வதிய வலிவகை புறவீச்சு
யிசங்கா திருந்த வுள்குத்தோடி
வைகட் கிசையு மெண்ணெயிதே. 2

சன்னிக்குத் தைலம்

தீருந் தயிலம் வெள்ளுள்ளி
சிறக்க விரித்துப் பருப்புழக்கு
மார வைத்துச் சீலைதன்னில
முகாய் நிரந்தர மாய்ப்பூசித்
தூர விளக்கில் தான்வாட்டித்
தூருக் கருத்தால் பிழிதயிலமதைச்
சார வுச்சி பிடரி கைகால்
கதுப்பில் மூக்கில் தடவுவதே. 1

தடவுந் தயிலம் எள்ளிலுப்பை புங்கு
தானேரண்டாம் நிம்பமெண்ணெய்
வகையுடனே விடு நாளப் பாண்ட
மதிலொன்று படுத்து மழுவதுகேள்
விடவே யொவ்வொன் றுழக் களந்து
வேலிப் பருத்தி திராய்பிரமி
தொடவே யாடாதோடை தூளசிதோலாம்
வேம்பின் வகைக்குச் சாறுழக்கே. 2

உழக்காய் மூன்று தேங்காயை
யுடைத்துத் திருகி வெந்நீரால்
புளிக்கப் பிசைந்து (?)
புளி பாலிரண்டு படியுடனே
வளக்கு மருந்து திரிகடுகு மஞ்சள்
வெளுத்தப் பிசினிங்குள்ள
களங்கஞ் சீரகஞ் சன்னிநுயன்
கல்மதங் கற்கடக சிங்கியுமே. 3

சிங்கி பாம்பின் சட்டைசிறு
தேக்கு வேம்பின் பிசின் நாங்குள்
வங்க முசுறு முட்டையுள்ளி
வேண்டும் பஞ்சவனப் பழுக்காய்

தங்கு மெடைதா னங்கழஞ்சா
யரைத்துக் கரைத்துத் தான் காய்ச்சிப்
பங்க முதிர்ந்த மணல்பதமாய்ப்
பார்த்து வடித்துக் கொள்வீரே. 4

கொள்வீர் குடப்பைப் பதத்ததனைக்
கொதிக்க வெந்துள் கருகவெடுத்து
மெள்ள வறுத்துப் பெருங்காயங்
கழஞ்சி ரெண்டு அதில்போட்டுத்
தள்ளுந் தயிலத் துடனிறுத்து
தொட்டு உடம்பில் தடவியிடக்
கள்ளச் சன்னி பதிமூன்றுங்
கழறுஞ் சன்னி முப்பதுவும்
முள்ள வீச்சுப் புறவலியு
முடனே தீரு முண்மையிதே. 5

மகாதைலம்

சொல்வேன் மகாதயிலம் சூட்சமாய்ச் செய்வதற்கு
வல்ல வயித்தியரே வகை கேளீர்—நல்ல
நருத்த கம்பன சீதாறுலுபடி நரியுடைவேர் நாலுபடி
வெள்ளுள்ளி யிரண்டுபடி வேண்டியே—சேரவே
சேர்த்திடித்து வேப்பெண்ணெய் சென்றபடி யொன்று
கூட்டிப் பிசறிக் குன்றமதில்—வைத்துவிடு
சாரம் பிறக்கவொரு னிருந்து ஊறியபின்
கும்பத்தார் தன்னில்ப் பத்துத்—துளையும் விடு (?)
மருந்தும் மிடு நூதனமாய்த் தயாகளெல்லாங் கூடச்சட்டி
கொண்டேமூடி மண்சீலை மண்ணளவு செம்பியிடு மறுபடியும்
வேம்பிலுப்பை புங்கெண்ணெய் வேணும் வகைக்கோர் படியாய்
வாங்கியொரு பாண்டமதில் வைத்துவிடு—மருந்துக்குட
மதனில் தீக்கு முதுமென்றே தாமெரியு மெண்ணெய் விடவிடவே
யிடையில்லாதே வெந்திறக்குந் தயிலமதைத் தொடுநாள்
[தொட்டுத்
தடவி யிடச் சுகசன்னி முதல் முப்பதுவும் மட்டிலா
வீச்சு வலிப்பு வகை தீருங் கூட்டமிடும் வாதத்துக் (?)
கோர்துளிதான் அரைமண்டலந்தான் கொண்டக்கால்
தீருமெனச் சொன்னார் சிவன் (?)

முட்டைத் தைலம்

சாந்தமாமுனி ராசதமாமுனி தங்குருங்கும் ரிஷிகளும் கூடியே
வாய்ந்த சன்னி முப்பதுந் தீரவே மகிழ்ந்து குக்குடத்தயில
[மதிறக்கவே
யாய்ந்து குக்குடத்தண்டம தைம்பது அவித்து மஞ்சள் கருவ
[தெடுத்தபின்
தோய்ந்த சட்டியிலிட்டுப் பிதிர்த்தபின்
சூட்டடுப்பினி லேற்றி யெரியிடக்கிண்டியே
காந்தக் காந்த யிறக்கிடுந் தயிலமுங் கண்டபோதே நிம்பெண்
[ணெய் கால்படி
பாந்தமான கடைச்சரக்கினில் பஞ்ச சாதியும் கார்போகரிசியும்
வேந்த வெள்ளுள்ளி ரோகணி காயமும் வேறு சீரகம் வாகன
[யிறகுடன்
சேர்ந்த நாயகன் கழலக்கொடிதிரி கடுகுடன் வசம்பெறும்புடன்
[முட்டையும்
போந்த ஓரிடையோர் கழஞ்சாக வரைத்துப் புகட்டியே
[பதத்தினில் வடித்திடத்
தீர்ந்திடும் சன்னி தீர்ந்திடும் சொன்னேன் வாதமெண்பதும்
தீர்ந்திடுமெனச் செப்பினர் முனிவர் ஒப்பினர் சிவனி
[துண்மையே.

சுரத்துக்கு விளக்கெண்ணெய் தைலம்

விளக்கெண்ணெய் வெட்பாலை வாலுளுவை வசம்பு
வெள்ளுள்ளி யரைப்பல மிக்க நறைமாடை
யழகான பசு மஞ்சள் சாறிரண்டு கரண்டியதுக்
கான குறிஞ்சாவினிலையும் பல மரையாங்
கிழக்காக அடுப்பேற்றி யெண்ணெயுடன் கலந்து
கிளறியே வடித்து மேல்பூசி யுள்ளுங்கொண்டால்
விளக்கானது போலவெரியும் பழஞ்சுரமும்
விண்டுவாய் நடுக்கலுடன் வெப்பு விட்டேகும்

இருமலிளைப்புக்கு—சன்னிக்கு

கடுக்காய் கருகப் புடமிட்டுக்
கதிக்கத் தூள்செய் திந்துப்பு
அடுத்த மிளகு திப்பிலியு
மதுவும் வெதுப்பிப் பொடியாக்கி

தடுத்த சதாவேரிக் கிழங்குத்
　　தண்ணீர்கொண்டருந்திடுகில்
வெடிக்குஞ்-சன்னி சேற்பனமும்
　　விட்டே மலமுங் கழிந்திடுமே.

உள்குத்துச் சன்னிக்கு மருந்து

முசுறு முட்டை பூநாக
　　முந்திரி கைபழம் பேரீந்து
பசுத்த செம்பு மிளகுள்ளி
　　பழஞ்சாந்து பூச்ணிப்பூ
முசித்தோர் பூசுஞ் சந்தனமு
　　முருக்கு வித்து முதிர்ந்தகலை
நசந்தே கொப்பு முலைப்பாலில்
　　நாடா துட்குத் தோடிடுமே. 1

புனலறலுக்கு வந்ததண்ணீர்
　　புதியதேன் முலைப்பால் சுக்குக்
கண்ணீறேழு சாந்து கோட்டம்
　　கடிய வெள்ளுள்ளி காந்தஞ்
சினந்தெழு கிறபா லுப்புத்
　　திறமுட னுரைத்துக் கூட்டி
மணங்கெடக் குத்துச் செல்லா
　　மருந்திது கொடுக்க நன்றே. 2

நவகண்ட தைலம்

இரதம் கந்தகம் வெள்ளுள்ளி
　　யியல்பாம் துரிசு சேங்கொட்டை
சரச மறவே ஆவெண்ணெய்
　　தன்னோ டொக்க எடுத்தரைத்து
யுரமே குத்திப் புறவீச்சுடனே
　　குத்தியாஞ்செய்யில் (?)
சுதாதலத்துடனே கலைசுருட்டிக்
　　தலையிற் கோதித் தயிலமிடே. 1

இடவே தயிலங்கா செடைகொ
　　ளிஞ்சிச்சாறு முலைப்பாலும்
தேனுடனே யுள்ளே கொள்ள
　　யுரத்தால் வேம்பி னெண்ணெயுடன்

அடவே கலந்து தானங்க
 விதுவாம் பொருத்தலாகு மெனச்
சடமே போடாதிருப்பதென்னத்
 தறுகாதிதுவுந்தாங் கண்டீரே. 2

அஞ்சனம்

சுக்கு மிளகு திப்பிலியுஞ்
 சோமனுப்பு வெள்ளுள்ளி
தக்கதோர் கொந்தப்பருப்புத்
 தறுகாவசம்பு மிவை கூட்டி
யொக்கத்தேசிப் பழச்சாற்றி
 லோரொன்றரைத் தஞ்சனவுண்டை
மேய்ப்பாய்க் குதிரைவலிய லகை
 மீளத்தேசிப் பழத்திலிடே.

உள்ளே கொள்ள எண்ணெய்

வெண்கா வுள்ளி நேர்பாழ
 மிளகு சுக்குத் திப்பிலியும்
நண்பாங் கடுகு பெருங்காயம்
 நற்சீ ரகமும் வெந்தயமும்
பண்பார் விளைந்த கந்தகமும்
 வசம்பும் வெளுத்தப் பிசின்கார
முண்போரசமோதகந்
 திருசூடனிவை யொக்கக் கொள்ளே.

குதிரைவலி எண்ணெய்

கொள்ளே குதிரை வாலவுரி
 குருந்து நொச்சில் தோடையிலை
முள்ளே யுள்ள குறுவட்டு
 முருங்கை மூலி தூதுவளை
வெள்வேல் மிக்க சாரணைவேர்
 மீறுமல் சற்றே கொடிவேலி
யுள்ளே யெரித்து வேப்பெண்ணெய்
 உதவக் குதிரை வலிபோமே.

புறவீச்சுக்கெண்ணெய்

நத்தைச் சூரி நாயுருவி
நற்சா ரணையுங் கொடிவேலி
சுத்த வீளி யாதண்டை
சொல்லும் வெள்ளை யெருக்குடனே
முத்தத் தூதளை யுங்கொட்டை
முல்லை வில்வமீ சுரமூலி
யித்தைச் செவுகனுரியினி
யெரி தடாகுத்தாமரையே. 1

அரைய முத்த மஞ்சளுள்ளி
யதுவே வசம்பு வேர்க்கொம்பு
கரையா மிளகு திப்பிலி
கடுகு வோமம் வெண்காரம்
விரையார் கந்தகம் நேர்பாழும்
வெண்கோட்டமதி மதுரம்
புரையார் பூமி சர்க்கரையும்
வேப்பெண்ணெய் சிற்றுமணக்க
மெண்ணெயிது வடித்துப் பூசும்
மேபால் தன்னிலரைத்துச் சாமம்
புகுந்தமூலி விடுவே யிந்த
யடவிலது தன் பட்டையது
நன்றாயூரப் போடுவதே. 2

வேதுப்பிடித்து மூணுமூந்து
விரவியுள்ரெண்டினு மாயசமோ
தகமொவ்வொன்று வாயுவுள்ளி
யொருபலமு முன்ன மெண்ணெய்
தன்னிற்போடு பேதமில்லை
யருந்திது பெரியோருறு பிணிக்கு
யிந்த யெண்ணெய் வழுவாமல்
மனத்திலுத்திக் கொள்வீரே. 3

வெடி சன்னிக்கு

உத்ததிப்பிலி யுடனதிமதுர
முறுதியுள்ள செவ்வள்ளியும்

வெளுத்தப் பிசிறேடைம்மாதே
விடந்தூதுவளை கறி கொள்ள
வட்டதுவுடனுத்திடுக வெண்ணெ
யதுபற்றிடுக வெடி சன்னி
யொக்கவித்துயர் திருவுற்ற பின் மாறும் (?)

விசைய வைரவத் தைலம்

சூத முந்தாரம் லிங்கந்
துலங்கு கந்தி வகைக் கழஞ்சு
நீத மனோசிலை நாற்கழஞ்சு
நேரே காடி வார்த்தரைத்துப்
போத வுலர்த்திப் பொடியதனைப்
பொருந்தச் சீலை தனில்பரப்பி
வீத மிருப்புச் சலாகைதனில்
விதமாய்ச் சுற்றித் திரியாக்கே. 1

ஆக்கே வேப்பெண் ணெய் தன்னை
யந்தத் திரியில் கொதிவிட்டுப்
போக்காய்த் தயிலந் தானிறக்கிப்
புகலும் பீங்கான் தனிலடைத்து
வாக்கா யுள்ளுக் கந்தி சந்தி
வருந்தி மேலுந் தான்தடவப்
போக்கும் வியாதி நோயனைத்தும்
பொருந்து சன்னி முகவாதம். 2

வாதஞ் சகல வாதமுதல்
வருந்தும் பாரிச வாதமொடு
நாதந் திமிர்ப்பு வாதமுடன்
நன்றாய்த் தீரு மெனமுன்னோர்
வேதப் படியே யாராய்ந்து
விசைய வயிரவ னென்று
நீத மொழியா லுரைத்ததிது
நிகழ்த்தீர் நிச்சய முண்மையிதே. 3

இரதம் கெந்தகம் பாஷாணம்
இசைந்த லிங்க மரிதாரம்
துரிசு துத்தம் பொரிகாரம்
துலங்கும் பச்சை நாவியுடன்

சரியா யோரொன் றிருகழஞ்சு
தானே யூமத்தன் சாற்றரைத்து
சாண சீலைதனி லூட்டி மிகவுமுலர்த்தித்திரிபிடியே. 1

பிடித்த திரியில் நல்லெண்ணெய்
வேப் பெண்ணெய் வடித்த சித்தா
மணக்கெண்ணெ யிலுப்பெண்ணெய்
யெடுத்தே திரியில் தீக் கொளுத்தி
யிந்தத் தயில மிறக்கிடில்
தடித்த சன்னி வாதம் போம்
தயிலம் விசையவயிரவனே. 2

கிரந்திக்குப் புகை

வெள்ளை தாரங் கெந்தி நிர்விஷம்
விளங்குங் கவுரி வகைக் கரைதான்
கொள்ளுந்துரிசு சிவன் துத்தங்
குங்கிலியங் கார்போகரிசியு
முள்ளக்கடுகு மிளகு வகைக்
கொன்றே யிரதமிரு கழஞ்சு
யெள்ளரு முக்கழஞ்சிய
மெருக் கரிப் பதினைங் கழஞ்சே. 1

கழஞ்சிற் குறையா மல் பருத்தி
கசக்கிச் சாற்றி லரைத்த பொடிப்
பழஞ்சீ லையில் பொட்டணமாப்
பால் மோர் புளிதயிர் பழஞ்சோறு
வளமா யருந்திப் புகைப்பீரால்
வாதஞ் சூலை கிரந்தி குட்டம்
புழுவெட் டாகச் சொறி சிரங்கு
போமே பதகிரி நோயிவையே. 2

ஷை புகை

கெந்தகஞ்சூதம் கௌரியுந்துருசுங் கிளர்ந்திடு தாரமுஞ்
சிலையு முந்திய குறுவும் லிங்கமும் வெள்ளை முழங்கிய
வெடியுப் புக்கழஞ்சாய் சந்தணிமூலையிரேன
முஞ்சுணாங்கின் தன்மல மிருகழஞ்சாகா யந்தமாயிதுவைப்
பொடித்து நீதிரி யாக்கியே திரையில் வைப்பீரே. 1

வைத்த பிற்கிம் பத்தயிலத்தில்
தீபம் வாகுடன்பு கை
விடாதமர்த்திப் பத்தியமாய்
மோருஞ் சாதமுங் கொண்டு
பாவையே மூன்றுணிருக்க
யத்தியிற்சூலே யணுகிடுங்
கிரந்தி யதறி யோடிடுமென்று
சித்தியாய் முனிவன் சிவனருள்படியே
சகத்தினிலுரைக்கு மிம்மருந்தே. 2

திருவிளக்குப் பசுவி நெய்யில் கிரந்திக்கு
விந்துலிங்கங்குக்கிலக்காரச் சீனம் வெள்ளை
கருங்குந்திருக் கங்கார மேடெழுஞ்
சரியிடைவந்து மிச்சம் நீரிலரை
யிரு சாமம் சிறு சுண்டைக்கா யளவுண்டை
செய்துலர்த்தியே பொங்துபோல
விழுமஞ்சுமஞ்சு பவுத்திரக்கி ரீச்சனப்
புகைக்குடிப்பது புளியுப்போ டொழிக்கிடே. 3

மால்மனே சத்திவிந்து மயூரமே பச்சை நிட்கஞ்
சாலவே தேசிச் சாற்றிலரைத்து யெள்திரியதாக்கி
யேலவே திரைவிளைந்தாவி நெய் தீப மேத்தக்
காலமே மோருஞ்சாதங் கருதியே வுண்பதாமே. 1

ஆமே திரைக்குள் மூன்றரை நாளடவாயிருக்கிறபோது
போமே கிரந்தி வெடிசூலே பொருநரைப்புரைகள்
நோமே யுளைச்சல் புண்கரைச்சல் நோவே தீருமென்று
நாமே சொன்னேஞ் சிவனறிய நாடில் வைத்தியம் செய்வீரே. 2

பீனிசப் புகை

இரதங் கந்தகம் சாதிலிங்க
மினிய தாரஞ் சங்கு நீறு
வருகுந்திருக்கம் பாஷாணம்
வருவீர் வாளிப் பட்டிவிட்டு
சாச முறவே திரியாக்கித்
தறுகா நறு நெய் தனில் தோய்த்து
விரசம் பெறவே நாசியினி
லிடவே பீனிசம் வேராறுமே.

சூலை, குட்டம் இவைகளுக்குப் புகை

சூதமியந்தனில் சேர்த்துத்
துருசு வெள்ளை யரிதாரம்
போதக் கழஞ்சாய்ச் சமன் கொண்டு
போடே யெருக்கங் கரியது தான்
வீதங்கறுத் தக்குந் திருக்கம்
விளையுங் கடுகு மிரு கழஞ்சு
காதங் கமழும் புகையிலையைக்
கசக்கிச் சாற்றாலரைக்க நன்றே. 1

நன்றே சிலைதனிலூட்டி
நவமாம் பொழுது புகைப்பீரால்
அன்றே யொழியும் பறங்கி குட்ட
மடவே சூலைப் புண்களெல்லாங்
கொன்றே விடுங்காணிம் மருந்து
கொள்வீர் புளிமோர் பாகல் காய்
சென்றே தினமுங் கறிகூட்டத்
தீருங் காணுந் திண்ணமிதே. 2

கௌரி வெள்ளி சாதிலிங்கங்
கெளரி ரதந்துரி சுத்தம்
கவராதொவ் வொன்றிரு கழஞ்சு
கள்ளிப் பாலா லரைநீயுந்
தவறு திவைதான் சிலைதனி
லூட்டி யரைத்துப் பாக்களவே
யுண்டை செய்து ?
தவிரா தொன்று மிகவிருத்தித்
தானே யெழுபுகை கட்டே. 1

கட்டாய் நீரினுடன் கிடத்திக்
கருது மெண்ணெய் முழுகிவர
விட்டே யோடும் வாதங்கள்
மேவுஞ்சு ரோணித நீர்வாய்வு
கட்டுஞ்சூலை முடக்கும் போங்
கைகாலுளை வலியகலு
மட்டாயிதனைச் செய்துவரில்
மாறாச்சூலை மாறமிதே. 2

இரத மஞ்சு கழஞ்சுடனே
 யேற்கும் லிங்கமதிற் பாதி
மருவுந் தூபங் காரீய
 மற்றிரண்டும் பதின் கழஞ்சு
தருசு மரியுந் தோற்றும் வெள்ளை
 கழஞ்சுடனே மருவு நல்ல
சாம்பிராணி கடுகு மிளகு மஞ்சள்
 மாணிபங் காற்றுணிலேச் சாற்றில்
மருவு முண்டை பதிறென்றே
 புளியு முப்பு மிகக் கூட்டிப்
புகையிர் புளியஞ்சிராய தனிலே. 3

சுரத்துக்கு

ஆடாதோடை வேப்பந்தோ
 லாமே பற்பாடக முடன்
தேடார் சந்தன மிருவேலி
 தேடுமிலாமிச் சுமுத்தக் காசு
வாடாச்சுக் கெட்டென்றாய்
 வைத் தேயிரவு பகலருந்த
வோடா வாதசுரம் வெப்பு
 மோடுமிது ஜெய்கண்டமே. 1

தேனஞ் சிறுவேர் தன்னுடனே
 சிற்று முட்டி குருவிஞ்சி
பொன்னாங் காணி சிறுதுளசி
 போத விட்டுணுக் கிராந்தியுடன்
நன்னா ரிவேர் முத்தக்காசு
 நாலொன் றாக்கிக் குடிப்பீராய்ச்
சொன்னேஞ் சொன்னேம் பித்தசுரம்
 தோத்து மெள்ளப் போய்விடுமே. 2

நிலக் குமிழ் வேரும் சுக்கும்
 நிலவேம்பின் வேர்வசம்பு
துலக்குங் கொத்தமல்லி யுடன்
 தூய பேரா மல்லிகையு
மிலக் காஞ்சிற்று மல்லிகையு
 மினக்குஞ் சிவதைக்குடன் கூட்டிச்

சலத்தில் காய்ச்சிக் கொடுப்பீரால்ச்
சிலேற்பன சுரங்கள் பறந்திடுமே. 3

நய்யுஞ் சிறுகாஞ் சொறியுடன்
நரிக்கு மிளகு வாடாதோடை
தொய்யுஞ் சிறுவழு தலைவேர்த்
துலங்குஞ் சுக்கு வன்னிவேர்
பய்ய வேரொன் றிருகழஞ்சுப்
பதமாய்க் கியாழ மிறுத்தருந்தில்
மய்யா குவளை விழிமாதே
வருத்தும் வெப்பும் போய்விடுமே. 4

சீந்தில் தண்டு கடுக்காயுஞ்
சிவனார் வேம்பு களிப்பாக்குக்
காந்துங் கடுகு ரோகணியுங்
காயும் நீரில் கலந்திட்டு
யேந்து முலைப்பா லதனில்
எட்டொன் றாக்கிக் கொடுப்பீரால்
மாந்த சுரமும் தீர்ந்துவிடும்
வயிறு கழியும் கண்டீரே. 5

தானிய கியாழம்

கூவிளை நெல்லி பொரி யரிசி சுக்குடன்
பாவையே நீரதில் பரிந்தெட் டொன்றதாய்
மேவிநீ தருந்திரி சுரமும் தாகமும்
பூவையே போமெனப் புகலும் வேதமே.

சுரத்தில் வாந்திக்கு

துய்யமா தளம் பழத் தரிசி சுக்குடன்
செய்யநீள் விளாவிலைப் பட்டை திப்பிலி
யெய்யதோ ரேலமு மெட்டொன் றாக்கியே
பய்யவே யருந்திடில் வாந்தி பாறுமே.

வில்வவேர் சிற்றாமுட்டிவேர் கோட்டம்
புல்லுமா மதுரஞ் சுக்குச் சந்துபூ
நல்ல சர்க் கரையிட் டதுநா லொன்றாய்
மெல்லவே கூடி வாந்திகள் போகுமே.

திரிதோஷ சுரத்துக்கு

செந்தோட்டி தூதுவளை ஆடாதோடை
சீந்தில் தாமரைவளையம் பற்பாடகம்
பிஞ்சிட்ட நன்னாரிவேர் கண்டங்கத்தரி
பெருங்கடுக்காய் நெல்லிக்காய் தான்றிக்காய் சுக்குப்
பஞ்சிட்டப் பிரொவ் வொன்று காலப்
பலமாய்ப் பன்னிரண்டு படிரண்டு படியதாகவற்றி
மிஞ்சிட்ட குடிநீரில் தேன் விட்டுத் திப்பிலிமேல்
பொடியிட்டுக் குடிக்க விடு மூன்று சுரமே.

முக்கடுகு முப்பலை முத்தக்காசு
முந்திரிகை நிலவேம்பு முள்ளிநாரி
தக்க வதி மதுரங் கல்நாரே லமிரதஞ் சந்து
கோட்டஞ் சிறுமூலஞ் சடாமாஞ்சி சேர்
மிக்க வாடாதோடை பிரமிச்சீந்தில்
வில்லைவேர் குறுந்தொட்டி வெட்டி மிச்சு
வொக்கவே சமன் கலந் தெட்டொன்றாய்த் தேன்
விட்டளாவி லொடுந்திரிவித சுரங்க ளுண்மைதானே.

பித்த சுரத்திற்கு

கடுக்காய் சீந்தில் தூதுவளை
கண்டங் கத்தரி முசுமுசுக்கை
யடுக்கீரம் பற்படாக மாடா
தோடையோடு சிறுபயறு
வடுக்கண் மடவீர் கொடுப்பையுடன்
வற்றக் காய்ச்சிச் சீனியிட்டுக்
குடிக்கப் பொருக்கும் பித்தசுரங்
கூப்பிட்டோடுங் குரைப்பதுபோம்.

செம்புச் சீலை

சம்பீரப் பழத்தின் சாறுழக்கு சாருங்கறியினுப் புழக்கு
வம்பார் முலையாரிந்துப் புத்துருசு கழஞ்சு மத்தித்து செம்
[பாகுதல்
வெங்கல மாகுதல் சம்பீரச் சாற்றை வெண்சீலையிற் றுவைத்துத்
தம் பாகமாய்த் தப்பினக்கால் கரும்பச்சை நிறமாமே. 1

சீலை பணத்தி னளவெடுத்து தேனூர் முலைப்பால் தனில் கரைத்து
யால மெனவே நோம்விழியி லனத்தி யொழுக்க வலியிடிகள்
மேலுஞ் சிவப்பு நீர்ப்படல மெல்லாந் தீரு மிது வென்று
யால முண்ட மிடற்றண்ண லுரைத்தா ருரைத்தா
[ரவணியிலே. 2

புழுவெட்டுக்கு மருந்து

சேங்கொட்டை ரோம மிந்து இருகு கள்ளியின்வேர் நாலும்
பூங்கொடி கருக்கிக் கொண்டுப் புகலுஞ்சம் பீரச் சாற்றில்
ஆங்கதை யரைத்து நன்றாய்க் குளிகைசெய் முலைப்பா லிட்டுத்
தீங்குறு கிருமி சுற்றுக் குலைவுக்குத் தேய்த்துப் போடே.

கனகாதி குளிகை

ஆறு கூறு கடுபருப்பு மஞ்சு கூறு கனமிளகுந்
தேருந் திப்பிலி முக்கூறு தேற்றின் விரையு மிந்துப்பு
மேறிட வேழுநாள் அரைத்துவிரு நூற்றிருபது நாழிகை
[வருவதென்னப்
பாறுங் கண்ணோ வுள்ளதெல்லாம் பன்னிரு யோசனைக் கப்பாலே
சூதத்தாட்டி காரீயஞ் சொறியார் துத்த மதுக்கிரெட்டி
சாதிச் சங்க மதுக்கிரெட்டி சங்கத் திரட்டி தாம்பூலம்
மோதிட் டரைப்போ மென்றதே யெலு மிச்சம்பழச்
[சாற்றாலரை
யோதிச் சொலன்றோங் கண்ணோவு தொன்று வாரா துரைத்
[திடவே

சன்னியறியும்படி

கருத்துறு சன்னி தன்னைக் கச்சிடா தறிய வேண்டி
லுத்திராட் சத்தை நோக வுரைத்துநா வதனில் தேய்க்க
திருத்தமாய்க் கருத்த தாகில் திதமுறு சன்னியாகும்
பெருத்திடும் வெளுப்ப தாகில் பின்னைய தல்ல வென்னே.

சூலைக்குப் புகை

வடக்குப் போன பிராய வேரை
வரைந்து வெட்டிப் பிளந்தே
நன்றே சீலை தனிலூட்டி
நவமாம் பொழுது புகைப்பிரா

லன்றே யொழியும் பறங்கி சூட்ட
மடவே சூலைப் புண்களெல்லாம்
கொன்றே விடுங்கா ணிம்மருந்து
கொள்வீர் புளிமோர் ப கல்காய்
சென்றே தினமுங் கறிகூட்டத்
தீருங் காணுந் திண்ணமிதே.
கவுரி வெள்ளை சாதிலிங்கம்
கேளீரி ரதந்துருசு துத்தம்
கவராதோ ரொன்றிரு கழஞ்சு
கள்ளிப் பாலா லரை நீயுந்
தவரா திவைதான் சிலைதனி
லூட்டி யரைத்துப் பாக்களவே
யுண்டை செய்து தவிரா தொன்று
மிகவிருத்தி தானே யேழுபுகை காட்டே. 1

காட்டாய் நீரி னுடன் இடத்திக்
கருது மெண்ணெய் முழுகிவர
விட்டே யோடும் வாதங்கள்
மேவுஞ் சுரோணித நீர்வாய்வு
கட்டுஞ் சூலைமுடக்கும் போம்
கைகா லுளைத விசையகலும்
மட்டா யிதனைச் செய்துவரில்
மாறாச் சூலை மாறுமிதே. 2

வாத சுரத்திற்கு

இரத மஞ்சு கழஞ்சுடனே
யேற்கும் லிங்க மதிற்பாதி
மருவுந் தூபங் காரீய
மாற்றிரண்டும் பதின் கழஞ்சு
துருசு மரியுந் தோத்தும் வெள்ளை
கழஞ்சுடனே மருவல் சாம்பிராணி
கடுகு மிளகு மஞ்சள் மானி
பங்காற் றுனிலைச் சாற்றில்
மருவு முண்டை பதினொன்றே
புளியுமுப்பு மிகக் கூட்டிப்
புகையிர் புளியஞ் சிராய் தனிலே.

சுரத்துக்கு

ஆடாதோடை வேப்பந்தோ லாமே பற்பா டகமுடன்
தேடார் சந்தன மிருவேலி தேடு மிலாமுச்சு முத்தக்காசு
வாடச் சுக்கெட் டொன்றாய் வைத்தேயி ரவுபக லருந்தே
வோடா வாத சுரம்வெப்பு மோடுமிது நோய் கண்டீரே. 1

பித்த சுரத்திற்கு

தேனுஞ் சிறுமேலாகந் தன்னுடனே
சிற்று முட்டி குருவிஞ்சி
பொன்னும் காணி சிறு துளசி
யோத விஷ்ணுக் கிராந்தியுடன்
நன்று நிலோமுத் தக்காசு
நாலொன் றாக்கிக் குடிப்பீராய்
சொன்னோம் சொன்னோம் பித்த சுரந்
தோத்து மெள்ளப் போய்விடுமே.

சிலேற்பனச் சுரத்திற்கு

நிலக்கு மிழ்வே ரும் சுக்கும்
நிலவேம்பின் வேர்வ சம்பு
துலங்குங் கொத்த மல்லியுடன்
தூய பேரா மல்லிகையு
மிலக்காஞ் சிற்று மல்லிகையு
மிணங்கும் சிறுதேக் குடன் கூட்டிச்
சலத்தில் காய்ச்சிக் கொடுப்பீரால்
சிலேற்ப னங்கள் பறந்திடுமே.

வெப்புக் குடி நீர்

நய்யும் சிறுகாஞ் சோரியுடன்
நரிக்கு மிளகு வாடாதோடை
தொய்யுஞ் சிறுவழு தலைவேர்
துலங்குஞ் சுக்கு வன்னிவேர்
பைய வேரோன் றிருகழஞ்சு
பதமாய் கஷாய மிறுத்தருந்தில்
மையார் குவளை விழிமாதே
வருத்தும் வெப்புப் போய்விடுமே.

மாந்தசுரக் குடிநீர்

சீந்தில் தண்டு கடுக்காயும்
  சிவனார் வேம்பு களிப்பாக்குக்
காந்தும் கடுகு ரோகணியுங்
  காயும் நீரில் கலந்திட்டு
யேந்து முலையாள் முலைப்பாலி
  லெட்டொன் றாக்கிக் கொடுப்பீரால்
மாந்த சுரமும் தீர்ந்துவிடும்
  வயிறு கழியுங் கண்டீரே.

இதற்குத்துவாலை

பொக்கணம் பிக்சிமூலம் போதவே துவைத்த சாறு
தக்கவே கொண்டு நெய்யில் தான் மிகக் குழைத்தருந்தில்
துக்கமே யெழுப்பி மெய்யில் துயராறு மரோக மானல்
மிக்கது கைக்கு மாகில் மிகுந்தவஞ் சினையு மாமே.

பயித்தியத்திற்கு குடிநீர்

நெற் பொரியுஞ் சிறுபயறு வில்லை முன்னை
  நேரிய சீரக மேலஞ் சுக்கு நெல்லி
சர்க்கரையோ டதிமதுரம் சிறுகாஞ்சோறி
  தக்க முசு முசுக்கை கொத்த மல்லியிஞ்சி
யிற்புகவே வகைக்குமிரு கழஞ்சு தண்ணீ
  ரிருநாழி விட்டதனை யெட்டொன்றானல்
மற்பொருமல் குறுகுறுப்பு வாய்நீரூறல்
  வயிறெரிவு வாந்தி சுர மற்றும் போமே.

வயிற்றுக்கடுப்புக்கு

சுருள்ளியோர் பலங்கொண்டெய் தகத்தியின் கொழுந்து
சிருள்ளதோர் பிடிதான் சேர்த்தருந்து—ஏருள்ள
பால்நாழி பாங்காக விட்டருந்தக்
கால் நாடாதுந்திக் கடுப்பு

தசமூலக் குடிநீர்

முன்னை வில்லை பாதிரி நெருஞ்சியு
  முத்தக் காசொடு சிற்று முட்டியுஞ்
சின்ன வழுதலை பேரா முட்டியுஞ்
  சிறக்குங் கண்டங் கத்திரி வேரொடு

இன்னஞ் சொல்லுநற் சித்தர் மல்லியு
　மிருஷி சொன்ன தசமூலம் பத்துமே
அன்னை யீன்ற உலகில் மருந்திது
　அறிந்து கொள்ளும் நல் லறிவுடை யோர்களே. 1

கடுக்காய் கோட்ட மதிமதுரம்
　காயம் வசம்பு மோதகமுந்
துடுக்காம் சிவதை கொடிவேலி
　தூப மரீசம் வேர்க் கொம்பு
அடுக்காய் நிறுத்து சரியாக
　அடவே யிடித்துப் பாண்ட மிட்டுத்
துடுக்காய் நீரிரு நாழி துலங்க
　யெரித்து எட்டொன்றாய்க் காய்ச்சே. 2

காய்ச்சி வடித்துத் தசமூலக்
　கஷாயந் தன்னை யருந்தினக்கால்
மூச்சைப் பிடிக்கு மட்ட குன்மம்
　மூந்து மேகுற்றுச் செரியாமை
பேச்சை யாத்தும் பெருவயிறு
　பெருக்கும் கர்ப்ப ரோகமும் போமென்று
யார்க்கும் நன்றே யகத்தியமுனி
　உரைத்தார் திண்ண முரைத்தாரே. 3

கிராணிக் குடிநீர்

மானே பெருமரத்தோல் மாதளம் பிஞ்சொடு
தேனுடும் வாசுப்பூத் தென்னம் பூ—வானேரும்
காணவரிதான முத்தக் காசுடனே நீரளிநீர்
பேணியதில் வார்த்துப் பெருகவே—யூணித்
தீயிட்டெரியக் காய்ச்சி யுழக்கான பின்பு
வாய்விட்டருந்தவே வல்லுயிராய்ப்
போமிபமானகி ராணி நோய்களு மென்றார்
மெய்ஞானமுனி சொன்னார் நயந்து.

வெப்புக் குடிநீர்

வெட்பாலை கொத்தமல்லி முத்தமொடு நன்னாரி
　வெண்கோட்ட மதிவிடயங் கொன்றை விளாங்கனியோ
டெற்பாத வட்டத் திருப்பியிருந்துப்பு
　முந்திரிகை பொரியது செவ்வள்ளி செவ்வியம்

பற்பாடகம் யேலமிலவங்க மதிமதூரஞ் சத்குப்பை
சுக்கு கருஞ்சீரகம் பேய்ப்புடல்
கற்கடனரத்தைத் திப்பிலிலா மிச்சு நிலவேம்பு
சிறுதேக் குடிகுடிநீர் நக்கடா மாறுத வெப்பதனை
[வேருக்கும் கவசாதியே.

உழலைக் குடிநீர்

இலாமிச்சு நன்னாரி இருவேலி சந்தனம்
கலாமிச்ச மதூரங்கண் கோட்டங் குடிநீர்
குலாவிப் பிற்பட்டுக் கூப்பிட்டு
உலாவிக் கொண்டோடு முழலைச் சுரமுமே.

மந்தசுரக் குடிநீர்

சுத்தம் பழத்தொடு முந்திரிகை
யிருவேலி நெய்தல் கிழங்கு
வாய்த்த வெள்ளி லோத்திர
மிலாமிச் சிலுப்பைப்பூ
நாத்த நன்னாரி குமிழொடு
நீர்விட்டுழக் காக்கியே
மெத்தப் பேசு மந்தசுர
மீளுமிது தானுண்மையிதே.

பித்தவெப்புக் குடிநீர்

கரியரி அறியரி அரிகண்டு சர்க்கரை
திரிகடுகு புடோலச் செய்ய சந்தனம்
பொருபுனல் மூன்றொன்றாய்ப் பொருந்தக்காய்ச்சிடு
வெறிசுரபித்தமும் விண்ணில் போய் விடும்.

முள் ரோகத்திற்கு

திப்பிலி யேலஞ்சுக்குச் சீரகம் . . . . மோதகம்
நற்பெரு மாயக்காயும் நல்லதோர் மதூரங்கூட்டிச்
சொற் பெறு மிளகு கடுக்காய் துலங்கு நெய்க் கோர்கழஞ்சு
பொற்பெறும் நெய்வடித்து நக்கப்போகு முள்ரோகம்.

அக்கரத்திற்கு

அக்காரம் நாவிலேறி யக்காரக் கிராம்பு . . . .
மிக்கதோர் மாயக்காய் சாதிக்காய் சாத்திரவேதி நற்சீரகந்

தக்கதோர் கோரோசனை திப்பிலி யதிமதுரம் சமனெடையாய்க்
[கொண்டு
மிக்கதோர் முலைப்பால் தன்னில் மீட்டும் நீ அரைத்தருந்தே.

புண்ணுக்கு நெய்

ஆடாதோடையோடு வடக்கி
யவினும் புளியம் விரைத்தோடும்
தோடாவெம் பாடல் பட்டை
சுகமே சுகமே யுதிய மாச்சாறு
வாடா வெண்ணெய்தனில்
வருத்தி வெந்து புண்ணிதனிலிட
ஆறுப்புண்ணுமாறி விடு
மனமே தீரு மருந்திதுவே.

கரப்ப னெண்ணெய்

பாடவரைமேனி பருந்துளசி யிண்டிசங்கு
ஆடாதோடை தூதுவளை யாங்காந்தை—தேடரிய
நொச்சி கண்டங்காரி வேர் நுதற்கனி யுந்தும்பிக்கை
யிச்சையுடன் பாதத்திலைமுருக்கு—வுச்சிதமாங்
குட்டித்தக்காளி கொடிக்கழற்சி பூவரசு
கட்டளையாய்க் கொற்றான் கருநொச்சி—திட்டமுடன்
சேரப் பதினெட்டும் சிக்கனவே தானிடித்து
வாரநீரோ ரொன்றைப் படியாய்—வாரமுடன்
சிற்றாமணக் கெண்ணெய் தெளிவாக நாழிகொண்டு
வித்தாரமாஞ் சாற்றில் விரவியே—யுற்றது கேள்
பூதாவிருக்க மஞ்சள் புதுச்சீ னப்பா வெருகு
சீதாமதாவரிசி செங்கத்தாரி—போதவே
சதகுப்பை வாய்விளங்கந் தக்க கருஞ் சீரகமு
மிதங் கொத்த மல்லியுட னீரைந்தும்—பதமுறவே
யோரொன்று முக்கழஞ்சு யொக்க வரைத்துக் கலக்கி
பாரமெழுகின் பதம் வடித்துச்—சீராகக்
காலமேநித்தம் கரண்டியொன் றுற்று கொண்டக்கால்
பாலன் கரப்பன் பலவும்போம்—ஞாலத்தில்
வாதங் கிரந்தி குட்டம் வந்தகடி விஷங்கள்
நாதர் திருவருளால் நாடாது—போகுமென்று
ஆதலால் சொன்னா ரறிந்து

பெரும்பாட்டிற்கு நெய்

பொன்னை மிகச் செலவழிக்கு மும்மதத்தி லொன்றும்
பொருந்து வன்னைத்தஞ்சி லொன்று மாறெழுத்தாய்ப்
[பொருத்தி
முன்னதினு மிடையதினுஞ் சார்வெழுத்தை நீக்கு
மொழிந்ததில் போதனை தெரித்தெடுத்துக் கொண்டு
தன்னதனையனல் வெதுப்பிப் பொடித்தால் நீர்த்திரளை
யொடு தகைமையுடன் கொண்டால்
பின்னையது தனை மீறிப் பெரும்பாடு தொக்கில்
பெண் கொடியே நீ யென்னைப் பித்தனென்று பேசே.

இதற்குவகை—சாளை வெதுப்பிப் பொடி வெருகடிப் பிரமாணம் வெல்லத்தில் கொடுக்கவும்.

எலும்புருக்கிக்கு

நாலெழுத் திலோர் கனியை நவற்றுளியுங்கூட்டி
யிரண்டதில் முன்னீ ரெழுத்தை நறுக்கி யெறிந்தப்பால்
சிலமறிந் தானையளவே யளவெடுத்து மிருநாழிச்
சலம் விட்டெட்டொன்றுக்கிக் காலையுடன்
மாலையிருபோது கியாழமதைக் காய்ச்சி யருந்திடில்
ஞாலிலிதை மீறி யெலும்புருக்கி மீகில் நாரியரே
பித்தனென நகைத்திடு மின்னுரே (?)

இதற்குவகை—வாழைப்பழஞ் சீலைத்துணி நையத்தட்டி சட்டியில் போட்டுப் படுபாதி தீப்பிடித்தால் வாழைப் பழத்தை உரித்துப் போட்டு இரண்டு படி தண்ணீர் விட்டுக் கால்படியாக வற்ற வைத்துக் கொடுக்கவும்.

பிரமியத்திற்கு—கல்லடைப்புக்கு—மேகவெட்டைக்கு

அணங்கினுடன் சஞ்சலமோ டொருமாக்காணி
யற்பமுட னதின்பேரை யணியாய் வைத்து
யிணங்கவரும் நடுவெழுத்துப் பேரிலபால
யிருநாளசி கத்திரத மெண்சுவடு யுழக்கு
மஞ்சளொனுமிச்சம்பழ மொன்றாகக் கூட்டி
மெழுகு பதத்தொற்றே கொள்ளில்
மணங்கமழும் குழலாற்கு வருந்தத் தீரும்
வடிவெலா மருந்திதனை வருந்திச் செய்யே.

வேறு

தந்திமூலப் புனலுந் தந்திதரு வெண்கருவும்
மந்திர நல்லெண்ணெய் சரிமத்தித்து
முந்திபிடி வேறருந்தப் போமே மேகங்
கடுப் பெரிவு பாடுங்கிராணி பெரும்பாடு.

துன்மாங்கிஷத்திற்கு

சீனக்காரம் பொரிகாரம்
திரளிந் துப்பு சவுக்காரம்
தாழுந் தொடுந்துப் பொடியாக்கித்
தனிநா யுருவி பனங்கருக்கு
பானங் கதலித் தண்டுடனே
பரிவாய்ச் சுட்டுப் பொடியாக்கித்
தேனில் குழைத்து விழுங்கிடவே
தெறிக்குங் கல்துன் மாங்கிஷமே.

எலும்புருக்கிக்கு நல்லெண்ணெய்

மாதைக் கெடுக்கும் நோயதற்கு
வைக்கு மெண்ணெய் ஒருபடி தான்
பாதம் பெரிய பாண்டமதில்
பகர்ந்தே மூவுழக் கதுவுழக்கு
நீதப் படவே கிண்டிக் காய்ச்சி
நிலத்தி லிறக்கிக் கணபதியைப்
போதமாகத் தான் தொழுது
போடு மருந்து சுடச்சுடவே. 1
சூதம் லிங்க மதி மதுரந்
துத்தம் வெள்ளைக் குந்திருக்கம்
மாதற் கினிய பத்திரியும்
வளருங் கிராம்பு இரு சீரகமும்
துதய வின்சேர் திரிகடுகு
துருசு கறுத்தக் குந்திருக்கம்
நீதம் பெரிய கருடபச்சை
நிறுத்தே வகைக்கு மீரரையாய். 2
அரையீ ருள்ளி நாற் கழஞ்சு
அந்த எடையே கொடுவேலி

உரையீர் ரோசனை வலம்புரிக்கா
யுருத்திரா க்ஷம்வகைக் கோர்கழஞ்சாய்க
கரையப் பருத்தி யிலைச்சாற்றில்
கடுக வரைத்து வெண்ணெயிடில்
நுரைதான் மிகுதி தானெழும்பில்
நுகந்தே பதத்தில் வடித்திறக்கே. 3

இறக்கி யுடம்பு தனில்பூசி யியல்வா
யுள்ளுங் கொடுத் தந்திசந்தி
யுறக்கம் வருமுன் வெண்ணீரா
லுகந்தே குளிப்பீர் மண்டலந்தான்
சிறக்குஞ் சிவப்பு வெள்ளையுள் ளுருக்கி
சிக்கி நிற்கும் பெரும்பாடோ டெலும்புருக்கி
பறக்குங் கிரந்தி பிரமேகத்தினால்
படர்ந்த நோய்கள் தீர்ந்திடுமே. 4

நிதம்ப சூலைக்கு

முடக்கொற்றான் சாறு நல்லெண்ணெ யுரியமுக்குறு
வேர்க்கொம்பு வசம்புள்ளி பெருங்காயந்
திரிகடுகு இந்துப்பு சீனக்காரஞ் சீதாளி தேவதாரஞ்
யோரோன் றடுக்கிட்டரை கழஞ்சு [சதகுப்பை
அரைத்துக்கலக்கி யடவாக வெந்திறக்கி யனுதினமும்
கொள்ள நெடுக்கிடக்குமிக வலித்து
வரும் நிதம்பசூலை நிச்சயமாய்த் தீருமென
அம்முனிவர் நிகழ்த்தினரே.

உட்சுரத்திற்கு நெய்

மூன்றிய சுற்றுக்காரஞ் சடைச்சிவேரு
மீண்டு சதாவேரி வேரிவை குருணிகொண்டு
கண்ட வன்கரும்பு வாழைக்கிழங்கு செவ்விளநீர் பாலும்
பாண்டமோ தன்னிலிட்டுப் பசுவின்நெய் குருணிசேராய். 1

சேருங் கற்க மதிமதுரந் திப்பலி கோட்டம் கல்நாராம்
பேருமிலுப்பை பூமாஞ்சிப் பேரீந்து சந்தன மரமஞ்கள்
சாரு முந்திரிகை யிலாமிச்சுத் தனியோ ரிரண்டு கழஞ்சாக
வார வரைத்துப் பதத்தில் வெந்து யாமே யிறக்கிக்
[கொள்வீரே. 2

கொள்ளும் பேயன் பழத்துடனே கூறும் வட்டுச் சற்கரையு
மெள்ளத் தோய்த்துத் தினமுண்டால் விரும்பும் புளியும்
[தவிர்ப்பீராய்த்
துள்ளு மிரத்த குன்மமுடன் சோகை பித்தம் பாவாவா
முள்ளில் சுரமு முழலைசத்தி யோடிப் பதுங்குங் கண்டீரே. 3

வேறு

ஆவின் பாலுட னன்புடன் சீனியு
மேவுசாத்திர வேதியு மாகவே
தாவி நாற்பது நாளது தான்குடி
பாவு முள்சுர மோடிப் பறந்திடும்.

காயாக்குடி நீர்

வேறு

வாச மிகுந்த வசுவாசி வளருங் கிராம்பு கல்நாரும்
நேசமுடனே யிலவங்கம் நேராம் ஏல மிலாமிச்சுப்
பாச முடைய விருசம்பட்டை பகரும் கோட்டம் சண்பகப்பூ
வீசுங் கடுக்காய் தான்றிக்காய் விளம்பு மதிமது ரங்கூட்டே. 1

கூட்டுந் திப்பலி வேர்க்கொம்பு
கூறிய சீரகம் கருஞ்சீரகம்
வேட்ட முடனே சாத்திரவேதி
வேண்டு மாதளம் பிஞ்சுடனே
நாட்டு மாசிக்காய் சாதிக்காய்
நயந்தே யோரொன் றுருகழஞ்சே. 2

கழஞ்சே நாழுழி புனலில்
கடிதாயூறி யுட்க் கொள்ளில்
விளம்பும் பித்தங் காமாலை
விதமாம் வரட்சி யுட்க்காய்ச்சல்
ததும்பி யோடிச் சகந்தனிலே
விழுந்து விடுமென்ற கத்தியரே
விதமாய்ச் சொன்னார் மெய்யென்றே. 3

இருமலுக்குக் கஷாயம்

இண்டிகை மிளகொடு யிசங்கு தூதளை
கண்டுநற் சர்க்கரை கலந்து காய்ந்தநீர்

உண்டிடி லொருவருக் கிளை வந்திடில்
தெண்டமு மிருத்துனன் தோஷ மல்லவே. 1

வேறு

உப்பிலியு மோரு முகந்தவிடத் தோலிலையுஞ்
செப்பமாம் முசுமுசுக்கை சீர்கொற்றான்
சொற்பெரிய கோவினுடை பாலிற் குடிக்க
உளமாந்தை நோவுமிளை யிருமல் விடும். 2

நெல்லி சற்கரை நெற்பொரி திப்பலி
நல்ல தேனில் நறுநெய்யில் கொள்வீரால்
இல்லை யில்லை யிருமலு மிளையும்
சொல்ல வேணுமோ சோகையுந் தீருமே. 3

குன்றி முசுட்டை கொடுவேலி கூறும் பருத்தி யிலைதானும்
நின்று நிலத்தில் குமிழிலை யிலையும் நீதி பயிலும் பீலியிலை
சென்றே யிடிக்குஞ் சிற்றுமுட்டி சேர வரைத்தா வின்பாலில்
அன்றே குடிக்கில் உளமாந்தை யகன்றே புண்ணு மாறிடுமே. 4

வேறு

குறிஞ்சா யிலையைக் குருவை நெல்லு மாவினுற்
செறிந்தேகளி யெண்ணெயுடன் தின்னவே
அறிந்த உளமாந்தை மூச்சு வுடம்பிலுள்ள
நோயுங்களை தீர்ந்து கண்ணடைக் குங்காண். 5

வேறு

வேங்கை மரத்தின் தோலுடனே மென்குறுவை நென்மாவை
யாங்கதனைப் பிட்டதாக்கிப்—பாங்குடனே
யெண்ணெயுடன் சேர்ந்தருந்தயென்று முளமாந்தையதில்
புண்ணீரும் சீயும் போம் போம். 6

வேறு

நிலக்குளத் துடரி பூலா நினவினில் நின்பம் பஞ்சு
பலப்படி யஞ்சுங் கொள்ளப் பலசாக் கதனைக் கேட்க
நலப்படு கோட்ட முள்ளி நற்கடுகு நெல்லி தான்றி
குலப்படு மருது பாடல் கூட்டிநீ எண்ணெய் கொள்ளே. 7

குறிப்பு—இந்த யெண்ணெயைப் பதினெட்டு நாள் கொள்ளவும்.

வேறே யெண்ணெய்

சித்த ரருந்தும் சிவவேம்பு திருந்து நிலத்தில் குமிழ்வேருங்
கொற்றன் கோட்டம் வெட்பாலை குலவுங் கருஞ்சீரகம் மதி
[மதுரம்
மெத்த மிளகு திப்பலிகைப் பாய்வெந்த எண்ணெய்
[விழுங்கியதால்
பத்தோ டெட்டு நாள் விழுங்கப் பறந்து போகு முளமாந்தை. 8

வேறு

இப்பெரிய சங்கினோடு யின்பூறல் சாரணை
யல்லியுடன்படி யாடாதொடை
யியல்புடைய தூதுவளை சின்னி கையாந்தகரை
யிலைமீள வேருடனே
மைக்குருவை வாரியொடு சிற்றமுட்டி மாகாணி
வலிதோல் பூவுடை
வேர் மருவு தேவி யோரிதட் தாமரையார நல்ல
வன்ன முத்த வமுதவல்லி. 1

செப்பரிய செவ்வள்ளி கொத்தமல்லி
செய்வதோர் மதுரம்
நெல்லி நற்சீரகம் சேரு கற்கடகமுடனே
திப்பிலி கருஞ்சீரகஞ்
செறிசுப்பையுடன் வெம்பாடல் நயப்பட
வடித்த யெண்ணெய் நக்கில்
நாறுமுள மாந்தையுடன் நயக்கில் விற்புருதி
நயமான ரோகமிவை தானனைத்தும் நொந்தே திரும். 2

பக்கமந்தாரத்துக்கு நெய்

சுக்குடன் மிளகு திப்பிலி தூதளை வட்டுச் சிந்தில்
தக்கதோ ரொன்று கூட்டிச் சமனகச் சாறுகொண்டு
வொக்கமுன் னுழி தண்ணீ ரொன்றதா யரைத்துக் காய்ந்து
நக்கவே நறுநெய் தேனில் நன்றெனக் காசம் போமே.

இருமலுக்கு

கையாந் தகரை நாயுருவி கருந்தக் காளி தூதுவளை
மெய்யா பெருக்க மொட்டு ரெண்டு வேலி பருத்தி இலை நாலு
நொய்யா வரிசி யொருசிறங்கை நோக வரைத்து அடைசுட்டுக்
கையா லெடுத்து உண்பீரால் கனத்த இருமல் ஏகிடுமே.

நாயுருவி மாவுடனே நற்சூடனெட்டொன்றன் பா:ர்
நேய வெருசேஷுவின் பால்—தூய இஞ்சி
இந்தனுபானத் திருமல் வரட்சி
சயமது மீளைப் பிருமலோடும் (?)

நெய்

வேறு

உள்ளி மிளகு சீரகமும்
முத்த கடுக்காய் திப்பிலியும்
தள்ளுஞ் சுக்கு மோதகமுஞ்
சசி இந்துப்புக் கிராம் பதுவுங்
கொள்ளுங் கற்கங் கடுகுரோகணியுங்
கூட்டுங் கருஞ்சீரகம் வகைகழஞ்சு
விள்ளுந் தூது வளம்பழமு
மிகவே யொருபடி தானிதுவே. 1

இதுதூ தளேவே ரிரண்டுபல மிதில் நெய் நாழி வேப்பஞ்சாறு
யதுதான் சிறங்கை யொக்க விட்டங் கடவே காய்ச்சி அன்பாக
பதமே வரவே தான் மெழுகு பதத்தில் வடித்துக் கொள்வீரால்
கதமே யீளை முதலான காசந் தீருங் காணுமிதே. 2

குடிநீர்

சீயக்கா யரைப்பல மிடித்து நாலுபடி தண்ணீர்விட்டுக் கால் படியாகக் காச்சி அதிலொரு எலுமிச்சம் பழம் பிழிந்து கலக்கிக் கொடுக்கவும் மந்தார இருமல் தீரும்.

* வேறு

வைத்த எருக்கம் பால் சிரங்கை
மணக்குங் கிராம்பு திரிகடுகு
மெய்த்த நிலவி னுப்புடனே
மேவுங் கருஞ்சீ ரகப்பொடி
நெய்த்த புள்ளிச் சன்னசாலை
நிறையோ ரொன்று தான்கழஞ்சு

---

* இம்மருந்தில் எருக்கம்பால் சேர்வதா லிதைக் கவனமாகப் பயன் படுத்தவேண்டும்.

கைத்த கரைப்பி ரமியிலே
கசக்கிச் சாற்று லரைத்துலர்த்தே. 1

உலர்த்திப் பொடி செய்தொரு நாளே
யொருவெரு கடிதான தைக்கொள்ள
பிலத்ததோர் பாண்டு வென்னிற்
பெறு நறு நெய்யிற்கொள்ள
நலக்கும் வெப்புப்பாவை யெனில்
நல்லெண்ணெய் சீனிகொள்ளக்
கலக்குங் காசரோகமெனில்
காயாப்பாலில் கொள்வீரே. 2

குளிர் வெதுப்புக்கு

சீரரும் சிற்றரத்தை கொத்தமல்லி சிறந்த சுக்கு மிளகுடனே
[வெள்வெங்காயம்
நேராக வரைத்திள வெந்நீரில் மூன்று நாள் கொள்ளப்—
தோகை கண்ட சர்ப்பம்போல் பறந்துவிடும் [பாரறியத்
குளிர் வெதுப்புப் பண்பாய்ச் செய்யே.

மாறலுக்கு

பண்பாகக் கைமிள கோர்கழஞ்சு
பாரறியுந் திப்பிலியு மோர்கழஞ்சு
யன்பான துளசிதனைப் பறித்திடித்து
யடவுடனே யிம்மருந்தைப் பொதிந்து நன்றாய்ப்
பொங்குகின்ற உடல் மேலே பிட்டவித்துப்
பிழிந்துழக்குச் சாறுகொண்டு யிதமாய்த்
துன்பமற இம்மருந்தை யரைத்துக் கரைத்துச்
சூக்ஷுமுட னெடுத்துறிஞ்சிக் கொடுப்பீராகில்
தங்கியதோர் நாலுநாள் மாறல்
தவராமல் போமென்று ரிமையோர்தாமே.

வேறு

இல்லத்தி லிருக்குங் கேசமெடுத்து நீ கதிரில் சேர்த்துச்
சில்லெனு மணலில் வாட்டிச் சேர்த்துநீ பொடிய தாக்கி
வெல்லத்தில் பழநீர் தன்னில் விரும்பினபோது தின்ன
வல்லுற்ற நாலா மாறல் போமென்று சொல்லே.

பூச்சு மருந்து

விடுமே மகிழி லுப்பைப்பட்டை
யிசைய வரைத்து யதனுடனே
யடுமே பாவட்டைச் சாறுரிய்
மடுக்காய் காய்ச்சி மேல்பூச
வடுவும் வீக்கம் கைகால் கனப்பு
மற்று முகத்து வீக்கமது
மோடுமே யுடலில் விஷபாகஞ்
சோகை தானும் போய்விடுமே.

உள்ளி சிற்றுமணக்கெண்ணெய்

கொற்றான் கொழிஞ்சி கொடிவேலி
கூட்டு மரையி லமுக்குறு
மட்டார் சாரணை மிலவங்க
மறுத்து நொச்சி குறுந்தொட்டி
சிற்று மணக்கு நெருஞ்சி வீழி
செருந்தை வேளை முத்தாமுன்னை
முதிய கூந்தல் மூளுங் கொடிச்சி
முத்தெருக்குப் பொற்றுணிவை
தன்னிவையோ ரென்று பேணிப் பேணி
யொருபலங் கொண்டுற்றகாடி
இதில் துணியுடனுள்ளி நாற்
பலங்கொண்டு வற்ற வெரித்தங்
கெட்டொன்றுக்கி மறுத்துக்கொள்ளுஞ்
சாறினிக் கேளிடிக்கு நொச்சி
கொடிச்சியு காய்ப்பேணுங் கொத்
தான் தழுதாழை தடுக்குந்தை
வேளை கையாந்தகரை தன்னுஞ்
சாறணை சங்கங்குப்பி இடித்திங்கினி
இவையோரொன்று யேற்குஞ்
சாறுழக்கு யிதனுடனே
தொடுக்கும் நாழி சிற்றுமணக்கின்
தூய்ய யெண்ணெய் அதில்விட்டு
அடுக்கு மாத்தை சதகுப்பை
அசமோதகம் வசம்பு இந்துப்பு

மடிக்கத் தக்க பெருங்காயம்
மன்னும் தேவதாரமுடனெடுக்கும்
விளால் வெற்பலை யென்னும்
ரோகணி மஞ்சிட்டி கடுக்குஞ்சீரகம்
செவ்வியங் கரிய சீரகம் சிறுமூலக
மறுத்துங் கழஞ்சிவையோ ரொன்று
மன்னும் கள்ளிப் பாலுழக்கு
மறுத்திங் கரைத்துப் பதத்தில் வடித்துப்
பையநக்க வல்லீராய்
வாயு விகார மெல்லா மறுத்தும்
வாராயுள்ளி சித்தாமணக்
கெண்ணெயின் வழி யிதுவே (?)

கணை யெண்ணெய்

தென்னங் குறும்பைச் சாறுழக்குச்
சீராங் தகரைச் சாறுழக்கு
வன்ன முலையார் பழம்பாசி
வகையா யீருள்ளிச் சாருழக்கு
யின்னங் குமரி வேர்ச்சாறு
மினிய அவுரி மஞ்சணத்தி
கன்னல் செறியும் விளக்கெண்ணெ யூறிக்
கலந்தே யொன்றாய்க் காச்சுவதே. 1

ஏல மரைக்கழஞ்சு யிலவங்கப்பட்டை கோட்டஞ்
சாலவே நற்சீரகம் சந்தனமதிமதுர மாயக்காய் ரோசினிகிராம்பு
காலமே யரைத்து வெந்து கதிக்கவே யுள்ளுக்குக் கொண்டால்
ஆலமே கணையானெட்டு மாறு மென்றிருஷி சொன்னார். 2

மஞ்சள் காமாலைக்கு விளக்கெண்ணெய்

கீழ்க்காய் நெல்லி சிறுகீரை கேளீருள்ளி பூவரியுங் கேளாய்
வெள்ளாட்டின்சாணி கொடுப்பைச்சாறு வகைக்கு வகை
நாளாயறைப்படி தன்னுடனே நல்ல விளக்கெண்ணெய் ஓர் [படியுங்
காளாய் கலத்தில் தனிச் சேர்த்துக் கற்கங் கலந்த யெண்ணெய் [பருப்பதுதான்.

தானே கஸ்தூரி மஞ்சள் சன்னிறைப்ன் கருடப்பச்சை
நானே கத்த வித்துடனே நன்றாய் வகைக்கு இருகழஞ்சாய்க்
கானே காஞ்சூர் விரைபதனைக் கனலில் வெதுப்பிப் பொடித்திரு
[கழஞ்சு
தானே பதத்தில் கடுகுடனேகொள் தப்பா தொழியுமப்பாவரித்
[திரோகமீதே

குன்மத்துக்கு ஏரண்டத் தெண்ணெய்

உள்ளி இஞ்சி இந்துப்புற்ற சிவதை செவ்வந்தி
கொள்ளும் நிலவாகை கூட்டு மிளகு திப்பிலியும்
உள்ளே ஏரண்டமுடனே முடக்கொற்றான்
கள்ளா தொக்கக் காட்டுப்பால் தன்னேடெரித்து வெண்ணெய்
[கொள்ளே. 1

கொள்வீர் குன்மங் குடல்வாதம் கொடிய பிலிகை யட்டலிகை
யுள்ளே பிறந்த வலக்கட்டுடனே பிறந்த சிலங்
கொள்ளீர் பக்க சூலே வலிக்கு மிறும் வாய்வுப் பெருவயிறுப்
பிள்ளையுண்டாமென்று மிகப் பெரியோருரைத்த மருந்
[திதுவே. 2

சத்திகுன்மத்துக்குக் குடிநீர்

நெற்பொரியுஞ் சிறு பயறு வில்லே முன்னை
நெறியசீ ரகமுடன் சுக்கு நெல்லி
முற்படவே யிளநீரில் காய்ந்தீ ரொன்றாய்
முற்றியபின் னெடுத்துவடித் தூற்றிக்கொண்டு
சொற்பெரிய சத்திகுன்மம் வெதுப்பகற்றி
யோராத் தண்ணீருழலே துயரங்காந்தல்
வெப்புடனே வானீரும் வேர்வைமந்தம்
விட்டகன்று போமெனவே மேலோர் சொன்னார்.

அட்ட குன்மத்துக்கு

எருக்கு நொச்சி கொற்றான் கொழுஞ்சி
யிசங்கு வெற்றிலே கருவேம்பு
முருக்குச் சாறுடன் முன்னை முதுகுந்
தேங்காய்ப் பால் நாநாழி
இருக்குந் திரிகடு கிந்துப்பு யிருசீரக
மிருகாயம் . . . .

நறுக்கிச் சாற்றால் குழம்பாக்கி
நக்கப் போமே யட்டகுன்மம்.

கூட்டியத் தித்திப் பிலியுங் குலாவிக்காந்தங் கந்தகமும்
வாட்டிய வீளிவேரும் வகையுடன் கூட்டிக்கொள்ள
நாட்டமாய் வேகவைத்து நலம்பெற வடித்துநக்கத்
தேட்டிய வாதகுன்மந் தீர்ந்திடுந் திண்ணந்தானே.

வேறு

இளநீரிஞ்சிச் சாறுள்ளி
யிதுவுந் திரிகடுகிந்துப்பு
யளவே கொண்டரைத்து வழித்து
யளவில்காய்ச்சி ரெண்டொன்றாய்க்
கொளவே வாதகுன்ம மாறுங்
கொள்ளே யேழு நாளளவே
மீறில் . . . நன்றனி
விசைந்த தெண்ணெய் கூட்டுகவே. 1

கூட்டுள்ளி யாறுபலம்
கொடுவே லிஞ்சி நிலவாகை
யோட்டு வீழி சாறணெய்பு
மொன்றொன்று ஒருபலமாய்த்
தோட்டம் பெரிய திரிகடுகு
தெளியுஞ் சோமனுப்பதுவும்
காட்டில் கள்ளிப்பாலுடனே
கலந்தே யெண்ணெய் தனிற் கொள்ளே. 2

பித்த சூரைக்கு

பித்தசூரைக்கு குணமென்று பெருக்கக் கண்டபோதே நீ
யுத்த நெற்பொரியுங் கூவிளே வேருங் கூட்டி
யுற்றதோர் பயத்திற் சாற்றி யுறுகுள மதுவுங் கூட்டி
வெச்செனக் குடித்த போதே விரையவிட் டேகுந்தானே. 1

பயத்தினிற் பருப்பைப் பொங்கிப் பருகிள நீரைவிட்டு
வியற்பிற விரிசி யீங்கு பிழிந்து நீ ருத்திக் கொண்டு
நலம்பெறச் சீனி கூட்டி நற்பெறக் குடித்த போது
தியக்கிடும் சத்தி மாறித் தீர்வது பயித்திய மென்றே. 2

எரிப்புட னுளைவு கூடி இளகியே மறுகி நிற்கில்
பருத்ததோர் கழஞ்சு சுக்குப் பனஞ்செளப் பொடித்துக்
[கொண்டு
தரிப்பொற் கொண்ட போதே தணிந்திடும் பயித்தியஞ் சூலம்
வெருக்கொளு மிவைகள் கண்டால் மேவிநீ செய்திடாயே. 3

பித்த வெடிக்கு

தூய்ய ஆவெண்ணெய் தன்னைத் துவக்குறக் கழுவிக் கொண்டு
வெய்ய சயிந்தந் தன்னை விரைந்தரைத் ததனிற் கூட்டிப்
பையவெ டியுங் காணில் பருகிடில் பித்த சூலம்
உய்யவே றில்லை யென்று உடலைவிட் டேகுங் காணே.

எரி சூரைக்கு

சீந்தில் வேர்க்கொம்பொடு செய் குறுங்தொட்டியுஞ்
சாந்த மிலிலா மிச்சிருவேலி சந்தனங்
காய்ந்த நீரிவை யுழக்காக வெந்துநீ
பருகிலெல்லாம் போமெரி சூரையே.

வாய்வுக்குக் குடிநீர்

அரமுறி சூலத்தை சுக்கதிற்கொடி வேலி கொற்று
றுரைகள் ளுள்ளி புங்குவுற்றிவை குடித்துப் பின்னை
விரசிநீருண்டு நாளில் வெந்துழக்காக் காய்ச்சிப்
பருகுமோ ரெண்ணெய் தன்னைப் பறந்துபோம் வாய்வுதானே.

ஆமணக்கெண்ணெய்

உள்ளியின் சாறுகொண்டு ஊறநற் தயிலம் நாழி
கள்ளியின் பாலுங்கூட்டி கடுகப்போ வுழக்கு வீசி
வெள்ளிய விந்துபற்று மிராமட மைங்கழஞ்சு
கொள்ளுங் குமரிச்சாறு கூட்டிநீ வெந்து கொள்ளே. 1

உற்றநற் பதத்திலிங்கு ஒுறமிக வடித்துப் பின்னைச்
சுத்தமா முனியை நோக்கிச் சுகம்பெற நுகரும் போது
குத்துவ சூலைகன்னக் குடகரி யுடனே கட்டுச்
சத்திய மிதனைச் சொன்னேன் சாந்தமா மிதனைப் பாரே. 2

சந்துவாய்வுக் குடிநீர்

கொடிக்கழல் பருப்ப துள்ளி கொற்றவ னிலைச்சா றுப்பு
யிடித்திலைச் சாறு நொச்சி யியல்பெறக் காய்ச்சிப் பின்னைக்

குடித்திடில் சூலை குன்மங் குடிவழி தனைவிட் டேகும்
நடித்திடும் காத ஞானை நாமிது கண்ட தாமே. 1

கொடிக்கழல் பருப்ப துள்ளி கொடிய யிந்து காயமும்
வெடித்த சுக்குடங்கணமு மரீசமோடரைத்த நீர்
தடித்தண்டதேவ திற்றுங்கரைத்துந் திடிற்
புடைத்தெழுந்தயன் சூலை வாய்வு போகுமே. 2

சூலை குன்மத்துக்கு

கொடிக்கழல் பருப்பதுள்ளி கொடியிந்துப்புக் காயமு
மடித்தண்டத் தெண்ணெய் சுக்கு வானந்த மரீசமும்
பொடிதாள வரைத்து நீர்புகளுறக் குடிப்பிராகில்
வெடிப்பாந்த சூலை குன்ம மேவியஞ்சிப் போமே.

உள்ளி ஆமணக்கெண்ணெய்

முத்தாமணக் கெண்ணெயுரி
உரியுப்பு வுள்ளியுறு பெருங்காயமும்
வற்றுதை வேளையின்சாறு மதித்த
பிரமி கொன்றையின்சாறினி
லுற்றபோதொரு காசத்தனை
யதை யுண்டபோது குன்மம்
பிலிகையும் பறக்குமண்ட
விருத்தியும் பகர்ந்தே சொன்னேந் தப்பாதே.
கொற்றுனிலையுங் குமரியுடன்
கோலக்கழற்சி யிலைகூட்டி
சிற்றுமணக் கெண்ணெய்
சிறுகக்குறிஞ்சா வேருடனே
கற்றுவின் பால் நாழியதில்
கலந்து காய்ச்சி யுண்டுவரில்
பற்றார் சயிந்த முடனே
பருகிற் குன்மம் பறந்திடுமே.

குடகரி வாய்வுக்கு

குடக்கரி தனக்கு மங்கே குறுகவே கிறுகை சொல்லி
உடல்விலா முதுகு நெஞ்சு உகந்துதான் வெண்ணெய் நெய்யும்
இடமுறு மிந்துங் கூட்டி இதமுடன் காடி கூட்டிச்
சுடச்சுடக் காய்ச்சி ஒற்றத் தூரவாங் குடகரியே. 1

செற்பெறு மெண்ணெ யிந்துச் சுக்குட னுகர்வ தென்னப்
பற்றற வலித்துப் பின்னைப் பகர்ந்தசே யெரிக்கு மாகில்
சற்கரை நாழி நீருஞ் சாசந்துற் விருக்கு மாகி
லுற்றது வலித்துப் பின்னை வுளேசிக் குடிப்ப தென்றே. 2

யுதரமே கனத்து விம்மி யுற்றுற வலிக்கு மாகில்
பதறவே வேண்டா . . . . நதங்கெண்ணெய் நெய்யால்
சிதரவே யொழுக்கி யொத்தச் சீரிய உள்ளி யிந்து
திற்பலியுங் கொண்டதாறப் பெய்து நீர்குடிப்பதென்றே. 3

இந்துவும் நெய்யும் காய்ச்சி யியல்பெறக் குடிக்கி லேகு
மிந்துவுஞ் சுக்குநீரு மியல்பெறக் குடிக்கி லோடும்
இந்துவு முள்ளி கொற்று ணிசையுடன் கொள்ள மாறு
மிந்துவும் பாலு மாகு மியல்குட கரிக்குத் தானே. 4

குடிநீர்

முருங்கை வன்னி முள்ளியொடு முரண்டவேர்ச் சாரடையும்
பருங்கழற் கொளுஞ்சி சுக்குப் பகர்ந்து யிரண்டு நாழிநீர்
வருந்தியங் குழக்க தாக வசந்த காலங் குடித்திடில்
விரும்பி யந்தக் குடகரிகள் விரைந்து யேகும் விட்டல்லோ. 1

ஆமணக்கெண்ணெ யிந்து வமந்துறக் குடிக்கிலேகும்
ஆமணக் கெண்ணெய் பாலுஞ் சமனதாய்க் குடிக்கில் மாறும்
ஆமணக் கெண்ணெய் காடி யழகிதாய்க் குடிக்கி லோடும்
ஆமணக் கெண்ணெ யார்க்குங் குடகரி யேகு மென்றே. 2

அசுரவேதனை யறுக்கும் மருந்தேதைவயில்லை யென்றால்
நல்லெண்ணெ யாற்றுளவே நனைய வைத்து வொத்தில்
தீயங்கியவாதம் நீயுமிலவணத்தில் கட்டில்
சங்கரனுனை கண்டாய் சடக்கென வோடும் நோயே (?) 3

நாவி சூலத்திற்கு

கடுத்திடு கடுகு விந்து கழல்பொடி சுண்டைவற்ற
லிடுகாயமுள்ளி யிங்கரி வேம்பு வீளி
பொடிப்பட வருத்திடித்துப் புரையற உண்டபோதே
நொடிக்குமுன் செரித்துவாய்வு நொந்துறு சூலைபோமே. 1

காடியு மேறுஞ் சுக்குங் கலந்துறக் காச்சிக் கொண்டு
கோடுறக் குடித்த போதே கொடியதோர் சூலை யேகும்

பீடுசெய்யாம லெல்லாம் வெந்தபின் பாகு செய்து
நாடியே ரோக மெல்லாம் நலம்பெற மாறுந் தானே. 2

சுக்குத்தேறுடு கூவிளைவேர்
ஒக்கச் சேர்த்து மோரில் கலந்துட
னப்புக் கட்டோங்கும் புரைத்தெழு சத்தியு
மிக்க சூலை மிக விரைந்தேகுமே. 3

உத்தமோதகஞ் சுக்கு உறமோர் தன்னிலிட்டு
மற்றநெற் பொரியுங் கூரில் மருவவே மோரை வார்த்துப்
பற்றறக் காய்ந்த போதே பாகமாம் நாமங் கேட்டு
ஒற்றவுள் ளுளைந்த சூலம் நலம்பெற மாறுந் தானே. 4

சூரைக்கு

பங்கம் பாளை வேர்க்கொம்பு பரிந்த முத்தக் காசுடனே
யங்கஞ் சொறியுந் தினவுண்டா மூடாக் காச்சிப் பருகிடுகில்
பொங்குஞ் சுரசூரை பொல்லா தென்றே நேரிட்டுப்
பங்கப்படாதே யிவை தீரும் பாரீர் பாரீர் பாரீரே. 1

வெள்ளுள்ளிச் சாறுநாழி விரவிய இஞ்சிச்சாறு
உள்ளிய தண்ணீர் மிட்டான் உரைசெய்யாக் கன்னி நெல்லி
யுள்ளதோர் சாறுநாழி யுரைக்கிலா வின்பால் நாழி
மெள்ளவே கஷாயமுற மேலிடு மருந்துதானே. 2

தானதே கொடிவேலி முல்லை சாறணை வீழிமுத்த
மானவாதண்டை சிற்றாமணக்கெண்ணெ யிவை யறிந்து
தானதோர் புளிப்புக் கைப்புத் தவிர்த்தே கொள்வீராகில்
ஆனதோர் சுரமாஞ்சூரை யடவுடன் தீருமென்றே. 3

கூவிளை யாயிலோடு கொடிவேலி நற்கடுக்காய்
தீவிளல் வேற் கொம்பு திப்பிலி நல்ல மஞ்சள்
ஓமமே யுரமுள்ளவற்கு மிகக் கழஞ்சுதான் கொள்ளத்
தாவியே பலன் கெட்டவற்குத்தானே கியாழம் அரைக்
[கழஞ்சே. 4

கொன்றை கொடிவேலா தண்டை கூவிளை சாறணை கடுக்காய்
குன்றி சுக்கு திப்பிலியும் குணமா மிளகு கடுரோகணி
யன்றிவரும் நேர்வாளம் வாறுருள்ளி இந்துப்பு
வொன்றவைதான் வகை பலமாய் வடித்து நக்கவுற்ற கடைச்
[சாக் கிருகழஞ்சே. 5

இருகழஞ்சு கூட்டி யிதமாயரைத்து
மருவிய சிற்றாமணக் கெண்ணெயிலே வார்த்துகா
வுரி இட்டு நலமாய் வடித்து நக்கயுள்ளில்
வருங் கற்சூரை போமே. 6

போமே நல்ல மஞ்சள் புடமிட்டு மென்பொடியாய்
ஆமே யதனிட் டருந்தாமல் தான் மேவு கற்சூரை
தாமே தீருஞ் சுகமுண்டாம் தக்க
சூலார் சொன்னார் விதம். 7

நிதம்ப சூரைக்கு எண்ணெய்

முடக்கொற்றான் சாறுரி நல்லெண்ணெயுரி
முசியா வேர்க்கொம்பு பெருங்காயந் திருக்கத்த
கடுகுடனிந்துப்புச் சீனச்சாலே சீதாரி தேவதாரஞ் சதகுப்பை
யொவ்வொன்றுறாரு கழஞ்சரைத்துக் கரைத்து
யடவாக வெந்திறக்கி வாணி தினமுங்கொள்

. . . .

நெடுக்கிட்டு மிகவரைத்திடும் நிதம்பசூலை
நிற்சயந் தீருமென்று நிகழ்த்தினார் முனிவர் தாமே. 1

பாம்புக் கண்டங் குங்கிலியம் பருக்க யில்லாமல் பொடிசெய்து
சாம்பல்போக்கித் தணலெடுத்துச் சட்டியிலிட்டு . . .
. . அண்டைபோன வுரலெடுத்து யாயிளே . . . விருத்தித்
தேம்பொற் பொடியை யதில் தூவித் திறமாய்ப் புகைவிடும்
[வலியே.

யோனி சூரைக்குப் புகை

சுக்கு மிளகு வசம்புள்ளி தூய மெழுகு குங்கிலியம்
ஒக்கக் கொண்டு பொடியாக்கி யோனியில் வெண்ணெய்
[தனைப்பூசித்
தக்க வாளித் தணலிட்டுச் சமைந்த பொடியை மேற்றூவி
யொக்க யிருத்திப் புகை காட்ட யோனி சூலை தீர்ந்திடுமே.

கற்பசூலைக்கு எண்ணெய்

உள்ளி இஞ்சி இந்துப்பு உற்ற சிவதை சீந்திலுடன்
கொள்ளும் நிலவாகை வேர்க்குலாவு மிளகு திப்பிலியும்
உள்ளேரண்ட வெண்ணெயுடனுறவே முடக்கொற்றா னிலையுந்
தள்ள கழற்கொடியுஞ் சாறணை வேருங் கொடிவேலி.

வெளித்திப் பட்டை மரமஞ்சள் மிளகு கடுகு பெருங்காயம்
அழுத்த முடைய சதகுப்பை யதிலி லங்கஞ் சீதாரி வருத்து
மெளிய காரம்பூ விள மருவுஞ் சாதிக்காய் தகரம் வசுவசுவரும்
வாளஞ்சில சரக்காயரைத்து வடித்து [நேர்
நக்குவதேயான கர்ப்ப வலி போமே.

கடுக்காய் மஞ்ச ளிந்துப்புக்
கடுகு வுள்ளி வெண்காரம்
அடுத்த விளியா மணக்கதுவும்
அந்த நிலவாகை . . . .
தொடுத்து மூன்று பலமாக்கித்
துலங்க வெறித்தா மணக்கெண்ணெய்
கொடுக்கக் கர்ப்ப வாய்வுவிடுங்
கூட்டுங் கள்ளிப் பால்கழஞ்சே.

நாய் நந்தியாவட்ட வேரை யரைத்து
நலம்பெறவே இளநீரில் கொடுக்க நன்று
மாயாத புளிநடலைக் கிழங்கு தன்னை
மாவுடனே மோர்க் கூழாக்கி யுண்ணவோடும்
பாயுமது தன்னுடனே கர்ப்பரோகம்
பரிபாரக் கிருமியது பகர்ந்த பூச்சி
தூயதாய்த் தீர்ந்துதான் போகுமென்றே
தொல்லுலகில் மாமுனிவர் சொன்னார்தாமே.

கர்ப்ப வாயுவுக் கெண்ணெய்

கள்ளியினிலையிற் சாறுங் கழலெருக்கிலையிற் சாறு
முள்ளியுஞ் சிவதை வேரு முத்தமதாளிச் சாறும்
வெள்ள வெங்காயந்தானு மெட்டு மெள்ளவே யெண்ணெய்
தன்னில் வெந்துற வடித்துக்கொள்ளே.

வெந்துற வடித்துக்கொண்டு வியன்பெற நுகர்ந்தபோது
நொந்துறு சுரோணித கெற்பம் நோயறவிட்டேகிச்
. . . .
சிந்துறு கனப்பு மேகித்திரியன் நோய் போகுந்தானே.

பெரு வயிற்றுக்கு

சுக்கு மிளகு திப்பிலியுஞ் சோம ணிந்துப்பு வெள்ளுள்ளி
தக்க கடுக்கா யிடையுடனே சாத்திர வேதிக் கிழங்குநீர்

மிக்க தெனவே வேப்பெண்ணெய் மீறாமல் கூழ்போ லெரித்
[தருந்தத்
துக்க மறவே யலைமலமுந் தோன்று உதர தோஷமுமே.

இரத்தப் பிரகபால நோய்க்கு ஒற்றடம்

புங்கிசங்குநிம்பம் புனவிகமுலுங் கிலு கிலுப்பை கொற்றா
நங்கை புதனைறியடம் புவுள்ளி மரள் வசம்பு
யிங்கணவை யுற இடித்து யிதமாக வருத்து வொத்திமற்கட்டில்
போங்குடலுற்ற வலி விட்டேகிப்போ மாரனைப் பாருமிதுநீயே.

எட்டிக் குடிநீர்

கனல் வேர்க் குறிஞ்சாவேர் கண்டன சாறணையின் வேரும்
கனல் புனமுருங்கை வேரு கடு கொற்றான் புங்கு சங்கு
வன்னுளிரண்டுங் காய்ந்துழக்காய்ப் பிசைந்து யண்டத்தோ
[வயிரசிமன
மொன்றாய்த் தானுகரில் மாறு மரவிறுதி குன்ம வாய்வு வென்
[றுரைக்கலாமே

வாத மடக்கி காத்தொட்டி
வாழு மாதண்டை மாவிலங்கு
சீறிய மடங்கு சாறணையுஞ்
சிறந்த முருங்கை காயாநொச்சி
போத வளருங் கொடிவேலி
புங்கு நின்பம் பொற்கொன்றை
சேதப் படாம லோரொன்று திறி
சேர் பலமாகக் கொள்ளுவதே.

கொண்டே வடித்து அடுப்பேற்றிக்
கொதித்து வெந்து காய்ந்திரண்டா
யுண்டோ ரெண்ணெ யுடனு வந்து
நெய்நாழி . . . .
. . . . . சொன்ன வேப்பெண்ணெய்
பழுத்த புங்கம் பழுத்தாறு
கொண்டே யொக்க யெண்ணெயுடன்
கொதிக்க வரைத்துக் காச்சுவதே.

காய்ச்சீர் கல்நார் சாதிலிங்கம்
கதித்த துரிசு கந்தகமும் . . . .

பேச்சா ருயர்ந்த அரிதாரம்
பெரிய குரும்பை குளவிந்த
மூச்சே யுற்ற பெருங்காய
முதிர்ந்த வெளுத்தப் பிசின்கார
மோச்சம் பெரிய உள்ளி சுக்கு
வுலர்வாய் சமதா கங்கூட்டே.

கூட்டுங் கடுகு திப்பிலியுங்
கொடிய வசம்பு வாலுளுவை
யாட்டங் காணும் பின்னோடு
மரத்தை சார்திக் காய் கடுக்காய்
காட்டுப் பயிலுங் கிராம்புவுங்
கரிய மிளகு சேங்கொட்டை
கூட்டி வடித்து யெண்ணெயிடக்
குறையா வாதம் பறந்திடுமே.

சன்னி வாதத்துக்கு

எருக்குக் குருந்து வீழிசங்கு
யினிய தாதுளை வன்னெற்று
செருக்குஞ் சிவனார் கொடிவேலி
சிறிய வட்டு வெள்ளறுகு
பெருக்கு மருக்குருக் கறிஞ்சூரை
பெருங்குமல் கொன்றை கழல்
வருக்குங் குறிஞ்சாச் சிறுகுரும்பை
கள்ளி வரிசை விளாவத்தி யெருமை முல்லை.

அப்பையோடு முத்தக்காசு ஆவரை நன்னாரி
யரியசாரணையிவை யொருநிறையாய்க் கொண்டு
செப்புமுள்ளி வசம்பு வேர்க்கொம்பு வெளுத்திப் பிசினுஞ்
சென்னகாஞ் சோறிக்காய் செவ்வுள்ளி புலாவிருக்கந் திப்பிலி.

கந்தக மிளகுஞ் செய்யரிதாரஞ் சீனக்காரங் கடுகு மஞ்சள்
சீதாரி தானிக்காய் பையவ சுவாசி பெருங்குரும்பை
யகிலிங்கம் வன பெருங்காயஞ் சதகுப்பை
வருநேர் பாளங் கார் போகி

இந்த மருந்தை சரிகொண்டு இதமுடனரைத்து வெண்மையிலா
[மணக்
கெண்ணெய் வேப்பெண்ணெய் நல்லெண்ணெய்ப் பதமுடனே

வெந்திறக்கித்தான் வடித்துப் பம்மி வருவாதங்கள் சென்னி
பரந்தோடி யகன்றிடுமே. [வாதம்

குடல்வாதத்திற்கு

கழலிடு முருங்கைத்தோல் காணவே வசம்புத்தேறு
மழகிடு சுக்குத்தானு மப்பினி லுழக்காய்க் காச்சிக்
குழலிடை யோசைபோலக் குமுறிய குடல்வாதங்கள்
பழகிய குன்மஞ் சூலை பார்மிசை குதிக்குந்தானே.

வேறு

முருங்கைக் கிழங்கு கொடிக்கழல் வேர்
முதுசா ரணைவேர் வெள்ளுள்ளி
நெருங்கத் தழைத்த வசம்பினொடு
நெருப்போ டொத்த கொடிவேலி
யொருங்கத் தேய்த்த பெருங்காய
முச்சீர் வெச்சௌக் கொள்வீராய்
மருங்கைச் சூழ்ந்த நோய்களும் போய்
வயிற்றில் வாயு வாராதே.

அண்டவாதம்

சாரணைவேருங் கொடிவேலித்
தரும் வீழி வேரிந்துப்புக்
கூறுடனாகப் பலமொன்று
கூடுமுள்ளி பலமொன்று
வீரிடவே காரமெண்ணெய் கழஞ்சு
விரையநேர் வாளமைம்பது
வாமக்கா கள்ளிப் பாலாமணக்கெண்ணெய்
பெருகயெண்ணெயிரு நாழி.

பக்க அண்டவாதம்

பெருத்தவுகாய் வெள்ளுள்ளி பேணு மிளகு வேர்க்கொம்பு
வருத்தமிகுந்த சாரணைவேர் வெட்டி யிடித்துக் காய்ச்சித்
திருத்தமாய் மூன்றொன்றாய்ச் சலத்தை யுண்ணி
லொருத்தாதமக்கும் வாராதே வோடும் பக்க அண்டவாத மீதே.

அட்டி எண்ணெய்

சாரணை யிந்துப்புத் தழலிடை சுக்குதுள்ளி
சீறு சித்திரமூலம் செம்பொன்காரம் வாளம்

வீறதாய் வெந்தேரண்ட எண்ணெயில் விழுங்குவீரால் கூறிய கள்ளிப்பாலுங் கூட்டியுங் கொள்ளலாமே.

சூலைக்குப் பட்டைத் தைலம்

சீனப் பாவி லிருபலமுந்
திப்பிலி முக்கால் மிளகொன்று
தானச் சுக்கு நான்குபலந்
தக்க பொடிநல் லெண்ணய்படி
யூனத் தூவிப் பதினெட்
டோர்பங் குதயந் தனிலருந்தக்
கூனித் திரியுங் கடுப்புளைவு
குத்துக் குறைக்கு வலியிடியே.

சூதக சினேகபொட்டணம்

வாதந் தனக்குமுன் ஞோராய்ந்து
மருவிச் சொன்ன வகையதுகேள்
வேதத் துள்ள வழியிதுகாண்
வேறே யல்ல விளம்புகிறேன்
பாதங் கோட்டஞ் சதகுப்பை
பண்ணும் புங்கு மகிழ்வேம்பு
சேதம் புன்னை பருத்திவிரை
சிற்று மணக்குட னிந்துப்பு
காது மெள்ளுக் கொள்ளுடனே
காட்டும் நெல்லிக் கடுதான்றி
வேத முருங்கை யகத்திவிரை
மீண்டும் நெற்பொறி சுக்கு
வோதுந் திப்பிலி மிளகுடனே
முடியச் சொன்ன விரையடங்கச்
சேர வருத்துப் பொடிசெய்து
தேங்காய் திருகி யுடன்கூட்டி
நேரேவாக சினேகப்பொட்டண
மேற்றீர் நிச்சய மானதுவே.

நரம்பு சிலந்திக்கு

சூலின் கழுதை வயிற்று மயிர்
சுக்கிர வார ஞள்வாங்கி

நாலு நரம்புச் சிலந்தி வந்தால்
  நைய நறுக்கிப் பொடிசெய்து
வேலி னிடையாய் நெல்லினிடை
  விரும்பிப் பார்க்கி லுடன்தின்னக்
காலும் வீங்கி வலியெடுத்துக்
  கடுக மீளுங் கண்டாயே.

கர்ப்ப கிருமிக்கு

நாய் நாக்கி வடக்குவேரை யுரைத்து
  நலம்பெறவே யிளநீரில் கொடுக்க நன்றாம்
மாயாதபுளி நரலைக்கிழங்கு தன்னை
  மாவுடனே மோர்க் கூழாக்கி யுண்ணவோடும்
பாயுமது தன்னுடனே கர்ப்பரோகம்
  பரிபாரக் கிருமியது பகர்ந்தபூச்சி
தூயதாய்த் தீர்ந்ததுதான் போகுமென்றே
  தொல்லுலகில் மாமுனிவன் சொன்னதாமே.

படர்தாமரைக்கு

கொன்றைக் கொழுந்து தகரவிரை
  குளவிந் தஞ்சுழலாவரைவே
ரொன்றத் துளசி பாலையுட
  னுற்ற இலுப்பைப் பிண்ணாக்கு
வொன்றாய் கூட்டிப் பழமோரி
  லூறவரைத்தெலு மிச்சங்காய்
நின்ற சாற்றில் பூசியிட
  நில்லா தோடும் படர்தாமரையே.

சுரோணித வாய்வுக்கு

தாண்டிய சுக்குக் கருஞ்சீரந்
  தய்யல் புணரும் சந்தனமும்
வேண்டிய இலாமிச் சிறுவேலி
  வெதும்பா மதுரஞ் சவுக்காரங்
கூறிய காந்தங் கொத்தமல்லி
  கொடிய காயங் கோரோசனை
தேறி யோரொன் றிருகழஞ்சு
  யாவின்பாலும் நறுநெய்யு

மழுகாய்க் கூட்டிக் கொடுப்பீராய்
கூறிய பித்த சுரோணிதங்கள்
கும்பிட்டோடும் கூவெனவே.

அமுது சர்க்கரை

சொற்குறுதியாகிய முற்சொல்லிதனை யாராய்ந்து யமுது
சர்க்கரையைப் பைந்தமிழால் சாற்றக்கேள்—கற்கமிகக்
கண்டித்த சீந்தில்தனைக் கண்டித்துரித் திடித்துக்
கொண்டு புனலில் பிசைந்து கோதரித்து—வண்டின்மேல்
விட்டுத் தெளிந்தபின்பு வெண்புனலெல்லா மிறுத்துப்
பட்டுப்போல் மாவுலரப் பண்ணியபின்—கோட்டமில்
வங்க மதிமதுர மாயக்காய் கச்சோலஞ்
சிங்கி பெருங் குரும்பை சண்பகப்பூ—மென்கூகை
நீரேலஞ் சாதிக்காய் நெல்லி வராலம் பூரமுந்
தேறுமிறுசந்த மிருசீரகமுங்—கூறுமிரு
வேலி வேர்நீர் முள்ளி வித்தமுக்குறக் கொடுப்பை
தூலநீர் வாளி சொல்லுங்கமல—மேலுளபூ
வல்லியிரு பத்திரண்டின்கான மருந்தின் நிறையே
சொல்ல வகைக்கோர் கழஞ்சு தூளானால்—வல்லமையே
தானெடுத்த மாவதனில் தானு மிருபலமும்
சீனி இருபலமும் சேர்த்ததிலே—தேன் நறுநெய்
விட்டுக் கிளறி விரவி ரஸாயனத்தைக்
கொட்டைப்பாக் கவ்வளவு கொள்வீரா—லுட்டண நோய்
சத்திவிக்கல் நாவரட்சி தாகமுட லெரிவு
ரத்த பித்த மத்தி சுரத்துடனே—குத்திருமல்
நீர் கடுப்பு கல்லடைப்பு நீர்ச்செறுப்புத் துன்மாங்கிஷ
மேற் கடுப்பெனும்புருக்கி மேக மெல்லாந்—தீர்க்குமென்னப்
பன்னுதமிழ் வாகடநூல் பண்டிதத்தோர்
கண்டு செய்யச் சொன்னோமிதனைத் தொகுத்து.

பாடாதி மோர்க்கடுகு

பன்னுதமிழ் முனிவன் பாடாதிமோர்கடுகு
சொன்னவகை விவரஞ் சொல்லக்கேள்—பொன்முசுட்டை
வோராயில்பட்டை கருவேப்பந்தோல் புங்கந்தோல்
கோரைக்கிழங்கு கொடிவேலி—சாரணை முக்காவேளை
நாய்வேளை வில்லைக்காய்த்தொடு வில்லை வேர்த்

தூவிய நல் மாதளங்காய்த் தோலுடனே—மேவிய வெள்
ளுள்ளி பலம் பத்து வகை யொன்றினுக்கிவ்வாறு கொண்டு
மெள்ளத் தறித்திடித்து வெண்புனல்தான்—துள்ளா
திருமரக்கால் கூடவிட்ட தென்றக்கால் மோரு
மொரு மரக்கால் கூட்டியொன்றாய்—மருவிவடி
கட்டியிறுத்துக் கதித் தயிர் நாலுபடி
விட்டதிலே செய்யும் விபரமொரு—சட்டிதனில்
நாலுபடி மோரதிலே
நாலுபலச் சுக்கு மேல்நஞ்சகற்றி—ஆலவிஷ
மற்ற கடுக்கா யிருநூறுங்கதிலே போட்டெரித்து
வற்றிக் கருகாத பதம் வந்ததென்றால்—மற்றுமொரு
சட்டியில் நெய் யெண்ணெய்விட்டுத் தானிரண்டுமே வறுத்துக்
கொட்டியபின் கூட்டுங் குறிப்பினிக்கேள்—நட்டகரு
வேப்பிலையில் போதமிக வேண்டி நிழலுலர்த்தி
வாய்ப்பிலதி லீருழக்கு வாய்த்தபொடி—நேற்பான
ஓமம் குரோசானி யோமமதி விடையம்
யேம நற்காயம் யவட்சார—மாமிளகு
சாதிக்காய் பத்திரி பூத்தனுடனே திப்பிலி
மோதுகிலா தொவ்வொன்று முக்கழஞ்சு—நீதிகருஞ்
சீரகமும் வால்மிளகு திப்பிலி மூலத்தோடு நற்
சீரகமும் கற் கடகசிங்கி கஞ்சா—நேரான
வெந்தய மீதேழு மொக்க வெவ்வேறு கழஞ்சும்
அந்த மிளவறுப்ப தாகவே—சிந்தைகனி
கொண்டிடித்துச் சீலைவடிகொண்டு கியாழத்தை இரை
மண்டி யடுப்பதனில் வைத்தெரித்து—விண்டகுழம்
பான பதத்திலரிதகி சுக்குப்பொடிப் போடக்
. . . . . . கருவேப்பிலை போட்—டுன்மறத்
தூளான சூரணத்தைத் தூற்றிக் கிளரிப் பிரட்டித்
தாழாது கிண்டியபின் தானிறக்கிக்—கூழான
பக்குவத்தில் வெயிலில் பதறாது வைத்துலர்ந்தால்
மிக்க சுண்டைக்காய்போல் விடுத்துதிர்த்துத்—தக்கநறு
நெய் கால்படி யந்த நேராக நல்லெண்ணெய்
கை கலவா தொக்கக் கலந்து கொண்டு—மெய்யாகச்
சிறுகச் சிறுகச் சிறங்கை மருந்ததனைக்
குறுக வருத்திந்தக் கொள்கை—தறுகாது

கூட்டின மருந்தை யெல்லாம் கொள்கையுடனே வறுத்து
வீட்டிமையதாக வெறுகடிதான்—தாட்டிகமாய்த்
. . தே . . ன்மோரில்தின சரிதான் கொண்டு வந்தால்
வான வோதுபார வயிற்றுவலி—யான . .
பொருமல் இரைச்சல் புளித்தேக்கமருசி கருவு கிராணி யதி
[சாரம்—பெருவாதை
நெஞ்செரிவு துன்மலமு நீங்கியே தீபனமு
மிஞ்சுமெனச் சொல்வாய் விரித்து.

கிராணிக்குக் குடிநீர்

கோட்டமுடனேரண்டம் வெட்பாலை கச்சோலங்
கொடிய சிறுதேக்குடன் கற்கடகசிங்கி காஞ்சோறி
நட்டமிடு தோடகைமுள்ளி சிறுவழுதலை
நவிலுமிரு கூவிளைநெருஞ்சி முன்னைபாதிரிச்
சிட்டாதோலும் போரமல்லி சிற்றமல்லி
சாரணை செருக்கும் பொருக்கயிடையொக்க
யிட்டமுடனே தகத்திரு நாழிநீரின்
பதாமுரி விட்டொன்று பருகே.

காந்தபற்பம்

காந்தம் கழஞ்சு மிளகுடனே
கருஞ்சீரகமும் திப்பிலியு
மேந்து குழலீரிந்துப்பு
வேற்குங்கிராம்பு சீரகமும்
காயந்தகாரம் பெருங்காயந்
தனியேயோரொன்றொரு கழஞ்சு
வாய்ந்த சட்டிதனிலிட்டு
வுருகவறுத்துப் பொடியாக்கே. 1

இந்தப்பொடியை விழுங்க
வயிற்றுக்கடுப்பு நிற்கு
மந்தக்கடுப்பு விரத்தம்விழில்
முந்தப்பசுவின் வெண்ணெய்தனை
முறுகக்காய்ச்சி வடித்துக்கொண்டு
அந்தப்பொடியைத் தான் போட்டு
அதிகாலையில் கொண்டிடுமே. 2

கொண்டாலிது தீரும் பிணிகள்
கொடிய வயிற்றிரைச்சல்
வண்டார் குழலாய் வயற்றிறக்க
மாறுக் கடுப்புச் சீதமுடன்
உண்டாச்செரியா மாந்த வாய்வு
வோடுகிராணிகள் களைப்புக்
கண்டால் காந்த பற்பமதைக்
கதறி யோடுங் கண்டீரே. 3

கிராணிக்கு

திப்பிலி சாதிக்காய் சீரக மாதி யோமங்
கப்பவின் மருந்து சாதி பத்திரி கிராம்பு கல்ஞர்
வெப்பமாஞ் சாத்திர வேதி யொன்றாகப் பொடிசெய் தாவி
னெய்க்குள்ளே குழைத்துத் தின்ன நெருக்குஞ்சீக்
[கிராணிபோமே

வேறு

கடுகோமம் சீர் சாதிக்காய்
கிராம்பு திப்பிலியில வங்கங்
கொடிவேலி யமுக்குறாவுங்
குரோசாணியோம முடன்கூட்டி
விடியவின் கஞ்சாகைப்பு
வெருகடி தேனில் கொள்ளப்
பிடிபடுங்கிராணி யெட்டும்
பேர்ந்திடும் வாய்வதுதானே.

வயிற்றுக் கடுப்புக்கு

பழந்தேங்காய்த் திருகிச் சீனியுடன் பருகப்பாரில்
விடும் வயிற்றுளைவு மணந்தீர கிலழந்தே சங்கம்
பழச்சாறுடனே சீனியு மறுந்தநன்று
யுண்ணாதே போகில் தினந்தோறும் நெல்லியதன்
பழத்துச்சாறு சீனியுமறுந்தநன்று கிடையாதாகில் (?)
வளந்தேரும் வெந்தயமு மலர்ந்த நெல்லியுடன்
வருத்ததனைப் பொடிசெய்து பழந்தயிரதுண்ணே.

பனிசை சிவத்தியதின் வேருங்கூட்டிப்
பகர்ந்த யெருமைத் தயிர் வாத்தரைத்துக்

கனிசைச்சடையுடன் தண்ணீரிலேதான்
 கொள்ளத்தானது வயிறு கடுப்புத்தானே தீரு
முனிசை நெல்லி வெந்தயமும் வறுத்துக்கொண்டு
 முன்போலே யெருமை மொய்த்த தயிர் தன்னில்
 [கொள்வீராகில்
நின்ற வயிற்றுக்கடுப்பு வெக்கை தீரும்
 நிச்சயங் கொடுப்பது நினைவுதானே.

புழுவெட்டுக்கு

கொன்றைக்காய் திரிசூலிபேய்க் கொம்மட்டி
 குதித்தயிலை யோரொன்று உழக்குச் சாறு
வொன்றதை திரிதார முழக்கெண்ணெய்
 தனிலுகந்து வெந்திட்டபோது
யன்றிப்போம் புழுக்கடிபோமது தீரும்
 மயிர் முளைக்கு மறுதி சொன்னார்
மென்றக் காலிதுக்கு நிகருமில்லை
 இது சிரங்கு குட்டமிடமுந்துபோமே.

நீரைக்கு

ஆடுதின்னைப் பாளையாகருஞ் சீரகமும்
வீடுமெருக்கம்பால் விட்டரைத்துப்—பாடுபட்டுத்
தெய்யவரைத்திதனைத் தொப்புளின்மேல் பூசிவிடப்
பையோடே நீரைவிழும் பார்.

கிரந்திக்குப் பிட்டுக்களி

வெங்காய முரிமேவிய பூவரசிலை
மங்காத குறுவை நெல்லு—மாவுங்களியாக்கி
யெண்போதுந் திண்பீராய்த் தீராக்கிரந்தி யெல்லா
மன்பு வைத்துக் காணலரிது. 1

நப்புமிரத மிருகழஞ்சு
 நல்ல கந்தக முக்கழஞ்சு
தும்பிகையான் வெள்ளறுகு
 துவைத்தசாறு யிருநாழி
கொம்புமேதி நெய்யுரியுங்
 கிளர்கொடி வேலிவேர்ப்பல மொன்றுங்
காச்சிப்பருகிடில் வம்புங்கிரந்தி
 இவைதீர மாறநல்ல மருந்திதுவே. 2

விக்கலுக்கு

முறுகிய விக்கல்தான் முயங்கியே போகவேண்டில்
திறவிய இலுப்பைப்பூவைச் சீறுடன் கொண்டுவந்து
மறுவிய ஆமணக்கெண்ணெயில் மத்திக்க வரைத்துப்பூசவே
வதிரிடும் விக்கல் தலைவலி தானிறங்கியேபோகும் காணே.

வேறு

திறம்பட ஏலங்கொண்டு திருந்தியச்சில் குழைத்துக்
கருதியே நாவிலிட்டால் கதியுடன் மாறுங்காணும்
எதிருடன் கோழியெச்ச மிறையது கருப்புக் கட்டியில்
[குழைத்திட
மதியுடன் மாறுங்காண் மருவிய வீழிச்சாறீருழக்கு
மதித்தவர் குடிக்கச் சொன்னேமிடை விடாவிக்கல் தானும்
நிறங்கெட்டுப் போகு மென்றேம். (?)

வாதரோகத்திற்குத் தைலம்

வாதமடக்கி காத்தொட்டி
மாவா தண்டை மாவிலிங்கை
சீத மடக்குஞ் சாரணையுஞ்
சிறந்த முருங்கையுகாய் நொச்சி
போதவளர்ந்த கொடிவேலி
புங்கு நிம்பம் பொற் கொன்றை
சேதப்படாம லோர் மருந்து
திரிசேர்பலமாய்க் கொள்ளுவதே. 1

கொண்டே யிடித்துக் கியாழத்தில்
கொதிக்க வெந்தே யஞ்சுருண்டை
யுண்டேயோரண்டெ யெண்ணெ
யுகந்த நறுநெய் நல்லெண்ணெய்
பண்டே சொன்ன வேப்பெண்ணெய்
பழுத்த புங்கம் விரைநூறு
கண்டே யொக்க வெண்ணெயுடன்
கதிக்க வரைத்துக் காச்சுகவே. 2

காச்சீர் கல்நார் சாதிலிங்கம்
கதித்த துரிசு கந்தகமும்
பேச்சா லுயர்ந்த அரிதாரம்
பெரிய குரும்பை குளவிந்த

மூச்சேயுற்ற பெருங்காய
முதிர்ந்த வெளுத்தப் பிசின்கார
பொச்சம் பெரிய வுள்ளி சுக்
கொடுலுவாய சமோதகங் கூட்டே. 3

கூட்டுங் கடுகு திப் பிலியுங்
கொடிய வசம்பு வாலுளுவை
யாட்டங் காணும விளோடே
யரத்தை சாதிக்காய் கடுக்காய்
காட்டில் பயில் கார்போகவரிசி
கரிய மிளகு சேங்கொட்டை
கூட்டி யெரித்தே யெண்ணெயிடக்
குறையும் நடுக்கு வாதமுமே. 4

பிளவைக்கு

செப்பிய எண்ணெய் வைக்கச் சிறந்தவாவரை வேர் நாழி
யொப்புடன் துருசு பூலாவோ ரொன்று யதின்பின்பாதி
யிப்பெருஞ்சரக்கு நிறையிடை யிருபத்ததாகக்
கைப்பு வெம்பாடல் கூட்டிக்கைக்கு மாவெண்ணெய் வையே.

எண்ணெயுஞ் சீலைதானுமிடைவிடாது வாலைக் காரும்
நண்ணுமாவரை வேர்த்தானக்கவே சொட்டில் கொண்டு
புண்ணின்மேல் வைத்துக்கட்ட பொருந்துமாம் பிளவை தானே
யுண்மையாய்க்கண்டு முன்னோருறுதியா யுரைக்கலுற்றார்.

பிளவைக்குத் தூள் மருந்து

சேவிரையன்ப தொக்கத்தீயவே வருத்துத்தூள் செய்
தாரைவேர் தனையரைத்த திற்பாதி கூட்டியேவு
நீபிளவை புண்ணிலிங்கவே நெய்யிற் பூசித்
தூவிடத் தீரும்வற்றிச் சுருதியாயுலரும் புண்ணே. 2

பூச்சு மருந்து

ஆவரையல்லி நெல்லியதுவுடன் பூலாவேரும்
கோஷினில் வெண்ணெய் தன்னில் குழைத்து வீக்கத்தில் பூச
ஆமிகுந் தனந்தபோல் வீக்கமதி படாதனல் தணியத்
தாதரவீக்கு மாத்துப் பூசத்தயிருங் கூட்டிக் கொள்ளலாமே.

களிம்பு கூட்டவகை

துரிசு வெள்ளைப் பாஷாணம்
  துய்ய கல்லுச் சுட்ட பொடி
பெரிய மெத்திதோர் வெட்
  பூலா வேர்தனைப் பரணி செய்து
சரியோ தாளவி லொவ்வொன்று
  நெய்யில் தப்பா தொக்கப்
பொடியிட்டு விரி போலழுந்தும்
  புண்ணிற் சீலைதனிற் போடே.

போடே காரம் நாள் மூன்று
  புண்ணிற்களவு கரைந்தமெதனில்
தேடே தயிரும் சோறுமிட்டு
  . . . . நாள் மூன்று
யாடே விலா விலச்சவது போலத்
  தேவிழுந்து புண்தேறில்
பாடோ தீர வெந்நீரால்
  பரிந்து கழுவிப் புகைகாட்டே.

புகை

இரதமயஞ் சேங்கொட்டை இயல்பாகு சங்கு வெண்ணீறு
யரவே செய்யுமஞ்சளிது வொக்கக்கொண்டு வோரொன்று
தரவேநாலு கழஞ்சாக்கிச் சமனேசெய்து புகைகாட்ட
விரிவிடவே வெய்யபுனல் மீளும்வாதப் பிரமியமே.

வங்கத்தோடு வெள்ளுள்ளி மதிக்கச் சுறுமரமஞ்கள்
  கடுகு சேங்கொட்டையு மங்கியும் வாலுளுவை
சங்கைப்படியே நற்ற தோரிரதத்தம்மிலத்
  திருநீறு கார்போகவரிசி கவிதஞ்சீனக்கார
வெங்கொட்டுப் பாஷாண மேதத்துருசு சுத்தமு
  மெம்பாரி மிளை வெண்காரம் வீறுனவசம்பு
பங்கிட்டிடவே யொன்று நாற்கழஞ்சுப்பற்றுச்
  சீலைகட்டும் புகைப் பறங்கிக்கிடு மருந்தே.

பூச்சு மருந்து

நெல்லி யுடனிலப் பனைக்கிழங்கு
  நெற்பொரியு மாவரையின் வேரும்

சொல்லரிய மற்றுவின் வெண்ணெய் சேர்த்துத்
திதமான வீக்க மதன்மேலே பூச்ச
சொல்லிய தோர்பிளவை தனிற் காய்ச்சல்
குறித்தெழுந்து வமுதக் கண்ணுல் வரும் நீர்பாய்ச்சல்
மெல்லியர்தம் முலைப்பாலும் வீக்கம் வற்றும்
விதமூன்று விதந்தானும் வினவில் போமே.

வெட்டுப் புண்ணுக்கு

வெட்டுப் பட்ட புண்ணுக்கு
விரித்து முன்னேருரைத்தபடி
வட்டப் பருத்த தேசிக்காய்
வரைந்து பாதி யிரண்டாக்கிச்
சட்டிதனிலே எண்ணெய்விட்டுத்
தழலுமறவே மிகக்காய்ச்சி
வட்டங் கருக வெர்த்திட்டு
அதுக்கப் பின்னே யெண்ணெயிடே. 1

இடவே யெண்ணெ யிது தனக்கு
இலந்தைத் தோறு காய்துடரி
முடபூலாப் படரும் நிலத்திலக்கு
மிளகு வட்டுப் பசுத்த மாவரை வசுவேருங் (?)
கடவா தொக்கச் சிறுகடுக்காய்
கபாடை சூரி நாயுருவி
யடவேயிது தான் வேறு கொண்டு
வதின்மேல் வைத்தொன்றுய்க் கடைசரக்கே. 2

கோட்டமுருதம் வெம்பாடல்
கொடியுஞ் செவ்வந்தி செவ்வெள்ளி
வோட்டுங்கரிய குந்திருக்க
மோதுங்கைப்புச் சதகுப்பை
யேட்டின் வளரு மென்முள்ளி
மீறுயித்த மிலவங்கங்
கூட்டித் தூளி யுடன் செய்து
கொள்ளீரெண்ணெய் புண்ணுக்கே.

குத்துப்பட்ட புண்ணுக்கு

குத்துஞ் சடத்துடனே சீலை
குடைந்தே யிரத்தக் கள்ளிதனை

முத்துப் போலே விழும் நீரை
 முறித்துச் சும்மா வகை செய்து
சுத்தப்படவே சுத்துவாய்
 துடைத்து வந்த தசைதள்ளிச்
சித்தத் துடங்காத் தேசிக்காய்
 சிறந்த யெண்ணெய் சுடவொத்தே
ஒத்தேயிட்ட மூன்றுநா
 ளோடுவுஞ்சலமும் புள்ளடியு
மத்தோர் சிறிய தம்பலவேர்
 மணக்கு முத்தம் நன்றாரி
சித்தேல மிலவங்கந்
 தின்னுங் கைப்பு வெம்பாட
லுத்தேன் மதுரந்தான் கொண்டே
 வுடைந்தீ ரெண்ணெயுள் கலக்கே.

ஆயுத கரைப்பனுக்கு

கொன்றைத் தூதுநிலவேம்பு
 குமிழம்வேர் கோவக்கா யாவரைவேர்ச் (?)
சென்று வணங்காச் சூரியது
 சிவனார் வேம்பு நலப்பிரசு
வொன்று முத்தந் தாளி (?)
 யுறு சேர்வட்டு நாயுருவி
நன்றே கொள்ளும் குடசூரை
 நயமாக யித்துடன் கூட்டே.
கூட்டே உள்ளிமிளகு . . . .
 . . . . மருதம் வெம்பாடல்
நாட்டில் பயிலும் வெண்கோட்டம்
 நல்கு சென்னகரைப்பழமு
மீட்டங் காணுஞ் சாதிக்கா
 யதுகொள் கடுக்காய் தான்றி நெல்லி
கூட்டித்தூள் செய் திவை யிட்டுக்
 கொண்டே எண்ணெய் கொதித்திடுமே.

ஷிக்கு உவறியம்

குறிஞ்சாயிலையும் புங்கிலையாங்
 கொடிசேர்கழற்சியிலை தானுஞ்

செறிந்தோர் களிப்பாவட்டை
. . . . . . துளசியிலை
யறந்தே பருத்தி இலைதானும்
பகர்ந்தார் வாதகரப்பனுக்கே.

எண்ணெய் வெச்செனப் பிடித்து வீக்கத்திருக நாளும்
வண்ணமா மிரத்தத்திரிக்கு வகைப்பட வெருகிலை
பண்ணி வாட்டிப்பத்துடன் கட்டு வீராய்
யெண்ணும் வாதகரப் பனிறங்கும் வீக்கமென்றே.

நின்பம் நிலத்தைச் சொல்லுவதும் நிலத்துக்கு மிளுந்துடரோடு
விளும்புரை கைகால் சால மிலந்தோலு மிக்க தோலும்
நின்பலையுங் கம்பிப் பிசினுஞ் சற்றே கொள்கைப்பு மதுரம்
வெம்பாடலம்பு முதலாய் வெடியுண்டையாறு மெனவோ
[ரெண்ணெயிடே.

நெருப்புப்பட்ட புண்ணுக்கு

அரத்தம் பூவில் வெம்பாடலதிக மதுரஞ் செஞ்சாந்து
வுர்த்தபுளியங்கொட்டைத் தோலுறுகைப்புடனே வெங்கொட்ட
இரத்தச்சாத்தி நிறைகொண்டு யெண்ணெயிடி
லுர்த்ததீயாலொவ் வித்தவொடுவும் புண்ணு முதிர்ந்திடுமே.

புகை

காரீய மிரண்டரையுங் கருதுமிர்த பூன்றுடனே
சேரும் பாஷாணங்கழஞ்சு செல்லுந்துருசு வரைக்கழஞ்சு
வாருங்காணுவரிதாரங் காலடுக்கும் கடுகு மிளகு கழஞ்சு
சேருங் குந்திருக்கங்கழஞ்சு சிவந்த யெருக்கலங் கரிக்கழஞ்சே.

கழஞ்சாய் நிறுத்து ஈயத்தைக் கருது முட்டைதனில் விட்டு
விளைஞ்சயிர தந்தனையூற்றி மிகவே யிவையெல்லாம் பருத்தி
யிதளைஞ்சாறு தன்னாலே தனமாயரைத்து நாலஞ்சு
வளைஞ்ச உண்டைதனைப் பிடித்து வருந்தப்புகை யொன்பது
[பொழுதே

இருத்தியே முகிந்தபோது யியல்பெறப் புளிப்புக்கூட்டித்
திருந்தியே பத்து நாலு திசைவாரம் நீர் விழுந்து
வொருத்தரு மறியாக் கோழியுடன் வித்தருந்தப் போமே
பெருத்த வர்மணக்கெண்ணெய் புளிப்புற முழுகுவீரே.

முழுகியே . . . . . . மூனமாத மிகப்பண்ணிக்கொண்டு
தழுவியே நல்லெண்ணெய் பன்றி - தவிர்த்துக்கொண்டால் பின்
[கூட்டிக்கொள்ள
நழுவிய பிணியேதென்றால் நாலு பறங்கி சூலையுடன்
வழுவற வேளையிட்டு விழுந்திடுங் கடவிற்றனே (?)

வேறு

எருக்கலம் பாலோடரி தார
மெலியின் மருந்து கொடிவேலி
திருத்தமான வெள்ளுள்ளி
தெளியும் வசம்பு சென்னகரம்
பெருக்கவே ரொன்றரைக் கழஞ்சு
பேணி யரைக்கிலிலைக் கள்ளி
பருக்கவாட்டி இலைச்சாற்றால்
பற்றுதரைத்துக் கரைப்பதுவே.

கொள்ளும் நறுநெய் நல்லெண்ணெய்
கூட்டுஞ் சிற்றாமணக்கெண்ணெய்
நள்ளே தீர்க்கும் நிம்பெண்ணெய்
நாலுங்கூட கலந்து வெந்து
மெள்ள வடித்துப் பதமறிந்து
விளங்க வடித்தே யுண்பீரால்
உள்ளே யுளக்கும் வகைப்படியே
ஓடும் வாத கரப்பனுமே.

வாதக்கரப்பனுக்குஞ்சுவித நெய்

கள்ளிக் கொழுந்து பனை வெல்லம்
கருமாம்பழத்தின் சாறுடனே
வெள்ளிக்கிழமை நாள்தனில்
விதியின்படியே செய்வேண்டித்
துள்ளத் துள்ளக் குறுவை நெல்மாத்
துவள யிடித்துத் தின்பீரால்
வெள்ளைக் குட்டமது தீரும்
வேண்டுங் கால மிருப்பீரே.

தைலம் ௸ வேது ௸ மாத்திரை கள்ளி மணவாளன் குளிகை

உத்தமதாளிச்சாறு முறந்தருங்குப்பை மேனி
மெத்தவே யிண்டஞ்சாறு மேவிய கழற்சிச்சாறு

சுத்தமாம் வேளைச்சாறு துலங்கு வேப்பெண்ணெய்தானுஞ்
சித்தமே தாழிதன்னில் சிறக்கவே வகைக்கிரண்டே. 1

பருத்ததோர் சாறுமெண்ணெய் பன்னிரண்டு படியும் விட்டுத்
திருந்தவே துழாவிக் காய்ச்சிச் சிக்கெனக் கள்ளிப்பாலு
மெருக்கம்பாலுமுக்குச் செலுத்தி நீரடிமுத்துச்
. . . . . சேங்கொட்டை வகைக்குக் கால்பலமாங்
குருத்தாயிடித்து நன்றாய் கூடவே போட்டுக் காய்ச்சே. 2

சேர் வெள்ளை கவுரிதானுஞ் சயந்தரும்பச்சை நாவி
வாரதிலிரதந்தானும் வகைக்கொரு கழஞ்சு மூன்றே
யாரவே தாரங்கழஞ் சாறதனுடன் பொடியே செய்து
தூரது கொதித்தபோது தூத்தியே பதத்தில் காய்ச்சே. 3

பதத்திலே வெந்தபோது பரிவுடன் வடித்த யெண்ணெய்
சுகத்திலே யுடம்பில் போட்டுச் சுவறவே பிடித்துப் பின்னை
யகத்திலே யுள்ளுங் கொள்ள வாய்யெட்டு நாள் வேது விட்டால்
செகத்திலே பெருவியாதி பதினெட்டும் தீருமென்றிருஷி
[சொன்னார். 4

வேறு

ஆதளை கண்டங்கத்தரி யமுக்குறா யெருக்கு யெட்டி
சூரைபுரமெரித்தான் சொல்முருங்கை
தூதளை புங்குதலை சுறுளி புன் முருங்கை யுவாய்
கொடிவேலி குண்டலி சங்கெனும் பதினஞ்சுதான்வே
வாதமடக்கி முடக்கொற்றானில் வாகைவே [ராம்
ரான்வேம்பு வெள்ளறுகு
நீதமுறு நிற்குண்டி பெருந்தும்பை சமூல மொன்பது
பட்டைவகை நாலும் பகரக்கேள்.

மாயிலுப்பை நாவல் புங்கு வகைக்குவகை
பலம் நாற்பது வுஞ்சேருமது
நீருமுங்கச் சேர்த்து விட்டெரிய பின்னுள்
வெந்த நீருடம்பில் விட்டந்தி சந்தி
யேழுநாளடவாக விட்டுவரில் தொந்தமுள்ள
குட்டங்குறை பெருவியாதி
இந்தவகை இத்தனையுந் தீருமென்
றியம்பினர் முனிவோர் தாமே

இதற்கு மாத்திரை

திருடியுஞ் சீரக் தன்னிலத்தியான மாமியாணக்
கருகரி நாகப்பால் வச்சிரவல்லி பத்திரத்துடன் மூன்றும்
தருக வெவ்வேற தாய்ப்பொடி சரியந்தப் பாலில்
பொருவது பொடியைப் போட்டுழப்பவே மெழுகு போலாம்.

ஆமேபெண்ணன் கட்டியதை
யாமணக்கெண்ணெய் குத்தியரை
தாமேயதனையதிற் செற்றுத்
தானேகுன்றி போலூட்டி
நாமே யரித்திரத்தூள் தனில்
நன்றாய்ப் பிரட்டிப் பதனமதாய்ப்
போமே ரோகமனுபானம்
போந்தே செய்யப்போய்விடுமே.

விடுமே பொடுதலை யோரெடையும்
வேண்டுங்கரிப்பா னிரண்டெடையுங்
கொடுமே சாறு படிகாலுடனே
கூட்டி யுண்டை யிடவேதான்
வடுத்தான் வந்தகுறை நோவு
மாறாக் குட்டம் பதினெட்டுந்
தொடுமோகள்ளி மணவாளன்
குளிகையெனச் சொன்ன லோடிடுங்காண்.

கொடுத்தேயேழு நாட் சென்றால்
பசு நருத்தகம் பளவசயிற் (?)
குண்டுவம் நிம்பெண்ணெ யுடன் வெந்து
தொடுத்தேழுக்கில் நசியம் விடச்
சொன்னேனடைப்புத் தாந் தீரும்
அடுத்தால் வாரஞ் சென்ற பின்பு
வகலாதிமிர்ப்பு வாங்கிதற்கு
விடுத்தேகய றதனால் மேல்
துடையே கட்டிப்படத்தளவே.

அளவாய்ச் சுரந்த இரத்த மதை
யடவாய்க்குடோரி தானடிக்
களவே யில்லாச் சொரை தள்ளிக்
கலச்சுண்ணும்பு மேனியிலே

தழுவேபூசு மூன்று தினந்
 தங்காதிமிர்ப்புத் தவிர்ந்திடுமுன்
னழகாய்க் கொடுத்த சாறதனை
 யரைக்கீழ்துவாலை யிடுவாயே.

பிளவைக்குத் துவரெண்ணெய்

செங்கத்தாரி நாய்க் கொட்டை
 சிவனார் வேம்பு சிறு குறிஞ்சாக்
கங்குங் கருச்சாப் பேய்ப்புடலுங்
 காட்டு முருங்கை முடக்கொற்றான்
மூங்கக் கொரண்டி நிலவாகை
 முதிர்ந்த ஈசுர வெள்ளறுகு
அங்கத்தாயில் வக்கணத்தி
 யலகு சாரணை நிலவுவாய்.

நிலத்தின் வேரைக் களைந் தெடுத்து
 நீண்ட சிரா யிருவகையுந்
. . . தெரிக்கயிடித்த பொடி
 யுண்பாய் தேனில் மண்டலந்தான்
குலத்தில் பறியாம் புண்களொடு
 கொடிய சூலை வாதம் போமே.

சங்கங்குப்பி சங்கவுரி
 தளைக்கு மாணைச் செருப்படியும்
புங்குவாசுவுதி கழஞ்சுப்
 புலா நெல்லி நாயுருவி
சங்கைப் பூவாக் காரையுடன்
 கருக்கை வக்கணை யுள்ளடியு
மங்கங் கறுத்த சிறுகீரை
 யடவி மூலிபதினேழே.

இந்தமருந்து இவைகளெல்லா
 மிடித்த சாறிரண்டுபடி
யந்தமருந்தின் வேர்களைந்து
 மரைத்த பொடியு மதினளவே
நிந்தம் பொடியில் கால் நீக்கி
 நின்ற மருந்தில் நீர்புகட்டி
வெந்த நீரைக் கூடவிட்டு
 வியனமிலுப்பை நெய்யோர்படியே.

ஓர்படி நெய்யில் முந்த வொளித்திடுஞ் சூரணமும்
வேர்படு பெருங்காயம் வேரும் பாடவிரு பலமாம்
மேற்பிறக்காய்ந்த நெய்யிலடித்த நன்மனோ சிலையை
யோர் நிறைமாடை ரண்டு வுகந்த மேற்பொடியாய்க் கூட்டே.
கூட்டியே வடித்துவைத்துக் குழிவிழும் புண்ணில் பஞ்சை
வாட்டிடு யரையாப்புவனபுரை கண்ட மாலை
நீட்டிய பிளவை சூலை நெய்யிடத் தழும் புங்காணு
சூட்டிய குழலினாளே சுகம்பெற வாருங்காணே.

வேறு

அகத்திப் பூவரசு நெல்லி யாலுதி யத்திப்பட்டை
சகத்தினிலுலாவு நவ்வல் செய்யதோர் மருதுகன்று
வகற்றினில் கினுவை யொன்றென்றரைப் பலமாகக்கூட்டிச்
சிகத்துநீர் தன்னில் போட்டுத் தானெட்டொன்றாகக் காய்ச்சே.
காய்ச்சியே நீரில் தெங்கின் கனி நெய்யை நாழிகூட்டி
யாச்சியாடுண்ணுப் பாலை யதனினோர் பருத்திப்பிஞ்சு
யீச்சுவை யாகுந்தேனு மெலுமிச்சம் பழத்தின்சாறுஞ்
சூட்சமாயிவ்வகைகளெல்லாந் துலங்கரைப் படியாய்க்கொள்ளே.
கொள்ளுவீர் சாதிலிங்கங் கோட்ட வெம்பாடலேலம்
விள்ளுசேர் துருசுகைப்பு விளம்பதி மதுரம்பட்டை
வள்ளிய வசம்பு கருஞ்சீரகம் வாய்க்கு மீருள்ளி கூட்டே (?)

இஞ்சி நெய்

நறுநெய் நாழி மோர் நாழி
நாறுமிஞ்சிச் சாறொரு நாழி
பொரு முஞ்சுக்கு செவ்வியம்
போற்றுந் திப்பிலி சிறுமூல
மறுமன் மிளகு கொடிவேலி
மத்துங் கற்கடக சிங்கியுடன்
பொறுமனரைத்துக் கரைத்திதனைப்
பெய்து பதத்தில் வடித்து நக்க
வூறும் பொருமலத்தி சுர
மோடும் பாண்டுருச் சோகையுமே.

சுரோணிதவாய்வுக்கு

எலுமிச்சம்பழம் 5, கொம்மட்டிபழம் 5, திருகுகள்ளிப்பூ 5, கருப்புப்பு பலம் 5, இவ்வளவும் ஒரு கலசத்தில் போட்டு ஓடு

கொண்டு மூடி சீலை மண்செய்து கீழே புதைத்து ஏழு நாளைக்குத் தீப்போட்டு எடுத்து யிடித்து நெல்லிக்காயளவு உருண்டை பிடித்து வைத்துக் கொண்டு சூதகமாய் முழுகிவந்த பிறகு ஒவ்வொரு நாளைக்கு வொவ்வொரு உருண்டை கொடுக்கவும். மூன்று நாளைக்கு கொடுக்கவும். இச்சாபத்தியமாகச் சாப்பிடவும். ஆட்டுக்கறி கோழிக்கறி ஆகாது.

இஞ்சி ரசாயனம்

வேதங் கமழ்மலை யிஞ்சியின் மேலுந் தோல்தள்ளி
  விட்டே தறியிட்டே பொடிபட்டே பலமெட்டுஞ்
சீதம் பிழிந்தேசியின் கனிமூவைந்து பிழிந்தே
  கிலமோடது கிளறிக்கதிப்பால் நிழல்மீது ஆசும்பறி
போதந்தரு நெய்யில் விட்டு பின்னதிலிடு
  சீனியில் நிறை சேர்திரி பலமுங்
கோதன்றிய நேர்கூகை நீரூ வொருபல மின்
  கொடுசீரகம் நிரைசேர் யிருபலமுஞ் சொலுமினமே. 1

சொல்லுஞ் சதிர்ச்சாதந்திரி சாதந்திரிகடுகு
  சோராய் சிவதாளி குரோசாணிபிள . . . . ம்
வெல்லும்படி யாரியக்கரை யதிவிடயம் விபரத்தோடு
  பகரும்படி யிருபத்தொரு மருந்துஞ்
சொல்லும்படி வகை மூன்று கழஞ்சாகவே நிறுத்துப்
  புரியத்தழ லெரிசட்டியில் வறுபட்டி தூள்
செல்லுஞ்சிறு சூடலுமருப் பொடிவை கிண்டித்
  தினமே வெருகடியே கொடு தீரும் பிணி கேளே. 2

வேதை

துருசு—வராகனெடை 40, பற்பம்—வராகனெடை 90, சீனக்காரம்—வராகனெடை 15, நவாசாரம்—வராகனெடை 3, கறியுப்பு வருத்து வராகனெடை 60, துருசும் நீர்வாங்க வருத்துக்கொண்டு இதுவெல்லாம் பொடித்துப் பற்பத்துடனே கலந்து ஒரு குப்பியில் முக்கால் திட்டங்கொட்டி ஒரு சட்டியில் வைத்து மணலைக்கொட்டி யடுப்பில் வைத்துத் தீபாக்கினி யெரியிடவும். இரண்டுக்கொன்று வீதம் பார்த்துக்கொள்ளவும்.

சூதம் பலம் 10, சத்தி பலம் 10, தாரம் பலம் 15 வீதத்திற்குப் பார்த்துக்கொள்ளவும்.

வேறு

சூதம் வராகனெடை 80, சத்தி வராகனெடை 200, நூறு வராகனெடை எடுத்து வைத்துக்கொண்டு நின்றசத்தியுஞ் சூத முஞ் ஒரு ஒட்டில் வருத்து வருத்ததுடனே நின்ற சத்தியுங் கூடக்கலந்து தாளகம் வராகனெடை 3 கூடகலந்து குப்பியி லேற்றி நடுவரைக்குந் துரும்பு சோதித்துக்கொள்ளவும். சட்டி யில் குப்பிசுற்றி மணல்சொரிந்து வாய்சீலை கொண்டடைத்து மணல் கூறுகொண்டு கழுத்தளவு மணல். தீபாக்கினி, கம லாக்கினி, காடாக்கினி, வினக்கொளிகிரம் வந்தவுடனே இறக் கவும்

இரசப்பதங்கம்

ரசம் ஒட்டில்விட்டு ஒடு வெதும்பையில் கெந்தகந் துண்டு துண்டாய் நறுக்கிப் போட்டு உருகி வருகையில் வெட்டரிவாளில் விளக்கெண்ணெய்த் தடவிக்கிண்டி தீப்பிடியாமல் கீழே யிறக்கி வைத்து ரசமாளுந்தனேயும் வெதும்பவைத்துக் கிண்டவும். இரண்டு பானை கொண்டுவந்து மண்ணைக் குழைத்து மேலேதட விக் காய்ந்த பின்பு ஒரு பானையிலிரண்டுபடி செங்கல் துண்டு வெள்ளையுப்புச் சிறங்கை போட்டு மருந்தைப்போட்டு மேல் பானை மூடிச் சீலை மண்செய்து அடுப்பில்வைத்து முப்பது நாழிகை யெரிக்கவும். பின்பு முப்பது நாழிகை ஆறவிட்டெடுத் துத் தண்ணீரை வார்த்துச் செம்மலை நனைத்துச் சீலை மண்ணைத் தள்ளிப் போட்டுச் செங்கலு முப்பு மேல்பானையில் விழாமலெ டுத்து மயிரைக் கம்பியில்கட்டி மருந்தைத் துடைத்து ஒரு ஒட் டில் கொட்டிக்கொண்டு ஒரு குப்பிக்கு மண்செய்து வாய் தட்டி யதிலரைக்குப்பி போட்டு ஒட்டில் வைத்து மேல் மணலிட்டு விளக்கெரிக் கிறுப்போலே யெரிக்கவும். குப்பியில் போட்டு மணலைக்கொட்டி அடுப்பில் வைத்துத் தீபாக்னி யெரியிடவும்.

தாது விருத்திக்கு

திரிகடுகு, திரிபலை, பூனைக்காலி விதை, கற்பூரம், சாதிக்காய், ஏலம், இலவங்கம், கோட்டம், கஞ்சாப்பொடி இவைகளை யெல்லாம் பொடித்துச் சமன் சர்க்கரை கூட்டி வெருகடிப் பிர மாணம் தேனில் நாற்பது நாள் இருவேளை கொள்ளத் தாது விர்த்திக்கும்.

வேறு

அமுக்கிராவேர், நிலப்பனைக் கிழங்கு, முருங்கைப்பூ, தூது ளம்பூ இவைகளை சமன், நாகுருவிதை, நத்தைச் சூரிவிதை,

நீர்முள்ளிவிதை, ஆவரைவிதை, பூனைக்காலிவிதை யிவை முன் சொன்ன மருந்தில் பாதி, இவைகளை யெல்லாம் வெயிலில் உலர்த்திப் பொடித்துக் கொண்டு வெருகடி வீதம் இருவேளை மாதளம்பழச் சாற்றில் கொள்ளவும் பிறகு நறுநெய்யில் கொள்ளவும். இதற்குப் பத்தியம் புளி தவிர்க்கவும். தீரும் வியாதி கணை மேக முதலாகிய வாதமேகம், மூத்திரக்கிரீச்சரம், தாதுநட்டம், பாரிசவாயு, மேகத்திலேவந்த ரோகமெல்லாம் தீரும்.

வேறு

தூதளம்பழம் படி ¼, தூதளைவேர் பலம் 3, இசங்கம்வேர் பலம் 1, ஆலம் விழுது பலம் 1, சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு, திப்பிலி, காமப்பூ வகைக்குப் பலம் 1, அபின் பலம் ¼, கற்பம் பலம் 1, சீனி பலம் 5, நெய்படி 1, ஆக வெந்து நக்கவும். புல்லாந்திப்பழம் படி ¼, வேண்டுமெனின் மேற்படியுடன் சேர்த்து நெய் காய்ச்சலாம்.

வசியம்

நன்றுங் கண்ணுக்கினியானும்
  நரையுந்திரையு மில்லானும்
என்றும் நாவுக் கினியானும்
  எதுமில்லா தொருவனையுங்
கொன்றைப் பிசினுங் கோரோசனையுங்
  கூட்டி யொருத்திக் கிடுவீரால்
கன்றைத் தேடும் பசுப்போலேக்
  கதறித் திரிவள் கண்டீரே.

வேறு

இரதந்தன்னை அபூரமுடன்
  னேற்ற மதுரங் காரமுடன்
பரதன் தமயன் தாரமுடன்
  பாம்பின் பித்தைப் பசுமத்தைச்

குறிப்பு.—(1) கண்ணுக் கினியான் = கொசு; (2) நரையுந் திரையுமில்லான் = தம்பலப் பூச்சி; (3) நாவுக்கினியான் = ரசம்; (4) எதுமில்லா தொருவன் = மருளூமத்தம் விதை; (5) அபூரம் = பச்சைக் கற்பூரம்;

சதிரந்தன்னில் ரோகத்தைத்
தானே கூட்டிச் சரிசெய்யடையா
யுதிரந்தன்னை வார்த்தரைத்தங்
கொருமா யிடவே வசமாமே

வேறு

அரக்கம்பால் செவ்வரலி அதிமதுரங் கோட்டஞ்
சரக்கான விடத்தலை மேலம்புல்லுருவி சமனுகக்கூட்டி
இரக்கான முலைப்பால் விட்டரைத் துலர்த்தி யெழுமுகத்தில்
திலதமிடில் மாணுருள்ள மரப்பாவை பின்தொடரும்
மனிதரை நாம் சொல்வதற்கு வன்மையேதோ.

தட்டான்தன் கொட்டோசை பதர்போக்கிக்கழஞ்
சுதமரகத்தின்றொனி கழஞ்சுசாரோசைக் கழஞ்சு
கொட்டாவி யிட்டிடித்துக் குயில்மொழி கழஞ்சு
குங்கும்பூக் கழஞ்சு கோரோசனைக் கழஞ்சு
மட்டாருங்குழல் மடவார் வகையொக்கக்கூட்டி
மாகாந்தந் தன்னுடனே யேகாந்தங் கூட்டி
வட்டாகத் தட்டியிதைப் பொட்டாக யிட்டால்
பூமகளு முன்னைவிட்டுப் போகவரியாளே.

வேறு

கொண்டதோர் யோனிபுட்பங் கூடிய கருவுந்தொட்டு
விண்டபேய்க் கருப்பன் சாற்றில் வேதித்து உள்ளே செல்லக்
கண்டதோர் மஞ்ளனுருங் கன்னிக்குக் காதலாகி
யண்டையில் வாரென்ன அறிந்தனராறி வுள்ளோரே.

தம்பனம்

திரிகடுகு, திரிபலை, பூனைக்காலி விதை, கர்ப்பூரம், சாதிக்காய், ஏலம், லவங்கம், கோட்டம் சமன், கஞ்சாப்பொடி இவைகளுக்கெல்லாஞ்சமன், வெருகடிப் பிரமாணம் சர்க்கரை அல்லது தேனில் தாதுவிர்த்திக்கு நாற்பது நாள் கொள்ளவும்.

வேறு

எருமைப்பால் படி 3, ஒரு சட்டியிலே விட்டு மூன்று வராக னெடை நீர்முள்ளி விதைபொடித்துப் பாலிலே தூவித் திரட்டுப் பாலாய்க் காய்ச்சி மாலையில் சாப்பிடத் தம்பனம்.

---

(6) தட்டான் கொட்டோசை = பேய்ப்புடல் விதை; (7) தமரகத்தின் தொனி = ஈண்டம் விதை, சாரோசை; (8) கொட்டாவி = நாய்ப்பாகல் விதை; (9) குயில் மொழி = அதிமதுரம்.

வேறு

மதனகாமேசுரம்—தம்பனம்

தேங்காய் 1, சமுத்திரச்சோகி விதை வ. 5, முருங்கை விதை வ. 10, அபின் வ. 5, சூதம் வ 5, நீர்முள்ளி விதை வ. 25, கஞ்சாவிதை வ. 2, சாதிக்காய் வ. 1, சாதிபத்திரி வ. 1, குரோசானி ஓமம் வ. 5, இவைகளையெல்லாம் பசுவின் பால் வார்த்தரைத்துத் திரட்டித் தேங்காய்க் கண்திறந்து தண்ணீரூற்றி போட்டு அதில் ஞாயிற்று கிழமையன்று உதயத்தில் மருந்தைச் செலுத்தி வைக்கவும். மறு ஞாயிற்றுகிழமை உதயத்திலே யெடுக்கிறபோது ஆதித்தனைப் பார்த்திருந்து உள்ளே இருந்த மருந்தைக் கொட்டிப்போட்டு உடைத்துக் கடுகுபோல கீறிப்புத் தோட்டிவிட்டு நிழலுலர்த்திப் புதுகலசத்திலிட்டுக் கொண்டு வேணுமென்ற நேரம் தேங்காய்க்கீற்றை எடுத்துக்கழுவிப் போட்டு அரைத்துத் திரட்டிப் பொழுது போக ஐந்து நாழி கைக்கு முன் தேனில் குழைத்து விழுங்கி அன்று இரவு புளியும் மோருங் கூட்டாமல் பசுவின் பால் வார்த்துண்ணவும்.

பின்சையோகம் பண்ணினால் வெகுபல முண்டாகும். பெண்மெத்த அங்கலாய்த்தால் எலுமிச்சம் பழமாவது புளி யாவது தின்றால் விடும்.

லேபனம்

புன்னைப்பிஞ்சு பருப்பு வ. 5, நாவி வ. 1, கூ மருந்து (?) வ. 6 இவைகளைக் கல்வத்திலே விட்டுப் பேய்க் கருப்பஞ்சாறு விட்டொரு சாமமரைத்து வில்லை செய்து நன்றாயுலர்த்திச் சூரணம் செய்து சிமிழிலே வைத்துக் கொண்டு ஒரு காசத்தனை சூரண மெடுத்து ஒரு தவளை மதம் வெற்றிலையிலே பிடித்து சூரணம் கூடக் கூட்டி ஒருபாசிப் பயறத்தனை புழுகும் கூட்டித் தண்ணீர் விட்டு மத்தித்து மேல்நோக்கிப் பூசி ஆறவிட்டுக் கழுவிப் போட்டு போகத் தம்பனம்—திடம்.

வேறு

செவ்வாளி வடக்கு வேர்ப்பட்டை ஒருசொட்டை காசத் தனை, சிற்றாமணக்கம் பருப்புப் பாதி, தாழைவிழுதுச் சாறுவிட்டு மத்தித்துப் புழுகு கற்பூரம் கூட்டி மத்தித்துப் பூசி உலரவிட்டுப் புணரதிடம்.

தண்டு பருக்க

செங்கழு நீரல்லியும் லிங்கன்பழமுந் தேன்விட்டரைத்துப் பூசிப் புணர உலக்கைப் போலாம்.

செவ்வாலிவேர், செவ்வந்தி வடக்குவேர் இவை இரண்டின் தோலையுரித்துத் தாழை விழுது தண்ணீர் விட்டரைத்து அதில் புழுகு வேதித்து சித்தாமணக்கிலையில் சுற்றி யிருக்கப் பருக்கும்.

நீரழிவுக்கு

ஆவரை கொன்றை நவ்வலழகிய அகத்தி
மேவியமருந் தோலும் விரைந்துடனொக்கக் கூட்டிப்
பூவினில் தரித்தமாதே புதியதோர் தேனிலுண்ணக்
காவிரி நீரும் வற்றிக் கடலேழுஞ் சுவறு மென்றே.

ஆவரை கடலிஞ்சி யடுத்ததோர் பொன் முசுட்டை
மேவிய வேருங்கொன்றை விளங்கிய பூவினல்லி
பூவினிற் றரித்த மாதே புதியதோர் தேனிலுண்ணக்
காவிரி நீரும்வற்றிக் கடலேழுஞ் சுவறு மென்றே.

கொன்றை சீந்தில் கருங்காலி
குலாவு மத்தி மருதுவிளா
மன்னுளாவிய தென்னிளம் பூ
மருவுங் கட்டுக்கொடி பூலாக்
கன்றுசெறி செங்கிழுவை முத்தக்
காசு கடல் யிறுஞ்சியுடன்
வென்றித்திரிபலை தேற்றான் கொட்டை
மேவும் பூவரசுடன் கூட்டே.

கூட்டைத் தங்குருத்தோரொன்று
குறையாழுப் பலம் ஆவரை வேர்
நாட்டீர் முப்பது பலத்துடனே
நீராழுப்பது படி கூட்டி
வேட்டத்துடனே மிகக்காச்சி
மேவயிருபது படியருத்தித்
தேட்டத்துட னிதைக் கால் படி யிறுத்துத்தீர்
ஆத்திக் குடித்திடுமே.

வேறு

எருமை மோரிரு நாழி வண்டுகட்டி
இதன்மேலே பாவரையின் கொழுந்தை வைத்து
வருகொழுந்தையாவி வெந்து மோர் களைந்து
மற்றெருமை மோர் கரைத்துக் குடிப்பீராகில்
பெருநீ ராயிறங்குமந்த நீரழிவு போகும்
பேசாதே பெருங் காற்றிற் கரைப்பீராகில்

அருநோய்வற்றியிடு மறுதி சொன்னோ
மல்லவென்று சொன்னாரை யழையுமிங்கே.

உத்தண்ட ராமபாணம்

இரதம் பலம் வெண்குன்றி வித்தரிதார மனோசிலையும்
பெருகும்வகை யொன்றிரு பலம் பேசுங்காந்தம் பதின் பலம்
உருகும் விளாம்பிசின் தேற்றங் கொட்டை யுடனென்றைங்
[கழஞ்சு
பரவியரைத்துச் சீலைதன்னில் பரப்பி நடுவே இரதம் விடே. 1

விட்டேதுவாரந்தான் கட்டி மெதுவாங் கழுநீர் தனில் விட்டு
முட்டாதிருந்து மூன்று நாள் முத்தக்காடி வாத்தரைத்து
மட்டாய்க் குன்றிப் பிரமாணம் வகுத்தேமோரில் தேனிலிடக்
கட்டாயிருந்த மதுமேகங் கடல்நீர் சுவருங் கண்டீரே. 2

காரியம் பலம் 3 உருகி வருகிறபோது சரியிரதமிட்டு இறக்கி ஆவரை விரையு மல்லியும் எருமை மோரில் வண்டு கட்டி நன்றாய வித்துக்கொண்டு காந்தம் பலம் 3, கிராம்பு பலம் 3, தென்னம் பூவிரை பலம் ¼, சுத்தி செய்த கந்தகமுங் கூட்டி தென்னம் பூச்சாறு விட்டரைத்து சுண்டைக்காய்ப் பிரமாணம் தேனில் கொடுக்க, எருமைத்தயிர் வடிகட்டி அதிலே கொடுக்க, நீர்மறிக்கும்; தினவு சொறி, வங்கு, சிலந்தி, சிரங்கு இவை தீரும்.

வேறு

ஆவரைசமூலம் சமன்கொண்டு யிடித்துப் பொடியானல் எருமை மோரைச் சட்டியிலே வார்த்து வண்டு கட்டிச் சுத்தி செய்து மறுபடி யெடுத்து இறக்கிறபோது ஆவரை பஞ்சாங்கத்து ஐந்துங்கொண்டு பூனைகங்கூட்டி அரும்பு கிடவாமலிடித்து வத்திரகாயம் பண்ணி வெருகடிப் பிரமாணம் எருமைத் தயிரில் கொடுக்கவும். சங்கை சொல்லிக் கொடுத்து நிறுத்தலாம். குறுணி பத்துபடி யெடுத்தாலும் அரைமண்டலம் கொடுக்க நீர்மாறிடும்.

நீர்வேட்கைக்குச் சஞ்சீவிக் குடிநீர்

தென்னம்பூ, வரிச்செம்பகத்தாழை குருத்து, நரி நாணல் வேர், வில்வவேர், மிச்சுவேர், மலாக்காச் சந்தனச்சிராய், ஆவரை வேர், கொன்றைப்பட்டை, மாம்பட்டை, யிசலைப்பட்டை, கடலழிஞ்சிப்பட்டை, இவை சமன் கூட்டிக்கொண்டு திரிபலை, சீரகம், ஏலம், மதுரம், இலவங்கம், கோட்டம், சிறுதேக்கு, தேற்றான்கொட்டை இவைகளைச் சமன் கொண்டிடித்துப்

புதுப்பானையில் குறுணித் தண்ணீர் வார்த்து குடிநீராக வைத்துக் கால்படி யிறுத்துக் கொடுக்கவும், தாகந்தீரும்.

புழுவுக்கு

ஆடுதின்றாப் பாளைவிதை, காக்காய் கொல்லிவிதை பொடித்துப் புழுவுக்குப் போடவும்.

சிங்காடி சூர்ணம்

மிளகு சிங்கி வெண்காரம்
 மேவுங் கடுச்காய் பெருங்குரும்பை
இளகுந் திப்பிலி யதன்மூல
 மிணங்குங் கண்டங் கத்தரிவேர்
வளமை புகலுங் கிளாவேரு
 மருவும் நெல்லி வேர்ப்பருப்பும்
பழகு பிறத்தை சிற்றரத்தை
 பகர்வேன் மருந்து யின்னமுமே.

பகரக்கேளாய் தானிக்காய்
 பண்பாய் மருந்து சிறு தேக்கு
அகல நிறுத்துச் சரியாக
 அடவா யிடித்துத் தூளாக்கித்
துகர வெருகடிப் பிரமாணம்
 தூய்ய வெந்நீர் தேனிலிடக்
சகமே சொல்லுஞ் சய ரோகந்
 தீர்க்குஞ் சிங்காடி சூரணமே.

அசுவகந்தாதி சூர்ணம்

கிராம்பு பலம் 5, சிறுநாகப்பூ பலம் 1, ஏலம் பலம் 2, மிளகு பலம் 4, திரிபலை பலம் 8, அமுக்குறாவேர் பலம் 32, சீனி பலம் 64, சூரணம் செய்து சீனி கலந்து சாப்பிடப் பயித்தியவாய்வு, அரோசகம், அன்னத்வேஷம் இவைகள் தீரும்.

தாளகச் செந்தூரம்

தாளகம் வ. 15, ஒரு சிரங்கை வாழைத்தண்டுச் சாறு புதுச்சட்டியில் விட்டுக்கலச வாய்க்குச் சீலை மண்செய்து அதன் மேலும் மண் கனக்கப்போட்டு அந்தச் சட்டி முழுக மண்ணு வது சாம்பலாவது போட்டு ஒரு நாழிகை யெரிக்கவும்.

அனுபானம்

தூதளை வேர் அரைத்து எலுமிச்சங்காயளவு சீனி படி அரைக்கால், தேன் படி அரைக்கால், பசுவின் பால் படி ¾, இவைகளை யெல்லாம் ஒன்றித்து ஏழுநாள் கொடுக்கவும்.

வேதை

சாம்பிராணி பலம் 1, சூடன் பலம் 1, நன்றாய்ப் பொடிக்கத் தண்ணீர் வரும் அதில் பாஷாண மதுவைத்து நூறுதரம் புளியந்தணலில் வாட்டக் கட்டும் செம்பில் கொடுக்கவும்.

பொரிகாரச் சுன்னம்

பொரிகாரம் நல்லமணி யெடுத்து எருமைச் சாணியில் சுத்தி பண்ணிப் புழுகைத்தடவி வெயிலில் வைக்க சுண்ணும் பாம்.

மாந்த தோஷத்திற்கு

திரிகடுகு, வசம்பு, ஓமம், வெள்வெங்காயம், பெருங்காயம் இவை வகைக்கு பலம் 1, பெருந்தும்பைப் புட்டவியல் சாற்றிலரைத்து உண்டை பிடித்துலர்த்தி முலைப்பாலில் கொடுக்கவும். மாந்தம், தோஷம் தீரும்.

அமுக்குராவேர், தகரையிலை, ஈரவெங்காயம், இவை வகைக்கு எலுமிச்சங்காயளவு எடுத்து நறுநெய்யிலிட்டு வெந்து மெழுகுபதம் வரின் இறக்கி குழந்தைகளுக்குக் கொடுக்க ரத்தமும் சலமும் மாறும்.

சுரத்துக்கு ராமபாண தைலம்

பொரிகாரம் பலம் 5, கற்பூர சிலாசத்து பலம் 5, கல்லுச் சுண்ணும்பு (புதிதாய் நீற்றது) நாலு விரல் சீலையை ஒரு முழ நீளம் கிழித்து சுண்ணும்புதடவி, மேற்கூறிய இரண்டையும் மடித்துப் புடத்திலே போடவும், புகையடங்கினதின் பிறகு அரைக்கால் படி நல்லெண்ணையில் பொடித்துப்போட்டுச் சூடன் பணவிடை மேலே தூவிக் கிண்டிக்கொடுக்கவும்.

நீரடைப்பு செறிப்புத்தீர மருந்து

பொரிகாரம், கோழிவயிற்றுக் கல்லீரல் இவ்விரண்டையும் தண்ணீர் விட்டரைத்துச் சிறு சுண்டைக் காயளவு உண்டை செய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொள்ளவும். பழந்தண்ணீரிலாகுதல் பசுவின் பாலிலாகுதல் கால் படியில் கலக்கிக் கொடுக்கவும். நீரடைப்பு, கல்லடைப்பு, துன்மாங்கிஷ மெல்லாந்தீரும்.

மாறல் சுரத்திற்கு

தாரம் பலம்1, சுண்ணும்பு பலம்1, பாகலிலைச் சாற்றிலரைத்துக் கடலை, சிறுபயறு குளிகை செய்து நாற்பது நாள் பொடித்து வெந்நீரில் மூன்று பொழுது கொடுக்க மாறல் சுரந் தீரும்.

சூலை கிரந்தி குட்டம் இவைகட்கு

சுத்தரிதாரங் கந்தகஞ் சூதமே சிலை யிலையிலிங்க
மித்தநீர் வெட்டிமுத்து யிசை தருசீரக மோதம்
மொத்தரைப்பலம் வெள்ளுள்ளி ஓர் வகையிவை பொடித்தே. 1
வாய்ந்த வேலிப்பருத்திச் சாறுதனிலூட்டி மருந்தினில் பாத்தி [கட்டிக்
காய்ந்த வேப்பெண்ணெய் படியிரண்டு புங்கெண்ணெய் கால் [கால் கொண்டு
ஆய்ந்ததோர் தீயெரிக்க அவ்வெண்ணெய் பாதி தானும் (?) 2
கண்டன மொழியா யுள்ளங்கையளவாகக் கொள்ள
மிண்டிய சூலை வாதம் வெடி சூலை கிரந்தி குட்டம்
மண்டுள்ள கரைப்பன் போகும் பலசன்னி பேய்க்குமாகும்
கண்டு நான் தெரிந்து சொன்னேன் கமலமா முகத்தினாளே. 3

சங்கத் திராவகம்

நவாசாரம் ஆறு பலம், நான்கு வெடியுப்பு அதனில் பாதி ஆன சீனக்காரம் அதில் பாதி நவாசாரம் கறியுப்பு ஒரு குன்றி கையிலிட்டு மிக்க இயந்திர மதிலடைத்து சங்கு பலம் 9, வெடியுப்பு பலம் 3, காரம் பலம் 13, சாரம் பலம் 3, கறியுப்பு பலம், கத்தகநீர் படி, சாராயம்படி ¾ விட்டு மூன்று நாள் வெயிலில் வைத்து யெந்திரத்திலிரக்கி வைக்கவும்.

வாத சுரத்துக்கு மோர்க்கூழ்

நத்தைப்பாலாவின் பாலுழக்கு நல்ல நொச்சிச் சாறுழக்கு
யெத்தம் புளியிலைச் சாறுழக்கு மீண்டும் வெள்ளாட்டுப்பாலு [ழக்கு
அத்த மாமணக்கெண்ணெய் உழக்கு ஐந்துங் கூட்டி வெந்து [வடித்து
நித்தம் பூசுஉள்ளே நக்கு நில்லாதொன்பது வாதமுமே.

வேறு

வெருகுனிலை நார்வாங்கி மீண்டுங்குறுக அரிஞ்சுதனை
யருகிலும் நாழிநீர்வாத்து வமரக்காய்ச்சிப்

பெருக்கினுமாக வடித்திதனைப் பெருக்கிக் கொள்ளும்
[மருந்தினிக்கேள்.

மருகினுள்ளி மிளகு சுடுகு மற்று மரிசி யிவை நாலு
முருகியொக்கக் கொண்டங் கரைத்து வோங்குங்
கருங்கம் பிளியுங் கூட்டி முருங்குல மெய்திய மோரிலே
முருகவெந்த மோர்க் கூழைப் பருகிவரப்பாக
மென் செய்வோம் பற்றுவாத சுரோணிதமே.

நாகக்கட்டு

நவாசாரம் பலம் 4, அபின் பலம் 2, மிளகு பலம் 1, பச்சைக் கற்பூரம் பலம் 1, பின் மூன்று சரக்குகளைக் குப்பமேனிச்சாறு விட்டரைத்து நவாசாரத்துக்குக் கவசஞ் செய்து சாணஞ் சிலைசுத்தி இரண்டு பலக்காரீய முருக்கியதில் முக்கிப் பாக்குப் போடுகிற நேரம் யெரித்துக் கவசத்தைப் பிளந்து மருந் தெடுத்துக்கொள்ளவும்.

நாகமிருபது கழஞ்சு உருகுகிற முகத்திலே ஒரு கழஞ்சு சாரம் போடவும், நாகங்கட்டும். எருக்கலம் பால், கோழி முட்டை வெள்ளைக்கரு, முலைப்பால் இந்த மூன்று மொன்றாய் ரேசித்து நாகத்தையதில் உருக்கி உருக்கி மூன்று தரம் சாய்க்கவும். பிறகு நின்றவிடந்தீஞ்சானைக் கொண்டு வந்து அரைத்துக் கவசம் பொதிந்து மூன்று புடம் போடவும்.

பல்வலிக்கு அலகு கட்டினதற்கு

நாவல்பட்டை ஊறப்போட்டுத் தினசரி கொப்பளிக்கத் தீரும். வேறு:—சுக்குத்தேறு பாக்குடன் தின்னவும்.

முகவாதம், முகமூதிக்கொண்டு கடுப்பதற்கு

நொச்சியிலை, தைவேளையிலை இவை இரண்டும் வெதுப்பிக் காய்ச்சி முகத்திலே அப்பத் தீரும். பாக்குடன் சுக்கு மிளகு தின்னவும்.

வேறு

எறும்பு புத்தரிசி யரைத்துப் பூசத் தீரும்.

சந்துவாதத்திற்கு

நொச்சி, தழுதாழை வேது பிடிக்கவும்.

வேறு

மிளகு, சாறணைவேர் இவைகளை இளவெந்நீரில் கொடுத்து, மேலும் பூசவும்.

வேறு

வீழியிலை அரிசியிலிடித்துக் களிகிண்டித் தின்னத் தீரும்.

இடுப்புவாதத்திற்கு

பொடுதலை ஒருபிடி கருப்புக்கட்டி, மிளகு, சுக்கு, வெள் வெங்காயம் கூட்டி இடித்து உண்டை செய்து மூன்று நாள் தின்னவும்.

சூடல்வாதத்திற்கு

குருஞ்சானிலை உப்புப்போட்டு தண்ணீர் விட்டு அவித்து இறுத்து, சுக்கு, மிளகு, வெள்ளுள்ளி, கடுகு, சீரகம், வெந்தய மரைத்துக் கலக்கிக் கொதிக்க வைத்துக் கொடுக்கத் தீரும்.

கழல்வாதத்திற்கு

கொடிக்கழல் பருப்புப்பாதி, ஒருள்ளிப்பூடு, மிளகு, வசம்பு கூட்டி அரைத்துக் கொடுக்கவும். கழற்சி இலை, வெள்வெங் காயம், வசம்பு நறுக்கி, வறுத்து, ஒற்றிக் கட்டத் தீரும். இள வெந்நீரில் கொள்ளத் தீரும்.

அண்டவாதத்திற்கு

பருத்திக்கொட்டை நருக்கிப்பிழிந்து கொதிக்கவைத்துக் கொடுக்கவும்.

வேறு

பெருங்கொத்தானிலை வசம்பு வெள்ளுள்ளி நறுக்கி வறுத்து ஒற்றிக்கட்டவும்

தண்டுவாதத்திற்கு

புணித்தண்டு, கோவைத்தண்டு, சுக்கு, வசம்பு, மிளகு, ஒருள்ளிப்பூடு அரைத்துக் கரைத்துக் கொடுக்கவும். கோதை வீக்கத்தில் கட்டவும்.

உருளைவாதத்திற்கு

மஞ்சணத்தி இலையைக் குண்டு சட்டியிலிட்டுத் தண்ணீர் விட்டுச் சீலைகட்டிக் குருவை அரிசிமாப்புட்டுச் சுட்டுக் கருப்புக் கட்டி கூட்டி எண்ணைவார்த்துத் தின்னத் தீரும்.

குடல்வாதத்திற்கு

புத்துமண், நண்டு தோண்டுமண், உவர்மண், சுண்ணாம்பு கூட்டி அரைத்துக் கோழிமுட்டை வெள்ளைக்கருவும் கலந்து விளக்கெண்ணெயில் கொதிக்க வைத்துப் பற்றிடவும்.

முழங்கால்வாதத்திற்கு

காத்தோட்டி இலை பிழிந்து, சுக்கான் கல்லைக் காய்ச்சிப் போட்டுக் கொதிக்கவிட்டுப் பூசிக் கோதுங்கட்டவும்.

கெண்டைவாதத்திற்கு

மான்செவிக் கள்ளியிலை வெதுப்பிப் பிழிந்து கெண்டைக் காலில் தடவி முறுக்கவும், அல்லது திருகுக் கள்ளிக்கொம்பு முறுக்கிப் பிழிந்து முறுக்கவும்.

குதிவாதத்திற்கு

திருகுகள்ளிக் கொம்பு வெதுப்பி ஏற்றவும். சிற்றாமணக் கெண்ணெய் தடவி வரவும். நொச்சியிலை அவித்துக் கட்டவும். கொட்டைக் கரந்தையைத் துவைத்துக் கட்டவும்.

விரணவாதத்திற்கு

அவுரிவேர், செங்கத்தாரிவேர், வசம்பு, வெள்வெங்காயம் நருக்கி நல்லெண்ணெய், விளக்கெண்ணெய் சமன் கூட்டியெரித்து உடம்பில் கை காலி லிடத் தீரும்.

சர்வாங்கவாதத்திற்கு

நல்லெண்ணெய், விளக்கெண்ணெய், வேப்பெண்ணெய் கலந்து, நொச்சி, தழுதாழைவேர், வசம்பு, வெள்வெங்காயம், மிளகு, நெரித்து யெரித்துச் சரீரத்திலிடத் தீரும்.

நீர்சுருக்குக்கு

ஆனைநெருஞ்சிக்கா யரைத்துப் புன்னைக்காயளவு சுண்ணும்பில் பொதிந்து சீலைசுத்திச் சுட்டுயெடுத்து மருந்தைப் பசுவின் பாலில் கொடுக்கவும்.

வேறு

பொரிகாரம் பலம் 10 வாங்கி சாணத்திலே எண்ணெய் போகக் கழுவிச் சுத்தி செய்து கொள்ளவும். பலகறை (சோழி) அறுபது முப்பது கொண்டு வந்து எருவிலே வைத்து நீற்றுக்கொள்ளவும்.

பேய்க்கரும்பைப் பிளந்து சோற்றை யெடுத்துச் சட்டியிலே விரல் கனத்துக்கு வைத்து அதிலே நீற்றின பலகறையில் பாதி யைவைத்து அதின்மேலே பொரிகார மெல்லாம் வைத்து அதன் மேலே மற்றப் பலகரையைவைத்து அதன்மேலே நாலுவிரக்கடை பேய்க்கரும்பின் சோற்றை வைத்துச் சட்டிகொண்டு மூடித்

தீ யெரிக்கப் பேய்க் கருப்பஞ்சோறு வெந்து சாம்பலானால் ஊதிப் போட்டு மருந்தையெடுத்து அம்மியிலே அரைத்துக் குழவிலே யடைத்துக் கொள்ளவும். நீரடைத்தால் இளநீர்த் தண்ணீரில் கொடுக்கவும். சீரகம் அவித்த தண்ணீரில் கொடுக்கவும். (பசரை) பசிரி அவித்த தண்ணீரில் கொடுக்கவும். நீர்ச் செறிப்புக்கு நாளிலே கொடுத்து வரவும்.

வேறு

மாவிலிங்கம்பட்டை எலுமிச்சங் காயளவு எருமைமோரில் மூன்று நாள் கொள்ளவும்.

வேறு

பிரண்டை, மால்கிழங்கு, புளிநரளைக்கிழங்கு, பிளவை கொல்லிக்கிழங்கு, பொடிசெய்து எருமைமோரில் கூழாக்கித் தின்னவும், உப்பு புளி தவிர்க்கவும். ஓடுவடக்கி சிறுநீரில் வறுத் துக்கட்டவும்.

பவுத்திரத்திற்கு

பவுத்திரம் வந்த நேரத்திலே, பெருங்காயமுஞ் சுண்ணாம் பும் பொட்டணம் கட்டி நல்லெண்ணெய் விட்டு சட்டி காய்கிற போது பொட்டணத்தை வைத்தெடுத்து ஒற்றடமிடவும். பவுத் திரம் வேர் கெட்டுப்போம்—கைகண்டது.

வேறு

மெருகன்கிழங்கு வெட்டிவந்து மூன்றுநாள் கட்டவும். பவுத்திரவேர் கெட்டுப்போம்.

புகை

குமிழம்வேர் பலம் 5, சிவனார்வேம்பு வேர் பலம் 5, இரண்டு மருந்தும், இவையுடன்

இரதங் கழஞ்சுடனேற்கும் லிங்க
 மிதன்பாதி வருவுந் தூபங்காரீயம்
அறுத்து மீண்டும் பதின்கழஞ்சு
 துரிசுவரை இதிற்தாரங்கால் தோற்றுங்
கந்தகம் வெள்ளைக்கழஞ்சுடனே
 கடுகு மிளகு கருஞ்சீரகம்
கரியு மொவ்வொன்றிரு கழஞ்சு
 மஞ்சள் வெந்தயம் சேங்கொட்டை
மதிக்க அரையிட சாம்பிராணி
 மானங்காத்தான் சாற்றரைத்து

வாளாவுண்டை பதிமொன்றைப்
புளியுமுப்பு முடன் கூட்டிப்
புகையீர் புளியந்தணல் தனிலே
கண்டமாலை கரும்பறங்கி
கைகால் முடக்கல் கண்வீக்கம்
ஓடுக்கள் வடுக்கள் ஓட்டியபுண்
பவுத்திரம் பிரமேகம் அரையில்புத்து
மடுப்புண்ணு மலைக்கும் வாதம்
உலைக்கும் வலிப்பும் ஒருபுறமும்
ஓயாக் கடுப்பும் போய்விடுமே.

இரச கற்பூரம்

நாதமென்ற இரசகற்பூரம் பண்ண
நலமாகச் சொல்லுகிறேன் கேளுகேளு
போதமென்ற சூதமது பலந்தானெட்டுப்
பேரான கந்தகமோர் பலந்தானொன்று
நீதமென்ற கந்தகத்தை ஓட்டிவிட்டு உருக்கி
நினைவாகச் சூதத்தை அதிலே விட்டுக் கிண்டு
நாதமென்ற கரிப்போலே தூளாய்ப் போகும்
நலமாக எடுத்துவைத்துப் பாகங்கேளே. 1

கேளப்பா மண்ணாலே தோண்டி யிரண்டுபண்ணி
கெட்டியாகச் சந்து வாய் பொருந்தச் சுட்டு
நாளப்பா மேல் தோண்டிக்குள்ளே பூச
நலமான மத்தஞ்சாறு மூன்றுதரம் பூசு
வேளப்பா உலர்ந்த பின்பு வடித் தோண்டிக்குள்ளே
விரவியதோர் கறியுப்பு அரைத்தோண்டி மட்டும்
வாளப்பா பொடிபண்ணித் தோண்டியிலே போட்டு
மருவியதோர் செங்கலமா நாளதானே. 2

தானான அரை வாசி உப்புமேல் போட்டுத்
தண்ணுக்குள் சூதத்தூள் பற்பம் வைத்துக்
கானான அதின்மேலே செங்கல்மாப் போட்டுக்
கையாலே அமுத்திட்டு மேல் தோண்டி கவிழ்த்து
வானான சந்துக்குள் மண்ணைச் செய்து
மருவியதோரடுப்பேற்றி யெரிப்பாயப்பா
தேனான காடாக்கினி சாமம் நான்கு
சிறப்பாக எரித்திடவே பதங்கமாமே. 3

ஆமப்பா பதங்கமது மேல் தோண்டிக்குள்ளே
[illegible]

தாமப்பா பதங்கமெல்லாம் வித்ததாச்சுக்
கட்டித்ததும் பாமலேடுத்தல்லோ குப்பிக்கிட்டு
வாமப்பா வாலுகையின் மேலே வைத்து
மறவாமல் தீப்போடு பன்னிரண்டு சாமம்
காமப்பா பதங்கமது யிறுகி யேறிக்
கம்பிபோல் வெளுப்பாக இருக்கும் பாரே. 4
இருக்கிறதோர் கற்பூரம் விராகன் நான்கு
இதமான கந்தியது விராகனென்று
பருக்கிறதோர் கல்வத்தில் பொடியாய்ப்பண்ணி
பணவிடைதானனுப் பானத்தோடே கொள்ளச்
செருக்கிறதோர் கடி விஷயங்கள் புண்கள் சூலை
செருமியதோர் குட்டங்கள் பவுத்திரங்கள் கிரந்தி
யிருக்கிறதோர் வியாதி யெல்லாம் கண்டு போகும்
ஆதித்தனைக் கண்ட பனிபோலாகும் பாரே. 5

அகத்தியன் குழம்பு

சருவ ஈசுரனுர் லோகஞ் சகலரும் படைத்த மானுள்
பொருமையாய் உலகில் வாழும் புண்ணிய சனங்களுக்கு
உருபல வியாதி வந்தால் தீரு மென்றுண்மையாகப்
பெருபலனிதுவே யென்று பேசினுர் முனிவர்தானே. 1
பேசிடு மருந்து கேளாய் பெருங்காயம் கடுகிந்துப்பு
வீசிய ரசம் பொரிகாரம் வியன்மனேசிலையுங் கூட்டி
ஆசில்லா திப்பிலிதான துகட்டரி தாரமெல்லாம்
மாசில்லாக் கருஞ்சீரகம் வகைவகை கழஞ்சு வாங்கே. 2
வாங்கிய கழஞ்சு யொன்பான் நேர்பாளம் வறுத்துப்பாதி
தாங்கிய பச்சை பாதி சமன்முளை போக்கி நீக்கித்
தீங்கில்லா மருந்து பத்து சேரவே அரைக்க காந்தல்
புங்கிடில் மோருஞ் கோறும் உண்டுநீ அரைத்துக் கூட்டே. 3
கூட்டிய மருந்தின் பேரே அகத்தியன் குழம்பதாகும்
ஈட்டிய சுரமே சுக்கு இருமலே கடுக்காய்ச்சாறு
வாட்டிய குளிர் சுரங்கள் வந்திடில் மிளகுத்தூளில்
பாட்டில்லா ரத்த மூலம் நெய்யினில் மத்தப்பாலே. 4
பாலினில் மொழியாய்க் கேளாய் பாண்டு மகோதரம் வெப்புப்
[பாவை
மேலும் நீராம்பல் கூகை வீக்க மிளகுத் தூள் வெள் வெங்காயம்
சாலவே சன்னிக்கெல்லாம் தேனிஞ்சிச்சாறதாகும்
யேலமாங்குழலாய் வாள பெண்விச சன்னிக் கண்ணிலிடே. 5

இடுகண்ணில் கடுகில் பாதி வீங்கினால் கற்றாழஞ்சோறு
வடிதயிர் சந்தனங்கள் வைத்து நீ கட்டமாறும்
படுபருபிளவை வாளை பக்கரையாப்புப் புண்கள்
விடுபெரு சிலந்தியாகில் உமிநீரில் மிகவும் பூசே. 6
பூசிடுமூலக்குத்துக்கும் புத்துக்குமிதுவேயாகும்
சூசிக வலிகுன்மங்கள் தோன்றிடில் சுக்குச்சாற்றில்
கூசும் வாதங்கள் சூலை குட்டங்கள் நொச்சிபாரே. (2) 7

பாராய் கபாலவலி முதலாய்ப்
பிசாசு பறக்குந்திரி புகையில்
நீராயெடுக்கும் நீர் செறிப்பு
நீர் கல்லடைப்புத் தாழையினீர்த்
தீராக்கிரந்தி பறங்கி முதல்
தீருங் குப்பிச் சாற்றிலிடச்
சீராய்க்கேட்கும் பல விஷமும்
தீரும் சிறக்கத் திரிப் பிடியே. 8
பிடிக்கும் திரிமுன் அம்மி தனில்
பிரட்டிச் சீலையது தன்னை
இடிக்குந் தலைநோய் தனுர்வாத
மிடிக்கு மிழுக்கும் வலிப் பென்றதுக் கெல்லாங்
குடிக்க வெள் வெங்காயத்தில்
கொடிசேர் கழற்சி யிலைச் சாற்றில்
நொடிக்குஞ்சன்னி பதி மூன்றும்
அனுபானஞ் செய்நீ நூல் விதியே. 9
விதியாய் மருந்து இதுவல்லால்
வேறே தேடவேண்டாமே
மதியாய் விதியாய்க் குறிப்பறிந்து
வருந்தி அனு பானஞ் சேர்த்துப்
பதியாய்க் கொடுப் பண வெடைதான்
கைகண்டதே பத்தியங்காரே. 10

விஷகோடாரி மாத்திரை

தாரஞ் சூதஞ் சிலையிலிங்கந்
தக்க கந்தி நேர்வாளம்
ஆரவகை யொன்றிரு கழஞ்சா
யடவில் கரிய கம்பிளியுந்
தீரத்துடனே சுட்டகரி
திடமாய் மூவெண் கழஞ்சதொக்க

வீரத் தெருக்கன் பால் படிகால்
விட்டேயரைத்து குன்றி மட்டே. 1
மட்டே குளிகை மேனி ரச
மதனிற் கொடுக்க வேலி விஷவெம்
துட்டப் பாம்பு விஷமுடனே
தோஷம் பதின் மூவகையுமறுந்
தட்டா துளக்குத்துள் வீச்சுத்
தானே விரைப்புவலி யகலுங்
கிட்டாவாய்வு வெல்லத்தில்
கிளர்ந்து கொடுக்கத் தான் தீரும். 2
தீரும் சுக்குக் குடிநீரில் தீபனமுண்டாம் மற்றும்
பாரும் பாலு நெய்யுப்பிவை நோய்
பார்த்துக்கண்டு கூட்டுவது
கூறுங்காணும் தீய விஷ
கோடாரி குளிகை யிதுவெனவே
பேருஞ்சொல்வீ ரிம் மருந்து
பெரியோர் சொன்ன குறிப்பிதுவே. 3

சுயமக்கினி

அரப்பொடி பலம் 10, கந்தகம் பலம் 10, ஊசிக்காந்தம் பலம் 10, வெண்காரம் பலம் 10, சாதிலிங்கம் பலம் 10, கற்றாழஞ்சாறு விட்டு நாலு சாமமரைத்துப் பொடி செய்துத் தாலத்திலே வைத்து செம்புக் கிண்ணிகொண்டு மூடி வெயிலிலே வைக்கப் புகையெழுந்து வேகும். மறுநாளெடுத்து மறுபடி கற்றாழஞ் சோறுவிட்டு நாலு சாமமரைத்துத் தாளத்தில் வைத்து மறுபடி கிண்ணிகொண்டு மூடி வெயிலிலே வைக்கச் சிறு புகையெழுந்துவேகும். மூன்றுநாளு மிந்தப்படி அரைத்து அப்படி வைக்க மிகுதியும் வேகும். இந்தச் செந்தூரத்தில் ஒரு பணவெடையும் திரிகடுகு வெதுப்பின பொடி வெருகடியும் தேனில் இரண்டு நேரம் நாற்பது நாள் கொள்ளச் சன்னி பதிமூன்று வாதம் எண்பதும் வாய்வு, பித்தம் நாற்பதும், உஷ்ணரோகம், சத்திகுன்மம், வலி குன்மம், எரிகுன்மம், சூதகவாய்வு, பெருவிரலிலே நின்று உச்சந்தலையிலே மூர்ச்சித்துப்போடுகிற வாய்வு, வாத மூர்ச்சை, பித்த மூர்ச்சை, செத்து மூர்ச்சை, முசல் கண்டன் மூர்ச்சை, சன்னி மூர்ச்சை, குண்டல வாய்வு, குடல்வாதமிவை யெல்லாந் தீரும். மற்றுண்டான வியாதிகளுக்கும் அநுபானம் பார்த்து அறிந்திடவும்.

தாளிசபத்திரி சூரணம்

செப்புகிறேன் தாளீச பத்திரி தானப்பா
திறமான நாற்பதுவே கழஞ்சு கூட்டி
செப்புகிறேன் சீனியந்த யெடைக்கெடைதான்
கூட்டு திரிகடுகு திரிபலையும் சீரகமோடேலம்
செப்புகிறேன் சாதிக்காய் பத்திரி கிராம்பு
சிறுதேக்கு அதிமதுரம் சிறு நாகப்பூவும்
செப்புகிறே னிலவங்கப்பட்டை மிளகு ஓம
மிரண்டு கொட்டல் தேசாவும முக்கிறுவும். 1

திட்டாகக் கொத்தமல்லி முந்திரி பேரீந்து
செப்பரிய கூகையின் நீறு கூட்டு
முட்டா நிலப்பனைக்கிழங்கு அமுக்குறாவேர்
முத்தக்காசிலா மிச்சம் வெட்டி வேரப்பா
நாட்டாதூதி கண்டங் கத்தரியுடவேரும்
நெய்தல் கிழங்குடனே நேதல் பொரியும்
நாட்டே . . . .
. . . . 2

நாட்டிந்த மருந்து வகை நாற்பதுக்கு மப்பா
நலமாகவே வகைக்கோர் கழஞ்ச தாகக்
கூட்டு இதைப்பழுக்கற்றி வெயிலில் காயவைத்துக்
குமிற இடித்துப்போட்டு வடிகொண்டு பின்சீனி
காட்டொன்றாய்க் கலந்தபின்பு புதுக்கலசத் திட்டு
கைக்கடங்க வெருகடி தானிருபோதுண்ணு
மூட்டுவது தேனிஞ்சிச் சாறுகுமப்பா
புகளவரும் மாதளையின் பழச்சாற்றில் போமே. 3

போமப்பா காசவகை தொண்ணூற்றாறும்
பொல்லாத காமாலை தூரப்போகும்
போமப்பா பலம்ருட்சை தாகசோபம்
போகும் வோலோடுயீளையவி யிருமல்போகும்
போமப்பா வாந்திய ரோசகந்தானும்
பூண்டகுன்மம் நெஞ்செரிப்புத் தேகங்காந்தல்
போமப்பா பித்தவெட்டை தாதுநட்டம்
புகைச்சலோடு கண்மயக்கம் புண்புரைகள்போமே 4

புண்பொடிகள் சிரங்குடனே கரப்பன்போகும்
பண்ணை வெந்தகெந்த தாளிபோகும்

புண்பொடியாம் சூலைகளும் குட்டம் போகும்
பேர்பெரிய வாய்வு எண்பதுதானும் போகும்
புண்பொடியாய் நோய் போகப் பத்தியத்தைக்கேளு
புகழ்த்துவதை ரழுகாத்தண்டு தூதுவளை சமூலம்
புண்பொடியாம் வெள்ளாட்டுப் பாலதாகும்
பிறியும் பொல்லாத மாங்கிஷங்கள் புளிக்
[கசப்புங்காரே. 5

கோரநோயுக்கு

இண்டிலை ஒரு மாங்காயளவு அரைத்து நல்லெண்ணெயில் குழப்பி மூன்று நாள் கொடுக்கவும்.

துட்டுக்கு

கீழ்காய் நெல்லி இலையும் காயுமரைத்துப் பசுவின்நெய்யில் வெந்து கொடுக்கவும் ஒரு காசெடை கொடுக்கத் துட்டுத்தீரும்.

வேறு

குளிர்காய்ச்சல் விக்கத்திற்கு எண்ணெய்

மின்னிடைமாதே மிகுந்த குளிர்காய்ச்சலுக்கு
வண்ணமுறு மோரெண்ணெய் வைப்பதுகேள்—நன்னயஞ்சே
ராவின் மோர்பத்துப் படியான வெண்ணெய் இரண்டுபடி
மேவிய பச்சிலையாத்தை மென்மதூரம்—காவில்வள
ரேலமிலவங்க மிருவேலிலா மிச்சுக்
கோலமுறு சாதிக்காய் கோட்டமுடன்—சீலமிகு
சந்தன மஞ்சிட்டி தேவதார மிளகிந்துப்புக்
கந்தமுறும் பச்சைகடுகு ரோகணியுந்—துங்கக்
கடறுரைவேர் கொம்பினுடன் கச்சோல மலைதாங்கி
யடல்பெரிதாய் நின்ற அதாவரிசி மடமயிலே
யோரொன்றிரு கழஞ்சாய் ஒன்றித் தரைத்ததனி
லாரவே பொன்மெழுகி ரஞ்சுகழஞ்—சாரமுடன்
கூட்டி வடித்துக் கொண்டு முறைக்குமுறை
வாட்டமறவே முழுகில் வந்த சுரம்—சேட்டையது
செய்யாது குளிர்மாறல் சேர்ந்த விஷப்பாண்டுவுடன்
மெய்யிதெனப் போமே விரைந்து.

விக்கலுடன் கூடின சுரத்திற்கு

சாரணை, அரக்கு, அமுக்கிறுவேர், சிற்றுமுட்டிவேர், வகைக்குப்பலம் 5 ஆக எடுத்து இடித்துப் பதினாறுபடித் தண்ணீர்விட்டு நான்குபடியாக வற்றக் காய்ச்சி வடித்து இதில் நல்லெண்ணெய்

படி 1, தயிர் தண்ணீர் படி 2, அரத்தை, அரேணுகம், பெருங் குரும்பை, கோட்டம், சந்தனம், அஞ்சனம், முத்தக்காசு, நில வேம்பு, தேவதாரம், மஞ்சிட்டி, விலாமிச்சு, நன்னாரிவேர், வகைக்குப் பலம் 5, அரைத்துக் கலந்து வேப்பம்பட்டை, தண்ணீர்மிட்டான் கிழங்கு, அறுகு வகைக்குச் சாறு அரைக்கால் படி விட்டுக்கலந்து காய்ச்சிப் பதத்தில் வடித்துத் தலையில் தேய்க்கச் சர்வசுரமும் தீரும்.

வேறு

காட்டு வெள்ளரிஇலை ஒருபிடி, பொற்கொன்றைஇலை ஒரு பிடி, காவட்டம் புல் ஒருபிடி, நில இலந்தைஇலை ஒருபிடி, உள்ளி, வசம்பு, ஓரொன்று நான்கு காசெடை, அரைத்து நாழி விளக்கெண்ணெயில் கலந்து காய்ச்சி வடித்து, மேலுங்கடித்தமாக விட்டுவர சருவ சுரமும் தீரும்.

செவியிரைச்சலுக்கு உள்ளி ஏறண்ட யெண்ணெய்

செவிதானிரைந்து வண்டு தும்பி
　செய்யவாச்சியம் போல் முழங்கில்
புவிசேர் கோட்டமதி மதுரம்
　போந்து மேலம் குளவிந்தம்
குவியா தடவிக் கச்சோலம்
　குளிர்ந்த மகிழம்வேர் அதின் காயும்
தவிய அரைத்து வெந்த எண்ணெய்
　தனைவார்க்கத் தவிர்ந்திடுமே.

உள்ளித் தைலம்

உள்ளியா மணக்கெண்ணெய் உரைக்கும் பசியதற்கு
வள்ளி இடைமாதே மருந்துகேள்—வெள்ளுள்ளி
ஓர் துலாம் கொண்டு துவைத்தோர் குருணி நீரிட்டுக்
காரீயமா யெட்டொன்றாக் காய்ச்சி—நீர் வடித்துப்
பின்னும் வகை கேள் பிரண்டை பிளி தாழை
மன்னு சில சாரணை வாரணாங்கள்ளி—துன்னுமுடக்
கொத்தான் திருகு கள்ளி கொடிவேலி நற்சிவதை
யுத்த வேலிப் பருத்தி யொன்று கொன்றை—வெற்றி செறி
காட்டா மணக்கினுடன் காக்கனிலை இத்தனையுந்
தாட்டிமையாய் வேறாகத்தான் கொண்டு—வாட்டமின்றிப்
பத்துப்பலம் வகைக்குப் பஞ்சுபோலே யெடுத்து

இத்தனையும் மெண்குருணி நீரிலிட்டுச்—சித்தமுடன்
காய்ச்சிக் குருணிகொண்டு கள்ளிப்பால் தானுரியு
மாச்சுவைக்குந் தேங்காய்ப்பால் நானாழி—வாய்ச்ச தொரு
நேர்வாளம் நூறு நிகரில்லா உப்பிலிட்டு
வாரமுடன் வித்து மறுத்தெடுத்துக்—கூர்மையுடன்
வெல்லும் நஞ்சுதான் போக்கி மிக்கப்பால் விட்டரைத்து
நல்ல விளக்கெண்ணெய் முன்னாழி விட்டு—வல்ல
திரிகடுகு வெட்பாலை செவ்வியம் செவ்வள்ளி
அறியுந் திரிபாலையத்தித் திப்பிலி—நாரியவிளால்
கற்கடக சிங்கி கடுகு ரோகணி கல்லுப்பு
வெற்றி செறி இந்துப்பு வெண்காரம்—முத்தப்
பெருங்காயம் கச்சோலம் போதிப்பிலி மூலம்
மரும்பச்சிலை நிலவேம்பட்டுப்பு—ஒருங்கு செறி
காசில் வகைக்கு மிந்தக் கடைசரக் கோரொன்று
வாசமுடன் முக்கழஞ்சு வாங்கி இதை—நேசமுடன்
தானரைத்து எண்ணெய்தனில் கரைத்து வெந்து வடித்து
ஊனமன்றியித் தைலமுட்கொண்டால்—மானேகே
ளட்டாதிகுன்ம மண்டாதி சூலைகளும்
விட்டோடுமே கவிசை வெப்புப்பாவை
துட்டமகோதரம் நீர்த்தோஷம் (?)—வட்டத்துள்
நோய்பின் பகரும் வியாதி யெல்லாம் பாறு
நிகரில்லா வள்ளல் முனி சொல்லை வகுத்துரைத்த
சொற்படியே உள்மகிழ்ந்து சொல்வீர்.

ஆனந்த வாய்வுக்கு

தேங்காய் யொன்றின் பால் கொடு செய்ய கொத்தா
 ளொருபிடி யொட்டாறோர் பலம் வெள்
வெங்காயம் அரிந்திட்டுழக்காமணக்
 கெண்ணெயறிந்திட்டு
வெங்கானுள்ளி சிவந்திட்டு வீக்கந்
 தனில் கடுகை யொற்று
போங்கான் மூன்றினிறை யெண்ணெய் கொள்ளில்
 போமே ஆனந்த வாய்வுமே.
சிற்றாமணக்கெண்ணெய் ஈருழக்குச்
 சிறந்த வேளு காலப்பருப்பு
முத்தவெண்கார உள்ளி பலமுதிர்ந்த
 நொச்சிக்கொழுந்து சத்து

இத்தை வெந்து இருகாசி னளவெண்ணெய்
உள்கொடு கடுகையொத்து
வத்தியே ஆனந்த வாய்வு
அறிந்து செய்யவல்லீரே.

ஆனந்த வாயு வென்றழலும் அறிவில்லாதபேர்களே
கானந்தனில் காத்தொட்டியிலே கடிய எலுமிச்சங் காயளா
ஆனமில்லா மூன்றுருண்டை யுருட்டி [வரைக்கு
நல்லெண்ணெய் மேல் பிரட்டிப்
பானுமுதைய மாலே கொள்ளில் பறந்துபோகும் கண்டீரே. 3

வெட்டைக்கு

அமுர்தவல்லி வேர்ப்பிடுங்கி பசுவின் பாலில் கொள்ள வெட்டை தீரும். பசுவின் நெய்யில் கொள்ள எலும்புருக்கி தீரும்.

கவிசை பிலீகை பெருவயிறு தீராமை இவைக்குச் சாவல் பற்பம்

முள்ளு முத்தின சாவலறுத்துச் சதை யெடுத்து வெள்ளாட்டுக் கோமியம் படி விட்டு, வேகவைத்து, அதை யெடுத்து, நன்றுயரைத்துச் சேர்க்கு மருந்து, கடுகு படி ¼, ஓமம் படி ¼, சுக்கு பலம் 4, வெள் வெங்காயம் பலம் 3, இந்துப்பு பலம் 3, நேர்வாளம் பலம் 10, வெண்காரம் பலம் 2, சீனக்காரம் பலம் 2, உவர்மண் பலம் 2, காந்தம் பலம் 2, துருசு பலம் 2, திப்பிலி பலம் 2, கொடிவேலிவேர் பலம் 2, சாறணைச் சாறுபடி ¼, வேலிப் பருத்திச்சாறு படி ¼, பிரண்டைச்சாறு படி ¾, வெள்ளாட்டுப் பால் படி ¾, கருப்புக் கட்டியரைத்துக் கரைத்து நீர்வற்றக் காய்ச்சி உலர்த்திப் பொடிசெய்து வெருகடிப் பிரமாணம் அரை மண்டலம் கருப்புக்கட்டி தின்று, மருந்து கொள்ளவும். இதற்கு தீரும் வியாதி—கவிசை, மேல் கவிசை, அட்டலிகை, பிலீகை, மகோதரம், விஷபாகம், நீராமை, விஷ கரப்பான் இவையெல்லாம் தீரும். பத்தியம் பழஞ்சோறுண்ணவும். கோழிமுட்டை வெள்ளரிக்காயும் கூட்டிக்கொள்ளவும். ஆவின் மோர் கூட்டிக்கொள்ளவும்.

வெப்புப்பாவை கவிசைக்குப் பொடி

சொன்னார் முனிவர் சுக்குடனே
சூடன் மிளகு திப்பிலியும்

கல்நார் சாதிக்கா யோமம்
காந்தம் கண்டு கடுக்காயும்
பொன்னார் காய மிந்துப்புப்
பொருந்துந் திப்பிலி மூலமுடன்
முன்னோர் சீரக மிட்டுடனே
முடுகு வெந்தயம் ஓரொன்றே. 1

ஒன்றா யிடித்துப் பொடியாக்கி
ஒருங்க கூட்டு மருந்தின்னங்கேள்
நன்றாய்க் கள்ளிப்பட்டைதனை
நகள அவித்துப் பொடியாக்கிக்
குன்றா மருந்துக்கினி சேர்த்துக்
கூட்டி அவித்து வெருகடிதான்
தின்றே வெந்நீர்தான் குடிக்கத்
தீரு மின்னம்நோய் கேளாய். 2

கேளாய் வெப்புப் பாவையுடன்
கெண்டை தீராகவிசை
மீளாவாமை கற்சூரை
விரிந்த குன்மம் திரட்சி
பாழாம் பாண்டு காமாலை
பத்தி முந்திப் பிரிபட்டுத்
தூளாய்ப் பொடிப்போ மென்றே
சொன்னார் முனிவர் சொன்னாரே. 3

இருமலுக்கு

மக்கள் மக்கள் தலை முறையாய்
வாறாயிருமல் வழிதீர
நிக்க நல்லமருந்து சொன்னோம்
நேரே கழஞ்சரை அரிதாரம்
ஒக்க அரைத்து நாழி நெய்யில்
ஊறிக்காய்ச்சி யுடனிறக்கி
நக்கப்போம் யீளையிருமல்
நாதனறியச் சொன்னோமே.

வேறு

விளக்கெண்ணெய் படி $\frac{1}{4}$ முலைப்பால் காலாழாக்கு, வெற்றிலைச் சாறு ஆழாக்கு, கோரோசனை பலம் $\frac{1}{4}$, பொடித்துப் போட்டுக் காய்ச்சி வடித்துக் கொடுக்கவும்.

கழல் வாதத்திற்கு ஒற்றடம்

கழற்சிப்பருப்பு, கழற்சிக்கொழுந்து, சீரா செங்கழுநீர்வேர், முடக்கொற்றான்வேர், வெள்வெங்காயம் வகைக்கு ஒரு எலுமிச் சங்காயளவு பசுவின் பால் விட்டரைக்கவும், கார்கோலரிசி, கருஞ்சீரகம் வகைக்குக் காலாழாக்குப் பொடி; முன்னரைத்த மருந்தும் இந்தப் பொடியும் வேப்பெண்ணெய்விட்டு வறுக்கவும். இதற்கு தீரும் வியாதி—கழல் வாதம், குடல்வாதம், அண்ட வாதம், ஆனந்தவாய்வு இவையாம்.

பெருவியாதிக்கு

வசுவாசி, அரிதாரம், நிர்விஷம், அவுரிவேர், கந்தகம், கருஞ்சீரகம், மேதை, சீரகம், நாபி, நீரடிமுத்து இவைகளை நெய்யிலிட்டு வெந்து பதத்தில் வடித்துக்கொள்ளவும்.

தீரும் நோய்கள்—வண்டுகடி, செவ்வண்டுகடி, பதகரி, குட்ட மிவைகளாம்.

கர்ப்ப விப்புருதிக்கு

கோடகசாலைச்சாறு, சாரணை இலைச்சாறு, குறிஞ்சாச்சாறு, நிலவேம்புச்சாறு நல்லெண்ணெயில் வெந்து நக்க கர்ப்பவிப் புருதி நீங்கி கர்ப்பமுண்டாம். அளவு—ஒவ்வொன்றும் சமன்.

திரைக்கு

சூடன், புளி, மிளகு, சிறுதேக்கு, சுக்கு, திப்பிலி, மதுரம் வகைக்கு இரண்டு கழஞ்சு, கடுக்காய் 10, வேப்பிலைப்பிடி யிட்டுப் பிரண்டையின் நீராலரைத்து, சிற்றாமணக்கெண்ணெயிற் பெய்து விழுங்கத் திரண்டு புரண்ட மலங்கள், திரை, சிறு புழு வெல்லாம் புரண்டு விழும். புரண்டு விழாவிட்டால் பொன் பதி னாயிரம் தெண்டம்.

கர்ப்பவாய்வுக்கு எண்ணெய்

சிற்றாமணக் கெண்ணெய் படி 1, கருஞ்சீரகம் படி 1/16, ஓமம் படி 1/16, வசம்பு வ. 5, பீநாறிப்பட்டை வ. 2½, வெளுத்த பிசின் வ. 2½, பெருங்காயம் வ. ¾, வெள்ளுள்ளி உரித்து படி 1, ஆடு தீண்டாப்பாளைச் சாறப்படி 1, மேனிச்சாறு படி 1, சங்கங் குப்பிச்சாறு படி 1, பச்சிலை மருந்து எல்லாமிடித்துப் பிழிந்து கொண்டு, கடைமருந்தெல்லாம ஷை சாறுவிட்டரைத்து வந்த இந்த மருந்தும் எண்ணெயில் போட்டுக் கிண்டிப் பதமாக வெந்து கடுகுடனே கலசத்திலூற்றிக் கொள்ளவும். ஒரு துட்டுக்காசளவு

கொடுத்துவிடவும். இதற்கு தீரும் வியாதி—சூசிக வாய்வு, கர்ப்பக்கிருமி, வயிற்றுவலி, குடைவு, இவை தீரும். கர்ப்பமுண்டாம். சரீரம் தாங்காத தேகத்துக்கு பத்து நாள் குடித்துவிடவும். பிறகு முழுக்கு முறை வருகிறபோது முன் மூன்று நாள் பின் மூன்று நாள் கொடுத்துவரவும். கற்பம் தரிக்கும். இல்லாவிடில் மறுபடி ஒரு விசை கொடுத்துவிடவும்.

பெரும்பாட்டுக்கு எண்ணெய்

நல்லெண்ணெய் படி 1, பெரியதாழியில் விட்டு நேர்படக் கிண்டிக் காய்ச்சினால் முக்கால் படியாம். அதை யிறக்கி உடனே போடு மருந்து சாதிலிங்கம் பலம் $\frac{3}{4}$, இரதம் பலம் $\frac{3}{4}$, கருஞ்சீரகம் பலம் $\frac{3}{4}$, வெள்ளைக்குந்திருக்கம் பலம் $\frac{3}{4}$, துத்தம் பலம் $\frac{1}{4}$, துருசு பலம் $\frac{1}{4}$, அதிமதுரம் பலம் $\frac{3}{4}$, சாதிபத்திரி பலம் $\frac{3}{4}$, அபின் பலம் $\frac{1}{4}$, கருங்குந்திருக்கம் பலம் 1, வலம் புரிக்காய் பலம் 2, மிளகு பலம் 1, சுக்கு பலம் 1, வெங்காயம் பலம் 4, திப்பிலி பலம் $\frac{3}{4}$, கோரோசனை குன்றி யெடை, கருடப்பச்சை பலம் $\frac{1}{4}$, கொடிவேலி வேர் பலம் $\frac{1}{4}$, உத்திராட்சம் பலம் $\frac{1}{4}$, கிராம்பு பலம் 1, நற்சீரகம் பலம் $\frac{3}{4}$, இவையெல்லாம் பருத்தியிலைச்சாறு விட்டரைத்துத் திரட்டி வைத்துக்கொண்டு அந்த யெண்ணெயில் சிறுகச் சிறுகப் போட்டுக் கிண்டினால் மிகுதியும் பொங்கும்; மெழுகு பதத்தில் வடித்துக்கொண்டு ஒருபோதுக்கு நாலுகாசளவு உள்ளே கொள்ளவும். தினசரி சந்து, கால், இடுப்பு, கை, இவ்வுறுப்புகளில் எண்ணெயிட்டுப் பிடித்து வெந்நீர் ஊற்றலாம். இப்படித் தினசரி ஒரு மண்டலம் அதாவது நாற்பது நாள் செய்யவும். தீரும் வியாதிகள்—சிகப்பு, வெள்ளை, குத்து, குடைவு, பெரும்பாடு இவைகளாம். கைகண்டது.

வயிற்றுவலிக்கு மருந்து

ரசம் பலம் 3, கந்தகம், காந்தம் வகைக்குப் பலம் 5, செம்புப்பொடி பலம் 3, உத்தாமணிச்சாற்றில் ஒரு சாமமரைத்து வழித்து சிறு கலசத்தில்போட்டு ஓடுகொண்டுமூடி ஏழு சீலை மண்செய்து காயவைத்து முழங்காலளவு குழி வெட்டி குழி நிரம்ப எருவடுக்கி அக்கினி போடவும். ஆறவிட்டு எடுத்து ஓட்டில் பற்றி யிருக்கிற மருந்தை வழித்துப் பரணியிலடைத்துக்கொண்டு, இஞ்சிச்சாறு, தேன், சுக்கு, மிளகு, திப்பிலி இவைகளில் பணவெடை போட்டுக் கொடுக்கவும். குன்மம் எட்டும், இருமல், செரியாமை, கிராணி, வாய்வு, திரட்சி இவைகளுக்குக் கொடுக்கவும்.

வடகம்

தாரணிதோறும் வேதப் பொதியாசல முனியோதிய நூல்
தாளீசபத்திரி வடகரசாயன சர்க்கரையில் பாகில்
சூரணமென்று மருந்து தனித்தனித்துச் சொல்வது விவரமுடன்
சோர்வர வேதமுறை காத்திட மேலவர் சொல்வது
[காக்கவகைக்

காரணமிது பகரத் தாளீசபத்திரி கடுகு திரிபலையசுவ
கந்தமதுத் தூணீ கண்டீரங் கடுகோமம் சிறுமூல
பூரணமாமிரிசோடு திப்பிலி புகலுமீராறில்
பொலிவுற வொவ்வொன் றொருபல மிதன்மேல் வகை
[புரிவதுமீ துரையே

உரையீர திவிடையம் விளங்கம் ஓமமதுடனுக
முறுயிலவங்கத் தோலிலை ரேர்கணியுரவால் மிரிசிறுேடு
நிரைகறி திப்பிலி யதிமதுரந் திரிலகிரிகழும் கோட்டம்
நிகரில்லா மிச்சத்தின் மூலம் நீள்சதகுப்பையொடு
விரைவுரை வெந்தய மல்லிகை சாரணைவேர் கெருடக்
கொடியுமீறு குருவதிளுேம மிதாக விளம்பிறுபத்தஞ்சும்
புரையற வொன்றொரு ரண்டுகள் சிது புரிவதும் ஒண்முகப்
புகல்வது முண்வகை யதிறுெடு கூடப்பொடி படவடிச்
[செய்தே.

செய்திடு மதுபின் சேர்க்குழம் பதனைத் திமிரிப்பதாபோகச்
செப்புமதில் பலமுப்பத் தேழரை தெளிவுறு பாகனலில்
கையிடுமிது சீர்சூடதுபாகு கலந்திடு முன்பொடியைக்
கடுவதி நீலெடு வடகம் பிடியதுபின் கருதும் ரசாயனமே
நெய்யொடு தேன்விடு தூளொடுபாகு ரசாயன வைப்பிதுவாம்
நேர்படு முன்பொடி ஓர்வகையே நிகழ்த்திடு சூரணமா
மேயது தாளீச பத்திரி வடக விளம்பு ரசாயனமு
மேவிய சூரண மூவகை தீரும் வியாதியுரைப்பது கேள்
கேளிது மார்பிலடைப் பிருமல் கிறுகிறெனச் சுழல் பித்தங்
கெடுமலபந்த மோடக்கினி மந்தங் கிராணிய ரோசகமுங்
கிளுதாம் பொருமுப்பலிளுளும் சொஞ்செரிவரி
குரலும் நேர்மயக்குறு வேர்வை யரைத்தது தவதாகவறட்சி
மிகுத்தேதெரி குன்மம் மருள் ம . . . சூரைச்சுரத்தில்
[சீரணமும்

சோகையு மேகக்ஷயங்க ளருமைகள் சொல்வது மிவ்வகையும்
தாளவுறும் வுசிதமிதுக்காடு தீருந் தாளீச பத்திரியில்
கானிக மூவகையாமிது மெனவுரை சஞ்சீவிக்கினதே.

குட்டத்துக்கு நெய்

அரிதாரம், சாதிலிங்கம், சாதிக்காய், சேங்கொட்டை வகைக்குப் பலம் 4, திரிகடுகு, கொடிவேலிவேர், தேவதாரம், கத்தூரி மஞ்சள், பீநாறிப்பட்டை, கருஞ்சீரகம், கார்கோலரிசி, பாங்கிப்பட்டை வகைக்குப் பலம் 1, நறுக்கி, நெய் படி 5, வெள்ளறுகு, சிவனார் வேம்பு, சிறுசெறுப்படை, வகைக்குச் சாறுபடி ¼ அரைத்துப் போட்டு மெழுகு பதத்திலிறக்கி சேங்கொட்டையைப்பிறகு எடுத்துப் போடவும். பொரிமாவில் துட்டளவு நெய் கொள்ளவும். புளிகசப்புத் தள்ளவும். இதற்குத் தீரும் வியாதி—குட்டம், சொறி, கபாலகுட்டம், பொருமல், தேமல், கைகால் வெள்ளைக்கிரந்தி, பரு, செங்கரப்பன், கால்கையுரி, இவைகளாம்.

அண்டவாய்வுக்கு

சீனக்காரம் பலம் 1, ஓமம் பலம் 1, ஊசிக்காந்தம் பலம் ¼, மிளகு பலம் 1, வங்காளத்திப்பிலி பலம் 1, இந்துப்பு பலம் 1, சித்திர மூலம் ஒருபிடி, கறிவேப்பிலை ஒருபிடி, கொழுஞ்சிவேர் ஒருபிடி, சிவனார்வேம்பு அரைப்பிடி, சிறு கழற்சிக்காய் 14, ஓடு பூளை எடுத்துப்போட்டு இவையெல்லாம் சிவக்க வெவ்வேறே வறுத்து இடித்து வடிகட்டி வெருகடிப் பிரமாணம் சிறு செருப்படைச் சாற்றில் கொள்ளவும். கறி—ஒரு கோழி கொன்று இரண்டு நேரமும் செய்து கொள்ளவும்.

நீர் செறிப்புக்கு

சீனக்காரஞ் சவுக்காரம்
  சிறந்த இந்து பொரிகாரம்
மானக்கதலி தண்டுவாநா
  யுருவி நதி பனைங்கதிருந்
தேனே வருத்துப் பொடிசெய்து
  சமனுயாம சாத்திலுடன்
தேனில் வெருகடியே கொடுக்கத்
  தெரிக்கும் சகலதுன் மாங்கிஷமே.

வேறு

வெள்ளரிவித்து நெருஞ்சிக்காய்
  மிக்க திப்பிலி பழம்பாசி
யெள்ளு சந்தனம் எலிப்புழுக்கை
  இதுகற்பூரம் புழுகுடனே
மெள்ளப் பசுவின் வெண்ணெயதில்
  கலந்து காத்தது கையே

யள்ளிதொப் புளடிவயிற்றி
லப்பத்தெரிக்கு மிருநீரே.

வயிற்றுளைச்சலுக்கு

ஓமம், மாங்கொட்டை, சுண்டைவற்றல், நெல்லிப்பருப்பு, இவை நான்கும் வெதுப்பிப் பொடி செய்து சோற்றிலே ஒரு வெருகடிப் பிரமாணம் வைத்து மருந்துமேலே, காய்ச்சின இருப்புக் கிட்டத்தை வைத்துக் கிட்டத்தில் ஒரு கரண்டி நல்லெண்ணெய்விட்டு சுடச் சுட வெடித்தவுடன் கல்லை யெரிந்து போட்டு சாப்பிடவும்.

வெட்டைக்கும் ரத்தப் பிரமேகத்திற்கும் மருந்து

அத்திப்பிஞ்சு, ஆவரைக்கொழுந்து, நற்சீரகம், இவை மூன்றும் பசுவின் பாலில் கொள்ளவும்.

வேறு

ஆலம்விழுது எலுமிச்சங்காயளவு, அந்த அளவு எள் அரைத்துப் பசுவின் பாலில் கொடுக்கவும்.

கண்ட மாலைக்கு மருந்து

திருகுகள்ளி நறுக்கி குருணி, வெள்ளாட்டுப் புழுக்கை பதக்கு, வெற்றிலை 4 கால் கட்டு உலர்த்தி ஒரு பானையிலிட்டு மூடிச்சீலை மண்செய்து பானை தலைகீழாகவைத்து எருவடுக்கித் தயிலம் வாங்கி கண்ட மாலைப் புண்ணி விடவும். இருபது நாள் இந்தத் தயிலம் பணவெடையும் தேனும் சரி கூட்டி உள்ளுக்குக் கொள்ளவும். தீரும். கைகண்டது.

கந்தகப் பிட்டு

கற்றாழை மடல் 4, இசங்கு, கந்தகம், ஓமம், கையாந்தகரை, சித்திர மூலம், வகைக்குப் பலம் 1, திரிபலை பலம் 1, இவ்வளவும், இடித்து பாலில் பிட்டவித்துப் பொடி செய்து வெருகடி தேனில் சாப்பிடவும். பதினெட்டு குட்டம், கிரந்தி, வாய்வு தீரும். வெண்ணெயில் தின்ன தேமல் தீரும். பத்தியம் முருங்கையிலை, பால், நெய் கூட்டவும்.

ஈளை இருமலுக்கு க்ஷயத்துக்கு உளமாந்தைக்கு வெங்கியம்

தூதளம் பழம் படி 1, அரத்தை பலம் 2, கடுக்காய் பலம் 2, தேத்தான் விதை பலம் 2, திப்பிலி பலம் 2, மிளகு பலம் 1,

சுக்கு பலம் 1, கோட்டம் பலம் 1, காட்டுச் சீரகம் பலம் 1, ஆக ஒன்பது வகையும் இளநீர் விட்டரைத்துப் பசுவின் வெண்ணெயிலே வெந்து வில்லை வேரும், சாறணை வேரும், தூதுளை வேர், அமுக்குறுவேர் வகைக்குப் பலம் 2, கொண்டுவந்து மாவாக இடித்து வடிகட்டி முன் வெந்த மருந்து மேல் போட்டு ஐந்து பலம் கருப்புக் கட்டியும், ஐந்து பலம் சீனியும் கூடப்போட்டு லேகியமாக இடித்து வைத்துக்கொண்டு சாப்பிட்டுவரவும். சகல இருமலும், இளைப்பும் தீரும். புகை மாத்திரம் தவிர்க்கவும்.

இருமலுக்கு ஒதுக்கு உருண்டை

நெற்பொரி, செல்லிப்பருப்பு, பாசிப்பயறு, திரிகடுகு, தான்றிக்காய், வால் மிளகு, சிற்றரத்தை, சடாமாஞ்சி, கிராம்பு, ஆக வகைக்கு பலம் 1, இளவறுப்பாக வெதுப்பிப் பொடிசெய்து கருப்புக்கட்டி பலம் 10 சேர்த்து தேனும் நெய்யும் விட்டு பிசைந்து சுண்டைக்காயளவு உண்டைசெய்து ஒதுக்கிச் சாரமிறக்கவும். இருமல் தீரும்.

கர்ப்ப வாய்வுக்கு எண்ணெய்

சிற்றாமணக்கெண்ணெய் படி ¼, கடுக்காய் 20, நேர்வாளம் 10, புரசம் விதை 10, பொரிகாரம் பலம் 2, சுக்கு பலம் 2, வாய்விளங்கம் பலம் 2, திப்பிலி பலம் 2, வால்மிளகு பலம் 1, ஓமம் பலம் 2, இந்துப்பு பலம் 2, சிவதை பலம் 1, கடுகுரோகணி பலம் 1, கருஞ்சீரகம் பலம் 2, சன்னி நாயாறு பலம் 2, மஞ்சள் பலம் 1, நிலவாகைவேர் பலம் 2, பசுவின் பால் படி 1, தேங்காய்ப்பால் படி ¾, திருகுகள்ளிப்பால் படி 1/16, தேங்காய்பால் விட்டு கடை மருந்தெல்லா மரைத்து மிஞ்சின பாலையும் பசுவின் பாலுடனே எண்ணெயில் விட்டுக் காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்து ஒரு காசெடை கொடுக்கவும்.

கோரவாய்வுக்கு மருந்து

குருநெல்லரிசி சிரங்கை, முடக்கொற்றானிலை அரைத்து ஒரு எலுமிச்சங்காயளவு, முட்டை இரண்டு உடைத்துவிட்டு மாவும் மருந்தும் முட்டையும் ஒன்றாய்ப்பிசறி நல்லெண்ணெய் விட்டு நீர்வற்றவிட்டு சாப்பிடவும். வாய்வு சூலை தீரும்.

அனுபவ வைத்திய முறை முற்றும்.